வரு.76 இல. 31 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී

2024 ஓகஸ்ட் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
August 11 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-




02 உறுதியானது வாஸின் மரண தண்டனை!





03 நாட்கள் நகர, நகர ஜனாதிபதியின் பயணமும் வெல்லும்

05 சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்புடன் ரணில் மீண்டும் ஜனாதிபதியாவது உறுதி



தீராத பாலின சர்ச்சை 24





# தோட்ட தொழிலாளர்களுக்கான ரூ. 1,700 சம்பள அதிகரிப்பு; திங்களன்று சம்பள நிர்ணய சபையுடன் கூடி தீர்மானம்

## "தீர்மானத்தை சட்ட ரீதியாகவே செயற்படுத்துவோம்"

### "1,700 ரூபாவை வழங்க 7 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம்"

### "தோட்ட தொழிலாளரின் EPF 2025 முதல் வழங்கப்படும்"

### கண்டி மாவட்ட இளம் தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் ஜனாதிபதி தெரிவிப்பு



தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்ளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த 7 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளதாகவும் நாளை திங்கட்கிழமை சம்பள நிர்ணய சபையை அழைத்துப் பேசி அந்த தீர்மானத்தை செயற்படுத்த தேவையான சட்டங்களை கொண்டு வர தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப் படாமலிருக்கும் ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக்கொடுப்பதற்கான பணிகளை அடுத்த வருடத்திலிருந்து முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் நேற்று (10) கண்டி 'கரலிய' அரங்கியல் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தோட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளின் பொதுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் ஜனாதிபதியிடன் நேரடியாக முன்வைக்கப்பட்டதோடு, அதற்கு ஜனாதிபதி சாதகமான பதில்களையும் வழங்கியிருந்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டு 06

## மயூரபதி அம்மன் தேர் திருவிழா



கொழும்பு, வெள்ளவத்தை அருள்மிகு மயூரபதி அம்மன் கோயிலின் 37ஆவது ஆண்டு ஆடிப் பூர மஹோற்சவ பெருவிழாவின் தேர் திருவிழா நேற்று சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆலய முன்றலில் சித்திர தேரில் அம்பாள் திருவீதி உலா வந்த போது பிடிக்கப்பட்ட படம்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு

## 5 நாட்களுள் வேட்பாளருக்கான செலவுக்குரிய எல்லை அறிவிப்பு



ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஏற்கப்படும் நாள் முதல் 5 நாட்களுக்குள் வேட்பாளர் ஒருவர் செலவிடக்கூடிய அதிகபட்ச செலவு வரம்பு அறிவிக்கப்படுமென தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஊடகப் பிரசாரம், கூட்டங்களை நடத்துதல், தேர்தல் அலுவலகங்களை அமைத்தல், பிரசுரங்களை அச்சடித்தல் மற்றும் விநியோகம் செய்தல் போன்றவற்றுக்கு செலவிடப்படும் பணத்தின் அளவு, இந்த செலவின வரம்பில் உள்ளடங்குவதாக தேர்தல்கள் 06

எதிர்காலத்திலும்

## சரியான வழிகாட்டலை வழங்கும் ஒரு தலைமை நாட்டுக்கு தேவை

### மக்களுக்கு வாழக்கூடிய சூழலை உருவாக்கியவர் ரணில்



நாட்டுக்கு நம்பிக்கையின் தீபமாக மக்களுக்கு வாழக் கூடிய சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கினார். எதிர்காலத்திலும் சரியான வழிகாட்டல்களை தொடர்ந்து வழங்கும் ஒரு தலைமை நாட்டுக்கு தேவையென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (09) 'தியவர திரிய' என்ற பெயரில் நடைபெற்ற 06



06 ஹோமாகமவில் 2 மதுபான கடைகளை மீளத் திறக்க நீதிமன்றம் அனுமதி



06 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி செப். 14 நடக்கும்
வதந்திகளை நம்ப வேண்டாம்

ஓகஸ்ட் 14 முதல் 19 வரை

## கண்டி, எசல பெரஹராவுக்கு விசேட பஸ் சேவை ஏற்பாடு



கண்டி, எசல பெரஹரா உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 06

## தேர்தல் கடமைகளுக்காக 225,000 அரச ஊழியர்கள்

### 54,000 பொலிஸாரும் ஈடுபடுத்தப்படுவர்



ஜனாதிபதி தேர்தலுக்காக 225,000 அரசாங்க ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 54,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்களென்று எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக்காட்டிய ஆணையாளர் நாயகம், தேவைப்பட்டால் 06

ஜனாதிபதி செயலர் சமன் ஏக்கநாயக்க உட்பட 9 பேருக்கு எதிரான

## உபாலி அபேரத்ன ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உயர் நீதிமன்றத்தினால் இரத்து



நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்களை ஆராய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உபாலி அபேரத்ன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, சந்தியா எக்னலிகொட உள்ளிட்ட ஒன்பது பேருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளை உயர் நீதிமன்றம் கடந்த 9ஆம் திகதி வலுவிழக்கச் செய்துள்ளது.

மனுதாரர் அனைவருக்கும் நீதிமன்ற கட்டணமாக தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (150,000) செலுத்துமாறு அரசுக்கு உத்தரவிட்டது. 06



## நெறிமுறை பிறழ்வது அரசியலுக்கு அழகல்ல!

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அங்கம் வகிக்கின்ற கட்சிகளும், அக்கட்சிகளின் தேர்தல் கூட்டணிக் கட்சிகளும் பிரசாரக் களத்தில் இறங்கியுள்ளன. அக்கட்சிகளின் தலைவர்கள் நாடெங்கும் தீவிரமாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தலில் போட்டியிடுகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக தமது அரசாங்கம் கடந்த சுமார் இரண்டு வருடகாலத்தில் மேற்கொண்டு வருகின்ற சீரமைப்புத் திட்டங்களை மக்கள் முன்னிலையில் ஆதாரங்களுடன் பட்டியலிட்டுக் கூறி வருகின்றார்.

ஜனாதிபதி கூறுவது ஒளிவுமறைவற்ற, பகிரங்கமான, தெளிவான ஆதாரங்களாக இருக்கின்றன. வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை இன்றைய முன்னேற்ற நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக கடந்த 06

## பிரிட்டன் வாழ் இலங்கையரின் பாதுகாப்புக்கு உறுதியளிப்பு

### அவசர தொடர்புக்கு தொ.பே. இலக்கம் அறிவிப்பு



பிரிட்டனில் நிலவும் அமைதியின்மை நிலை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் கேட்டறிந்ததாகவும் பிரிட்டன் வாழ் இலங்கையரின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொண்டதாகவும் பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் இலங்கையர் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களை கடந்த வியாழக்கிழமை (08) பிரிட்டனிலுள்ள 06

பிரேஸிலில் பயணிகள் விமானம் விபத்து

## 62 பேருடன் பயணித்த விமானம் கீழே விழுந்து வெடித்து சிதறியது

### எவரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை



பிரேஸிலின் சாவ் பாலோ மாநிலத்தில் 62 பேருடன் வானில் பறந்து கொண்டிருந்த விமானமொன்று திடீரென கட்டுப்பாட்டை இழந்து கீழே 06

பல்கலைக்கழக மாணவர் பலரை

## புதிய துறைகளுள் உள்வாங்க ஐ.ம.ச. நடவடிக்கை எடுக்கும்



பல்கலைக்கழக மாணவர்களின் அறிவு மற்றும் தேவைகளுக்கு ஏற்ப தமது அரசாங்கத்தின் கீழ் பெருமளவிலான மக்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினராக மாற்றப்படுவரென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று, நான்கு வருடங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, நாடு முழுவதும் சென்று திறன் வகுப்பறைகள் மற்றும் வைத்தியசாலைகள் 06

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு தீர்ப்பு

# உறுதியானது வாஸின் மரண தண்டனை!

**கோடீஸ்வர வர்த்தகர் சியாமின் கொலைச் சம்பவம் தொடர்பில் முன்னாள் DIG வாஸ் மற்றும் மகன் உள்ளிட்ட ஆறு பேருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை உறுதியானது!**

அகங்காரத்தில் அக்கிரமங்களைச் செய்து வந்த பலருக்கு நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்படுவது வழக்கம். சில நீதிமன்ற தீர்ப்புகள் இவற்றிற்குச் சிறந்த உதாரணங்களாகும். அவற்றுள் முக்கியமான வழக்குத் தீர்ப்பாக இருப்பது முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு தூக்குத் தண்டனை வழங்கி விதித்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது, மாலபே தகவல் தொழில்நுட்ப கல்லூரியின் மாணவரான நிபுன ராமநாயக்கவைக் கடத்திச் சென்று நிர்வாணமாக்கி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் வாஸ் குணவர்தன உள்ளிட்ட நால்வருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இதுதவிர, உச்ச நீதிமன்றம் சமீபத்தில் பல தனித்துவமான வழக்குத் தீர்ப்புகளை வழங்கியுள்ளது. நீதிமன்றங்கள் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதற்கு இந்த அனைத்து தீர்ப்புக்களும் இப்போது உதவியுள்ளன.

இலங்கை பொலிஸ் பிரிவில் அதிகம் பேசப்பட்ட நபர்களில் வாஸ் குணவர்தனவும் ஒருவராகும். பொலிஸ் சேவையில் உதவி பொலிஸ் பரிசோதகராக இணைந்து கொண்ட இவர், எப்போதும் சர்ச்சைக்குரிய நபராகவே இருந்து வந்தார். இவர் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய போது அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. வாஸ் குணவர்தனவுக்கு, பொலிஸில் ஓரிடம் கிடைத்தது கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோதாகும். இதன்போது அவர் திருகோணமலை பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் பிரதானியாக நியமிக்கப்பட்டார். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்ற ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்ட ஒரு குழுவினர் முன்பள்ளி வயது சிறுமியை கடத்திச் சென்று வன்புணர்ச்சி செய்து கொலை செய்திருந்தது இந்தக் காலப்பகுதியிலாகும். கூட்டுப் பலாத்காரம் செய்யப்பட்ட சிறுமியின் சடலத்தை கடலில் வீசிவிட்டு காணாமல் செய்வதற்காக அவர்கள் திட்டமிட்டிருந்த போதும், அந்த முயற்சி தோல்வியடைந்ததால் சடலத்தை திருகோணமலைக்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றில் போட்டிருந்தனர். பிரேதப் பரிசோதனையின் போது அச்சிறுமி தீவிர சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் கூட்டுப் பலாத்காரம் செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது.

இந்த மாபெரும் குற்றத்திற்குக் காரணமானவர்கள் இனங்காணப்பட்டது அப்போது திருகோணமலையில் பொலிஸ் தலைவராகக் கடமையாற்றிய பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தனவின் கீழ் உள்ள பொலிஸ் குழுவாகும். அப்போதைய அரசுடன் இணைந்து செயற்பட்ட குற்றவாளிகள் சுதந்திரமாக இருந்ததன் காரணமாக மக்கள் எதிர்ப்பு கிளம்பியபோது, சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்து கொன்றவர்களில் ஓரிருவர் பொலிஸாரிடம் சிக்கி சுட்டுக் கொல்லப்பட்டது அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்தை அடக்கியாகும். வாஸ் குணவர்தன சமூகத்தின் மத்தியில் பேசப்படும் ஒரு நபராகவும் அதே நேரத்தில் அப்போதைய அரசாங்கத்துக்கு நெருக்கமானவராகவும் ஆவதற்கு இதன்மூலம் வாய்ப்பு கிடைத்தது. அரசாங்கத்தின் மீட்பரான வாஸ் குணவர்தன திருகோணமலையிலிருந்து குருநாகலுக்கு இடமாற்றப்பட்டார். அவ்வாறு வரும் போது திருகோணமலை சிறுமியின் கொலையாளிகளைக் கொன்ற விசாரணையுடன் தொடர்புடைய தனது அடியாட்களையும் குருநாகலுக்கு அழைத்துச் செல்ல அவர் மறக்கவில்லை. அவர்கள் குருநாகல் பிரதேசங்களில் செய்த விடயங்கள் இன்றும் மர்மமாகவே உள்ளது. இக்காலத்திலேயே வாஸ் குணவர்தன தற்கொலைக்கு முயன்றதாகவும் கூறப்பட்டது. குருநாகல் தம்புள்ளை வீதியில் அவர் பயணித்த கார் விபத்துக்குள்ளானதுடன், அவர் பலத்த காயமடைந்தார். மேலும், வாகனத்தை விபத்துக்குள்ளாக்கி தற்கொலைக்கு முயன்றதாகவும் கூறப்பட்டது.

வாஸ் குணவர்தன மேல் மாகாண வடக்குப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகக் கடமைகளைப் பொறுப்பேற்று ஓரிரு மாதங்கள் கடந்த நிலையில் முஹம்மது அஹமதின் முஹம்மது சியாம் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டு வாஸ் குணவர்தன உள்ளிட்ட தரப்பினர் மீது சுமத்தப்பட்டது. வாஸ் குணவர்தன குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் 2013ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கைது செய்யப்பட்டார்.

இந்த வர்த்தகர் பம்பலப்பிட்டி சாகர வீதியில் வசிப்பவராகும். அவர் காலணி வர்த்தகராவார். 30 இலட்சம் ரூபாய் ஒப்பந்த அடிப்படையில் இந்தப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. இந்த ஒப்பந்தம் வாஸ் குணவர்தனவுக்கு கிடைத்திருந்தது. அதைக் கொடுத்தவர் வர்த்தகர் சியாமின் நெருங்கிய நண்பர்.



2013ம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி தெஹிவளையில் உள்ள தனது காலணி தொழிற்சாலையில் இருந்து தனது வீட்டிற்கு வந்த முஹம்மது சியாம், தனது நண்பருடன் பம்பலப்பிட்டியில் உள்ள தனது வீட்டில் இருந்து வெளியே வந்துள்ளார். சியாமின் தலைவிதி வாஸ் குணவர்தன உள்ளிட்ட பொலிஸ் குண்டர்களால் அவர் வீட்டை விட்டு வெளியேறும் போது ஒப்பந்தத்தின் பிரகாரம் எழுதப்பட்டது. இதுபற்றி எதுவும் அறியாத சியாமின் குடும்பத்தினர் சியாமை எல்லா இடங்களிலும் தேடியும், அவரைக் காணாததால், அவரது நண்பரிடம் இதுகுறித்து கேட்டுள்ளனர். அன்று இரவு உணவு உண்டுவிட்டு சியாம் வீடு திரும்பியதாக நண்பர் கூறியுள்ளார்.

பம்லப்பிட்டி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டைச் செய்து சியாமின் குடும்பத்தினர் எல்லா இடங்களிலும் சியாமைத் தேடிய போதிலும் அவர்களால் கண்டுபிடிக்க முடியாது போனதுடன், பின்னர் அவர்கள் அலரி மாளிகைக்குச் சென்றது அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் இது தொடர்பில் முறையிடுவதற்காகும். சியாமின் குடும்ப உறவினர் ஒருவர் ஜனாதிபதியுடன் நெருக்கமாக இருந்தார். அப்போது ஜனாதிபதி கங்காராம விகாரைக்குச் செல்ல ஆயத்தமாகியிருந்ததோடு, அவரைச் சந்திக்க வந்த சியாமின் உறவினரைத் தனது காரில் ஏற்றிக் கொண்டு கங்காராமை செல்லும் வழியில் அவரிடமிருந்து விடயங்களைக் கேட்டறிந்து கொண்டார். கங்காராம விகாரையில் ஜனாதிபதி இறங்கும் போது அதற்கருகில் நின்றது சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்காவாகும்.

"இந்த விடயத்தை ஆராய்ந்து பார்த்து, என்ன நடந்திருக்கின்றது என எனக்கு கூறுங்கள்" எனக் கூறி சியாமின் உறவினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுர சேனாநாயக்கவிடம் ஒப்படைத்துள்ளார். அதனைத் தொடர்ந்தே சியாம் காணாமல் போன சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அனுர சேனநாயக்க இந்த விசாரணையை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளார். விசாரணை ஒப்படைக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள், கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் நுகேகொட கந்தேவத்த வீதியில் கைவிடப்பட்டிருந்த கார் ஒன்றைக் கண்டுபிடித்ததுடன், முக்கியமான தடயத்தை வெளிப்படுத்த முடியும் என்று நம்பிக்கையில் கைரேகைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தனர்.

இதற்கிடையில், கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள், கார் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு இல்லங்களில் உள்ள சீசீடிவி கெமராக்களை சோதனை செய்யத் தொடங்கியது அதன் மூலமாக ஏதாவது தடயங்கள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையிலாகும். அந்த வகையில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் உள்ள ஒரு வீட்டின் பாதுகாப்பு கெமராவிலிருந்து ஒரு துப்பு கிடைத்தது. இது சியாம் காணாமல் போனது பற்றிய விசாரணையை முன்னெடுத்துச் செல்வதற்கு மேலும் ஒரு ஆதாரமாகியது. அன்று வீட்டிலிருந்து புறப்பட்ட நண்பருடன் சியாம் காரில் அந்த இடத்திற்கு வந்ததும், அவ்விடத்திற்கு வந்த மற்றொரு குழு சியாமை அழைத்துச் செல்லும் காட்சியும் அந்த கெமராவில் பதிவாகியிருந்தது. இதன் மூலம் சியாம் காணாமல் போன சம்பவத்தோடு நண்பருக்கும் தொடர்பு இருப்பதற்கான சாட்சியம் வெளியாகியது. அதனைத் தொடர்ந்து சியாமின் நண்பனை கொழும்பு குற்றப்பிரிவு பின் தொடர்ந்ததுசியாம்காணாமல்போனதற்கும் நண்பருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சியாமின் குடும்ப உறுப்பினர்கள் உறுதியாக நம்பியதாலாகும். சியாமின் மிகவும் நம்பிக்கைக்குரிய நண்பராக அவர் இருந்ததால், சியாமின் குடும்பத்தினர் கூட நண்பர் கைது செய்யப்பட்டபோது தங்கள் அதிருப்தியை வெளியிட்டிருந்தனர். கடைசியில் அந்த நண்பரிடம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்தே சியாமுக்கு ஏற்பட்ட கதி தெரியவந்தது. சியாமைக் கடத்திச் சென்று கொலை செய்து, அவரது உடலை தொம்பே காட்டுப் பகுதியில் வீசியிருப்பதும் தெரியவந்தது. தொம்பே பொலிஸ் பிரிவு அமைந்திருந்தது மேல் மாகாணத்தின் வடக்கு பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழாகும். அந்நேரம் தொம்பேவிலிருந்து சியாமின் சடலம் மீட்கப்பட்டிருந்ததோடு, அச்சடலம் இனந்தெரியாத ஒருவரின் சடலமாக கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. அப்பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் மாஅதிபர் வாஸ் குணவர்தன, அந்தச் சடலம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தாமல், அது சியாமின் சடலம் என்பதை நன்கு அறிந்தும் தெரியாத சடலமாக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்க அனுமதித்துள்ளார்.

அதுவரைக்கும் இந்த விசாரணைகள் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டாலும், அதன் பின்னர் விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அப்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தது காமினி மதுரட்டவாகும். இந்த விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் காமினி மதுரடவினால் ஷானி அபேசேகரத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நேரம் ஷானி அபேசேகர குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். சியாமின் நண்பரிடம் இருந்து பெறப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஒப்பந்தத்தின் பிரகாரம் பொலிஸ் குண்டர்கள் குழுவினால் இக்குற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெளிவான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டதன் பின்னர் இதனோடு தொடர்புபட்டவர்களை ஒவ்வொருவராகக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். அவர்களுள் வாஸ் குணவர்தனவின் மகனும் இருந்தான். சியாமின் தொழிற்சாலையை கையகப்படுத்தும் நம்பிக்கையில் இந்த ஒப்பந்தத்தை சியாமின் நண்பர் காவல்துறையிடம் ஒப்படைத்திருந்தான். அது அந்த தொழிற்சாலையின் மீதிருந்த ஆசையினாலாகும். அந்நேரத்திலும் அந்த நண்பர் சியாமிடம் பல கோடி ரூபாய் கடன் பெற்றிருந்துள்ளான். சியாமைக் கொலை செய்துவிட்டால் அந்தக் கடனில் இருந்து விடுபட்டு விடலாம் என்ற திட்டமும் இருந்ததாக அப்போதைய விசாரணைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முஹம்மது சியாம் ஒரு கைக்கடிகார பிரியராகும். பெறுமதியான கைக்கடிகாரம் ஒன்று உள்ளதாகக் கூறி சியாம் நுகேகொடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பொலிஸ் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். அந்தக் குழுவில் வாஸ் குணவர்தனவின் மகனும் இருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் அவரும் கைது செய்யப்பட்டார். சிறைச்சாலை வரலாற்றில் பட்டம் ஒன்றைப் பெற்று தற்போது கலாநிதி பட்டத்திற்கு தயாராகி வரும் பமுனசிங்க என்ற அதிகாரியும் இந்தக் குழுவில் இருந்தார். இவர் தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்தது சியாமின் கொலைக்காக சிறையில் அடைக்கப்பட்டதன் பின்னராகும். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அவர் இந்த கொலைக்கு உதவி வழங்கினார் என்பதாகும்.

(07ஆம் பக்கம் பார்க்க)

*கயான் குமார வீரசிங்க*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*

# மொட்டுக் கட்சியின் அனைத்து பலமும் தற்போது ரணிலிடமே உள்ளது

**எதிர்ப்பவர்கள் தேர்தலுக்குப் பின்னர், ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசியல் அரிச்சுவடியைக் கற்பதில் எவ்வித தவறுமில்லை**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க**



**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஆரம்பித்திலிருந்து நீங்கள் உறுதியாக இருந்தீர்கள். அதனை வென்றெடுப்பதற்காக இரண்டாவது போராட்டமொன்றையும் முன்னெடுத்திருந்தீர்கள். அதன்படி உங்கள் போராட்டத்திற்கு இதுவரை கிடைத்த வெற்றி பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

நான் முடிவொன்றை எடுத்தேன். மிகவும் சிந்தித்ததன் பின்னரே அந்த முடிவை முன்வைத்தேன். வாய்க்கு வந்ததையெல்லாம் கூறுபவர் பிரசன்ன ரணதுங்க அல்ல. நான் ஆரம்பத்திலிருந்தே, நாட்டை பற்றிச் சிந்தித்து, சிறந்த விடயங்கள் நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்றேன்.

எமது நாடு ஒரு இக்கட்டான நிலைக்கு முகங்கொடுத்த சந்தர்ப்பத்தில், அவர் நாட்டை பொறுப்பேற்க முன்வந்தார். அத்துடன், அந்த இக்கட்டான நிலையிலிருந்து மீண்டு வர அவர் தொடர்ந்தும் முன்வந்து செயற்பட்டார்.

அன்று அவர் நாட்டை பொறுப்பேற்கும்போது, ஒரு நிச்சயமற்ற, கடினமான பயணத்தையே ஆரம்பித்திருந்தார். அவர் அந்த சாவாலை ஏற்கும்போது, அவரது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரின் ஆதரவுக்கூட இருக்கவில்லை. அப்போது அவருக்கு இருந்தது தனது அனுபவமும், ஆத்ம சக்தியும் மட்டுமே.

அதன்படி, இன்று, தான் ஏற்றுக் கொண்ட சவாலை முடிவுக்குக் கொண்டு வர தனித்து போட்டி களத்தில் இறங்கியுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் வாழ்க்கை வரலாற்றை நாம் ஒவ்வொருவரும் கவனமாக கற்று புரிந்துக்கொள்ள வேண்டும் என நான் நினைக்கிறேன்.

**நீங்கள் அன்று பொதுஜன பெரமுனவில் தனித்து போட்டியிடும்போது, மொட்டுக் கட்சி இவ்வாறான ஒரு சரிவை சந்திக்கும் என என்றாவது நினைத்ததுண்டா?**

ரணிலின் வெற்றிக்காக எமது கட்சியிலுள்ள பல உறுப்பினர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். நாங்கள் அனைவரும் எங்களது முழு அரசியல் வாழ்க்கையையும் பணயம் வைத்தே இந்த முடிவை எடுத்துள்ளோம். நான் முன்னரே கூறியதைப்போன்று, நாங்கள் இந்த நேரத்தில் முதலாவதாக தேர்ந்தெடுத்திருப்பது கட்சியை அல்ல. நாட்டை. அதுவே மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் முழக்கமும் கூட. எனவே, நாங்கள் இன்னமும் எமது கட்சியுடனும், கட்சியின் தலைவருடனுமே இருக்கின்றோம். நாங்கள் மட்டுமல்ல. ரணிலின் வெற்றிக்காக நாட்டிலுள்ள பெரும்பாலான முற்போக்குக் குழுக்களும் ஒன்று திரண்டுள்ளன.

**அமைச்சரே, மஹிந்த அலையுடன் மொட்டுக் கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற நீங்கள், இன்று மொட்டுவின் ஒவ்வொரு இதழ்களும் உதிர்வதற்கு முதல் காரணமாகின்றீர்கள் என யாராவது கூறினால்?**

அவ்வாறு செல்லுபவர்கள், இரண்டு வருடங்களுக்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஏற்கும்போது, நாங்களே நாட்டை பொறுப்பேற்று செய்கின்றோம். ரணில் விக்கிரமசிங்கவை ஒதுங்கிக்கொள்ளுமாறு ஏன் கூறவில்லை. இன்று தம்பட்டம் அடிக்கும் அனைவரும் அன்று உயிருக்கு அஞ்சி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னே சென்று ஒளிந்துக்கொண்டனர். அதனாலேயே அவருக்கு ரணில் ராஜபக்ஷ என்ற பெயரும் வந்தது. நீங்கள் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கடந்த இரண்டு வருங்களுக்கு முன்னர் இருந்த பிரசன்ன ரணதுங்கவே தற்போது பேசிக்கொண்டிக்கின்றார். நான் இறந்து மீண்டும் பிறக்கவில்லை.

**அன்று ஜனாதிபதி ரணில் நாட்டை பொறுப்பேற்காமல் இருந்திருந்தால், இன்று இவர்களுக்கு ஜனாதிபதியாக பதவியேற்க ஒரு நாடு மிச்சமிருக்குமா? அப்படியாயின் தற்போது இந்த நாட்டிற்கு என்ன நடந்திக்கும் என உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா?**

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை ஒப்படைக்கும்போது, ஒரேயொரு கோரிக்கையையே முன்வைத்தோம். படுகுழியில் விழுந்துள்ள எமது நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க எந்தவொரு நிபந்தனைகளுமின்றி நாம் எமது ஆதரவை வழங்குவோம். நாட்டின் நீதி மற்றும் அமைதியை நிலைநாட்டுமாறு கூறினோம். கட்சி என்ற ரீதியில், நாம் அவருக்கு வழங்கிய பொறுப்பை அவர் நிறைவேற்றினாரா? இல்லையா? என்பதை முதலில் தீர்மானித்திருக்க வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களாக ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டை மீட்டெடுத்துள்ளோம், நாட்டு மக்கள் வாழக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளோம், யார் வேண்டுமானாலும் அரசில் செய்யக்கூடிய ஒரு சூழலை உருவாக்கியுள்ளோம். அதேபோன்று, இது பரிசோதனைக்கான நேரம் அல்ல. பரிசோதனை செய்து மீண்டும் நாட்டை அதல பாதாளத்திற்குள் தள்ளிவிட முடியாது.

இது உண்மையாயின், குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களிடம் நான் கேட்கிறேன், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைப் பொறுப்பை முடிவுக்குக் கொண்டுவர நாம் இனி ஆதரவளிக்கக் கூடாது என்பதுதான். நாக்கு வளையும் போக்கிற்கெல்லாம் எம்மால் பேச முடியாது.

**எனினும், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி, இனி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்ற முடிவெடுத்துள்ளதே. அதற்கும் அப்பால் நீங்கள் அவருக்கு ஆதரவளிக்கும் பட்சத்தில் உங்களை துரோகி என அழைத்தால்?**

**நான் மொட்டுக் கட்சியை கட்டியெழுப்ப மஹிந்த அலையுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் என முன்னதாக நீங்கள் என்னிடம் கேட்டீர்கள் அல்லவா? கட்சியை கட்டியெழுப்புவதற்கு எம்மை அர்ப்பணிக்க முடியுமானால், கட்சியை பாதுகாப்பதும் எமது பொறுப்பல்லவா? அதற்காக எழுந்து நின்று பேசுவதற்கு நமக்கு உரிமை இல்லையா?**

நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்லும் கட்சியாகவே பொதுஜன பெரமுன கட்சி, உருவாக்கப்பட்டது. நாடு இன்னும் ஆபத்திலேயே உள்ளது என்பதை நாம் நன்கறிவோம். நாட்டை மீட்டெக்க கடந்த இரண்டு வருடங்களாக நாம் செய்த தியாகங்களினூடாக இன்று இந்த நாட்டை இந்நிலைமைக்கு கொண்டுவந்துள்ளோம். எனவே, நாட்டை வென்றெடுப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டுமென நாம் கட்சிக்கு பரிந்துரை செய்தோம்.

**பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, உங்கள் கட்சியின் வேட்பாளராக தம்மை முன்னிறுத்த தயார் என அறிவித்திருந்தார். பின்னர் எதற்காக அவர் வாபஸ் பெற்றார்?**

அவர் எடுத்த தீர்மானம் அவருக்கும் நாட்டுக்கும் நல்லது அல்ல என்பதை முதலில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இவர்கள் அனைவரும் வெற்றிபெற முடிந்தால் மாத்திரமே வருவார்கள். பொறுப்பேற்று வெற்றிபெறுவது சவால்களை மட்டுமே. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் சஜித்தும் அனுர குமாரவும் இதையே செய்தார்கள். அந்தச் சவாலை ஏற்று வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகத்தில் அவர்கள் ஓடிவிட்டனர். அந்த செயல்முறையின் சமீபத்திய பிரதிபலிப்பே தம்மிக்க பெரேரா.

அரசியலை அனைவராலும் செய்ய முடியாது. அதற்கு அனைவரும் ஏற்றவர்களும் அல்ல. அதற்கு சிறந்த உதாரணமே 69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ. அவர் மிகவும் திறமையான ஒரு அதிகாரி. அவருடைய திறமை அரசியலுக்கு பொருத்தமானாக இருக்கும் என நாமும் நாட்டு மக்களும் நினைத்தோம். ஆனால், அவருக்க திறமையான ஒரு அரசியல்வாதியாக இருக்க முடியாமற்போனது.

**தற்போது நாமல் ராஜபக்ஷ. உங்களது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். வயதானவர்களால் இனி நாட்டை ஆள முடியாது. அவர்கள் அரசியலிலிருந்து ஒதுக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு நாமல் எம்.பி நல்ல பதிலாக இருக்கின்றார் என நினைக்கின்றீர்களா?**

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை ஒப்படைக்கும்போது, அவரின் பிறந்த திகதியையோ, வயதையோ யாரும் பார்க்கவில்லை என்பதை முதலாவதாக கூற விரும்புகின்றேன். குறைந்த பட்சம் அவரது நாடித்துடிப்பு குறைகிறதா என்பதைக்கூட பார்க்கவில்லை. நாட்டின் தலைமைத்துவத்தை ஒப்படைக்குமாறு இன்று தம்பட்டம் அடிக்கும் அனைவருக்கும் விழுந்த நாட்டை முன்னேற்றிக் கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே.

மேலும், நாமல் எம்.பி நான் விரும்பும் இளம் அரசியல்வாதி ஆவார். அவருடைய திறமைகளை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், அவரின் எதிர்கால அரசியல் வாழ்க்கையை, ஏன் இந்த அரசியல் புயலுக்கு இரையாக்குகின்றார்கள் என்பதை புரிந்துக்கொள்ளாமல் இருப்பதே கவலையளிக்கின்றது.

அரசியலில் பொறுமை என்ற நற்பண்பை அவரது தந்தையிடமும், ரணில் விக்கிரமசிங்கவிடமும் இருந்து கற்றுக் கொள்ளுமாறு நான் எனது தம்பி நாமலிடம், கூறிகொள்ள விரும்புகின்றேன். இன்று அவரைச் சுற்றி திரண்டிருக்கும் சிலருக்கும், அவருக்கும் ஏற்பட்டிருக்கும் இந்த அவசர நிலைமையே, தனது அரசியல் எதிர்காலமாக மாறியிருக்கின்றது என்பதை, அவர் தனது அரசியல் வாழ்வில் பெறும் அனுபவத்தைக் கொண்டு ஒருநாள் புரிந்து கொள்வார். இந்த நேரத்தில் நாட்டிற்கு முதிர்ந்த தலைவர் ஒருவரே தேவை. இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து புதிய தலைமுறைக்குக் கையளிக்க வேண்டியது பொறுப்பு எமக்குண்டு. இந்தநேரத்தில் அந்த பொறுப்பிலேயே நான் உள்ளேன்.

**கடந்த சில நாட்களுக்கு முன்னர், சஜித்துடன் நாமல் ஒப்பந்தம் மேற்கொண்டதாக உங்களுக்கு சந்தேகம் இருப்பதாக கூறினீர்கள் அல்லவா? அவ்வாறு கூறியதற்கான அடிப்படை காரணம் என்ன?**

பொதுஜன பெரமுனவின் முழுப் பலமும் தற்போது ரணிலிடமே உள்ளது என்பது எந்தவொருவராலும் புரிந்துக் கொள்ளக் கூடியது. அதனால்தான் தம்மிக்க பெரேரா எம்.பியும் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வரவில்லை. இந்த விடயங்கள் நாமல் ராஜபக்ஷவிற்கு தெரியாமல் இருப்பதற்கு அவர் குழந்தையா?

வெற்றிபெற முடியாதென தெரிந்தும், தோற்கப்போவது உறுதி என அறிந்தும் தேர்தலில் போட்டியிட முன்வருவதற்கு வேறு நோக்கம் இருக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் மோத முடியாது என்பது சஜித்துக்கும் தெரியும். ஆகவே இந்த நேரத்தில் அவர், ரணிலுக்கு கிடைக்கும் ஒரு வாக்கையாவது குறைக்க வேண்டும் என நினைத்து முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். பொதுஜன பெரமுனவின் முழு சக்தியும் ரணிலுக்கு கிடைக்காமலிருக்க பயன்படுத்தப்பட்ட துருப்புச் சீட்டே நாமல்.

*காயத்ரி சுரேஷ்*

# சவுதி அரேபிய கிரிகெட் சபைத் தலைவரை சந்தித்த தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத்

சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத் சவுதி அரேபிய கிரிகெட் சபைத் தலைவர் இளவரசர் ஸஊத் அல்மிஷ்அல் ஸஊத் ஐ அவரது இல்லத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்ட 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருப்பதைக் கோடிட்டுக் காட்டியதுடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வைக் குறிக்கும் விதத்தில் இரு நாடுகளுக்குமிடையில் சினேகபூர்வமான கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்வது தொடர்பான முன் மொழிவொன்றையும் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் தூதுவருடன் அமைச்சர் / தூதரகப் பிரதானி மொஹமட் அனஸும் இளவரசர் ஸஊத் உடன் சவுதி கிரிக்கெட் சபையின் துணைத் தலைவர் நவாப் அல் உதைபி மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி தாரிக் ஸகா ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# நாமலைக் களமிறக்கியமை காலத்தை முந்திய செயலே

மாறாதிருப்பதற்கு அரசியல் என்பது மதமல்ல.

நாட்டை மீட்க முடியுமா என்று அஞ்சியவர்கள் ஓடி, ஒளிந்தனர்.

வெற்றியின் பக்கம் சென்று அதிகார வேட்கைகளைத் தீர்ப்பதுதான் இவர்களுக்குத் தெரிந்த தந்திரம்.

நாட்கள் நகர, நகர ஜனாதிபதியின் பயணமும் வெல்லும்.

கொடிபிடிப்பதும் கோஷமிடுவதுமே சிறுபான்மைச் சமூகங்களின் அரசியலுக்கு சாபக்கேடு

ஆசனங்களைக் குறியாகக் கொண்டு எவரும் தேசிய காங்கிரஸில் இணையத் தேவையில்லை.

**வெல்லப்போகும் வேட்பாளரைத் தீர்மானிப்பதை விடவும், வெல்ல வேண்டிய வேட்பாளரைத் தெரிவு செய்வதே, நாட்டுக்கு இன்று தேவையாக உள்ளதாக தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார். சமகால அரசியல் குறித்து தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பேட்டியில் அவர் தெரிவித்தவை.....**

**கே : சமகால அரசியலில் சிறுபான்மை கட்சிகளுக்கு உள்ள பொறுப்புக்கள் எவை?**

***பதில்:*** நாடு இதுவரைக்கும் கண்டிராத வித்தியாசமான ஒரு சூழலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். இதனால் கடந்த காலங்கள் மறக்கடிப்பட்டுள்ளன.

யார் வீரன், எவன் சாதனையாளன் என்றெல்லாம் மக்கள் சிந்திக்கவில்லை. உண்பதற்கு உணவும் வாழ்வதற்கேற்ற அமைதியான சூழலையும் தோற்றுவிக்கும் தலைமையையே மக்கள் தேடுகின்றனர்.

**கே : நீங்கள் கூறுவதைப்போல, மக்கள் தேடும் அந்த தலைவர் யார்?**

***பதில்:*** யாரையும் தேடலாம். ஆனால், இவரையே தெரிவு செய்யுங்கள் என்று மக்களுக்கு வழிகாட்டுவது அரசியல் தலைமைகளின் பொறுப்பு.

**கே : மக்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளில் தேசிய காங்கிரஸும் ஒன்று. அந்த வகையில் உங்களது வழிகாட்டுதல் யாரை நோக்கியதாக உள்ளது.?**

***பதில்*** : நாட்டின் முன்னாள் ஜனாதிபதியை மக்கள் ஏன் விரட்டினர். பசியினால்தான். இதைச் சிந்தித்தால் ஒரு தீர்மானத்துக்கு வரலாம். வீர வரலாறுகள் பேசி மக்களின் பசியை போக்க முடியாது. பொருளாதார வளர்ச்சி, வாழ்வாதாரத்தில் செழிப்பை ஏற்படுத்தியே அவர்களது தேவைகளைத் தீர்க்க வேண்டும். இவற்றைச் செய்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இது, எல்லோருக்கும் தெரிந்த விடயம். அரசியலுக்காக எவரும் மறைக்க முடியாது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தை வென்ற பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் தோற்றார்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய கிளமண்ட் அலி வெற்றியீட்டினார். இதுவே வரலாறு.

**கே : நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை மீட்டார் என்ற ஒரே காரணத்துக்காகவா அவரை ஆதரிக்கிறீர்கள். இந்த நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டது?**

***பதில்*** : திடீரென இந்த நெருக்கடி ஏற்படவில்லையே. திறைசேரி காலியாகப் போவதாக பலரும் எச்சரித்தனர்.

அப்போதைய ஜனாதிபதி இவற்றை செவிமடுக்கவில்லை. பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளை பொருட்படுத்தவில்லை. இவ்வாறு எச்சரித்த அமைச்சர்கள் இருவர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டனர். எவரோ செய்த தவறால் ஏற்பட்ட வீழ்ச்சியைப் போக்க, ஜனாதிபதி ரணிலே முன்வந்தார். இவர் முன்வந்திருக்காவிட்டால், பட்டினி மற்றும் பற்றாக்குறைகளால் நாடு பற்றி எரிந்திருக்கும். ஆனால்,

நாட்டை மீட்க முடியுமா என்று அஞ்சியவர்கள் ஓடி, ஒளிந்தனர். பதவிகளைத் திணித்தபோதும் பொறுப்பேற்க தயங்கினர்.

**கே : ஒரு காலத்தில் நாட்டின் நாயகனாக நோக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ களமிறங்கியுள்ளமை குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?**

***பதில்*** : முதிர்ச்சியான அரசியல் அனுபவமுள்ளவர் மஹிந்த ராஜபக்ஷ. எதையும் வீணாகச் செய்ததுமில்லை, சிந்திப்பதும் இல்லை. எவரது தலையீடுகளும் இன்றி சுதந்திரமாக அவரெடுத்த தீர்மானங்கள் பிழைத்ததும் இல்லை. நாமலைக் களமிறக்கியமை காலத்தை முந்திய செயலே. எனவே, இந்த முடிவில் ஏதாவது அழுத்தம் இருந்திருக்கும்.

**கே : எம்.எச்.எம்.அஷ்ரஃபின் எச்சரிக்கையை, சஜித்தை ஆதரிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தூக்கிப் பிடிக்கிறாரே?**

***பதில்*** : மாறாதிருப்பதற்கு அரசியல் என்பது மதமல்ல.

இன்றைய காலத்தில் தூக்கிப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கையுமல்ல அது. ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராகவும் தற்போதைய ஜனாதிபதி இல்லை. சுயேச்சையாகவே போட்டியிடுகிறார். இத்தனை யதார்த்தங்களையும் மீறி, அஷ்ரஃபின் எச்சரிக்கையை ஏன் தூக்கிப் பிடிக்க வேண்டும். இதைத்தான் சொல்கிறேன்.

யதார்த்தத்துக்கு அப்பாலான உணர்ச்சி அரசியலையே அவர்கள் செய்கின்றனர். ரணசிங்க பிரேமதாசாவின் வெற்றிக்கு அஷ்ரஃபின் ஆதரவுதான் காரணமானதாகக் கூறும் ஹக்கீம், பிரேமதாசாவை ஆதரித்ததற்கான பின்புலத்தையும், யதார்த்தத்தையும் மறைத்து உணர்ச்சிக்காக வரலாற்றை மட்டும் உசுப்பேற்றுகிறார்.

அன்று ரணசிங்க பிரேமதாசாவை அஷ்ரஃப் ஆதரித்த யதார்த்தங்களில் ஒரு துளியைக்கூட இன்று சஜித்திடம் இவர்கள் முன்வைத்துள்ளார்களா?

**கே : ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் நாற்பது நாட்களே உள்ளன. இந்நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இன்னும் தீர்மானத்தை அறிவிக்கவில்லை. இதில் ஏதும் இருக்குமா? ஏன் இந்த தயக்கம் அல்லது தடுமாற்றம்?**

***பதில்*** : பெரிதாக ஒன்றுமிருக்காது. நீங்கள் சொல்வதைப்போல தடுமாற்றம் இருக்கவே செய்யும்.

யார் வெல்வார் என்பதே அது. சமூகம் அல்லது நாட்டின் தேவைக்காக முடிவெடுப்பவர்கள் இல்லையே இவர்கள்.

வெற்றியின் பக்கம் சென்று அதிகார வேட்கைகளைத் தீர்ப்பதுதான் இவர்களுக்குத் தெரிந்த தந்திரம். நாடு இன்றுள்ள நிலையில், வெற்றி வேட்பாளரையல்ல வெல்ல வேண்டிய வேட்பாளரையே ஆதரிக்க வேண்டும்.

இதுதான் தர்மம். தாமதமானாலும் தர்மமே வெல்லும். நாட்கள் நகர, நகர ஜனாதிபதியின் பயணமும் வெல்லும்.

ஆனால், தர்மம், நியாயத்தின் பக்கம் முஸ்லிம் தலைமைகளை அழைப்பது பிறவிக்குருடனை விழிக்கச் செய்வதற்கு (முழித்தல்) ஒப்பானது.

**கே : எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?**

***பதில்*** : ஒரே வார்த்தையில் சொல்வதானால், உணர்ச்சி அரசியலை கைவிடுங்கள் என்பதுதான். இந்தளவு முன்னேறியுள்ள காலத்தில், இன்னும் அடிமைத்தன உணர்ச்சிகளுக்கு பலியாவதை நினைக்கையில், பரிதாபப்பட வேண்டும். அதற்காக உரிமை அரசியல் அவசியமில்லை என்ற பொருளாகாது.

காலமறிந்து பயிர் செய்வதில்லையா. அது போலவேதான். கொரோனா காலத்தில் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட விடயத்தை மிகக் கச்சிதமாகக் கையாண்டிருந்தால், நீதிமன்றம் வரை சென்றிருக்கத் தேவையில்லை.

கொடிபிடிப்பது, கோஷமிடுவது இவைகளே இன்று சிறுபான்மைச் சமூகங்களின் அரசியலுக்கு சாபக்கேடாக அமைந்துள்ளன.

**கே : பிராந்திய அரசியலில் தேசிய காங்கிரஸின் எதிர்கால நகர்வுகள் எப்படியிருக்கும்?**

***பதில்*** : எந்த அரசியலானாலும் சமூகம், நாடு என்பவற்றை மையப்படுத்தியே எமது நகர்வுகள் இருக்கும். இந்த நகர்வுகள், சிலரின் எதிர்பார்ப்புக்களுக்கு தடங்கலாக அமைவதும் உண்டு.

இவ்வாறானவர்கள்தான், எங்களை விட்டுச் செல்கின்றனர். அதிகாரத்தில் ஆசை கொண்டு அல்லது ஆசனங்களைக் குறியாகக் கொண்டு எவரும் தேசிய காங்கிரஸில் இணையத் தேவையில்லை.

*ஏ. ஜீ.எம். தௌபீக்*






மயூரபதி பத்திரகாளியம்மன் ஆலய ஆடிப்பூர விழாவில் கலந்துகொள்வதற்காக தமிழகத்தில் இருந்து வருகைதந்த சிவசேனா மாநில செயல் தலைவர் சசிக்குமார் அண்மையில் புத்தசாசன மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடியபோது. எடுக்கப்பட்ட படம். படத்தில் கோவை ஐயா பரதேசி சித்தன், திண்டுக்கல் குமாரவேல் நாயனார், பெரம்பலூர் எஸ்.எம். பிரபாகரன், மற்றும் சரவணன் ஆகியோர் காணப்படுகின்றனர்.




## ஐ. ம. ச. உதவிச் செயலாளராக ராம்

ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளராக, கட்சியின் வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் மேல்மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சி.வை.பி ராம் நியமிக்கப்படுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி யாப்பில் கட்சியின் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கமைய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவினால் 2024ஆம் ஆண்டுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் உதவி செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதுதொடர்பான நியமனக் கடிதத்தை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச வெள்ளிக்கிழமை கையளித்துள்ளார்.



# நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய கொள்கையை சட்டமாக்கிய ஒரே தலைவர்!

## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன





நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய கொள்கையை சட்டமாக உருவாக்கிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கூறினார்.

இந்த தீர்க்கமான ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தனித்துவம் வாய்ந்த ஒருவராக இருப்பது, நாட்டிற்குப் பொறுப்புக் கூறும் ஐந்து சட்டமூலங்களை நிறைவேற்றிய தலைவராக இருப்பதனாலேயாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைப்பது வழமையான ஒரு விடயமாக இருக்கும் நிலையில், இந்த நாட்டில் முதன்முறையாக ஜனாதிபதி வேட்பாளர் நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியக் கொள்கையொன்றை சட்டப்பூர்வமாக்கியுள்ளதாக அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

ஒன்றாக இணைந்து வெல்வோம் என்ற செயற்திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்விடயங்களைக் கூறினார்.

இதன்போது இங்கு தொடர்ந்து கருத்து கூறிய அமைச்சர்,

7.8ஆக வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், கடுமையான பொருட் தட்டுப்பாடு, நாட்டை அதலபாதாளத்திற்குள் தள்ளும் அடிப்படைவாதிகளின் சதித்திட்டம், பட்டப்பகலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்பட்டமை, எழுபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீவைத்து நாசமாக்கப்பட்டமை என்பனவற்றுக்கு மத்தியில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சராக இருந்து கொண்டு ஆரம்பத்தில் விரிவாக்கப்பட்ட கடனைப் பெற்று நாட்டிற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்து இலக்குகளை அடைந்தது ஒரு வரலாற்று உண்மையாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முன்வைக்கப்பட்ட சட்டப்பூர்வ தேசியக் கொள்கையினால் நாடு மீண்டும் ஒரு போதும் பொருளாதார பாதாளத்திற்குள் வீழ்ந்து விடாது. இந்த தேசியக் கொள்கையினை சட்டபூர்வமாக்குவதற்கு ஐந்து சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஐந்து ஆயுதங்கள் என அவற்றைக் குறிப்பிட முடியும்.

இந்த நாட்டின் மிகவும் தீர்க்கமான ஜனாதிபதித் தேர்தலில் பல ஜனாதிபதி வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளார்கள். அவர்களிடையே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சி, கட்சி நிறங்கள், இனம், மதம், ஜாதி, நிறம், பாலினம் போன்ற பேதங்களின்றி ஒரு பொது வேட்பாளராக சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். அவர் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய கொள்கையைச் சட்டமூலமாக்கி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரே தலைவராகும். அதற்குக் காரணம், சுதந்திரத்திற்குப் பின்னர் 2022ஆம் ஆண்டில் இலங்கை வரலாற்றில் ஒருநாளும் எவரும் எதிர்பார்க்காத மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி உருவானது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை வரலாற்றில் பொருளாதாரம் வளர்ச்சி வீதம் 7.8 ஆக வீழ்ச்சியடைந்தது. சர்வதேச பொருளாதாரத்தை எதிர்கொள்ள முடியாமல், சர்வதேச கையிருப்பு சரிந்து, நாட்டில் பெற்லிரோலியம், மருந்துகள், உரங்கள், இரசாயனப் பொருட்கள், உணவுகள் போன்றவற்றை இறக்குமதி செய்ய முடியாமல் கடுமையான பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்களின் துயரங்களுக்கும், வேதனைகளுக்கும் தீர்வு காண முடியாத சூழலில், அடிப்படைவாதிகளின் சதி முயற்சியினால் பாராளுமன்றம் தீயிடப்பட்ட போதும், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நடுவீதியில் வெட்டிப் படுகொலை செய்த போதும், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 72 பேரின் வீடுகள் உடமைகளை 12 மணிநேரத்திற்குள் தீயிட்டு அழித்து நாசமாக்கிய போதும், 800க்கும் மேற்பட்ட மக்கள் பிரதிநிதிகளைத் துன்புறுத்தி, நாட்டில் பெரும் தீயை உருவாக்கும் சதி முன்னெடுக்கப்பட்ட போதும், நாடு அராஜக நிலைக்குள்ளாவதைத் தடுப்பதற்காக ஐந்து தடவைகள் பிரதமர் பதவியை வகித்த அனுபவத்தைக் கொண்ட, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று பாராளுமன்றத்தைப் பாதுகாத்து, கிளர்ச்சியாளர்களை அடக்கி, நாட்டின் ஜனநாயகத்தின் உச்சமாக விளங்கும் பாராளுமன்ற ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக மீண்டும் பாராளுமன்றம் வந்து, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட எம்.பிக்கள் அனைவரினதும் அதிக வாக்குகளுடன், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியாக பதவியை ஏற்று, இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தார். முக்கியமாக எரிபொருள் இல்லாமல் நாட்டை ஒரு வாரத்திற்குக் கூட முன்னெடுத்துச் செல்ல முடியாமல் பஸ் சேவைகளை, புகையிரத சேவைகளை முன்னெடுக்க முடியாமல் அன்றாட கடமைகளை முன்னெடுக்கவும் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு டீசல், பெற்றோல் இல்லாமலும் இருந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, பெற்றோலைப் பெறுவதற்கான வரிசைகளில் நாட்கணக்காகக் காத்து நின்ற யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ஒரே தலைவர் ரணிலே. அத்தியாவசிய பொருட்கள், மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வழிகள் இல்லாமல் நோயாளிகள் வைத்தியசாலைகளில் மருந்துகளின்றி மரணிக்கும் நிலையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய நிலையும் இருந்தது. உலகின் கடைசி கடன் வழங்குநரான சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று விரிவாக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதுதான் குறுகிய கால பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நிதி அமைச்சு 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ள போதிலும், அவற்றை விடவும் கடினமான சந்தர்ப்பமாக 17வது தடவை சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை விரிவாக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. அந்த கடன் ஒப்பந்தத்தின்படி, எம்மால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியுமான வகையில் சில பாரிய தொடர் நிபந்தனைகள் இவ்வாறான நெருக்கடி மீண்டும் ஏற்படாத வகையில் சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு குறிக்கப்பட்ட இலக்குகள் அவ்வாறே நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைப் பார்த்துவிட்டுத்தான் முதல் கடன் தவணை விடுவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அடைந்து கொள்ளப்பட்ட முன்னேற்றங்களுக்கு அமைய, இரண்டாவது கடன் தவணை விடுவிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் கடைசியாக வந்த நாணய நிதிய பிரதிநிதிகள் குழு, நாம் மிகச் சிறப்பான மாற்றங்களைச் செய்திருந்ததால் மூன்றாவது கடன் தவணையையும் விடுவித்தனர். இவ்வாறு இந்த கடன் தவணைகளைப் பெற்றுக் கொண்டதால், சர்வதேசம் எம்மீதான நம்பிக்கையை மீண்டும் உருவாக்கியதால் அவர்கள் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கினர்.

இந்தப் பொருளாதாரக் கொள்கைகளை மாற்ற முடியுமா? மாற்ற வேண்டும் என்றால், எந்த விடயத்தையும் மாற்ற முடியும். பங்களாதேஷில் மாற்றப்பட்டது போல் மாற்றலாம். ஆனால் அந்த மாற்றத்தின் விளைவாக, அந்த அரசாங்கம் இரண்டு வாரங்கள் மட்டுமே நீடிக்கும்; அதிகபட்சமாக ஒரு மாதம் நீடிக்கும். யார் என்ன சொன்னாலும் வட்டி வீதத்தைத் தீர்மானிப்பது அரசியல்வாதிகள் அல்ல என்ற விடயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாணய விகிதம் தீர்மானிக்கப்படுவது சர்வதேச வர்த்தக முறைகள் மற்றும் கட்டமைப்பினாலாகும். இந்த உலக நெறிக்குப் புறம்பாக, உலகில் உள்ள எதற்கும் உடன்படாமல் மாற்ற முடியும். அப்படி மாற்றினால் நாடு அழிந்துவிடும், நாமும் அழிந்துவிடுவோம், மக்களும் அழிவிடுவார்கள்.

வேறொரு அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்துள்ளது என்பதற்காக அவ்வாறு மாற்ற முடியுமா? உலகின் ஏனைய நாடுகளுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பில் நம்பகத்தன்மையை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இதில் சந்தேகம் வந்தால் இதெல்லாம் அழிந்துவிடும். அதேபோன்று, எதிர்காலத்தில் அனுபவம், ஆற்றல் மற்றும் திறமை கொண்டவர்களால் ஏனைய நிறுவனங்களோடு இணைந்து கொள்ள முடியுமாக இருப்பதே நிறுவனங்களின் மறுசீரமைப்பின் மூலம்தான். இன்று சில நாடுகளில், நிபுணத்துவம் பெற்றவர்கள் பொருளாதார மூலோபாய மாற்றங்களைச் செய்யப் பயன்படுத்தப்படுகிறார்கள். அதற்காக சில துறைகளில் எமக்கு அறிவும் அனுபவமும் குறைவாகும். எனவே, நமது நாட்டின் பேராசிரியர்கள், கலாநிதிகள், நிதி வல்லுநர்கள் எவராலும் நாட்டைக் கடன் நெருக்கடியிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. எனவே, நாம் பிரான்சில் உள்ள லசார்ட் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொண்டோம். எங்களிடம் நிபுணத்துவ அறிவு இல்லாததாலேயே அவ்வாறு நாம் உதவியைப் பெற்றோம்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார உலக நாடுகளுக்குச் சென்று உத்தியோகபூர்வ வழிகளின் ஊடாக பணம் அனுப்புவோருக்கு சலுகைகளை வழங்கி இலங்கைக்கு அதிக வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு வந்தார். நாட்டை நேசிக்காதவர்கள் பணம் அனுப்பக் கூடாது என்று பகிரங்கமாகவே கூறிய போதிலும், அவர்கள் அந்த நேரத்தில் நாட்டுக்காக முன்வந்தார்கள். மருந்து இல்லாமல் நோயாளிகள் மரணிக்கும் போது பணம் அனுப்ப வேண்டாம் என்று யாரால் சொல்ல முடியும்?. எனினும் சிலர் அவ்வாறு செய்தார்கள். உதாரணமாக, 500 மில்லியன் டொலர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உலக வங்கியிடமிருந்து கிடைத்திருந்தது. நாட்டில் பெற்றோல் இல்லாத போது, எரிவாயு இல்லாத போது, நாம் அந்த ஐநூறு மில்லியனில் முந்நூறு மில்லியன் டொலரை வழங்கினோம். இவ்வாறுதான் நாம் நாட்டைக் காப்பாற்றினோம். சுற்றுலா நிறுவனங்களுடன் நாம் பாரியளவில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம். அவர்கள் இன்று பயமின்றி இலங்கைக்கு வருகிறார்கள். அந்த நிலையில் இருந்து காப்பாற்ற அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கை மேற்கொண்டார். அவர்கள் தமது பதவிகளை தியாகம் செய்தவர்கள் என்றே நான் காண்கிறேன். நாட்டுக்காக சரியான முடிவை எடுப்பது மிகவும் முக்கியமாகும். அரசியல்வாதிகளாகிய நாங்கள் அவர்களின் சேவையை பாராட்டுகிறோம். நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் மதிக்கிறோம்.

ஏனைய கட்சிகள் வேறு பொருளாதார நடைமுறைகளை அறிமுகப்படுத்தலாம். இதற்கு பதிலாக 2025ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் போது, அரசு ஊழியர் சம்பளம் எவ்வளவு, அதேபோன்று ஓய்வூதியத்திற்கு எவ்வளவு தேவை, கடன்களுக்கான வட்டிக்கு எவ்வளவு, சுகாதாரத்து றைக்கு எவ்வளவு, கடந்த ஆண்டு வரி வருமானம் எவ்வளவு? வரி அல்லாத வருமானத்தை எப்படித் தேடிக் கொள்வது? மேலதிகமான இருப்பு எவ்வாறு ஏற்படும் எனக் காட்ட முடியும். அதனை சரியாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அதனைச் சட்டமாக்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். இந்த விடயங்களை மாற்ற முடியாது. கொடுப்பனவுகளின் இருப்பில் ஒவ்வொரு ஆண்டும் உபரியைக் காட்ட வேண்டும். இது சொல்வதைப் போல் எளிதானது அல்ல, புள்ளிவிவரங்கள் எண்களில் காட்டப்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

**எம். எஸ். முஸப்பிர்**

# மஹிந்தவின் வாகனத்தில் வஜிர எங்கே சென்றார்?



ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒன்றரை வாரம் கடந்துள்ளது. நான்கு வேட்பாளர்களுடன் தேர்தல் போட்டி தொடங்கியது. அவர்களில் ஜனாதிபதி ரணிலும் உள்ளதால், அவர் இந்த நாட்களில் பெரும்பாலான நேரத்தை அரசியல் அலுவலகத்தில் செலவிடுகிறார். பல்வேறு எம்.பி.க்கள் மற்றும் பல்வேறு குழுக்களை சந்தித்து தேர்தல் திட்டங்களை தயாரிக்க அதிக நேரத்தை செலவிடுகிறார். ஜனாதிபதி ரணில் கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெற்ற கூட்டங்களில் செலவிட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் வீட்டில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ஜனாதிபதி ரணிலும் அதில் கலந்துகொண்டார். ஜனாதிபதி பணிக் குழாமின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார். வடக்கின் வர்த்தக சமூகம், அறிஞர்கள் மற்றும் இளைஞர் குழுக்களும் ஜனாதிபதியை சந்தித்த மக்கள் மத்தியில் இருந்தனர். யாழ்ப்பாண ஆயர், நல்லூர் ஆலயத் தலைமை குரு, நாகதீப விஹாராதிபதி ஆகிய மூவரும் ஒரே விடயத்தைப் சொன்னார்கள். அதாவது, "இந்த நாட்டைக் காப்பாற்றியது நீங்கள்தான். உங்களை ஆசீர்வதிக்க வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது என்பதுதான் அது. ஜனாதிபதி ரணில் மட்டக்களப்புக்கு வந்ததும் அங்குள்ள சட்டத்தரணி சமூகத்தை சந்தித்து கலந்துரையாடினார். பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவினால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர். எஸ். வியாழேந்திரன் ஏற்பாடு செய்திருந்த கட்சியின் இளைஞர் கூட்டத்திலும் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில், பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஏற்பாடு செய்திருந்த சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கூட்டத்திற்கும் சென்றார். மட்டக்களப்புக்குச் சென்ற சாகல ரத்நாயக்கவுக்கு, ஜனாதிபதி ரணிலுடனும் கலந்துரையாட விரும்புவதாக பல பேரிடமிருந்தும் கோரிக்கைகள் வர ஆரம்பித்தன. அதன்படி, வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட சிவில் சமூக நடவடிக்கை கூட்டத்தை அவர் ஏற்பாடு செய்தார். ஜனாதிபதி பங்கேற்ற வெற்றிகரமான கூட்டமாக அது அமைந்தது. செந்தில் தொண்டமானால் திருகோணமலையில் பல பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் தலைவர் கலபொட ஞானிஸ்ஸர தேரர் காலமானதாக, வடக்கு கிழக்கிற்கு வழமையான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த வேளையிலேயே ஜனாதிபதி அறிந்தார். எனவே, ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஏற்பாடாகியிருந்த சில வேலைகளை நிறைவு செய்து அன்றைய தினம் மாலை கொழும்புக்கு வர ஜனாதிபதி ரணில் தீர்மானித்தார். கங்காராம விஹாரை ஜனாதிபதியின் குடும்ப விஹாரையாகும். ஞாயிற்றுக்கிழமை மாலை அமைச்சர் பந்துல குணவர்தனவும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக விஹாரைக்குச் சென்றார். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் விஹாரைக்கு வந்தது டன், தகனக் கிரியைகளில் எதிர்க்கட்சித் தலைவருக்கு உரை நிகழ்த்த சந்தர்ப்பம் உண்டா என்று நேரடியாகக் கேட்டிருந்தார். இறுதிச் சடங்கை சுருக்கமாக நடத்த வேண்டும் என்பதால், இரண்டு பொது உரைகளாக அது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால் இந்த கோரிக்கையின் காரணமாக, குழுவுக்கு மற்றொரு உரையை சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஜனாதிபதி ரணில் தலைமையிலான தேர்தல் வழிநடத்தல் குழுவில் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தை அவருக்கு முன்பாக பகிரங்கமாக தெரிவித்தார். தேரரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஜனாதிபதி ரணில் திங்கட்கிழமை காலை சென்றார். தேரரின் இறுதிக் கிரியைகள் காரணமாக மாலையில் ஏற்பாடாகியிருந்த பல கூட்டங்களை ஜனாதிபதி ரணில் ரத்து செய்திருந்தார். திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி ரணில் அதிக நேரத்தை ஒதுக்கியிருந்தார். அதற்காக பிளவர் வீதியில் உள்ள ஜனாதிபதி ரணிலின் அரசியல் காரியாலயத்தில் பல சந்திப்புகள் இடம்பெற்றன. வாக்குச் சின்னம், கட்சி நிறம் மற்றும் பொதுக்கூட்டங்கள் என பல விடயங்கள் பேசப்பட்டன. மேலும், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிடும் கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் ஆகியவையும் இந்த விவாதத்தின் தலைப்பாகும். வியாழன் பிற்பகல் ஜனாதிபதி ரணில் அலுவலகத்திற்கு வந்த போது அமைச்சர்கள் பலரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். "ஜனாதிபதி நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் பேசும்போது, மற்ற வேட்பாளர்கள் தங்களைப் பற்றி யே பேசுகிறார்கள்" என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர தனது உரையை ஆரம்பித்தார். "இந்தப் வேட்பாளர்களில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிற்குச் சென்று கல்வி கற்ற இருவர் மாத்திரமே உள்ளனர். மற்ற இருவரும் ஜனாதிபதியின் மகன்களாக வருகிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் படித்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது," என அமைச்சர் மனுஷ சிரித்துக் கொண்டே கூறினார். "இரண்டு மகன்களில் ஒருவர் தந்தையைச் சுட்டுவது உண்மைதான். "மற்றவரின் தந்தையை குற்றச்சாட்டிலிருந்து நான்தான் காப்பாற்றினேன்" என்று ஜனாதிபதி ரணில் தன்னையறியாமல் கூறினார். "அப்படியானால் இலங்கைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற மற்றையவர்தான் ஜனாதிபதியா" என பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த வினவினார். "நான் தம்புத்தேகமவில் மத்திய மகா வித்தியாலயத்தை கட்டியதால் அவருக்கு பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வாய்ப்பு கிடைத்தது." ஜனாதிபதி கூறியதும் அங்கிருந்தவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "ஐக்கிய மக்கள் கட்சி கூட்டணியில் இணைந்த எம்.பி.க்கள் அனைவரும் அங்கிருந்தவர்கள்தான். சஜித்துடன் சிறிது காலம் இருந்த தயாசிறி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பக்கம் சாய்ந்தார். போராட்டத்துக்குப் பிறகே எங்கள் கட்சியின் பக்கம் மக்கள் சாய்ந்தனர். எனவே இது சஜித் ஜலனியை மீண்டும் திருமணம் செய்து கொள்வது போன்றது" என பிரசன்ன ரணதுங்க கூறியது அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது.

"ஆட்கள் இல்லை, நாற்காலிகள் காலியாக உள்ளன. நேரடி ஒளிபரப்பில் இது நன்றாக தெரிந்தது. சஜித் ஒரு ஊடக கண்காட்சியை நடத்துகிறார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது" என அமைச்சர் மனுஷ மீண்டும் உரையாடலில் கலந்து கொண்டார். "பங்காளதேஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டு பாலங்களில் தூக்கிலிடப்படுகிறார்கள். இளைஞர்கள் தெருக்களில் வழக்கு விசாரணை நடத்துகிறார்கள். அதிர்ஷ்டவசமாக, இலங்கையில் இந்த நிலைமை ஏற்படுவதை ஜனாதிபதி தடுத்து நிறுத்தினார்,"

(20ஆம் பக்கம் பார்க்க)






# சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்புடன் ரணில் மீண்டும் ஜனாதிபதியாவது உறுதி

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவது உறுதியாகியிருப்பதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அரசாங்க ஊடகமான இலங்கை வானொலிக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றதொரு கட்சி இலங்கையில் உருவாக்கப்பட வேண்டிய தேவை பற்றிக் குறிப்பிடுவீர்களா?**

பதில்: எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சுப் பதவியை வகித்து செயற்பட்டுக் கொண்டிருந்தார். எனினும், ஐ.தே.கவின் கொள்கைகள் மற்றும் அதனால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியாத சூழ்நிலையில், இடதுசாரிக் கொள்கையுடைய கட்சியொன்றுக்கான தேவையை உணர்ந்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அவர் உருவாக்கினார். ஐ.தே.கவிலிருந்து அமைச்சுப் பொறுப்பை உதறிவிட்டு குழுவினருடன் வெளியேறி கட்சியை உருவாக்கி நாட்டின் பிரதமராகப் பதவியேற்றார். இருந்தபோதும், துரதிர்ஷ்டவசமாகப் படுகொலை செய்யப்பட்டார். அதன் பின்னரே சிறிமாவோ பண்டாரநாயக்க உள்ளிட்ட தலைவர்கள் சுதந்திரக் கட்சியைத் தற்பொழுது இருக்கும் நிலைவரை முன்னேற்றிக் கொண்டுவந்துள்ளனர்.

**கே: பண்டாரநாயக்கவின் பின்னர் சிறிமாவோ அம்மையாரின் தலைமைத்துவத்தின் காலத்தில் சுதந்திரக் கட்சியினால் எடுக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான தீர்மானங்கள் நாட்டில் எந்தளவுக்குப் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**



**'நாம் இருக்கும் குழுவே உண்மையான சுதந்திரக் கட்சி'**

பதில்: 1970 - 77 காலப்பகுதியில் அவருடைய தலைமையிலான அரசாங்கம் பல்வேறு முக்கிய தீர்மானங்களை எடுத்திருந்தது. அந்தக் காலப்பகுதியில் உலகில் காணப்பட்ட போக்குகளைக் கவனத்தில் கொண்டே இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. உதாரணமாகக் கூறுவதாயின், தனியார்துறையினரிடம் காணப்பட்ட துறைமுகம் போன்றவை அரசாங்க உடமையாக்கப்பட்டமை போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதற்கு சமாந்தரமாக தொழிற்சாலைகள் பல உருவாகின. இதுவே அந்தக் காலப்பகுதியில் இருந்த உலகப் போக்கு ஆகும். இதற்கு அமைவாக இலங்கையிலும் பாரியதொரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது. உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டது. அவருடைய ஆட்சிக்காலம் மேலும் இரண்டு வருடங்கள் நீடித்திருந்தால் உலக நாடுகளில் கடன் பெறும் நாடாக அன்றி ஏனைய நாடுகளுக்குக் கடன் வழங்கும் நாடாக இலங்கை மாறியிருக்கும். இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். எனினும், அந்த நேரத்தில் இதற்கு எதிராக எடுத்த அரசியல் நிலைப்பாடுகள் காரணமான சூழல் மாறியிருந்தது.

அது மாத்திரமன்றி, பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அனைத்து செயற்பாடுகளையும் உண்மையான நோக்கத்தில் மேற்கொண்டிருந்தார். உதாரணமாக தனியார் சொத்துக்களை பொது உடமையாக்கும்போது, அவரது குடும்பத்திற்குக் காணப்பட்ட பெருமளவு காணிகள் அரச உடமையாக்கப்பட்டிருந்தன. இது அவரின் உண்மையான செயற்பாட்டின் வெளிப்பாடாக அமைந்தது.

**கே: ஆரம்பம் முதல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைத்தே செயற்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு அரசியல் நிலைப்பாட்டை ஆரம்பம் முதல் கடைப்பிடித்து வருவதன் நோக்கம் என்ன?**

பதில்: ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு செயற்படுவது வெற்றியை இலகுவாக்கும். அது மாத்திரமன்றி, ஏனைய தரப்பினருடன் இணைந்து அரசாங்கத்தை முன்கொண்டுசெல்லும் போது ஜனநாயத்துக்கான இடம் மேலும் அதிகரிக்கும். பலருடைய கருத்துக்களைக் கேட்க முடியும். இதனை சரியான பாதைக்குத் திருப்பினால் நாட்டுக்கும் சிறந்ததாக அமையும். குழப்பவாதிகள் ஒருசிலர் இருந்தாலும், ஏகாதிபத்திய நிலைமையை மாற்றுவதற்கு இது உதவும். இதனால்தான் மக்களும் தனியானதொரு கட்சி என்பதற்கு அப்பால் கூட்டணிகள் மீதே அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**கே: இவ்வாறான பின்னணியில் 2014ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரக் கட்சியின் அப்போதைய தலைவருக்கும், செயலாளருக்கும் இடையிலான போட்டியாக அமைந்தது. அவ்வாறான நிலைமை ஏன் ஏற்பட்டது?**

பதில்: எதுவாக இருந்தாலும், யார் வெற்றி பெற்றாலும் அதில் தீர்மானிக்கும் சக்தியாக சுதந்திரக் கட்சி அமைந்துள்ளது என்பதே உண்மையாகும். யார் வெற்றி பெற்றாலும் அதற்கு நாம் முக்கிய பங்காற்றியுள்ளோம்.

**கே: எப்படி அவ்வாறு கூறுவீர்கள்?**

பதில்: நீங்கள் கூறியதுபோன்று யுத்தத்தை வெற்றிகொண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கும் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரே பங்காற்றியிருந்தார். சுதந்திரக் கட்சியின் குழுவினர் சென்றுதான் அன்று அந்த ஜனாதிபதி வேட்பாளரை வெற்றிபெற வைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தனர். அப்படிச் சென்றிருக்காவிட்டால் அந்த வெற்றி கிடைத்திருக்காமல் இருக்கலாம்.

இதன் பின்னர் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெறுவதற்கு சுதந்திரக் கட்சி கூட்டணியுடன் இணைந்து வழங்கிய ஒத்துழைப்பே காரணமாக அமைந்தது. சுதந்திரக் கட்சியின் 17 இலட்சம் வாக்குகள் கிடைத்திருக்காவிட்டால் அவருக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்திருக்காது. அப்படியாயின் அவர் ஜனாதிபதியாகியிருக்க மாட்டார். நாம் அன்று வேறு பக்கத்துக்குச் சென்றிருந்தால் நிலைமை மாறியிருக்கும். அவ்வாறானதொரு நிலைமையே இன்றும் அரசியலில் காணப்படுகின்றது. இன்று நாம் இணைந்து பணியாற்றும் நபரே இந்நாட்டின் ஜனாதிபதியாவார் என்பதையே நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன்.

**கே: அப்படியாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்பொழுது என்ன நிகழ்ந்துள்ளது?**

பதில்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தாம்தான் எனப் பல்வேறு தரப்பினர் கூறினாலும், நாம் இருக்கும் குழுவே உண்மையான சுதந்திரக் கட்சியாகும். எமது கட்சியின் ஆதரவுடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**கேள்வி: ஆரம்பம் தொட்டு சுதந்திரக் கட்சி பல்வேறு அரசியல் சூறாவளிகளுக்கு முகங்கொடுத்த கட்சி. எனினும், மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் பின்னர் இந்தக் கட்சி பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஏன் அவ்வாறான நிலைமை ஏற்பட்டது?**

பதில்: எமது கட்சியின் தலைமைத்துவத்தை எடுத்துப் பார்த்தால், கட்சி மோசமான சரிவைச் சந்தித்தமை மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழாகும். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்தக் கட்சியைப் பொறுப்பெடுத்துக் கொண்டார். பொறுப்பேற்கும்போது 100 இற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பலமான நிலையில் கட்சி இருந்தது. எனினும், அவர் எடுத்த தீர்மானங்கள் காரணமாகக் கட்சி மோசமான சரிவைச் சந்தித்தது. அவரின் பின்னர் நாம் கட்சியைப் பொறுப்பேற்கும்போது இரண்டு உறுப்பினர்களே அவருடன் இருந்தனர். கொள்கை அடிப்படையின்றி எடுக்கும் தீர்மானங்கள் அதிக தாக்கம் செலுத்தின. அவர் இரவில் உறங்கும் போது ஏதாவது கனவு கண்டால் மறுநாள் அவர் எடுக்கும் தீர்மானம் வேறுவிதமானதாக இருக்கும். இவ்வாறே அவரின் நடவடிக்கைகள் இருந்தன. கொள்கை அடிப்படை இன்றி தனித்தனித் தீர்மானங்கள் எடுத்தமையால் இவ்வாறான சரிவு ஏற்பட்டது. எமது கட்சிக்கு ஏற்பட்ட மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு தலைமைப் பதவியிலிருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகத் தடையுத்தரவு கோரி மனுத் தாக்கல் செய்ததன் மூலம் சந்திரிகா குமாரதுங்க கட்சியின் விடயத்தில் மீண்டும் தலையிட்டார்.

---

# ராகுல் காந்தியின் அரசியல் தலைமைத்துவ ஆளுமை மீது வலுவடையும் சந்தேகங்கள்!



**இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியின் தலைவராகியுள்ள ராகுல் காந்தி ஆளுமை நிறைந்ததொரு அரசியல் தலைவரா என்ற சந்தேகம் இந்திய அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது. அந்தச் சந்தேகத்தை உறுதி செய்வது போன்றே சில சம்பவங்களும் அமைந்து விடுகின்றன.**

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக் கிழமை வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை தாக்கல் செய்து மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ உரையாற்றினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உறக்கத்தில் இருந்தார்.

இதைப் பார்த்ததும் பா.ஜ.க எம்பிக்கள், மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ ஆகியோர் ராகுல் காந்தியை நோக்கி விரலை நீட்டி கிண்டலாக நோக்கினர். அவர்கள் ராகுல் காந்தியை கேலி, கிண்டல் செய்தனர்.

இந்தியாவில் தற்போது பரபரப்பாகப் பேசப்படுகின்ற வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ லோக்சபாவில் தாக்கல் செய்திருந்தார். இந்த மசோதா வக்பு வாரியத்தின் அதிகாரத்தை குறைக்கும் நோக்கத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து லோக்சபாவில் அந்த மசோதா நிறைவேற்றப்படாமல் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



**நாடாளுமன்றத்தில் முக்கியத்துவம் நிறைந்த வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கையில், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர்!**

மேலும் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் இடம்பெறும் 31 எம்.பிக்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. இந்தக் கூட்டு குழு மசோதாவை ஆராய்ந்து ஆய்வறிக்கை சமர்ப்பிக்கும். அதனை பரிசீலனை செய்து மத்திய அரசு மீண்டும் வக்பு வாரிய திருத்த மசோதாவை அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்யும்.

இந்நிலையில்தான் தற்போது இணையதளத்தில் வீடியோ ஒன்று வெளியாகி வேகமாகப் பரவி வருகிறது. அது என்னவென்றால் ராகுல் காந்தி உறங்கும் வீடியோவாகும். அதாவது வியாழனன்று லோக்சபாவில் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை தாக்கல் செய்தார். இந்த வேறையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எதிரே அமர்ந்து இருந்தார். அப்போது திடீரென்று ராகுல் காந்தி உறக்கத்தில் மூழ்கினார்.

ராகுல் காந்தி உறக்கத்தில் இருப்பதை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ ராகுலை நோக்கி கையை நீட்டி சுட்டிக்காட்டினார். இதையடுத்து அவர் அருகில் இருந்த பா.ஜ.க எம்.பியான கிரிராஜ் சிங், ராகுல் காந்தியை நோக்கி விரலை நீட்டி, "அங்கே பாருங்கள். அவர் (ராகுல் காந்தி) உறங்குகிறார்" என்று சிலதடவை கூறினார்.

இதையடுத்து அங்கிருந்த மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவ் மற்றும் பா.ஜ.க எம்.பிக்கள் ராகுல் காந்தியை பார்த்துச் சிரித்தனர். மேலும் மேசையைத் தட்டினர். ஆனாலும் ராகுல் காந்தி கொஞ்சம் கூட அசைந்து கொடுக்காமல் உறங்கிக் கொண்டிருந்தார். இந்த வேளையில் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ தனது நெற்றியில் கையை வைத்து அடித்துவிட்டு, "குறுக்கே குறுக்கே பேசாதீர்கள் என்று சொன்னால் கேட்க வேண்டும். தொடர்ந்து குறுக்கே பேச முயன்றால் அது உங்களை உறக்கத்துக்கு அழைத்து சென்றுவிடும்" என்று கிண்டல் செய்தார்.

இதனைக் கேட்டவுடன் மத்திய அமைச்சர்கள், பா.ஜ.க எம்பிக்கள் அனைவரும் சிரித்தனர். மறுபுறம் காங்கிரஸ் எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த வீடியோ தற்போது இணையதளங்களில் வெளியாகி வேகமாகப் பரவி வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது நிழல் பிரதமர். அவர் முழு எதிர்க்கட்சித் தரப்புக்கும் தலைவர் என்பதோடு மட்டுமல்லாது, பல முக்கிய நியமனங்களிலும் பிரதமருடன் இணைந்து செயற்படுவார்.

இத்தனை பொறுப்பு வாய்ந்த ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் உறங்கியது பரவலாக விமர்சிக்கப்படுகின்றது. அரசியல் தலைமைத்துவத்துக்கு அவர் பொருத்தமற்றவர் என்ற கருத்து இந்திய அரசியலில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற சூழலில் இவ்வாறான சம்பவமொன்று நாடாளுமன்றத்தில் நிகழ்ந்துள்ளது.

அவர் ஒரு முதிர்ந்த தலைவராகத் தன்னை மேலும் வலுப்படுத்துவது அவசியமென்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் பங்கு மிகவும் முக்கியமானது. நாடாளுமன்றத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளின் குரலாக மாறுவது மட்டுமல்லாமல், அவருக்கென சொந்த அதிகாரமும் சலுகைகளும் உள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவி, அதற்கென சிறப்புச் சலுகைகள் உள்ளன

ராகுல் காந்தி 2004ஆம் ஆண்டு முதன் முறையாக தேர்தல் அரசியலுக்கு வந்தார். ராகுல் காந்தி கடந்த 2004ஆம் ஆண்டு உத்தர பிரதேச மாநிலம் அமேதி மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ராகுலின் தந்தை ராஜீவ் காந்தியும் அமேதி தொகுதியில் இருந்து மக்களவைக்குப் போட்டியிட்டவரென்பது குறிப்பிடத் தக்கது.

**எஸ்.சாரங்கன்...**

### தமிழர் விடுதலை கூட்டணி

# சிவசிதம்பரத்தின் மருமகன் Prof. தேவராஜ் காலமானார்



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் மு.முருகேசு சிவசிதம்பரத்தின் ஏக புதல்வி நிராஞ்சலியின் கணவர் பேராசிரியர் எச்.தேவராஜ் நேற்று முன்தினம் சென்னையில் மாரடைப்பு காரணமாக காலமானார். இவரது இறுதிச்சடங்கு நேற்று சென்னையில் நடைபெற்றது.

இந்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் பிரதி தலைவரும் சென்னை பல்கலைக்கழக விலங்கியல் விரிவுரையாளருமாக இவர் பணியாற்றினார்.

சிவசிதம்பரத்தின் பிறந்த நாள் நூற்றாண்டு நினைவு விழா கடந்த வருடம் ஜூலையில் அவரது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியில் நடைபெற்ற போது பேராசிரியர் தேவராஜ் இறுதியாக அதில் கலந்துகொண்டார். சிவசிதம்பரத்தின் நினைவாக பல சமூக நலன்புரி திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்பதில் பேராசிரியர் தேவராஜ் அக்கறை கொண்டிருந்தார்.

# ஹோமாகமவில் 2 மதுபான கடைகளை மீள திறக்க நீதிமன்றம் அனுமதி

ஹோமாகம பகுதியிலுள்ள இரண்டு மதுபானக் கடைகளை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்து கலால் திணைக்களத்தினால் கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி வழங்கப்பட்ட இரண்டு கடிதங்களின் செயற்பாட்டை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது.

கலால் திணைக்களத்தின் தீர்மானத்தை எதிர்த்து இரண்டு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபிதா ராஜகருணா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா முன்வைத்த விடயங்களை கருத்திற்கொண்டு இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"NAS ஹோமாகம ஒயின் ஸ்டோர்ஸ்" உரிமையாளர் டி.என். சமீர அத்தநாயக்க மற்றும் "கண்டலந்த ஒயின் ஸ்டோர்ஸ்" உரிமையாளர் பி.எம். ஜயசுந்தர ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவில் கலால் ஆணையாளர் நாயகம் மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கலால் ஆணைச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்று மதுபானக் கடைகளை நடத்தி வருவதாக மனுதாரர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜூலை 24 ஆம் திகதி பாதுக்க கலால் அலுவலகத்தின் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று இவர்களது வர்த்தக நிலையத்துக்குச் சென்று வர்த்தக நிலையங்களை தற்காலிகமாக மூடுமாறு அறிவித்துள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

கலால் ஆணையாளர் நாயகத்தின் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் எழுத்து மூலமான உத்தரவின்றி அந்த நிறுவனங்களை மூடுவதற்கு ஆட்சேபம் தெரிவித்ததாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்படி கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் ஹோமாகம பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் மனுதாரர்களுக்கு அன்றையதினம் மாலையே கிடைத்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார்.

மனுதாரர்களின் வர்த்தக இடம் தொடர்பில் எழுந்துள்ள ஆட்சேபனைகளின் அடிப்படையில் விசாரணைகள் நிறைவடையும் வரை வர்த்தக நிலையங்களை தற்காலிகமாக மூடுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

மனுதாரர்கள் தமக்கு கிடைத்த அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் சட்டரீதியாக இந்த வர்த்தக நிலையங்களை நடத்தி வருவதாகவும், கலால் சட்ட விதிகளுக்கு மாறாக மனுதாரர்கள் எதனையும் செய்யவில்லையெனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

வர்த்தக நிலையங்களை மூடுவதற்கான உத்தரவு நியாயமற்றது, சட்டவிரோதமானது மற்றும் தன்னிச்சையான உத்தரவு என்பதால், அந்த உத்தரவை செல்லுபடியற்றதாக்கி உத்தரவு பிறப்பிக்குமாறு ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த நீதிமன்றம், அதற்கான தடை உத்தரவை பிறப்பிக்க முடிவு செய்தது. இந்த மனுக்கள் மீதான மறுபரிசீலனை செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஹோமாகம அபிவிருத்திக் குழுத் தலைவர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, ஹோமாகம கல்வி பாதுகாப்புச் சபை, பொது அமைப்புகள் உள்ளிட்ட பலரும் மேற்படி மதுபான சாலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியின் சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா மற்றும் சட்டத்தரணிகளான ருவந்த குரே மற்றும் ஜோஷா மொரேஸ் ஆகியோர் மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்தனர். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுரங்கா விமலசேன ஆஜராகியிருந்தார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி செப். 14 நடக்கும்

## வதந்திகளை நம்ப வேண்டாம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி செப்டெம்பர் 14ஆம் திகதியன்று நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதன் காரணமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒத்திவைக்கப்படுவதாக வெளியாகியுள்ள வதந்திகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையென குறிப்பிட்ட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இப்புலமைப்பரிசில் பரீட்சை பிற்போடப்பட மாட்டாதெனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட செப்டெம்பர் 14 திகதியன்று நடைபெறுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, க.பொ.த. சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பெறுபேறுகளை வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

பொதுத்தகவல் தொழில்நுட்பப் பரீட்சை ஒக்டோபர் 12ஆம் திகதி நடத்தப்படுமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 62 பேருடன் பயணித்த...

விழுந்து வெடித்து சிதறி விபத்துக்குள்ளானது. சாவ் பாலோ மாநிலத்தில் வியோபாஸ் விமானமான 2283 என்ற விமானம் பறந்துகொண்டிருந்தது. வின்ஹெடோ நகருக்கு மேலாக இந்த விமானம் பறந்துகொண்டிருந்த போது விமானம் நிலை தடுமாறி கீழே விழுந்து வெடித்ததை உள்ளூர் தீயணைப்புப்படையினர் உறுதி செய்துள்ளனர்.

விமானம் விழுந்த அந்த இடமே தீப்பிளம்பாக மாறியது. எவரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது. ஏனெனில் விமானம் விழுந்த வேகத்தில் வெடித்து சிதறியது. அதில் ஏற்பட்ட தீப்பிளம்பு காண்போரை கண்ணீரில் ஆழ்த்தியது.

58 பயணிகள் மற்றும் விமானிகள் உட்பட 4 பணியாளர்களுடன் சாவ் பாலோவின் சர்வதேச விமான நிலையமான குருல்ஹாஸ் (Guarulhos) நோக்கிச் சென்ற விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக, அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்துக்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. விபத்து நடந்த இடத்துக்கு தீயணைப்புப் படை வீரர்கள் விரைந்தனர். மீட்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த விபத்தை அறிந்த பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எங்கள் கருத்து...

# நெறிமுறை பிறழ்வது அரசியலுக்கு அழகல்ல!

இருவருட காலத்தில் அரசாங்கம் மேற்கொண்ட அர்ப்பணிப்பான உழைப்பை அவர் பாராளுமன்றத்திலும் வெளிப்படுத்தியிருக்கின்றார். ஜனாதிபதி கூறுகின்ற ஆதாரங்கள் வெளிப்படையானவை என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

நாட்டின் தலைமையை தாம் பொறுப்பேற்ற சமயத்தில் நாடு எவ்வாறான வீழ்ச்சி நிலைமையில் இருந்ததென்பதையும், நாடு படிப்படியாக இன்றைய நிலைமைக்கு மீண்டெழுந்து வருவதற்கு இதுவரை அரசாங்கம் மேற்கொண்ட திட்டங்களையும் ஜனாதிபதி எடுத்துக் கூறியுள்ளார். இருவருட காலத்தில் தாம் மேற்கொண்டுள்ள அர்ப்பணிப்புகளை கவனத்தில் கொண்டும், நாட்டின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டும் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தங்கள் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது அவரது கருத்து ஆகும்.

ஜனாதிபதியின் கருத்து இவ்வாறிருக்கையில், எதிரணியினரும் பலவாறான கருத்துகளை பிரசார மேடைகளில் வெளியிட்டு வருகின்றனர். அக்கருத்துகளில் பெரும்பாலானவை உண்மைக்குப் புறம்பானவையாக உள்ளதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

எதிரணியினர் அரசாங்கத்தைக் குற்றம் கூறுகின்றனரே தவிர, இன்றைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கான திட்டங்கள் எதனையும் இதுவரை வெளிப்படுத்தியதில்லை. அரசாங்கத்தைக் குற்றம் சுமத்தி கூக்குரலிடுகின்ற அவர்கள், பொருளாதார முன்னேற்றத்துக்கான தங்களது திட்டம் என்னவென்பதை இன்னுமே மக்களிடம் முன்வைக்கவில்லை.

அதேசமயம் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை மேற்கொண்ட உடன்படிக்கைகளை மீளாய்வு செய்யப் போவதாகவும், அந்த உடன்படிக்கையை ரத்து செய்யப் போவதாகவும் சிறுபிள்ளைத்தனமாகக் கூறி வருகின்றனர்.

சர்வதே நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சாதாரண உள்நாட்டு விவகாரமாக அவர்கள் கருதுவது நகைப்புக்கிடமானதாகும். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திலிருந்து வெளியேற முற்பட்டால் அதன் எதிர்விளைவான தீங்குகளை அறியாதவர்களாக அவர்கள் பேசுகின்றனர்.

தேர்தல் பிரசாரத்தின் போது அரசாங்கத்தைத் தாக்க வேண்டுமென்பதற்காக மக்கள் மத்தியில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை தெரிவிப்பது அரசியல்நெறி அல்ல. அரசியல் பாதை எப்போதும் நேரானதாகவும், வெளிப்படையானதாகவுமே அமைந்திருக்க வேண்டும்.

## 5 நாட்களுள்...

ஆணையாளர் அலுவலகத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டங்கள், விசாரணைகள் மற்றும் திட்டமிடல்) சிந்தக குலரத்ன தெரிவித்தார்.

பணவீக்க வீதம் மற்றும் நுகர்வோர் விலை சுட்டெண் சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் செலவுக்கான பணத்தின் அளவு தீர்மானிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலதிக தேர்தல் ஆணையாளரின் கூற்றுப்படி எந்தவொரு வேட்பாளரும் இந்த அதிகபட்ச செலவின வரம்பு அல்லது அனுமதிக்கக்கூடிய செலவினத்தை தாண்டக்கூடாது. மற்றும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 21 நாட்களுக்குள் தங்கள் தேர்தல் செலவு அறிக்கையை ஒப்படைக்க வேண்டும். 2023 ஆம் ஆண்டின் தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டம் எண். 03 இன் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி இந்த ஆண்டு முதல் தேர்தல் செலவுகளுக்கான சட்டபூர்வ அடிப்படையை இது வழங்குகிறது.

தேர்தல் செலவு அறிக்கையிலிருந்து, சம்பந்தப்பட்ட வேட்பாளர் தனது தேர்தலுக்காக அவர் பெற்ற வருமானத்தின் அனைத்து விவரங்களையும், தேர்தலுக்காக அவர் செய்த அனைத்து செலவுகள் உட்பட அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்த ஒரு பிரமாணப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.10 நாட்களுக்கு பிறகு தேர்தலுக்கு ஒவ்வொரு வேட்பாளரின் சார்பிலும் செய்யப்படும் அனைத்து செலவுகளையும் பொதுமக்கள் சரிபார்த்து, 31 நாட்களுக்குப் பிறகு, புகார்களை அளிக்க வாய்ப்பு வழங்கப்படும். இந்த விதிமுறைகளை மீறும் வேட்பாளர்கள் இருப்பின் அவரை பொலிஸ் ஊடாக சட்டமாஅதிபருக்கு அனுப்பி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற தீர்ப்பின் பின்னர், குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் மற்றும் மூன்றாண்டுகள் சிறைத்தண்டனையுடன் வழங்கப்படுவதுடன் அவரது பாராளுமன்ற உறுப்புரிமையும் இரத்து செய்யப்படும்.

மேலும், மூன்றாண்டு காலம் குடியுரிமையும் இரத்து செய்யப்படும். இந்த நாட்டில் நிறுவப்பட்டுள்ள அரச நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், பிற நாடுகளின் அமைப்புகள் மற்றும் கறுப்புப் பணத்தை தேர்தல்களுக்காக பெறக்கூடாதென தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது, உரிய தேர்தல் சட்ட திருத்தத்தின் மூலம் ஐந்து இலட்சம் ரூபாய் வரை அபராதம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், தேர்தல் முறைப்பாட்டு மனுக்களுக்கான கால அவகாசம் 21 நாட்களிலிருந்து 42 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கும் தீர்மானத்தின்படி, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை அனுபவிப்பவர்களுக்கு வாக்களிக்க உரிமையில்லை, மற்றைய கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

## பிரிட்டன் வாழ் இலங்கையரின்...

இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் சந்தித்த உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம, அவர்களுடன் பிரிட்டனில் நிலவும் அமைதியின்மை நிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது குறிப்பாக "பிரிட்டனின் சில பகுதிகளில் மக்கள் அமைதி சீர்குலைவு சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன், இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடம் கேட்டறிந்ததுடன், இலங்கையரின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பில் உறுதிப்பாட்டையும் பெற்றுக்கொண்டார். அதன்படி இது தொடர்பாக நாம் பிரிட்டன் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி வருவதுடன், நாட்டில் மீண்டும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உத்தரவாதம் அளித்திருக்கிறோம்" என உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்தார். அத்தோடு பிரிட்டன் வாழ் இலங்கையரை அவதானத்துடன் செயற்படுமாறும், உள்நாட்டு செய்திகள் மற்றும் அரசினால் விடுக்கப்படும் அறிவிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று பிரிட்டனில் பல்லின, பல்கலாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 7,50,000 இலங்கையர் வாழ்வதாகவும், அவர்கள் கடந்த பல வருடகாலமாக பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சுபீட்சத்துக்கு பங்களிப்பு செய்து வந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம, இலங்கை மற்றும் பிரிட்டனுக்கிடையில் நீண்டகாலமாக பரஸ்பர நம்பிக்கை மற்றும் நன்மதிப்பின் அடிப்படையிலான நல்லுறவு காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

"பிரிட்டனில் நீடித்து நிலைத்திருக்கும் ஸ்திரத்தன்மைக்கு அடிப்படையாக அமைந்திருக்கும் ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சி ஆகிய கோட்பாடுகளை மையப்படுத்தியே அந்நாடு நிறுவப்பட்டிருக்கின்றது. எனவே பிரிட்டனின் உரிய அதிகாரிகள் இந்த அமைதியின்மைக்கு காரணமானவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவார்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்" ' எனவும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் இலங்கையரை அங்குள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துடன் நெருங்கிய தொடர்பை பேணுமாறும், அவசர உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் 1044 7475206220/ 020 7262 1841 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவோ அல்லது mail@slhclondon.co.uk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ உயர்ஸ்தானிகரகத்தை தொடர்பு கொள்ளுமாறும் உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம கேட்டுக்கொண்டார்.

## உபாலி அபேரத்ன...

மனுதாரர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட ஆணைக்குழு நடந்துகொண்ட விதம் சட்டவிரோதமானதென்றும், இயற்கை நீதிக்கு எதிரானதென்றும் முடிவு செய்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்புடைய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது மனுக்கள் மீதான விசாரணையின் பின்னர் இது தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் அவர்களுக்கு எதிரான பரிந்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் அடங்கிய, சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி, அர்ஜுன ஒபேசேகர ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் வழக்கின் தீர்ப்பை திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார்.

ஆணைக்குழுவினால் உரிய விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், கண்டுபிடிப்புகள் காரணமாக பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

அந்த பரிந்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை எதிர்த்து இந்த மனுதாரர்கள் தனித்தனியாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்தனர். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்டோர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, உறுப்பினர்களான சந்திரசிறி ஜயதிலக மற்றும் சந்திரா பெர்னாண்டோ, ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட நிர்வாக அதிகாரியும் தற்போதைய ஜனாதிபதியின் செயலாளருமான சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளராக கடமையாற்றிய போது தவறிழைத்ததாக ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

பிரதமர் அலுவலகத்தின் வரவு, செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஊழல் தடுப்புக் குழு அலுவலகத்துக்கு மூன்று கோடியே தசம்மூன்று ஏழு (3.37) ரூபாவை வழங்குவது தொடர்பிலேயே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அதன் பரிந்துரைகள் அடங்கிய தொடர்புடைய ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்ததுடன், அவ்வாறான இறுதி அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லையென மனுதாரர் சமன் ஏக்கநாயக்க, மனுவில் விடயங்களை முன்வைத்திருந்த நிலையில், அறிக்கையை கோரிய போது தெரியவந்தது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் அந்த பரிந்துரைகளை அமுல்படுத்த அமைச்சரவை எடுத்த தீர்மானம் செல்லுபடியற்றதாக இந்த மனுக்களில் கோரப்பட்டிருந்தன. எனவே, ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை அமுல்படுத்துவதை நிறுத்தி வைத்து இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு மனுக்களில் மேலும் கோரப்பட்டிருந்தது.

## தோட்ட தொழிலாளர்களுக்கான...

மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எப்படியோ தற்போது நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது. நாட்டின் பொருளாதார பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படா விட்டாலும், மக்களுக்கு பெருமளவு நிவாரணங்களை வழங்க முடிந்துள்ளது. அதன்படி 2022ஆம் ஆண்டை விட மக்கள் சுமுகமாக வாழும் நிலைமை உருவாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் காரணமாகவே எம்மால் அவ்வாறானதொரு நிலையை உருவாக்க முடிந்தது. எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடுகளை எட்டியுள்ளோம்.

அதன்படி 2042 ஆம் ஆண்டு வரை நாங்கள் வாங்கிய கடனை மீள செலுத்த வேண்டும். இந்த உடன்படிக்கைகளில் இருந்து நாம் விலகிக் கொண்டாலோ அல்லது திருத்தம் செய்ய முயற்சித்தாலோ அதன் பலன்களை இழக்க நேரிடும். அப்போது ஒரு நாடாக நாம் பழைய நிலைக்கு தள்ளப்படுவோம். மீண்டும் வரிசை யுகம் வரும். எனவே இந்த திட்டத்தை தொடருவோமா? அல்லது கைவிடுவோமா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் வெற்றி குறித்து நாம் திருப்தியடைய முடியாது. இந்தியாவை போல நாமும் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும். 2048ஆம் ஆண்டுக்குள் அந்த விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அதனால் நாட்டை பொறுப்பேற்க தலைவர்களை தேடப் போகிறோமா? அல்லது ஒலிம்பிக் போட்டிகளில் ஓடுவதற்கு தலைவர்களை தேடுகிறோமா? என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

தோட்ட தொழிலாளர்களுக்கு பல வருடங்களாக ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படவில்லை. அவற்றை வழங்கும் பணிகள் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதால் அதனை வழங்கும் இயலுமை அரசாங்கத்துக்கு கிடைக்கும்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களாக தோட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைத்தது. மேலும், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்துள்ளது. ஆனால் அந்த நிவாரணத்தை தோட்ட மக்களுக்கு இன்னும் வழங்க முடியவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,700 ரூபா சம்பளம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு 7 பெருந்தோட்ட கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு பின்னர் அந்த அமைச்சின் பொறுப்பு ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே நாளை திங்கட்கிழமை சம்பள நிர்ணய சபையுடன் கலந்துரையாடி இது தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வரவும் அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை சட்டமாக்கவும் முயற்சிகளை முன்னெடுப்போம்.

அந்த சட்டங்கள் கொண்டுவரும் போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பழனி திகாம்பரம் எம்.பி ஆகிய இருவரும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவளிப்பார்களென எதிர்பார்க்கிறோம்" எனத் தெரிவித்தார்.

## கண்டி, எசல பெரஹராவுக்கு...

19ஆம் திகதிவரை பகல் இரவு சேவைகளாக விசேட பஸ் சேவைகளை நடத்துவதற்கு இலங்கை போக்குவரத்து சபை ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி கண்டி மாவட்டத்தை உள்ளடக்கிய அனைத்து இடங்களுக்கும் 438 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், கேகாலை, கொழும்பு, நாவலப்பிட்டி மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து மேலதிகமாக 100 பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தவும் இலங்கை போக்குவரத்து சபை திட்டமிட்டுள்ளது.

## சரியான வழிகாட்டலை...

தேசிய மீனவர் சம்மேளன மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனை தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிதம அதிதியாக கலந்துகொண்டார். நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான மீனவ சங்கங்கள் மற்றும் கிளை சங்கங்களின் தலைவர்கள் உட்பட பெருந்தொகையான பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து பேசும் போது, ''ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டு மக்களின் பொருளாதாரத்தை பலப்படுத்தி வருகிறார். இன்று இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாறி வருகிறது.

உலகின் சக்திவாய்ந்த தலைவர் ஜனாதிபதி என்பதை கூற வேண்டும். அரசியலில் மட்டுமின்றி அறிவாற்றலும் உடைய அவர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறார்.

அன்று மக்களுக்கு எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை இருக்கவில்லை. அந்த இருண்ட காலத்தை நினைத்துப் பாருங்கள். அவ்வாறான சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த நாட்டை பொறுப்பேற்காத போது, நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் ஏற்றுக் கொண்டார்.

அதற்காக அவருடைய கரங்களை பலப்படுத்த நாம் செயற்பட வேண்டும். அத்துடன் நீண்டகாலமாக நிலவி வரும் மீனவ மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் தீர்வு காண்பாரென நாம் எதிர்பார்க்கின்றோம்" எனத் தெரிவித்தார்.

இந்த மீனவர் சந்திப்பில் இலங்கையின் அனைத்து பாகங்களில் இருந்தும் பெருந்திரளான மீனவர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, தேசிய மீனவர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் நெல்சன் எதிரிசிங்க உள்ளிட்ட சங்கத்தின் பிரதிநிதிகள் கடற்றொழில் பிரகடனத்தை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

## தேர்தல் கடமைகளுக்காக...

மாத்திரம் இராணுவத்தினரின் உதவியையும் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். தற்போது தேர்தல் கடமைகளுக்காக அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகங்களில் 700 உத்தியோகத்தர்களே உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியாகும்வரை இந்த அதிகாரிகளின் சேவை தேவைப்படுவதாகவும் இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிராம அலுவலக உத்தியோகத்தர்களும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளதாகவும் ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை எந்தவொரு தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபட மாட்டோமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய துறைகளுள் உள்வாங்க...

கட்டமைப்புக்கான பல்வேறு உபகரணங்களை மூச்சு என்ற ('ஹுஸ்ம') வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டார். எனவே எங்கள் தலைவர் மக்கள் பிரச்சினைகளை நடைமுறையில் பார்க்கும் தலைவராவார்.

அதன்படி, 10 இலட்சம் சிறு மற்றும் நடுத்தர தொழில்துறைகளை உருவாக்குவதென ஐக்கிய மக்கள் சக்தி அரசின் எதிர்பார்ப்பாகும். நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்த பின்னர் நஷ்டத்தில் இருந்த இரண்டு இலட்சத்து அறுபத்து மூவாயிரம் சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகள் மூடப்பட்டன. இது போன்று வீழ்ச்சியடைந்துள்ள சிறு, நடுத்தர தொழில்துறையினரை உயர்த்த எங்கள் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.



# IMF நிபந்தனைகளை மாற்ற முடியுமா?

## ஒப்பந்தத்தை மாற்ற முடியாது

**ஜமைக்கா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரான சட்டத்தரணி பிரதிபா மஹாநாமஹேவா**



இந்த ஒப்பந்தத்தை மாற்றுவது கடினமாக இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்த நாட்டில் பல அரசாங்கங்களின் கீழ் பொருளாதார திட்டங்கள் இருந்தன. ஒவ்வொரு அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போதும், நடைமுறைகள் மாறும். ஆனால் யார் ஆட்சிக்கு வந்தாலும் IMF நிபந்தனைகளை மாற்றுவது சற்று சிரமமம். பொருளாதாரத்தை ஓரளவு நிலையான மட்டத்திற்குக் கொண்டு வரும் வரைக்கும் இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஏதேனும் நிபந்தனைகள் இருக்குமானால், பேச்சுவார்த்தை மற்றும் ஒருமித்த இணக்கப்பாடுகளின் மூலம் தீர்த்துக் கொள்வதைத் தவிர பலவந்தமாக நிபந்தனைகளை மாற்ற முடியாது. பொருளாதார அபிவிருத்திச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஊழல் எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவ்வாறு வரும் அரசாங்கம் எந்த தரப்பாக இருந்தாலும் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நாட்டை மீண்டும் பழைய நிலைக்குச் செல்வதை தடுக்க வேண்டும். தற்போதுள்ள இணக்கப்பாட்டினை முழுமையாக கிழித்தெரிய முடியாது. 2027ஆம் ஆண்டு வரைக்கும் தற்போது IMF உடன் இருக்கும் இணக்கப்பாடுகளுடன்தான் நாம் முன்னேறிப் பயணிக்க வேண்டும். அந்த அடித்தளத்திற்கு அமைய 2024ஆம் ஆண்டில் இணக்கப்பாட்டிற்கு வந்து 2025ம் ஆண்டில் அதனைச் சீர்குலைப்பது நல்லதல்ல. எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்த உடன்படிக்கைகளை மாற்ற முடியாது. அவர்களின் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்பட்டுத்தான் நாம் முன்னேற வேண்டும்.

## நாம் போடும் தாளத்திற்கு ஏற்ப நாணய நிதியம் ஆடாது

**பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை பீடத்தின் பேராசிரியர் மில்டன் ராஜரத்ன**



நிபந்தனைகளை மாற்றுவது என்பது வெற்றிகரமான விடயமல்ல. தற்போதுள்ள அரசாங்கத்திற்கு எதிராக தேர்தலில் போட்டியிடும் அனைவரும் இந்த சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் புறக்கணிக்கப் போவதாகவே கூறுகின்றனர்.

இவற்றை நான் அரசியல் தலைப்புகளாகப் பார்க்காமல் நாட்டைப் பற்றிய தலைப்புகளாகவே பார்க்கிறேன். IMF இருப்பது அதிகமாகப் பேரம் பேசும் நிலையில் அல்ல. எமக்கே கடன் தேவையாக உள்ளது. நாங்கள்தான் பேரம் பேசுகிறோம்.

நாம் போடும் தாளத்திற்கெல்லாம் IMF ஆடாது. எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் முதலில் சிந்திக்க வேண்டியது நாட்டைப் பற்றித்தான். IMFற்கு எதிராக பெக்கேஜ்களை முன்வைப்பதை விட, இச்சந்தர்ப்பத்தில் இப்போது முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக முன்னோக்கிக் கொண்டு செல்வதே மிக முக்கியமானது என நான் நினைக்கிறேன்.

தற்போதுள்ள அரசாங்கத்தால் நிறுவப்பட்ட அமைப்பு, இரண்டு தரப்பினருக்கும் பொருத்தமானது மற்றும் செய்யக்கூடியது என்று நான் நினைக்கிறேன். எமக்கு கடன் வழங்கிய நாடுகள் பல உள்ளன. இந்த தரப்புக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்துதான் தற்போதுள்ள வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

IMF இலிருந்து வெளியேறிய பின்னர், ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு எமது நாடு தொடர்பில் இருந்த நம்பிக்கையில் வீழ்ச்சி ஏற்படும். இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## வேலைத்திட்டம் பாதிக்கப்பட்டால் நாடு மீண்டும் நெருக்கடி நிலைக்கு திரும்பும்

**பேராசிரியர் சிறிமல் அபேரத்ன, கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரப் பிரிவு**



பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களைச் செய்தால் தற்போது முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டம் சேதமடைவது மட்டுமின்றி, மீண்டும் நாட்டில் பொருளாதார நெருக்கடியும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

IMF நிபந்தனைகளில் இருக்க வேண்டியது அவசியம் என்றே பெரும்பான்மையானவர்கள் கூறுகிறார்கள்.

வருமானம் ஈட்டுதல், வரவு செலவுத் திட்டப் பிரச்சினை, நிதிக் கொள்கை போன்றவற்றில் தற்போது நாங்கள் ஒப்புக் கொண்ட இலக்குகள் உள்ளன.

அந்த நிபந்தனைகளை மாற்ற முடியாது.

அந்த இலக்குகளை அடைவதற்கும் மற்றும் வழங்கப்பட்டுள்ள திட்டங்களைப் பேச்சுவார்த்தையினை மேற்கொண்டு மாற்றிக் கொள்ளவும் முடியும்.

அர்ஜென்டினா, பாகிஸ்தான் போன்ற நாடுகளை இவ்வாறு மீண்டும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட நாடுகள் எனக் குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும், தற்போதுள்ள வரிக் கொள்கைகளைப் பற்றி நாம் பேசினால், தற்போதுள்ள வரி விகிதங்களைக் குறைப்பதன் மூலம் வரி அடிப்படையை அதிகரிக்க ஒரு திறமையான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்தி மக்களின் ஒத்துழைப்புடன் ஒரு நடைமுறையினைத் தயாரித்துக் கொண்டால், எம்மால் முன்னேற முடியும். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் செயற்படக் கூடிய நிறுவனங்களிலிருந்து சில பலன்களை எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

இதுபோன்ற செயல்களைச் செய்வதற்கு IMF உடன் எந்த முரண்பாடும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

இந்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாம் மீண்டும் நெருக்கடி நிலைக்குச் செல்ல மாட்டோம்.

## நாட்டை பின்னோக்கி நகர்த்துவதா? முன்னேறிச் செல்வதா சரியானது?

**பொருளியல் கற்கை பீடத்தின் முன்னாள் பேராசிரியர் விஜிதபுரே விமலரத்ன தேரர்**



உண்மையிலேயே இந்நாடு நெருக்கடிக்குள் உள்ளாகியிருக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு வருட கால பேச்சுவார்த்தையின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள நிபந்தனைகளை கால எல்லைக்கு முன்னரே நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு இருக்குமாயின், எம்மால் ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கும் வாய்ப்புள்ளது, நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும். எனினும் அதனோடு இணைந்த ஏனைய தரப்பினர் உள்ளனர்.

கடன் பெற்றவர்கள் கடன் வழங்கியவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, சில உடன்படிக்கைகளுக்கு வரலாம். மற்றொரு வழி உள்ளது, அதாவது, ஒருதலைப் பட்சமாக விலகிக் கொள்ள முடியும். எனினும் நாட்டில் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்பட்டால் பேச்சுவார்த்தை நடத்த அதிக காலம் எடுக்கும். அத்தகைய நாடுகள் இன்று எங்கே இருக்கின்றன என்பது நமக்கு மிகத் தெளிவாகத் தெரிகிறது. சிம்பாப்வே மற்றும் ஈக்வடோர் போன்ற நாடுகள் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து வெளியேறின. இந்த இலக்குகளில் எம்மால் இருக்க முடியாவிட்டால், சிறிய மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும். இதனோடு தொடர்புடைய வணிகக் கடன், இருதரப்புக் கடன் வழங்குனர்கள் உள்ளிட்ட ஏனைய தரப்பினருடனும் எம்மால் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியும். என்றாலும், நாம் இப்போது வந்திருக்கும் இடத்திலிருந்து முன்னோக்கி செல்வதா? அல்லது நாட்டை பின்னோக்கி கொண்டு செல்வதா என்பது தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

## நிலையான இலக்குகளை மாற்ற முடியாது

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கை பீடத்தின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க**



IMF இன் நிபந்தனைகளை மாற்றுவதற்கு சில வாய்ப்புகள் இருந்தாலும், அது ஒரு சவாலான பணியாகும். இலங்கைக்கு உரிய பொருளாதார காரணிகளை அடைந்து கொள்வதற்கும் மற்றும் அடிப்படை இலக்குகளுக்கு இடையூறுகள் ஏற்படாதவாறு அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சாத்தியங்கள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பாதிப்பு இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த மாற்றத்தால் பல பாதகமான விளைவுகள் உள்ளன.

குறிப்பாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன் வழங்குனர்களுக்கு, முதலீட்டாளர்களுக்கு ஒருவித நிச்சயமற்ற நிலை ஏற்படும். அதேபோன்று மீண்டும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அந்தப் பேச்சுவார்த்தைகள் முடியும் வரை சர்வதேச நாணய நிதியம் கடன் வசதிகளை வழங்காது. இதன்போது பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படலாம். நிலைத்தன்மையை உருவாக்குவதற்கு IMF வழங்கிய இலக்குகளை நாம் நிறைவேற்ற வேண்டும். எனினும் அந்த நோக்கங்களுக்கான வழிமுறைகளை மாற்றலாம்.

## நிதி கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் நாடு அதல பாதாளத்திற்குள் செல்லும்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், அரசியல் விடயங்கள் தொடர்பான பேராசிரியருமான காமினி சமரநாயக்க**



நாம் 2022ம் ஆண்டில் 17ஆவது முறையாக நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக IMFயிடம் செல்ல நேரிட்டது. இதுவரைக்கும் எமது நாட்டில் நிலையான முகாமைத்துவம் இல்லாதிருந்ததாலேயே இந்த நிதியுதவியைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. எமது நாட்டின் வரவு செலவுத் திட்டங்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்தமை, கடன் தொகையை செலுத்த முடியாத நிலைக்குச் சென்றமை, நிதி ஒழுக்கத்தை முன்னெடுத்துச் செல்லவதற்கு முடியாது போனமையின் காரணமாக நாம் விரும்பியோ விரும்பாமலோ வங்குரோத்து நிலைக்குள்ளானோம். எனினும் ஏனைய நாடுகள் எம்மைவிட உயர் நிலையில் இருந்து கொண்டு வங்குரோத்தடைந்து, கடன்பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக, சர்வதேச நாணய நிதியம் வழங்கும் அறிவுரைகளும், நிதி ஒழுக்கத்தை பேணுவதற்கான ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானவை. தற்போது ஊழலை குறைக்க முடிந்திருக்கின்றது. இந்த வேலைத்திட்டம் தொடர்பில் சிலர் அர்த்தமற்ற வகையில் அறிக்கை விடுகின்றனர்.

வரும்காலத்தில் எந்த அரசியல் கட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் நாம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் 17ஆவது தடவையாக என்ன காரணத்திற்காக இணக்கப்பாட்டிற்கு வந்தோம் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நிதி மற்றும் உதவி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அவை தொடர்பான அடிப்படை நிபந்தனைகள் எதிலும் நாம் விரும்பிய சூழ்நிலையை அடைய வேண்டுமானால் நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தேசிய நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு இல்லாமல் நடந்துகொள்வது நாட்டை மேலும் படுகுழிக்குள் தள்ளுவதற்கான ஆரம்பமாகவே நான் பார்க்கிறேன். IMF ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது. எமது நாடு இன்று நல்ல பொருளாதார நிலையில் உள்ளது.

மீண்டும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சில நிபந்தனைகளை விதித்தால் மீண்டும் ஒரு நெருக்கடி நிலை ஏற்படலாம். எனவே, அவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். இன்று நாம் ஒருவித நிதி ஒழுக்கத்தைக் கைக்கொள்கின்றோம் இன்று நாடு பொருளாதார அபிவிருத்தியில் சரியான பாதைக்கு வந்துள்ளது. எனவே, மீண்டும் பழைய நிலைக்குச் செல்லவிடாமல் நடவடிக்கை மேற்கொள்வது அனைவரினதும் பொறுப்பாகும்.

## IMF கடன் நிபந்தனைகளை மாற்றுதல்; எமக்கு சாத்தியமான விடயமல்ல

**திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் நளின் அபேசேகர**



நாங்கள் 1950ஆம் ஆண்டிலிருந்து IMF உடன் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்து, 1965ஆம் ஆண்டில்தான் முதலாவது கடன் தவணையைப் பெற்றோம். நாம் அன்று இருந்ததும் வறுமையின் கடுமையான சுழற்சியிலாகும். அக்காலத்திலும் அடுத்த முறை சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாது இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் விடயங்களைச் செய்ய வேண்டும் என்று எமது மக்கள் நினைக்கவில்லை. எமது நாடு திட்டமிட்டதை விட அதிகமாக செலவழிப்பதையே பெரும்பாலும் செய்தது. அந்த வகையில் செலவு செய்தாலும், செயற்படுத்தும் திட்டத்திற்குச் செலவிடுவது வெகுவாக குறைந்துள்ளது. இதன்போது கடன் தொடர்பான புரிந்துணர்வு எம்மவர்களிடம் இருக்கவில்லை. ஒரு நாடாக, இம்முறையும் மீண்டும் IMFக்கு செல்ல வேண்டியேற்பட்டுள்ளது. மீண்டும் நாம் பழைய இடத்திற்குச் செல்லாமல் இருக்க வேண்டுமாயின் அவர்கள் கூறியுள்ள விடயங்கள் தொடர்பில் ஆய்வுகளைச் செய்ய வேண்டும்.

செயற்திறன், ஊழல் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை கண்டிப்பாக முன்னெடுக்க வேண்டும். இந்த இரண்டு விடயங்களும் பாரிய சமூக பேசுபொருளாக இருக்க வேண்டும். அடுத்த முறை கடன் வாங்காமல் சர்வதேச நாணய நிதியத்துடன் நல்ல ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும். தொழில்முயற்சியை நோக்கிய பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். ஜனசவிய, அஸ்வெசும, சமுர்த்தி போன்ற அனைத்து நலன்புரி செயற்பாடுகளும் தேவையானவர்களை மாத்திரம் தெரிவு செய்தே மேற்கொள்ளப்பட வேண்டும். நெருக்கடியான காலங்களில் அதைத்தான் செய்ய வேண்டும்.

2019ஆம் ஆண்டைப் போலவே, இளைஞர்கள் சுவர்களின் ஓவியம் வரைந்த காலத்தை மீண்டும் கொண்டு வர இளைஞர்களிடம் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். அவர்களுக்குச் சிறந்த எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு, மீண்டும் ஏற்படும் வகையில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இளைஞர்களுக்காக நல்ல வேலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும். நாம் மீண்டும் கடன்படாத தேசமாக மாறுவது குறித்து சிந்திக்க வேண்டுமே தவிர IMF கடன் மற்றும் மீண்டும் அதன் நிபந்தனைகளை மாற்றுவதைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை.

*எம். எஸ். முஸப்பிர்*

## உறுதியானது வாஸின் மரண தண்டனை!

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் வாஸ் குணவர்தனவை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்துச் சென்று கைது செய்த போது அவரால் ஷானி அபேசேகரவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதற்காகவும் வாஸ் குணவர்தனவுக்கு நீதிமன்றத்தினால் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், 25,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. வாஸ் குணவர்தன அன்று தன்னைக் கைது செய்த போது ஷானி அபேசேகரவுக்கு அச்சுறுத்தல் விடுத்தது தன்னைச் சுற்றி இருக்கும் அரசியல்வாதிகள் தன்னைக் காப்பாற்றி விடுவார்கள் என்ற பலமான நம்பிக்கையால்தான். வாஸ் குணவர்தன பல இரகசியங்களை மறைக்கும் திறமை பெற்றிருந்த போதிலும், அவற்றை வெளிப்படுத்துவதாக அவ்வப்போது அறிவித்த போதிலும் இறுதியில் எதுவுமே வெளிவரவில்லை. காரணம் அந்த இரகசியங்களை வெளிப்படுத்தினால் தான் மேலும் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும் என்று நம்பினார். அல்லது அதிகாரங்கள் தன்னை எப்படியாவது விடுவித்துவிடும் என்ற நம்பிக்கையின் காரணமாக அவ்வாறு வெளிப்படுத்தாமல் இருந்தாரா என்பதை அவர் மாத்திரமே அறிவார்.

தன்னிடம் பயனடைந்த அதிகாரத்தில் இருப்போர் ஒரு நாள் தன்னை விடுவித்துவிடுவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இருந்த வாஸ் குணவர்தன, இறுதியில் தனது மகன் மற்றும் அவரது பொலிஸ் சகாக்களுடன் சிறைக்குச் செல்ல வேண்டியிருந்தது.

2015ஆம் ஆண்டு நவம்பர் 27ம் திகதி வாஸ் குணவர்தன உள்ளிட்ட தரப்பினரின் கழுத்திற்கு கயிறு விழுந்தது லலித் ஜயசூரிய, சரோஜினி குசலா வீரவர்தன மற்றும் அமேந்திர செனவிரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முஹம்மது சியாம் கொலை வழக்கின் தீர்ப்பின் பிரகாரமாகும். இந்தத் தீர்ப்பில் வாஸ் குணவர்தனவும் அவரது சகாக்களும் சிறைக்குச் சென்றபோதும் அவர் அந்தத் தீர்ப்பை எதிர்த்து தாம் நிரபராதிகள் எனக் கூறி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

முஹம்மது சியாம் கொலை வழக்கில் நாம் நிரபராதிகள் என்றும், எனவே இந்த தண்டனையிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என்றும் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை 5 பேர் கொண்ட நீதிபதிகள் குழு விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தது. வாஸ் குணவர்தன உள்ளிட்டோருக்கு மரண தண்டனையை அது உறுதிப்படுத்தியது. அது வாஸ் குணவர்தன மற்றும் அவரது மகன் ரவிந்து குணவர்தன உள்ளிட்ட ஏனையோரும் தப்பிக்க இருந்த வாய்ப்பை இல்லாமல் செய்தது.






## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ராகம, வெலிசர வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கான மின்சார டெட்டோனேட்டரின் (Detonator) பெறுகை**

1. பின்வரும் மின்சார டெட்டோனேட்டரைப் பெற்றுக்கொள்வதற்காக வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் (CEFAP Unit) சார்பாக இலங்கை கடற்படையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| File No. | Description | QTY |
|---|---|---|
| CEF AP/PRT/08/2022(SD) | Electric Detonators (4 MTR) | 1,000,000 Nos |

இதில் ஆர்வம் காட்டும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் தேவையான மேலதிகத் தகவல்களை வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2. மேற்கூறிய முகவரியானது:

**கவனத்திற்கு** : பணிப்பாளர், வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு,
**முகவரி** : வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகம.
**தொலைபேசி இல.** : 0112958227/0112955514
**மின்னஞ்சல்** : director.cefap@gmail.com

3. ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து மீளளிக்கப்படாத 35,000.00 ரூபா (முப்பத்தையாயிரம் ரூபா) கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது இலங்கை வங்கியில் 7041344 எனும் கணக்கிலக்கத்திற்கு கடற்படை தளபதியின் பெயரில் வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டாகும்.

5. 2024 செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்படைத் தலைமையகம்.**

# தமிழ் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டமை ஜனாதிபதித் தேர்தலில் தாக்கம் செலுத்துமா?

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை 24 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருப்பதுடன், இவர்களில் 11 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பிலும், 12 பேர் சுயேச்சையாகவும், 1 வேட்பாளர் ஏனைய கட்சிகளின் சார்பிலும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.**

நாளுக்குநாள் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அரசியல் காய்நகர்த்தல்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. தென்னிலங்கையில் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியானது கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து மக்கள் கூட்டணியை உருவாக்கியுள்ளது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் பிரதான நான்கு வேட்பாளர்கள் தற்பொழுது களத்தில் உள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரே அவர்களாவர்.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படப் போவதாக கடந்த சில மாதங்களாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன.

இந்தத் தொடர் கலந்துரையாடல்களின் பலனாக ஏழு அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைய கடந்த வியாழக்கிழமை தமிழ் மக்களின் பொதுவேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினருமான பா.அரியநேத்திரன் பொதுவேட்பாளராகத் தெரிவு செய்யப்டுள்ளார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டிருந்த அரியநேத்திரன் பாராளுமன்ற உறுப்பினராவதற்குத் தேவையான வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை. இருந்தபோதும், பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்யாமலேயே இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அரியநேத்திரன் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

விடுதலைப் புலிகள் கொடுத்த அழுத்தம் காரணமாகவே கிங்ஸ்லி இராசநாயகம் பதவி விலகினார் என்பது அந்தக் காலகட்டத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம். எவ்வாறு இருந்தாலும், 2004ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 16,504 வாக்குகளைப் பெற்று மீண்டும் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். எனினும், அதற்குப் பின்னர் நடைபெற்ற 2015 மற்றும் 2019 தேர்தல்களில் போட்டியிட்டபோதும், அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துவரும் அரசியல்வாதியாக அவரைக் காணமுடிகிறது.



இவ்வாறான பின்னணியைக் கொண்ட ஒருவரே வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார். தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ சார்பில் அன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்ற ஏழு கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து ஏற்படுத்திய பொது உடன்படிக்கையின் பிரகாரம் இந்தப் பொதுவேட்பாளர் களமிறங்குகின்றார்.

## தமிழ் மக்களின் அபிப்பிராயம் அறியாமல், கொள்கை ரீதியில் முடிவுகளை மேற்கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள்!




இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் என்பதால் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவார் என்றும், இவருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு பற்றிய அறிவிப்பை விரைவில் எதிர்பார்ப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

பொதுக்கட்டமைப்பு சார்பில் பலரையும் ஆராய்ந்த பின்னர் இறுதியாக சட்டத்தரணி தவராசாவின் பெயரும் தனது பெயரும் இறுதித் தெரிவில் இருந்தது என்றும், தாங்கள் இருவரும் நண்பர்களாகவே இருக்கின்றோம் என்றும் அரியநேத்திரன் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். இதனால் தமிழ்தேசியத்தின் அடையாளமாக தான் இருப்பேன் என்றும், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்காக அல்ல என்றும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லவே போட்டியிடுவதாகவும் அவர் கூறியிருந்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் என்பது கடந்த காலங்களைப் போல் அன்றி மக்கள் மத்தியில் மிகவும் எதிர்பார்ப்பு நிறைந்ததாகவும், தேர்தல் முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்பதை முன்கூட்டியே ஊகிக்க முடியாததாகவும் இருக்கும் ஒன்றாக மாறியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் இத்தேர்தலில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லையென்பது உறுதியாகி விட்டது.

தென்னிலங்கை வேட்பாளர்களால் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்பது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், தமிழ் பொதுவேட்பாளரால் சொல்லப்படப் போகின்ற செய்தி என்னவாக இருக்கும் என்பதே பாரிய கேள்விக்குறியாகியுள்ளது.

இந்தப் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் எவ்வாறானதொரு ஆதரவை வழங்குவார்கள் என்பதும் பாரியதொரு சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது. இரண்டு பொதுத்தேர்தல்களில் தான் பிரதிநிதித்துவப்படுத்திய மாவட்டத்திலுள்ள வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாத ஒருவர் ஏன் இப்போது தெரிவு செய்யப்பட்டார் என்பதும் புரியாத கேள்வியாக உள்ளது.

இவ்வாறான பின்னணியில், தமிழ் பொதுவேட்பாளர் விடயம் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தாத அல்லது பெரிதாக அலட்டிக் கொள்ளப்படாத விடயமாக இருப்பதற்கான வாய்ப்புகளே அதிகமாகத் தென்படுகின்றன.

நீண்டகால யுத்தம் அதன் பின்னர் பொருளாதார நெருக்கடி போன்ற சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ள வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் தாம் நிம்மதியாக வாழ்வதற்கான ஒருவரைத் தெரிவு செய்வார்களா, அதனை விடுத்து 'எங்களுக்கு நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன, இதனை வெளிக்கொண்டுவரப் போவதாகக் கூறும் பொதுவேட்பாளருக்கே வாக்களிப்போம்' எனக் கூறுகின்றார்களா?

இதையெல்லாம் தற்போது ஊகிக்க முடியாதுள்ளது. இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட முன்னர் ஆகக் குறைந்தது மக்கள் மத்தியில் கணிப்பீடு ஒன்றையாவது எடுத்திருந்தார்களா? எதனையும் செய்யாது கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கின்றோம் என்ற பேரில் ஒரு சில அரசியல் கட்சிகளும், அவர்களுக்கு சார்பான சிவில் சமூக அமைப்புக்கள் எனக் கூறப்படும் சிலரும் எடுத்திருக்கும் தீர்மானத்திற்கு மக்கள் ஒட்டுமொத்த ஆதரவையும் வழங்குவார்களா?

மக்களின் ஆதரவென்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

**பி.ஹர்ஷன்...**

---

# மத்திய கிழக்கில் யுத்த பதற்றத்தை தணிக்க தீவிர இராஜதந்திர முயற்சி!



**'எமது விஷேட விருந்தாளியான இஸ்மாயீல் ஹனியேவை தெஹ்ரானில் படுகொலை செய்த இஸ்ரேலுக்கு கடும் பதிலடி கொடுக்கப்படும். அது ஈரான் இஸ்லாமிய குடியரசின் கடமை' என்று ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் செய்யத் அலி காமெனெய் அறிவித்ததைத் தொடர்ந்து உருவான போர்ப்பதற்றம் ஒரு வாரத்திற்கும் மேலாக நீடித்து வருகிறது.**

ஈரானின் புதிய ஜனாதிபதி மசூட் பெஸஷ்கியானின் பதவியேற்பு வைபவத்தில் விஷேட விருந்தாளியாகக் கலந்து கொண்டிருந்த ஹமாஸின் தலைவரான பலஸ்தீனின் முன்னாள் பிரதமர் இஸ்மாயீல் ஹனியேவும் அவரது மெய்ப்பாதுகாவலரும் தெஹ்ரானில் கடந்த ஜுலை 31 ஆம் திகதி அதிகாலையில் படுகொலை செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து கடும் கோபமடைந்த ஈரானிய ஆன்மீகத் தலைவர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

'இப்படுகொலையின் ஊடாக எமது இறையாண்மையும் சர்வதேச சட்டங்களும் மீறப்பட்டுள்ளன. எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை எமக்குள்ளது. அதற்கு ஏற்ப இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கப்படும்' என்றும் ஈரான் குறிப்பிட்டுள்ளது.

ஹனியே கொல்லப்பட்ட அதே தினத்தில் ஹிஸ்புல்லாஹ்வின் இரண்டாவது தளபதி புவார்ட் சுஹுரும் ஆளில்லா விமானத் தாக்குதல் மூலம் பெய்ரூட்டில் கொல்லப்பட்டார்.

இப்பின்னணியில் இஸ்ரேலுக்கும் ஈரான், ஹிஸ்புல்லாஹ் தரப்பினருக்கும் இடையில் எந்த வேளையிலும் போர் மூளும் உச்சகட்ட பதற்றம் உருவாகியுள்ளது. ஈரானின் தாக்குதலை முறியடிப்பதற்கு ஏற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. அதற்கு அமெரிக்கா முழு அளவிலான ஆதரவு, ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றது.

ஈரானும் ஹிஸ்புல்லாஹ்வும் இஸ்ரேலை எப்போது தாக்கும்? எங்கு தாக்கும்? எப்படித் தாக்கும்? என்ற கேள்விகள் பரவலாக எழுந்துள்ளன. ஈரானின் தாக்குதல் எந்த வேளையிலும் இடம்பெறலாம் என அஞ்சப்படுகிறது.

இஸ்மாயீல் ஹனியே ஜுலை 31 ஆம் திகதி கொல்லப்பட்டார். அதற்கு பழிவாங்கும் தாக்குதல் அவரது ஜனாஸா அடக்கம் செய்யப்பட்ட கடந்த 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. அது இடம்பெறவில்லை. வெள்ளிக்கிழமை கடந்ததும் சனி, ஞாயிறு தினங்களில் தாக்குதல் முன்னெடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. அதன் பின்னர் திங்கட்கிழமை இரவு இத்தாக்குதல் நடக்கும் என உச்சகட்ட பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அமெரிக்க, இஸ்ரேலிய புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஈரானின் தாக்குதல்கள் குறித்த செய்திகள் வெளியான போதிலும், அவை உண்மையாகவில்லை. இத்தாக்குதல் தொடர்பான ஈரானின் நகர்வுகள் புலனாய்வாளர்களின் ஆருடங்களைப் பொய்ப்பித்துள்ளன.

இந்நிலையில் ஈரான், ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல்கள் இரண்டு அலைகளாக அமையலாமென புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ள அதேநேரம், 12ஆம், 13 ஆம் திகதிகளில் தாக்குதல்கள் நடத்தப்படலாமென 'ஸ்கை நியூஸ்' உள்ளிட்ட மேற்கத்தைய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல் குறித்து உச்சகட்ட பரப்பு நிலவிவரும் சூழலில் ஈரான் இஸ்லாமிய புரட்சிக் காவலர் படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹுஸைன் சலாமி, 'உரிய நேரகாலத்தில் உயரிய இடத்தில் தாக்குதல் நடத்தப்படும்' என்றுள்ளார்.

### இஸ்ரேலின் பாதுகாப்பு ஏற்பாடுகள்:

ஈரானின் தாக்குதல்களை முறியடிப்பதற்காக அனைத்து விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக இஸ்ரேலிய அமைச்சர்கள் பதுங்கு குழிகளில் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அமைச்சர்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் செய்மதி தொலைபேசி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அத்தோடு நிலக்கீழ் வைத்தியசாலைகளின் வசதிகளை வலுப்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யுத்தம் ஏற்படுமாயின் வடக்கு இஸ்ரேலில் எவ்வாறு செயற்பட வேண்டுமென வடபகுதி மேயர்களுக்கு இஸ்ரேல் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.





இஸ்ரேலிய நாளிதழான எடியோத் அஹ்ரநோத் கடந்த வெள்ளியன்று வெளியிட்ட செய்தியில் ஹிஸ்புல்லாஹ்வுடன் முழு அளவிலான போர் ஏற்படுமாயின் வடக்கு பிரதேசங்களில் இருந்த வெளியேறும் மக்களை தங்கவைக்கவென தெற்கு இஸ்ரேலின் ரமட்நெகெள பிராந்தியத்தில் கூடார நகரம் அமைக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

'த டைம்ஸ் ஒஃப் இஸ்ரேல்' வெளியிட்டுள்ள செய்தியில், 'முழு அளவிலான யுத்தம் மூளுமாயின் சில நகரங்களில் மூன்று நாள் மின்வெட்டு ஏற்படக்கூடும். நாட்கள் நீடிக்கும் பட்சத்தில் நீர் விநியோகத்தில் தடைகள் ஏற்படலாம். எட்டு மணிநேரம் வரை தொலைபேசிகள் இயங்காதிருக்கலாம். 24 மணிநேரம் வரை செல்போன் தொடர்புகள் துண்டிக்கப்படலாம். வானொலி மற்றும் இணையத்திற்கான உள்ளூர் இடையூறுகள் ஏற்படலாம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலுக்கு முழு அளவிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை நல்கிவரும் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்றின், 'இஸ்ரேலை இரும்புவேலி கொண்டு பாதுகாப்போம்' என்றுள்ளார். அத்தோடு இஸ்ரேலுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்நிலையில் அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன், 'மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றங்கள் அதிகரித்து வருவதால் கூடுதல் இராணுவ தளபாடங்களை மத்திய கிழக்கிற்கு அமெரிக்கா அனுப்பும்' என்று அறிவித்தது. அதற்கேற்ப அமெரிக்க யுத்தக்கப்பல்களும் யுத்த விமானங்களும் அவசர அவசரமாக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு வான்வெளியில் வைத்து விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் விமானங்களும் அமெரிக்க படைவீரர்களும் அனுப்பப்பட்டுள்ளனர். மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றங்களைத் தணிக்கும் வகையில் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வெள்ளை மாளிகை தெரிவித்திருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் அமெரிக்காவின் மத்திய கட்டளைத் தளபதி ஜெனரல் மைக்கல் எரிக் குரில்லா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கு கடந்த திங்களன்று விஜயம் செய்ய அதே சூழலில் ரஷ்யாவின் பாதுகாப்பு முன்னாள் அமைச்சரும், தேசிய பாதுகாப்பு கவுன்சில் தலைவருமான செர்ஜீ சொய்கு ஈரானுக்கு விஜயம் செய்து ஈரானிய ஜனாதிபதி உள்ளிட்ட பாதுகாப்பு உயர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளார்.

### போர் தவிர்ப்புக்கான இராஜதந்திர முயற்சிகள்:

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், ஜி 7 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் கடந்த 04 ஆம் திகதி தொலைபேசி ஊடாக அவசர மாநாடொன்றை நடாத்தியுள்ளார். இம்மாநாட்டின் போது இத்தாலி வெளிவிவகார அமைச்சர் அன்டோனியோ தஜானி, மோதல் நிலையை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தார்.

அத்தோடு அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி 7 அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், 'காஸாவுக்கான யுத்தநிறுத்த உடன்படிக்கையை நிறைவு செய்து பணயக்கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியோடு பலஸ்தீன மக்களுக்கான மனிதாபிமான உதவிகளைத் துரிதப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் மீண்டும் சுட்டிக்காட்டிள்ளது.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர், யுத்தத்தை விரிவுபடுத்த வேண்டாம் என்று இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக கடந்த செவ்வாயன்று குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், மத்திய கிழக்கில் உருவாகியுள்ள யுத்த பதற்றத்தைத் தணிப்பதன் அவசியம் குறித்து கட்டார், எகிப்து, ஜோர்தான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

## இஸ்ரேலில் உச்சபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள்!

ஜோர்தான் மன்னர் அப்துல்லா எகிப்து, பிரான்ஸ், கனடா மற்றும் இத்தாலியின் தலைவர்களுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு, மத்திய கிழக்கின் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

சிவிலியன்கள் பாதிக்கப்படாத வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தாக்குதல்களை முன்னெடுக்குமாறு ரஷ்யா ஈரானைக் கேட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி ஏற்பாடு செய்யப்படும் யுத்தநிறுத்தப் பேச்சுவார்த்தையில் தவறாது பங்கேற்குமாறு இஸ்ரேலையும் ஹமாஸையும் வலியுறுத்தி அமெரிக்காவும் கட்டாரும் எகிப்தும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

### வான் பரப்பை தவிர்த்த விமானங்கள்:

இத்தகைய உச்ச யுத்தப் பரபரப்புக்கு மத்தியில் லெபனான், இஸ்ரேல், ஈரானுக்கான விமான சேவைகளை உலகின் பல நாடுகளும் நிறுத்தியுள்ளதோடு லெபனான், இஸ்ரேல், ஈரான், சிரிய வான் பரப்பை பெரும்பாலான விமானங்கள் தவிர்த்துக் கொண்டுள்ளன.

லெபனானில் இருந்து எல்லா நாடுகளும் தமது பிரஜைகளை வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளதோடு, அங்கு செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளன. சுவீடன், பிரித்தானியா போன்ற நாடுகள் தம் தூதரகங்களை கூட மூடிவிட்டு வெளியேறியுள்ளன. கனடா இஸ்ரேலுக்கான தமது இராஜதந்திரிகளை ஜோர்தானுக்கு நகர்த்தியுள்ளது.

ஹனியே கொல்லப்பட்டதும் உருவான இப்பரபரப்புக்கு மத்தியில் ஈரான், லெபனான், இஸ்ரேல் உள்ளிட்ட பல நாடுகளின் பங்குச்சந்தைகள் சரிவடையத் தொடங்கின. அதன் விளைவாக உருவாகியுள்ள பதற்றத்தின் பின்புலத்தில் கடந்த திங்களன்று ஜப்பானின் பங்குச்சந்தை 1987 ஆம் ஆண்டுக்கு பிறகு பாரிய வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதேபோன்று அமெரிக்கா, ஐரோப்பிய உள்ளிட்ட எல்லா நாடுகளது பங்குச் சந்தைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்தப் பதற்றத்துக்கு மத்தியிலும் காஸா மீதான தாக்குதலையோ தென் லெபனான் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் குறைத்ததாக இல்லை. இந்நிலையில் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்ற ஈரான், தாக்குதலை தாமதப்படுத்தி வருவது ஒரு வகையில் ஈரானின் ஒரு உளவியல் போராகக்கூட இருக்கலாம் என்கின்றனர் போரியல் நிபுணர்கள்.





**மர்லின் மரிக்கார்...**

## ஈரானின் தாக்குதல் ஒழுங்கை அறிந்து கொள்வதில் அமெரிக்கா, இஸ்ரேல் அதிகூடிய கவனம்!

# தேர்தல் பரபரப்பு தீவிரமடைந்து வருகையில் ஜனாதிபதி ரணில் தரப்புக்கு பெருகும் ஆதரவு!

## பிரதான வேட்பாளர்கள் நால்வர் அடங்கலாக பலமுனையில் போட்டி!

**இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கு இன்னமும் நாற்பத்தொரு நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில், நாளுக்குநாள் தேர்தல் களம் சூடுபிடித்து வருகின்றது.**

இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னர் இருந்ததை விட பரபரப்பு நிறைந்த தேர்தல் களமாக இது அமைந்திருப்பதால் எதிர்பார்ப்புக்களும் அதிகமாகியுள்ளன. இதுவரை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் பெரும்பாலும் இரண்டு பிரதான வேட்பாளர்கள் மத்தியிலேயே போட்டி காணப்படும்.

இருந்தபோதும் 2024 ஜனாதிபதித் தேர்தல் பலமுனைப் போட்டிக்களமாக அமைந்துள்ளது. இதுவரை உள்ள தேர்தல் களநிலைவரத்தின்படி பிரதானமாக நான்கு வேட்பாளர்கள் உள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாக உள்ளனர்.

இது தவிரவும், முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பிரபல தொழிலதிபர் திலித் ஜயவீர என வேட்பாளர் பட்டியல் நீண்டுகொண்டு செல்கின்றது. எதிர்வரும் 15ஆம் திகதி வரை வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியும் என்பதால், அதன் பின்னரே தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எடுத்த தீர்மானம் அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகிச் சென்றதைத் தொடர்ந்து, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசாங்கத்தை ஒப்படைக்க பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்திருந்தது.

இந்தக் கட்சியின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின் மூலம் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தார். கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய பதவிக்காலத்திற்கு சேவையாற்றத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் அனைத்து முயற்சிகளுக்கும் பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்கி வந்தது.

இந்த நிலையில், நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு முன்வந்து அதற்கான நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் எடுத்திருந்தனர்.

இருந்தபோதும், தமது கட்சியின் சார்பில் தனியான வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கப் போவதாக பொதுஜன பெரமுனவின் அரசியல் பீடம் அறிவித்திருந்தது. இருந்தபோதும், 92 இற்கும் அதிகமான பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யாரென்பது கடந்த புதன்கிழமை அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதுவரையில் பிரபல தொழிலதிபரும், பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக பெரேரா வேட்பாளராகக் களமிறக்கப்படு



வார் என்றே கூறப்பட்டு வந்தது. எனினும், இறுதி நேரத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென அறிவித்து விட்டார் தம்மிக்க.

இதனையடுத்து மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும், பாராளுமன்ற உறுப்பினரும், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அறிவித்திருந்தார். நாமலின் இந்தத் திடீர் தீர்மானம் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**மொட்டுக் கட்சியின் எதிர்காலத் திட்டம்:**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமது கட்சியின் வேட்பாளரைத் தயார்படுத்தும் பணியே தனக்கு வழங்கப்பட்டிருந்த போதும், கட்சியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நாமலின் இந்த வருகை பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மத்தியில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே தெரிகின்றது. இருந்தபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள், தமது தீர்மானத்தை மாற்றப் போவதில்லையெனத் தெரிவித்துள்ளனர்.

நாமல் ராஜபக்ஷ கட்சியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இத்தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும், தேர்தலில் வெற்றிபெறுவது அவருடைய நோக்கம் அல்ல, எதிர்காலமே அவருடைய இலக்கு என்பதால்



அதற்குத் தனது வாழ்த்துக்கள் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இதுவே அவர்களின் திட்டமாக இருக்கும் என அரசியல் அவதானிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதால் தேர்தலில் தமது சின்னத்தின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படாமல்



இருப்பது எதிர்காலத்தில் மக்கள் மத்தியிலான செல்வாக்கை இழக்கச் செய்துவிடும் என்பதால், கட்சியின் அடையாளத்தை மக்கள் மத்தியில் தொடர்ந்தும் பேணச் செய்வதற்கும், மக்கள் மத்தியில் தமது கட்சி கொண்டிருக்கும் செல்வாக்கை அளவிட்டுப் பார்க்கும் நோக்கிலுமே நாமல் ராஜபக்ஷ களமிறங்குவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

**போராட்டத்தில் ஈடுபட வரவில்லை:**

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தான் போராட வரவில்லையென்றும், நாட்டுக்காகத் தான் மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்வைத்து வாக்குக் கேட்கவிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் ஊடகங்களின் பிரதானிகளைச் சந்தித்த ஜனாதிபதி, அங்கு கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஜனாதிபதித் தேர்தலின் போட்டித் தன்மையைக் கணிக்க முடியாது. எனது குறிக்கோள் போராட்டத்தில் ஈடுபடுவது அல்ல, மாறாக எனது கொள்கைகளை நாட்டு மக்கள் மத்தியில் முன்வைத்து எவ்வாறு நாட்டை முன்னேற்ற முடியும் முடியும் என்பதை நிரூபிப்பதாகும். எனது நிலைப்பாட்டுடன் உடன்படும் பட்சத்தில் எனக்கு மக்கள் வாக்களிக்க முடியும். மற்றவர்கள் சொல்வதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதிப் பதவிக்கான பாராளுமன்றத் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் தனக்கு ஆதரவு வழங்



கியமைக்கு நன்றியுள்ளவனாக இருப்பதாகவும், கடந்த இரண்டு வருடங்களாக ஒன்றிணைந்து வேலைசெய்ய இணக்கம் காணப்பட்டதுடன், இந்தக் காலம் தற்பொழுது முடிவடைந்து விட்டது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமன்றி, ஜனாதிபதிக்கு

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

ஆதரவு வழங்கும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு எதிராக ஊழல் மோசடி குறித்த பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறானவர்களால் மக்களின் ஆதரவு கிடைக்குமா என ஜனாதிபதியிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, எந்தவொரு குற்றச்சாட்டு உள்ள நபர்களையும் காப்பாற்றுவதற்குத் தான் முயற்சிக்கவில்லையென்றும், எவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதில் தலையிடப் போவதில்லையென்றும் கூறினார். அத்துடன், மோசடியற்ற நபர்களைப் பொதுமக்கள் பாராளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்து அனுப்ப வேண்டும் என்றும் பதில் வழங்கி

## பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக இறுதி நேரத்தில் களமிறக்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ!

யிருந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளார் என்பது இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களின் நம்பிக்கை:**

ஜனாதிபதியின் இந்த உறுதியான நிலைப்பாடு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ள பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தொடர்ந்தும் ஜனாதிபதிக்கான ஆதரவை வலுப்படுத்தி வருகின்றனர். நடைமுறைச் சாத்தியமான முறையில் சிந்திப்பதாயின் ஜனாதிபதியின் வெற்றியே நாட்டுக்கு அவசியமானது என்பதால் அவருக்கு ஆதரவு வழங்குவதாக எடுத்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லையென பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.சந்திரசேன, எஸ்.பி.திசாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே போன்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை விட்டுச் சென்றபோது, நாட்டின் தலைமையை துணிச்சலாகப் பொறுப்பேற்று பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ள ஜனாதிபதியின் கரங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது அவர்களுடைய உறுதியான நிலைப்பாடாக உள்ளது.

தேர்தலுக்கான நாட்கள் நெருங்க நெருங்க பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பாக அடிமட்டத்தில் உள்ள உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கும் தீர்மானத்தை எடுத்து வருகின்றனர். இந்த நிலைமை எதிர்வரும் நாட்களில் மேலும் வலுப்படுத்தப்படும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.



---




# இதழியல் வாழ்நாள் சாதனையாளர் மல்லிகை ஜீவா



ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிகூடிய காலம் வெளிவந்த சிற்றிதழ் என்ற பெருமை மல்லிகைக்குரியது. டொமினிக் ஜீவா, 1966ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மல்லிகையை வெளியிடத் தொடங்கினார். ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றில் மல்லிகை ஏறத்தாழ 48 வருடங்கள் இலக்கிய உலகில் பவனிவந்து சாதனை படைத்தது. முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த மல்லிகை, முப்பது ஆண்டுகளின் பின்னர் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியது. யாழ்ப்பாணத்துப் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த டொமினிக் ஜீவா, 05-02-1997 அன்று மல்லிகைக் காரியாலத்தை கொழும்பில் புதிதாக ஆரம்பித்தார். அதன்பின்னர் மீண்டும் மல்லிகை வெளிவரத்தொடங்கி டிசம்பர் 2012வரை வெளிவந்தது. கொழும்பில் மல்லிகைப் பந்தல் என்ற பதிப்பகத்தினூடாகப் பல தரமான நூல்களை வெளிக்கொணர்ந்தார் ஜீவா.

ஆய்வுக்கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், இலக்கிய சர்ச்சைகள் பலவற்றுக்கு களம் வழங்கியது மல்லிகை. பல பிரதேச சிறப்பு மலர்களை வெளியிட்டதன் மூலம் பல புதிய எழுத்தாளர்கள் இனங்காணப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டார்கள். முஸ்லிம் பிரதேச எழுத்தாளர்கள், மலையக எழுத்தாளர்கள் எனப் பலர் வெளிச்சத்துக்கு வந்தார்கள். மல்லிகை பல இலக்கிய கர்த்தாக்களின் படங்களை அட்டையில் பொறித்து அவர்கள் பற்றிய விபரங்களையும் வெளியிட்டு அவர்களைக் கௌரவித்தது. சிங்கள எழுத்தாளர் சிலரையும் அட்டையில் பொறித்துக் கௌரவித்தார் ஜீவா. சிங்கள இலக்கிய வட்டாரத்தில் அதிகம் அறியப்பட்ட தமிழ் எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான்.

மல்லிகை இதழ் மார்க்சியக் கோட்பாட்டை ஈழத்து நவீன இலக்கியத்தில் அறிமுகப்படுத்தி கருத்தியல் ரீதியில் கூர்மைப்படுத்தி நுண்மைப்படுத்தியது. மல்லிகையின் வெற்றிக்கு மற்றுமொரு முக்கிய காரணம் இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் குரலாக அது ஒலித்ததுதான் எனக்குறிப்பிட்டுள்ளார் சிறுசஞ்சிகைகளின் செவிலித்தாய் என்று போற்றப்பட்ட வல்லிக்கண்ணன்.

முதுமை காரணமாக ஜீவாவால் மக்களிடம் சென்று அடுத்துவரும் மல்லிகைக்கான பொருள் தேட்டத்தைப் பெறமுடியாத நிலையில் மல்லிகை நின்றுபோனது.

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் உடையுடன் காணப்படும் ஜீவா, அதே உடையுடன் இந்தியப் பயணங்கள், சோவியத் யூனியன், ஐரோப்பிய நாடுகள் எனப் பல நாடுகளுக்கும் சென்று வந்ததோடு, தனது பயண அனுபவங்களையும் மல்லிகையில் பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 27-06-1927இல் பிறந்தவர் டொமினிக் ஜீவா. இவர் ஐந்தாம் வகுப்பு வரை யாழ். சென்ற் மேரிஸ் பாடசாலையில் படித்தவர். ஆரம்ப காலத்தில் பொதுவுடமைச் சித்தாந்த நூல்களை வாசிப்பதற்கு ஜீவாவுக்கு உதவியவர் புத்தகசாலை அதிபர் ஆர்.ஆர். பூபாலசிங்கம். பொன். கந்தையா, கார்த்திகேயன், லிங்கன் ஆகியோரின் வழிகாட்டலில் ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டார்.

இருபது வயதில் ஜீவா எழுதிய முதற்கதை 'எழுத்தாளன்|' சுதந்திரனில் பிரசுரமாகியது. 1948இல் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்ட தோழர் ப. ஜீவானந்தத்தை சந்திக்கும் வாய்ப்பு டொமினிக் ஜீவாவுக்கு ஏற்பட்டது. அச்சந்திப்பு ஜீவாவின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. மார்க்சியக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஜீவாவின் எழுத்துப்பணி பரிணமிக்க வழிகாட்டியவர் ப. ஜீவானந்தம். அவர்மீது கொண்ட பக்தியினால், டொமினிக் என்ற தனது பெயருடன் ஜீவா என்ற பெயரையும் இணைத்துக்கொண்டு டொமினிக்ஜீவா என எழுத்துலகில் இயங்கத் தொடங்கினார்.

தமிழக சரஸ்வதி இதழ் ஜீவாவின் நிழற்படத்தை 1958இல் அட்டையில் பதித்துப் பெருமைப்படுத்தியது. 1968 ஜுலையில் வெளிவந்த தாமரை சிறுகதைச் சிறப்பு மலர் ஜீவாவின் உருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்து ஈழத்து எழுத்தாளர்களுக்கு கௌரவத்தை ஏற்படுத்தியது.

1957இல் இலங்கையில் தேசிய சாஹித்திய மண்டலம் உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்தில்தான் டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற முதலாவது சிறுகதைத் தொகுதியை சரஸ்வதி ஆசிரியர் வெளியிட்டார்.

1960இல் இச்சிறுகதைத் தொகுதி அவ்வாண்டின் சாஹித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. அதுவே இலங்கையில் முதன்முதலில் நவீன புனைகதை இலக்கியத்திற்கான சாஹித்திய விருதுபெற்ற நூலாகும். பரிசு பெற்றுவந்த ஜீவாவை, யாழ். புகையிரத நிலையத்தில் 13-10-1961 அன்று மலர்மாலை அணிவித்து வரவேற்றார் யாழ். நகரசபை முதல்வர்.

டொமினிக் ஜீவா பெற்ற இந்தப்பரிசு ஈழத்து மரபுவழி இலக்கியகர்த்தாக்களை சீற்றம் கொள்ள வைத்தது. பண்டித வர்க்கத்தினர் ஒன்றுசேர்ந்து பேராசிரியர் ஆ.சதாசிவம் தலைமையில் மரபுப்போராட்ட அணியொன்றை உருவாக்கினர். 'சிறுகதையும் வசன கவிதையும் இலக்கியமாகா. இன்றைய சிறுகதைப் படைப்பில் இழிசினர் வழக்கு அதிகரித்துவிட்டது. பேச்சுத் தமிழுக்கு இடமளிக்கும் பொதுவுடமைவாதிகள் தமிழைக் கொலை செய்கிறார்கள்" என மரபுவாதிகள் வாதிட்டனர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிக உச்சமான தர்க்கமாக இந்த மரபுப் போராட்டம் அமைந்தது. இந்தத் தர்க்கம் டொமினிக் ஜீவாவின் நூலுக்குப் பரிசு கிடைத்ததன் பின்னணியில் எழுந்தது.

இத்தகையதொரு பின்புலம், டொமினிக் ஜீவாவுக்குக் கிடைத்த சாஹித்திய விருது, மக்களை இலகுவில் சென்றடையும் நவீன உரைநடைப் புனைவு இலக்கியத்தை ஆக்க இலக்கியமாக ஈழத்தில் அங்கீகரிக்க வைத்தது.

டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்" சிறுகதைத் தொகுதியை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் எம்.ஏ. பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது. ருஷ்ய, செக்கோசிலவக்கிய, ஆங்கில, சிங்கள மொழிகளில் இவரது சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல். இதன் இரண்டாவது பாகம் அச்சுத்தாளின் ஊடாக ஓர் அனுபவப் பயணம் என்பதாகும். டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல் UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

டொமினிக் ஜீவாவின் நூல்களாக தண்ணீரும் கண்ணீரும் (1960), பாதுகை (1962), சாலையின் திருப்பம் (1967), வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள், அனுபவ முத்திரைகள், முப்பெரும் தலைநகரில் முப்பது நாட்கள் ஆகியவை வெளிவந்துள்ளன.

2005ஆம் ஆண்டில் பிரதமரால் வழங்கப்படும் தேசநேத்துரு (தேசத்தின் கண்) என்ற விருது டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்டது. அதே ஆண்டில் அரச சாஹித்திய ரத்னா உயர்விருதும் வழங்கப்பட்டது. கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது 2013இல் வழங்கப்பட்டது.

ஈழத்து இதழியல் வரலாற்றில் சாதனை படைத்த முன்னோடி டொமினிக் ஜீவா 28-01-2021அன்று அமரரானார்.

# கடனுதவியைத் துரிதப்படுத்தும் ஜப்பான்



இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்பு முறையை டிஜிட்டல் மயமாக்கும்2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட, திட்டம் நாடு முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வெளிநாட்டு கடன்கள் நிறுத்தப்பட்டதோடும் இடைநிறுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடுகள் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து ஜப்பான் அரசாங்கம் மீண்டும் கடன் உதவியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் வேண்டுகோளுக்கு அமைய மொத்தமாக 17 பில்லியன் ரூபா செலவைக் கொண்ட இந்த திட்டத்திற்காக 13.5 பில்லியன் யென் கடன் தொகையின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள இந்த பாரிய வேலைத்திட்டத்தை மீண்டும் துரிதமாக ஆரம்பிப்பதற்கு ஜப்பான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று அமைச்சரின் அழைப்பில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதெய்ஸி தலைமையில் ஊடக அமைச்சில் அண்மையில் இடம் பெற்றது.

தற்போது இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்பு அனலொக் தொழில்நுட்பத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதோடு, இந்த திட்டத்தின் கீழ் தொலைக் காட்சி ஒளிபரப்பு டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்கு மாற்றப்படவுள்ளது. இதன்மூலம் அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளையும் எவ்வித கட்டணங்களும் இல்லாமல் டிஜிட்டல் எச்டி தொழில்நுட்பத்தின் கீழ் கண்டுகளிக்கும் வசதி இந்நாட்டு மக்களுக்கு கிடைக்கவுள்ளது. ஜப்பான் அரசாங்கத்தின் அனுசரணையில் ஜய்கா நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியின் கீழ் இந்த வேலைத்திட்டத்தைத் துரிதமாக ஆரம்பிப்பதற்கு இந்தக் கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதெய்ஸி, ஜப்பான் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் திருமதி இமாய் கவோகி, ஜப்பான் கொய்கா நிறுவனத்தின் பிரதான பிரதிநிதி டெட்சுயா யமாதா, அரிஷா இனாதா உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் ஜப்பான் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டதோடு, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, DTEB திட்டப்பணிப்பாளர் பிரசங்க ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிநிதிகள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

எம். எஸ். முஸப்பிர்

# மடிக் கணினி வழங்கல்




வறிய மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் ஹாஷிம் உமர் பௌண்டேசனின் வேலைத்திட்டத்தின் 03ஆம் கட்ட விநியோகம் கடந்த (09) வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிக்கு கொழும்பிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில், ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் இடம்பெற்றது.

# மருத்துவத்துறையில் பணியாற்றியவர்களுக்கு விருது



மருத்துவத் துறையில் பணியாற்றியவர்களுக்கு உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் விருது விழா, இம்மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை சென்னையில் உள்ள நட்சத்திர விடுதியில் நடைபெறவுள்ளது. எட்டாம் ஆண்டிற்கான மருத்துவ சிறப்பு விருதில் பல சிறப்பு மருத்துவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மருத்துவ பேரிடர் காலத்தில் பணியாற்றிய அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மை பணியாளர்கள், காவல்துறையை சேர்ந்தவர்கள், ஆம்புலன்ஸ் சாரதிகள், போன்றவர்களுக்கு உலகத் தமிழ் வர்த்தக சங்கம் விருது வழங்கி ஊக்குவித்துள்ளது. அரசு முதன்மை செயலாளர், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், கேரள ஆளுநர் சதாசிவம், தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன், மருத்துவத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், கேரளா ஆளுநர் ஆரிப் முகமது கான், நாகாலந்து ஆளுநர் இல. கணேசன் போன்றவர்களால் கௌரவிக்கப்பட்ட இவ்விருதானது, இவ்வாண்டும் ஆளுநரால் வழங்கப்பட உள்ளது என உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் ஏற்பாட்டு குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார். தொடர்புக்கு +60166167708

# இனிய நந்தவன வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா இன்று




இனிய நந்தவன வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா, இன்று 11 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு, முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் கம்பீரக் குரலோன் சி.நாகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும் ஹாஷிம் உமர் பௌண்டேஷன் நிறுவுனருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வவுனியா தமிழ் விருட்சம் தலைவர் சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இதன்போது ஏற்புரையை இளையகவி திரியாயூரன், அறிமுகவுரையை யோ. புரட்சி, வாழ்த்துரையை ரயூலா திருச் செல்வன், நயப்புரையை எழுத்தாளர் வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா, ஏற்புரையை கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோர் நிகழ்த்துவர். இனிய நந்தவனம் சஞ்சிகையின் யாழ்ப்பாணம் ஆலோசகர் யாழ்ப்பாவாணன் நன்றியுரையாற்றுவார்.



வாய்பாட்டு குரு கலாநிதி ஆரூரன் அருனந்தி மற்றும் மிருதங்க குரு நவயுக நந்தி கலாநிதி பத்ரி சதீஷ் குமார் (இந்தியா) ஆகியோரின் மாணவரும் இலங்கையின் புகழ்பூத்த தபேலா இசை கலைஞர் ரட்ணம் ரட்ணதுரை மற்றும் திருமதி பிரியதர்ஷனி ரட்ணதுரை தம்பதியரின் புதல்வருமாகிய அபினவ் ரட்ணதுரையின் வாய்பாட்டு மற்றும் மிருதங்க அரங்கேற்றம் கடந்த 03ஆம் திகதி சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மூத்த ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத், கௌரவ அதிதியான நாட்டிய கலா மந்திர் நிறுவனர் 'கலாசூரி' வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் காணலாம்.

# மருத்துவ நிர்வாகத்துறை கற்கை நெறிக்கு தெரிவு

வாச்சிக்குடா
விஷேட நிருபர்



அக்கரைப்பற்று ஆலையடிவேம்பில் இருந்து மருத்துவ நிர்வாகத் துறை கற்கை நெறிக்கு (Msc in administration ) வைத்தியர் திருமதி குணாளினி சிவராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் மருத்துவ நிருவாக துறைக்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்ததுடன் கடந்த வாரம் இடம்பெற்ற நேர்முகத்தேர்விலும் சித்தியடைந்து பிரதேசத்தின் முதலாவது பெண் வைத்திய அத்தியடசகர் எனும் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டார்.

தனது ஆரம்பகல்வியை ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலத்தில் பயின்ற அவர் உயர்தரக் கல்வியை அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையில் கற்று சிறப்பு சித்தியடைந்து மருத்துவ துறையில் கற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

சமூக சமய பணிகளிலும் அயராது ஈடுபடும் இவருக்கு பிரதேச மக்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# 'ஆரோக்கியமான சூழல் வளமான வாழ்வு' எனும் தொனிப்பொருளில் நடைபவனி

டெங்கு நுளம்பை ஒழித்து சூழலை பாதுகாக்கும் நோக்கில் கே/மாவ/ திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் "ஆரோக்கியமான சூழல் வளமான வாழ்வுக்கான முயற்சியில் கைகோர்த்திடுவோம்" எனும் தொனிப் பொருளில் நடைபவனியொன்று கடந்த புதன்கிழமை (07) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம். எஸ்.எம். அப்துல்லாஹ் (நளீமி) தலைமையில் நடைபெற்ற இந்த நடைபவனியில் உப அதிபர் எம். எம். எம். பைஸர் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் செய்யது உசைன், வில்பொல ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் பார்ஹான் உமர், அல் அரபா ஆரம்ப பாடசாலை அதிபர் ஷிரீன் பர்ஹானா மற்றும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பாரா தாஹீர்



# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதி நவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா ம ற்றும் ரீஜார்ஜ் செய்ய க்கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோ தனை மற்றும் காது கேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு: 011 2 201 700. 054387

## வேலைவாய்ப்பு

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழுப்பு தலவத்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 40, 000/- - 45, 000/- அனு பவத்தின் அடிப்படையில் வயது 55 இ ற்கு குறைவா க. 0777 584961/ 0777 456579. 054280

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

இரத்தினபுரி நகருக்கருகில் தேயிலைத் தோட்டத்தில் தங்கி வேலை செய்ய நடுத்தர வயது குடும்பம் உடன் தேவை. 071-2642706, 070 2863842. 052540




322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

கொழும்பில் கட்டிட வே லைகளுக்கு அனுபவ முள்ள மேஷன் பாஸ்மார் - சம்பளம் 35 0 0 / - கையுவியாளர் - சம்பளம் 2500/- ஆகியோர் தே வை. உணவு, தங்குமிடம் இ லவசம். தொடர்பு - 0771 663844, 0712669366. 054612

325 தொழில்துறை பொது

ஒரு ஏற்றுமதி நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர்கள். தொழிலாளர்கள் , டிரக் டிரைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு ஒரு டிரைவர் (குறிப்பாக ராஜகிரியவை சுற்றி) தேவை. வந்து கேளுங்கள். 259, வேவகெதர, திவுலப்பிட்டிய. 071 6305184. 054339

சவுன்ட்ஸ் லைட்டிங் LED திரை வழங்கும் நிறுவனத்தில் சேவைக்கு பயிற்சியளிக்கக்கூடிய இளைஞர்கள் தேவை. 070 7322815. 054164

## சொந்த விடயம்

526 போக்குவரத்து

மாலை வேலைக்கான போக்குவரத்து - கொட்டாஞ்சே னை டொக்யார்ட் - ஆ மர் வீதி, கோட்டையி லிருந்து பம்பலப்பிட்டி ய - வெள் ளவத்தை - தெஹிவ ளை. தொலைபேசி - 0721716792. 053342

## காணி/தோட்டம்

607 எஸ்டேட் விற்பனைக்கு

மதுரங்குளி 40 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு 1 ஏக்கர் 65 இலட்சம், நீர், மின்சாரம் - 2 சிறிய வீடுகள் பிரதான வீதியிலிருந்து 3 00 மீற்றர் 2 உட்செல்லல் வழிகள் (20 ஏக்கரில் 2 துண்டுகள் வ ழ ங் க ப் ப ட ல ா ம் ) தொலைபேசி 0776852342 052297

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கல்கிசை, பார்ன்ஸ் அவெனியூ வில் முழுமையான தளபாடங்களுடன் AC ஆடம்பர 3 படுக்கையறை 1570 சதுர அடி கடல் காட்சியுடன் அபாட்மென்ட் உடனடியாக விற்பனைக்கு COC மற்றும் உறுதிகள் தயார் நிலையில் விலை 55 மில்லியன் மற்றும் விலைமனுக்கள் மேலதிக விபரங்களுக்கு முகவருடன் தொடர்பு கொள்ளுங்கள். (0776700667) 051157

adz.lk
it's what you want
The Trusted Market place for Buying & Selling

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## Horana
Valuable Land for Sale
- 440 Perch land
- Carpeted road facing the land
- Three Phase Electricity
- 500 Metres away from Horana - Handapangoda Road
- 1.5 KM away from Padukka - Ingiriya Road

For Sale to the Highest offer due to owner's migration
077 88 22 170

## VICTORIAN GUEST
Bandarawela




බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
077 3 711 196 | 070 2 536 896

## LUXURY 3 BEDROOMS APARTMENT FOR SALE
KINGS ALFRED PALACE
(BLUE OCEAN DEVELOPMENT)
3 Bedrooms/ 3 Bath Rooms/ Maid area/ 1630 Sq. Ft./ Brand New, Sea View, Fully Furnished
Rs. 85 Million
kumarasirigreenland@gmail.com
077 77 87 109

## KOTAHENA
COLOMBO -13
2 Commercial properties next to each other 7.2 perch and 5.6 perch land with building with ongoing rent income, facing Main Road, Heart of KOTAHENA, prime location, walking distance to all Banks
Contact : 0719 638 587

## MOUNT LAVINIA
(SEA SIDE)
13.09 PERCHES LAND WITH 1200 SQ.FT. TWO STOREY HOUSE FOR SALE.



600 metres to Mount Lavinia junction. 400 metres to the beach, 200 metres to the Station, 2 km to St. Thomas College
Tel: 0724 472 447, 0726 642 664

## PRIME LAND NUWARAELIYA CITY



38 perches land close to Araliya city hotel, clear deed, title Rs 3.8 million P.P
0777 840 141

## COLOMBO 05 KIRULA ROAD OFF JAYAKONTH LANE
BEAUTIFULLY ARCHITECT DESIGNED COLONIAL STYLE SINGLE STOREY
HOUSE FOR SALE
18.30 perches land, 2500 sq.ft., 3 bedrooms, 3 bathrooms, pantry, kitchen, sitting and dining area maid's 2 rooms with bathrooms, 20 feet road way and garden, parking for 3 vehicles, in close proximity to Sirimavo, Vishaka, Royal, Thurstan and Asiri medical hospital



NEAR THIMBIRIGASYAYA ROAD
NO BROKERS Contact : 0777 571 233

## Vacuum Packing
Preserve freshness and save space with our advanced food and cloth vacuum packing solutions!
FOOD & CLOTH



We are open at 9.00 AM until 6.00 PM weekdays ( Urgent cases are accepted, especially after 6.00pm until 10 pm and Holidays )
Contact us : 0711 669 339
Stall 1, Kalimandala Children's Park, Boralesgamuwa

## Sun Lanka 077 266 3767
SEAT COVERS




## PRIME PROPERTY KANDY - HANTANA



250 PERCHES LAND WITH BUNGALOW
P.P RS. 750,000 CLEAR DEED, TITLE
0777 840 141

## APARTMENT AT SUNCITY TOWERS
ST. ANTHONY'S MAWATHA,
COLOMBO - 03
It's a 3 Bedroom apartment with 02 wash rooms and separate Servants Room and Washroom. Total Square area is about 1650 sq. ft. including the balconies.



I am expecting a minimum of Rs. 45 million
0777 840 141

## GIHAN'S BEACH RESORT - DEHIWALA
(A Grade Food for reasonable Price)
We are open from 11.00 a.m. to 11 p.m.
- VVIP Wedding / function Halls
- Beach View Restaurant
- (Thai/ Chinese/ Indian/ Sri Lankan Food)
- Rooftop Garden
- Beach Parties
- Outdoor Catering
- Bar and Pub
- Private A/C Party Halls
- VVIP beach Front Rooms
- Lunch and Dinner Available
- Live DJ @ Fridays, Saturdays and Sundays

Please call us or WhatsApp us:
0774 745 333, 0718 712 795, 0112 729 967, 0112 729 971
WebSite - www. gihansbeach.com | Facebook - Gihans Beach Resort

## Function Halls @ Marine Drive
Gihan's Beach Resort - Dehiwala
Gihan's beach resort is having 4AC and non-AC banquet halls, Beach front function areas and a rooftop garden to host your function in style.
Not only that but also, we have more than 25 function menus starting as low as Rs. 2800.00, some with action stations and BBQ corners too.
We serve the best high-quality Gihan's foods with a VVIP Service Standerds




- Wedding functions
- Office Parties
- Outdoor Catering
- Homecoming functions
- birthday Parties
- All Kinds of Special Occasions

Function Menus Starting from Rs. 2,800.00
Please call us or WhatsApp us:
0774745333, 0718712795, 0112729967, 0112729971
WebSite - www. gihansbeach.com | Facebook - Gihans Beach Resort

## தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா உகுக்கப்படிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD
(WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PROPERTY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.



2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

## KOHUWALA
LUXURY HOUSE WITH SWIMMING POOL FOR SALE.
6 Bedrooms, 2 servant rooms, 2 pantries, 2 kitchens, 2 double garage & roof terrace
CAN BE USED AS 2 HOUSES
0777 88 07 70, 0772 29 88 99

## இரட்டை ஆடம்பர புத்தம் புதிய வீடு விற்பனைக்கு
கொழும்பு-05,
விஜயகுமாரதுங்க மாவத்தை



டுப்லெக்ஸ் கட்டிட அமைப்பில் வடிவமைக்கப்பட்ட புத்தம் புதிய வீடு, 5600 ச.அடி. 7 பேர்ச்சுக்கள், முழுமையான தளபாடமுள்ள இரு வீடுகள், 3 வாகன தரிப்பிடங்கள்.

1 ஆம் வீடு
3 படுக்கையறைகளுடனான வளிச்சீராக்கல் மற்றும் மரத்திலான பல்கனி, சுடுநீருடனான 2 குளியலறைகள், Solar modern pantry with equipments solar power மின்சாரம், பணிப்பெண்ணிற்கான அறை மற்றும் குளியலறை, தோட்டம் மற்றும் கூரை டெரஸ், ரெமொட் ரோலர் கதவு, CCTV கமரா அமைப்பு.

2 ஆம் வீடு
3 படுக்கையறைகளுடனான வளிச்சீராக்கல் மற்றும் மரத்திலான பல்கனி, சுடுநீருடனான 2 குளியலறைகள், Solar modern pantry, பரந்தளவிலான கூரை டெரஸ்.

850 இலட்சம் (பேசித் தீர்க்கலாம்) உரிமையாளர் புலம்பெயர்கின்றார்.
0777 238 063

## PRIME PLOT OF LAND FOR IMMEDIATE SALE



ON GRAMASANWARDANA RD, POLWATTA-PANNIPITIYA
16.5 perches. 1km to 174 bus route. 2km to Sri Jayawardenapura Hospital. 1km to Pamunuwa town.
19 LAKHS PER PERCH
0773 169 733

## Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

## LUXURY TWO STOREYED HOUSE
ON 20 PERCHES LAND FOR SALE AT
GALAWILAWATTA, HOMAGAMA
5 Bedrooms with 3 attached bathrooms, large sitting room, Store Room, Servant room & toilet, Huge Balcony with open terrace, Large Car park for 8 vehicles, Three-phase electricity, Well, Solar hot water, 200m to high-level road & Homagama Hospital, 700m to highway entrance & 100m to Galawilawatta Railway station.
Tel: 0771 199 678, 0712 327 740

## LUXURY APARTMENT FOR SALE
Situated in Astoria Apartment Complex, Colombo - 03.
Two Bedrooms, Two Baths, Living/ Dining, Spacious Pantry and Living area balcony.
All recreation facilities and reserved parking space.
ONLY PRINCIPALS
Please Contact
077 466 5 666

## CAST IRON GAS BURNERS




HOTLINE: 0771092502
ABSONS EXIM (PVT) LTD 185B, OBEYSEKARAPURA ROAD, RAJAGIRIYA TEL: 011 4322651

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Sangyoung Rexton 2014 imported & maintained through Micro Cars, fully loaded version, black leather interior with electric memory seats, Tiptronic transmission, 4wd, Dual AC, 18" alloy wheels, new tires, Lenovo android multi media player with R cam, multi function steering, cruise control, Sunroof, first owner immaculate condition Rs. 11,800,000/-. 32A Mirihana Road Nugegoda. 0779 232 207, 0779 232 207
kus - 1



Mercedes-Benz C180 Kompressor 2003 brand new imported, beige leather interior with electric seats, tiptronic, 17" alloys brand new tires, all maintenance done, immaculate Rs 6650000 0777840141
kus - 2



Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8,475,000 0777 840 141
kus - 3



Hyundai H1 Starex 2015 model registered 2018 wp PJ full option, 2500cc common rail turbo Diesel, 6 speed manual transmission, Dual AC, 7 seater, fridge, brand new 17" alloys & tires, only done 42000km Rs 12 million 0777840141
kus - 4

DON'T TXT & DRIVE
A MESSAGE FROM adz

## Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

# மீண்டெழுமா வங்கதேசம்?

வறுமைநாடுகளின் பட்டியலில் இருந்த வங்கதேசம் தன்னுடைய முயற்சியால் வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் இடம்பிடித்து வருகிறது. 1972இல் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து வங்கதேசமாக உருவெடுத்த அந்த தேசம் நிலவளமும் நீர் வளமும் மீன்வளமும் கொண்டது. ஜமுனா – பத்மா – பிரம்மபுத்தரா போன்ற பேராறுகள் அங்கே பாய்கின்றன. அடிக்கடி இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் இந்த வங்கதேசத்தின் பிரதான தொழில் விவசாயமாகும். நெல்லரிசி அதிமுக்கிய உணவுப்பயிராக இருந்து வருகிறது. உலக அளவில் சணல் ஏற்றுமதியில் முன்னணி நாடாக இருக்கிறது. அங்கே பருத்தி, கோதுமை, தேயிலை, தானியம் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகின்றன. சணல், தேயிலையோடு அதிக ஆடைஉற்பத்தியும் கூட அந்நிய செலாவணி தரும் ஆதாரபொருளாதார வளமாக உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. காடுகளால் உருவான சிறு சிறு மலைத்தொடர் கொண்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மூங்கில்கள் காகித உற்பத்திக்குக் கால் கோளாகவும் இருந்து வருகின்றது.

இந்தியாவின் அண்டை நாடான வங்கதேசத்தில் 40 சதவிகித மக்கள் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். நகரமயமாக்கல் இருந்தாலும் கூட இன்னும் 85 சதவிகித மக்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். ஆனால் அங்கு அரசியல் ஸ்திரமற்ற நிலை இப்போது காணப்படுகின்றது. அந்த நாடு தற்காலிகமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த ஆபத்தான சூழலில் டாக்கா நகரிலிருந்து பிரதமர் ஷேக் ஹஸீனா தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு தன் சகோதரியுடன் இராணுவ விமானத்தில் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவின் டில்லி ஹிண்டன் இராணுவத் தளத்தில் தற்காலிகமாகத் தஞ்சமடைந்திருப்பதாக அறிய முடிகிறது. அவரது மாற்று உடையைக் கூட எடுத்துவர அவகாசம் கொடுக்காமல் அந்நாட்டு இராணுவம் அவரை அவசரமாக அனுப்பியுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

வங்கதேச விடுதலை போரில் ஈடுபட்டவர்களின் உறவினர்களுக்கு அரசவேலைகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதை எதிர்த்து தொடங்கிய மாணவர் போராட்டம் அது அரசாங்கத்துக்கெதிரான மக்கள் போராட்டமாக மாறியது. இது கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து வன்முறையாக மாறியது. இதைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு, கடைசியில் படையினரிடமிருந்து கைமீறிச் சென்றது. வங்காளதேசத்தில் பிரதமர் ஷேக் ஹஸீனா தலைமையிலான அவாமிலீக் அரசு ஆட்சி செய்து வந்தது. அங்கு ஏற்பட்டுள்ள வன்முறையால் அங்கே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டும் அவசரகாலச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டும் நிலைமை கட்டுக்கடங்காமல் போனது. இப்போது அந்த நாட்டில் பாதுகாப்பற்ற ஒரு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், போராட்டக்காரர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் என 300க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அரச அலுவலகங்கள், அரசியல்வாதிகளின் வீடுகள், பாதுகாப்பு அதிகாரிகளின் கட்டடங்கள், அரசாங்க பொதுச்சொத்துக்கள் என்பன எரிக்கப்பட்டன. பிரதமர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. பலகோடி டொலர் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் ஒரு மாநிலமான திருப்பூரில் 90 சதவிகிதத்துக்கு மேற்பட்ட கிறிஸ்தவ மக்கள் வாழ்கிறார்கள். இந்த மாநிலம் பங்களாதேசின் மிக நெருங்கிய எல்லையில் இருக்கிறது. அந்த மாநில மக்கள் இந்தியாவின் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுத் தனி மாநில ஆட்சியமைப்பதற்குத் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அமெரிக்கா அதற்குத் துணை நிற்பதால் அது இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. திருப்பூரை பங்களாதேசுடன் இணைத்துத் தருவதாகத் தெரிவித்துத் தங்கள் முயற்சிக்கு ஆதரவு தந்தால் நிரந்தரமாக நீங்கள் ஆட்சியில் இருக்கலாம் என்று சமீபத்தில் அமெரிக்கா நேரடியாக வேண்டிக்கொண்டபோது பிரதமர் ஷேக் ஹஸீனா அதை ஏற்க மறுத்ததாகவும், தற்போது பங்களாதேஷில் நிகழ்த்தப்படுகின்ற இந்த மாணவர் போராட்டத்துக்கு அமெரிக்காவே பணஉதவி வழங்கி துணைநிற்பதாகவும் இன்னொரு அரசியல் செய்தி வட்டாரம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் தேர்தலை அறிவித்த பின்னர் ஷேக் ஹஸீனா நாடு திரும்புவார் என்று லண்டனில் உள்ள அவரது மகன் ஸஜீப் வஷீத் சர்வதேச ஊடகங்களுக்குச் செய்தி வெளியிட்டிருக்கிறார். வங்கதேசத்தில் ஏற்பட்டுள்ள இன்றைய 'இந்த' ஆட்சி கவிழ்க்கப்பட்ட சூழ்நிலைக்கு பாகிஸ்தானின் சூழ்ச்சியே காரணம் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். பாகிஸ்தானின் ஐ. எஸ். புலனாய்வுப் பிரிவுக்குத் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்களும் இருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்காவைச் சேர்ந்த சமூகவியல் மாணவர் நஹீத் இஸ்லாம் வங்கதேசத்தில் மாணவர் போராட்டத்தைத் தலைமையேற்று ஒருங்கிணைத்துள்ளார். அவரின் போராட்டம் ஷேக் ஹஸீனாவின் 15 வருட கால ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது. பாகுபாடுகளுக்கு எதிரான மாணவர்களின் போராட்ட அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான நஹீத் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து மாணவர் போராட்டம் கலவரமாக மாறியது. இராணுவத்தால் வழிநடத்தப்படும் அல்லது ஆதரிக்கப்படும் எந்த ஒரு அரசையும் எதிர்ப்பதாக நஹீத் இஸ்லாம் தெரிவித்துள்ளார். தாங்கள் சிபாரிசு செய்யும் அரசைத் தவிர வங்கதேசத்தில் எந்த அரசு ஆட்சியமைத்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளமுடியாதுஎன்று தெரிவித்துள்ளார். மேலும் நோபல் பரிசு பெற்ற முஹம்மது யூனுஸை தலைமை ஆலோசகராக நியமிப்பதற்கு நஹீத் இஸ்லாம் முன்மொழிந்துள்ளார்.

வங்க விடுதலை





தேசத் தந்தை முதல் ஜனாதிபதி முஜிபுர் ரகுமானின் முதலாவது புதல்வி ஷேக் ஹஸீனா 1960இல் டாக்கா பல்கலைக்ழகத்தில் படித்துக்கொண்டிருக்கும்போதே அரசில் பிரவேசம் பெற்றார். 1971 இல் வங்காளதேச விடுதலையில் ஈடுபட்டதற்காக அவரும் அவரது குடும்பமும் சிறையில் அடைக்கப்பட்டனர். அதன்பின் 1975ஆம் ஆண்டு அவரது தந்தை ஜனாதிபதி முஜிபுர் ரகுமான் மற்றும் தாய் உட்பட 3 சகோதரர்களும் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். அப்போது ஹஸீனா நாடு கடத்தப்பட்டிருந்ததால் உயிர் தப்பினார் எனக் குறிப்பிடுகிறார்கள். தேசவிடுதலை பெற்ற வங்க தேசத் தந்தை முதலாவது ஜனாதிபதி முஜிபுர் ரகுமானின் சிலையை ஆர்ப்பாட்டக்காரர்கள் உடைத்து வீழ்த்தியிருக்கிறார்கள். பாராளுமன்றத்தைச் சுற்றி வளைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் ஷேக் ஹஸீனாவின் அரச மாளிகைக்குள் நுழைந்து பறவைகள், கதிரைகள், ஆபரணங்கள், அணிகலன்கள், செருப்புகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் என அங்கிருந்த ஒட்டுமொத்த வீட்டுப்பொருட்களையும் சூறையாடிச் சென்றிருக்கிறார்கள். அவரது கட்டிலில் உறங்கிப் பார்த்திருக்கிறார்கள். சமையலறையில் இருந்த உணவுப்பொருட்களைக் உண்டு சுவைத்திருக்கிறார்கள். உடுத்த புடவைகள் உள்ளாடைகள், புதிய ஆடைகள் என யாவற்றையும் மக்கள்முன் கொண்டுவந்து விரித்துக் காட்டிப் படம் எடுத்து சமூக ஊடகங்களிலும் பதிவிட்டிருக்கிறார்கள். சமீபத்தில் இஸ்ரேலிலும் கூட பாராளுமன்றத்தைக் கைப்பற்றும் ஒரு முயற்சி நிகழ்ந்தது. ஆனால் அது ஒரு நூலிழையில் தப்பிவிட்டது. 'நாட்டுமக்களை எதிர்ப்பவர்களுக்கெல்லாம் இது ஒரு படிப்பினையாக இருக்கும்' என்று வங்கதேச ஆர்ப்பாட்டக்காரர்கள் சொன்னார்கள். அவர்களது கருத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

வங்கதேசப் பிரதமராய் இருந்த ஷேக் ஹஷீனா தனது 16 ஆண்டு கால ஆட்சியில் வேலை வாய்ப்பின்மை அதிகரித்ததாகவும் இந்திய அரசின் ஏவலுக்கெல்லாம் ஆதரவளித்து வந்ததாகவும் வங்கதேசம் என்பது இந்திய ஆதிக்க நாடாகவும் ஆகிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன. இருந்தபோதும் பொருளாதார வீழ்ச்சியுற்ற இலங்கைக்கு பொருளாதார உதவி செய்த ஷேக் ஹஸீனாவின் அரசாங்கம் சமீப காலங்களில் இலங்கை மக்களுக்குக் கைகொடுத்து உதவியதை இலங்கை மக்கள் இப்போதும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள்.

வங்காளதேச விடுதலைப்போரில் பங்கேற்றவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரசு வேலையில் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை அங்குள்ள நீதிமன்றம் ரத்துச் செய்தது. பின் அரசு அதை நடைமுறைப்படுத்த முனைந்தபோது உருவான மாணவர் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையின்போது சிறுபான்மைச் சமூகத்தவரும் தாக்கப்பட்டதாகப் பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்நிலையில் மேற்குவங்காளத்தில் கூச் பீகார் மாவட்டம் சீதல்குச் பகுதியில் உள்ள இருநாட்டு எல்லையில் இன்று நூற்றுக்கணக்கானோர் இந்திய எல்லையில் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்துள்ளனர். அவர்களில் அதிகமானோர் இந்துக்கள். ஆனால் அவர்களை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் தடுத்துள்ளனர்.

ஷேக் ஹஸீனா சொந்த நாட்டை விட்டுத் தப்பி வருவது இது முதன் முறையல்ல. இதற்கு முன்னர் 1975இல் அவரது மொத்த குடும்பத்தினரும் படுகொலை செய்யப்பட்டனர். வங்கதேசத்தை நிறுவிய விடுதலைத் தந்தை முதலாவது ஜனாதிபதி என அழைக்கப்படும் பங்கபந்து ஷேக் முஜிபுர் ரகுமான் மற்றும் அவரது குடும்பத்தினர் 18பேர் படுகொலை செய்யப்பட்டனர்.



அவர் அந்நாட்டின் அதிபரான 4 ஆண்டுகளில் இந்த படுகொலைச் சம்பவம் நிகழ்ந்தது. அப்போது இச்சம்பவம் அந்நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அரசியல் குழப்பம், இராணுவ ஆட்சி என அடுத்தடுத்த புதுத் திருப்பங்களை அந்நாடு சந்தித்தது.

இந்த சம்பவம் நடந்தபோது மேற்கு ஜேர்மனியில் கணவர் வசீத் மியாவுடன் ஷேக் ஹஸீனா வசித்து வந்துள்ளார். அவரால் அப்போது சொந்த நாட்டுக்குத் திரும்பமுடியாத நிலையில் அவர் தன் கணவர், குழந்தைகள் மற்றும் சகோதரியுடன் 1975 முதல் 1981 வரை ஆறு ஆண்டுகள் தங்கள் அடையாளங்களை மறைத்தபடி அன்றைய முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் உதவியுடன் இந்தியாவில் வாழ்ந்தார்.

6 ஆண்டுகளுக்குப் பின்னர் 1981 மே 17ஆம் திகதி அவர் வங்கதேசம் திரும்பிய பின் அவாமி லிக்கின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய அந்த வருகைக்குப் பின் அங்கே இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

பின் ஊழல் வழக்கில் சிறை உள்ளிட்ட பல்வேறு சவால்களைச் சந்தித்த அவர் 1996இல் முதன்முறை வங்கதேசத்தின் பிரதமரானார். இந்த பின்புலத்தின் தன்னை வளர்த்துக்கொண்ட அவர் இன்றைய அபாயகரமான சூழலில் 30 நிமிட இடைவெளியில் திரண்டு வந்த ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களிடமிருந்து உயிர்தப்பி மீண்டும் இப்போது இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். 2ஆவது முறையாக இந்தியா அவருக்கு இப்போது புகலிடமளித்துள்ளது. இது தவிர 1971இல் பாகிஸ்தானுக்கு எதிரான விடுதலைப் போரில் வங்கதேசம் ஈடுபட்டபோது, அந்நாடு விடுதலை பெறுவதில் இந்தியாவின் பங்கு அதிமுக்கியத்துவம் பெற்றிருந்தது.

எந்த நாடும் சொந்த பலன் எதிர்பாராமல் இன்னொரு நாட்டுக்குள் தன் மூக்கை நுழைப்பதில்லை. வங்கதேசம் எவ்வாறு இந்நெருக்கடியிலிருந்து மீளும் என்பதற்கான பதில்களை நிச்சயம் எதிர்காலம் எடுத்துச்சொல்லும் என்ற அதிக எதிர்பார்ப்புடன் இருக்கின்றது உலகம்.



கனடாவிலிருந்து இனியவன் இசார்தீன்

# பங்களாதேஷ் அரசியல் நெருக்கடி பிராந்திய உறவை சீர்குலைக்கிறதா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

சமகால சர்வதேச அரசியலை யுத்தங்களும், இராஜதந்திர மோதல்களும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. அண்மைய வாரங்களின் கட்டுரைகளும் அவற்றின் பிரதிபலிப்பாகவே அமைந்தன. இச்சூழலில் தென்னாசியாவில் கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் ஏற்பட்ட மாணவர் புரட்சி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பங்களாதேஷ் வரலாறு மாணவர் புரட்சியோடு இறுகப் பிணைந்தது. 1972களில் பங்களாதேஷ் எனும் புதிய அரசின் உருவாக்கத்திற்கான அடித்தளம் பங்களாதேஷ் மாணவர் போராட்டங்களாலேயே ஏற்படுத்தப்பட்டது. அவ்வரலாற்று அனுபவங்களின் பின்னணியில், 2024இல் ஏற்பட்ட மாணவர் போராட்டம் ஆட்சி மாற்றத்தை உருவாக்கியுள்ளது. சில சர்வதேச அரசியல் ஆய்வாளர்களால், மாணவர் போராட்டம் பங்களாதேஷின் ஜனநாயக மீளெழுச்சிக்கானதாக விபரிக்கப்படுகிறது. மறுதலையாக மாணவர் போராட்டம், 'தேச விரோத' செயல் என நாட்டை விட்டு வெளியேறிய பங்களாதேஷ் பிரதமர் மற்றும் அவரது அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது. இக்கட்டுரை பங்களாதேஷ் போராட்ட அரசியல் வகிபாகத்தை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஜூலை1அன்று, பங்களாதேஷில் அரசாங்க வேலைகளுக்கான இடஒதுக்கீட்டு முறைக்கு எதிராக அமைதியான மாணவர் போராட்டம் தொடங்கியது. அரசாங்க வேலைகளுக்கான 30 சதவீத இடஒதுக்கீடு, 1971இல் பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக பங்களாதேஷின் போரில் ஈடுபட்ட வீரர்களின் உறவினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது பாரபட்சமான ஒதுக்கீடாக வர்ணிக்கப்பட்டு, இதனை மாற்றக் கோரியே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது நீண்டகால கோரிக்கையாகவும் அமைகின்றது. இருதரப்பும் நீதிமன்ற உதவிகளையும் நாடியிருந்தன. போராட்டக்காரர்களின் கோரிக்கை பெருமளவு நிறைவேற்றப்பட்டது. ஜூலை21அன்று உச்சநீதிமன்றம், முன்னாள் இராணுவ வீரர்களுக்கான இடஒதுக்கீட்டை 5 சதவீதமாகக் குறைத்து, 93 சதவீத வேலைகள் தகுதி அடிப்படையிலும், மீதமுள்ள 2 சதவீதம் சிறுபான்மை இனத்தவர்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒதுக்கப்படும் என்று உத்தரவிட்டது. அவர்களின் கோரிக்கை பெருமளவில் நிறைவேற்றப்பட்டாலும், எதிர்ப்புக்கள் விரைவில் ஒரு பரந்த அரசாங்க எதிர்ப்பு இயக்கமாக மாறியது.

அமைதி வழியாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், ஜூலை16 அன்று டாக்காவில் போராட்டக்காரர்களுக்கும் அரசாங்க ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த மோதலைத் தொடர்ந்து, வன்முறையானதாக மாறியது. ஆறு பேர் கொல்லப்பட்ட முதல் வன்முறை பதிவு செய்யப்பட்டது. ஷேக் ஹசீனா மற்றும் அவருடைய அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்களை, 'தேசத்தை சீர்குலைக்க முயலும் பயங்கரவாதிகள்' என்று விபரித்தார்கள். இது போராட்ட அணுகுமுறையை மாற்றியது. வன்முறை அதிகரிக்கப்பட்டது. பங்களாதேஷ் தொலைக்காட்சியின் தலைமையகத்தையும் மற்ற அரசாங்க கட்டிடங்களையும் போராட்டக்காரர்கள் எரித்தனர். மேலும், போராட்டக்காரர்கள் ஹஸீனாவின், இராஜினாமாவை தொடர்ந்து கோரினர். மற்றும் 'சர்வாதிகாரியை வீழ்த்து' என்று கோஷமிட்டனர். டாக்கா பல்கலைக்கழகத்தின் சமூகவியல் உதவிப் பேராசிரியரான டாக்டர் சமினா லுத்பா பிபிசிக்கு வழங்கியுள்ள நேர்காணலில், " மாணவர்கள் மாத்திரமல்ல, அனைத்து தரப்பு மக்களும் எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்திருப்பதாகத் தெரிகிறது" எனத் தெரிவித்திருந்தார்.

இயக்கம் விரிவடைந்தவுடன், மோதல்கள் தொடர்ந்தன. மேலும் ஏற்பட்ட அமைதியின்மையில் 300க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பங்களாதேஷ் ஊடகங்களும் எதிர்ப்பாளர்களும் அதிகரிக்கும் இறப்பு எண்ணிக்கைக்கு காவல்துறையைக் குற்றம் சாட்டினர். எவ்வாறாயினும், அதிகாரிகள் தற்காப்புக்காகவோ அல்லது அரச சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவோ மட்டுமே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அரசாங்கம் கூறியது. எனினும் விரிவடைந்த போராட்டத்தை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரதமர் ஷேக் ஹஸீனா மற்றும் அவரது ஆளும் அவாமி லீக் கட்சிக்கு எதிராக ஒரு குறிப்பிடத்தக்க சவாலாகவும் எழுச்சியாகவும் இது மாறியது. இந்நிலையிலேயே ஆகஸ்ட் 6அன்று, ஷேக் ஹஸீனா தனது பதவியை இராஜினாமா செய்து, இராணுவ ஹெலிகொப்டரில் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். இந்தியாவின் புதுடெல்லியில் பாதுகாப்பு தஞ்சம் கோரியுள்ளார். எதிர்வரும் நாட்களில் பிரித்தானியாவிற்கு செல்ல உள்ளதாகவும் சர்வதேச அரசியல் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. எனினும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய இந்தியாவிலேயே தஞ்சம் கோரியுள்ளார் என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகஸ்ட்7 அன்று பாராளுமன்ற அமர்வில் உறுதிப்படுத்தியிருந்தார்.



ஹஸீனாவின் வெளியேற்றத்தை தொடர்ந்து இராணுவ தளபதி இடைக்கால அரசாங்கத்தை பொறுப்பேற்றிருந்த நிலைமையில், பங்களாதேஷின் அரசியல் ஸ்திரமற்ற சூழல், பிராந்திய அரசியல் குழப்பத்தை உருவாக்கியுள்ளது. இந்திய ஊடகங்களும் ஹஸீனாவின் வெளியேற்றத்திற்கு வழிவகுத்த எதிர்ப்புகளைத் தூண்டியதில், பாகிஸ்தான் மற்றும் சீன உளவுத்துறை அமைப்புகளின் பங்கு பற்றிய குற்றச்சாட்டுகளை முதன்மைப்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் உளவு அமைப்பான உள்ளக புலனாய்வு சேவைகள் (ஐ.எஸ்.ஐ) பங்களாதேஷ் எதிர்க்கட்சியான தேசியவாதக் கட்சி (பி.என்.பி) மற்றும் ஜமாத்இஇஸ்லாமியின் மாணவர் பிரிவுகளுடன் ஆட்சி மாற்றத்தைத் திட்டமிடுவதற்கு ஒத்துழைத்ததாக சில தகவல்கள் கூறுகின்றன. இந்தியாவின் Economic Times பகிரங்க குற்றச்சாட்டை மாணவர் எதிர்ப்பு போராட்ட ஆரம்பம் முதல் முன்வைக்கிறது. தடைசெய்யப்பட்ட ஜமாத்இஇஸ்லாமியின் மாணவர் பிரிவான சத்ரா ஷிபிர், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யால் ஆதரிக்கப்படுவதாகக் கூறப்படுவது, வன்முறையைத் தூண்டுவதாகவும், பங்களாதேஷில் மாணவர் போராட்டங்களை ஒரு அரசியல் இயக்கமாக மாற்றுவதாகவும் Economic Times தெரிவித்துள்ளது. மேலும், பாகிஸ்தானின் இராணுவமும் ஐ.எஸ்.ஐ.யும் பிரதமர் ஷேக் ஹஸீனாவின் அரசாங்கத்தை சீர்குலைப்பதற்கும் மற்றும் எதிர்ப்புகள் மற்றும் தெரு வன்முறை மூலம் எதிர்க்கட்சியான பி.என்.பியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுவதற்கான ஆதாரங்கள் இருப்பதாவும் செய்தி வெளியிட்டுள்ளது. கூடுதலாக, தற்போதைய நெருக்கடியில்மேற்கத்திய ஆதரவு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடு குறித்து உள்ளூர் அரசாங்கம் விசாரணை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது. இப்பின்னணியில் Economic Times பங்காளாதேஷில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை ஹஸீனாவிற்கு எதிராக பாகிஸ்தான் ஆதரவு இயக்கங்களால் கட்டமைக்கப்பட்ட சூழ்ச்சியாகவே விளக்குகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுகள் உறுதியான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்றாலும், தென்னாசியாவின் புவிசார் அரசியல் இயக்கவியல் பற்றிய கேள்விகளை சர்வதேச அரசியலில் எழுப்புகின்றன. பாகிஸ்தானும், சீனாவும் பங்காளதேஷ் உடனான உறவை வலுப்படுத்த முயல்வதன் மூலம் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கைக் குறைத்துக்கொள்ள முற்படுவது யதார்த்தபூர்வமானதாகும். குறிப்பாக சீனாவின் பட்டி மற்றும் சாலை முன்முயற்சியில் சீன பங்களாதேஷ் உறவின் நெருக்கத்தை இந்தியா நெருக்கடியாகவே அவதானித்தது. எனினும் குறிப்பிடத்தக்க வகையில், ஹசீனாவின் ஆட்சியின் போது, இந்தியாவுடனான பங்களாதேஷின் உறவு வலுவாக இருந்தது. சீனாவிடமிருந்து பொருளாதார நலன்களைப் பெறும் மூலோபாய உறவை பங்களாதேஷ் வெளிப்படுத்தியதுடன், மறுவளம் நட்புரீதியான ஒத்துழைப்பை இந்தியாவுடன் பகிர்ந்து கொண்டது. ஷேக் ஹஸீனாவின் வரலாறும், இந்தியாவுடன் ஆழமாக பிணைந்துள்ளது. நெருக்கடியான காலங்களில் ஹஸீனாவின் பாதுகாப்புசார்ந்த நம்பிக்கைக்குரிய அரசாக இந்தியாவே இருந்துள்ளது. அவரது தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் 1975இல் அவரது தாயார், சகோதரர் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களுடன் படுகொலை செய்யப்பட்டபோது, இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். ஹஸீனாவுடன் அவரது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகள் நாடுகடத்தப்பட்டு, ஆறு ஆண்டுகள் இந்தியாவிலேயே தங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஷேக் ஹஸீனா இந்திய உறவு, பிராந்தியத்தில் அதன் நலன்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக பாகிஸ்தானால் கருதப்பட்டது. எவ்வாறாயினும், ஹஸீனாவின் விலகலுடன், நாட்டின் அரசியல் நிலப்பரப்பில் இயக்கவியலை மாற்றத் தயாராக உள்ளது.

பங்களாதேஷில் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வர்த்தக நலன்களுக்கு உணர்திறன் கொண்ட ஒரு தலைவரின் வீழ்ச்சி புதுடெல்லிக்கு ஒரு குறிப்பிடத்தக்க நெருக்கடியாகவே அமைகின்றது. இந்திய ஊடகங்களின் செய்தியிடலும், அவ்அதிருப்தியை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

தொடர் 20 ஆம் பக்கத்தில்..



## இந்தியா ஒரு நோக்கு
### வாராந்த அலசல்



நந்தவனம் சந்திரசேகரன்

# இந்தியாவை பரபரப்பாக்கிய வங்கதேச கலவரம்



இந்தியாவில் கடந்த வாரம் முழுவதும் ஊடகங்கள் முதல் மக்களவை வரையில் வங்கதேசத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றிய விவாதமாகவே இருந்தது. இந்தியாவிற்கு அருகில் உள்ள வங்கதேசத்தில் எழுந்துள்ள போராட்டமும், கலவரமும் இந்தியாவிலும் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

வங்கதேசத்தில் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கான இட ஒதுக்கீடு நடைமுறையை எதிர்த்து பல்வேறு மாணவர் சங்கங்கள் கடந்த ஜுன் மாதம் முதல் போராட்டம் தொடங்கினர். இது நாடு முழுவதும் பெரும் கலவரமாக மாறியது. இந்த சூழலில் தலைநகர் டாக்காவில் 4 இட்சத்திற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் ஒன்று கூடி நாடாளுமன்றம், பிரதமர் இல்லம் உள்ளிட்ட இடங்களில் முற்றுகையிட்டுள்ளனர். பாதுகாப்பு காரணமாக அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை இராஜிராமா செய்துவிட்டு விமானம் மூலம் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இந்தியா வந்துள்ள ஷேக் ஹசினாவின் வருகை குறித்தும், அவருக்கான பாதுகாப்பு குறித்தும் ஆலோசிக்க இந்தியாவில் ஆளும் பா.ஜ.க தலைமையில் அனைத்துக் கட்சிகள் கூட்டம் நடைபெற்றது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் அவர் விளக்கம் அளிக்கும்போது, வங்கதேசத்தில் கடந்த சில வாரங்களாக ஆளும் கட்சிக்கு எதிராக தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் நடந்து வந்தன. இதைத் தொடர்ந்து பிரதமர் பதவியை ஷேக் ஹசீனா இராஜினாமா செய்தார். குடும்பத்தினருடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் அவர் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். வங்கதேசத்தில் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்ற ஒரே கோரிக்கையுடன் போராட்டம் தீவிரமடைந்தது. கடந்த 5 ஆம் திகதி ஊரடங்கு உத்தரவையும் மீறி தலைநகர் டாக்காவில் போராட்டக்காரர்கள் குவிந்தனர், நிலைமை மிகவும் மோசமடைந்ததால்., பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசித்த பிறகே பிரதமர் ஷேக் ஹசீனா இந்த முடிவை எடுத்துள்ளார்.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்த அவர் இந்தியா வருவதற்காக தாற்காலிக அனுமதி கோரினார். வங்கதேச அதிகாரிகளிடம் இருந்தும் விமான அனுமதிக்கான கோரிக்கை வந்தது. வங்கதேசத்தில் நிலைமை மோசமடைந்ததால் இந்தியா வர அனுமதி வழங்கப்பட்டது என்று விளக்கம் அளித்துள்ளார். வங்கதேசத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு சீராகும் வரையில் தொடர்ந்து இந்தியா கண்காணிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஒரு கேள்வியை முன்வைத்தார். டாக்காவில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் வெளிநாட்டு சக்திகள் குறிப்பாக பாகிஸ்தானின் தலையீடு இருப்பதாக செய்திகள் வந்துள்ளன. இதுபற்றி உங்கள் கருத்து என்னவென்று கேட்ட போது. அதற்கு விளக்கம் அளித்த மத்திய அமைச்சர் ஜெய்சங்கர், " அந்த கோணத்திலும் விசாரித்து வருகிறோம். வங்க தேசத்தின் நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர் தனது சமூக ஊடக டிஸ்பிளே படத்தை தொடர்ந்து மாற்றி வந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது ஏதாவது பெரிய விடயத்தை சுட்டிக் காட்டுகிறதா? என்றும் ஆய்வு செய்கிறோம் என்று விளக்கம் அளித்துள்ளார்.

வங்கதேச பிரச்சினையில் இந்தியாவில் ஆளும் கட்சிகள் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமித்த கருத்துடன் செயல்படுவது வரவேற்கக் கூடியது என்றாலும் வங்கதேசத்தில் சிறுபான்மையினராக இருக்கும் இந்துக்கள் அதிகமாக தாக்கப்படுகிறார்கள் என்று பா.ஜ.க தலைவர்கள் கவலைப்படுகிறார்கள். ஆனால், வங்கதேசத்தின் ஒட்டுமொத்த மக்களுமே பாதிக்கப்படுகிறார்கள் என்ற பொதுப்பார்வை இவர்களுக்கு இல்லையே ஏன்? என்ற கேள்வியும் எழுந்துள்ளதைத் தவிர்க்க முடியவில்லை.

வங்கதேசத்தில் இந்துக்கள் தாக்கப்படுவது குறித்து, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறும் போது, இந்தியாவுக்கு பக்கத்தில் உள்ள நாடுகள் அனைத்தும் பற்றி எரிகின்றன. அங்குள்ள கோயில்கள் இடிக்கப்படுகின்றன. இந்துக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. ஆனாலும், இத்தகைய சூழல் ஏன் ஏற்படுகிறது என்பதை கண்டறிய நாம் முயற்சிக்கவில்லை. வரலாற்றின் தவறுகளிலிருந்து பாடம் கற்காத சமூகத்தின் எதிர்காலம் சோபிக்காது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். சனாதன தர்மத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை சமாளிக்க நாம் இணைந்து செயல்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். வங்கதேசத்தில் உள்ள இந்து சிறுபான்மையினர் தாக்கப்படுவதை கண்டித்து இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் குரல் கொடுக்கவேண்டும் என்றும் பா.ஜ.க தலைவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். இந்தியாவில் இந்துக்களால் சிறுபான்மையினர் தாக்கப்பட்ட போது எங்களுக்காக குரல் கொடுக்க எந்த இந்து அமைப்பும் முன்வரவில்லையே ஏன்? என்று இந்திய சிறுபான்மையினர் கேட்பதும் நியாகமாகத் தானே இருக்கிறது? பா.ஜ.க தலைவர்களிடம் முரண்பாடுகள் இருந்தாலும், இந்தியாவில் உள்ள இந்து, புத்த, கிறிஸ்தவ ஒற்றுமை கவுன்சில் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் வங்கதேசத்தில் தற்போதையை நிலைவரம் சிறுபான்மையினருக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. ஷேக் ஹசீனா பதவி விலகலைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் இந்துக் கோயில்கள் தீவைத்து எரிக்கப்பட்டு வருகின்றன. சிறுபான்மையினரின் வீடுகள், வணிக நிறுவனங்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்து வரும் தாக்குதல்களில் இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மை சமூகத்தினரின் கவலை அதிகரித்துள்ளது. குறிப்பாக, மத சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் வடகிழக்கு பஞ்சகர், தினாஜ்பூர் , ரங்கபூர் , போகுரா, தென்மேற்கு குல்னா, படுகாலி, மத்திய நர்சிங்டி , மைமெயின்சிங், வடமேற்கு லக்கியூர், வடகிழக்கு ஹபிகஞ்ச் உள்ளிட்ட பல பகுதிகளில் வசிக்கும் இந்துக்களின் பாதுகாப்பு மிகப்பெரிய கேள்விக்குள்ளாகியுள்ளது.அப்பகுதியில் ஏராளமானோர் தாக்குதலுக்கு ஆளாகி உள்ளனர், கோயில்கள், கடைகள், வீடுகள் சூறையப்பட்டுள்ளன. டாக்காவில் ஒரு இந்து கலாசார மையம் கட்டுக்கடங்காத கலவரக் கும்பலால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்கான் உள்ளிட்ட நான்கு முக்கிய இந்துக் கோயில்கள். தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும், தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்துமாறும் இராணுவத்திடம் வலியுறுத்துமாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் மட்டுமல்ல உலகில் எந்த நாட்டிலும் மக்கள் வன்முறையால் தாக்கப்பட்டாலும் அதற்கான எதிர்ப்புக்குரலைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்குமே இருக்கிறது. இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது இங்குள்ள சிறுபான்மையினர் எவ்வாறு தாக்கப்பட்டார்கள் என்பதையும் நாம் இன்னும் மறந்து விடவில்லை. இதேபோன்ற ஒரு நிலைமை வங்கதேச சிறுபான்மையிருக்கும் வந்துவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டுடன் ஒவ்வொரு விடயத்தையும் இந்தியா உற்று நோக்க வேண்டும்.



# பிரித்தானியாவில் தீவிரமடையும் வலதுசாரிகளின் வன்முறை

ஒருமாத தொழிற்கட்சி ஆட்சியின் பின்னர், கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப் பெரிய வன்முறைப் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியாவில் தீவிர வலதுசாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்த வன்முறைகளை நடத்துவதாக புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கண்டித்துள்ளார்.



**மூன்று இளஞ் சிறுமிகள் கொலை:**

கடந்த மாதம் ஜுலை 29ஆம் திகதி யன்று பிரிட்டனின் சவுத்போர்ட் நகரில் நடைபெற்ற டெய்லர் சுவிஃப்ட் யோகா மற்றும் நடனப் பயிலரங்கில் கலந்து கொண்ட மூன்று சிறுமிகள் கொல்லப்பட்டனர்.இதன்பின் இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தின் பல பகுதிகளில் வெளிநாடுகளில் இருந்து குடியேறுபவர்களுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டம் வெடித்தது. இந்த போராட்டங்கள் பல இடங்களில் வன்முறையாக மாறின. இதனால் பிரிட்டன் முழுக்க கலவரம் ஏற்பட்டுள்ளது.

**ஒருமாத தொழிற்கட்சி ஆட்சி:**

பிரித்தானியாவில் கடந்த ஜுலை மாதம் தான் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆட்சியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. எதிர்க்கட்சியாக இருந்த தொழிற் கட்சி மிகப் பெரிய வெற்றி பெற்ற நிலையில், கெய்ர் ஸ்டார்மர் பிரதமரானார்.

இதற்கிடையே தொழிலாளர் கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப் பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. அதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



**வன்முறைக்கு என்ன காரணம்:**

கடந்த வாரம் வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள சவுத்போர்ட் என்ற இடத்தில் உள்ள குழந்தைகள் நடன வகுப்பில் திடீர் தாக்குதல் நடந்தது. இதில் மூன்று சிறுமிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். பிரிட்டனில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதே இதுபோன்ற தாக்குதல்களுக்குக் காரணம் எனக் கூறி அங்கே பல நகரங்களில் போராட்டங்கள் வெடித்தன.

மூன்று சிறுமிகள் உயிரிழக்கக் காரணமாக இருந்த அந்த தாக்குதலில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டில் இருந்து குடியேறியவர் என்றும் அவர் ஒரு இஸ்லாமியர் என்றும் தவறான தகவல் பரவியது. இதனால் குடியேற்றத்தை எதிர்க்கும் குழுக்கள் முஸ்லிம் எதிர்ப்பு குழுக்கள் திடீரென இந்த போராட்டங்களை ஆரம்பித்தன. அதுவே இப்போது வன்முறையாக மாறியுள்ளது.

அதேநேரம் இந்த சம்பவத்தில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டைச் சேர்ந்தவர் இல்லை என்றும் அவர் பிரிட்டனில் பிறந்தவர் தான் என்றும் பொலிஸார் விளக்கமளித்துள்ளனர். மேலும், கைதான நபரின் குடும்பம் கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றுவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும், இதை ஏற்க மறுத்து அங்கே போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இங்கிலாந்தில் லிவர்பூல், பிரிஸ்டல், ஹல் மற்றும் ஸ்டோக்ஆன்ட்ரென்ட் மற்றும் பிளாக்பூல் எனப் பல நகரங்களில் இந்த வன்முறை போராட்டங்கள் பரவியுள்ளன. இந்த விவகாரத்தில் பொலிஸார் நூற்றுக்கும் மேற்பட்டோரை இதுவரை கைது செய்துள்ளனர்.

**வலதுசாரி இயக்க திட்டம்:**

மான்ஷெஸ்டர் மற்றும் பெல்ஃபாஸ்டில் தாக்குதல்கள் நடந்த நிலையில், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சூறையாடப்பட்டன. லிவர்பூலில் ஒரு நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த வன்முறையில் பொலிஸார் பலரும் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே தீவிர வலதுசாரி இயக்கங்கள், திட்டமிட்டு இந்த போராட்டங்களை நடத்துவதாக அந்நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் விமர்சித்துள்ளார். மேலும், சிறுமிகள் உயிரிழக்கக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்த அவர், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

**கன்சர்வேட்டிவ் கட்சியும் வலதுசாரிகளும் :**

கன்சர்வேட்டிவ் கட்சியே இங்கிலாந்தை தீவிர வலதுசாரி வன்முறைக்கு திறந்துள்ளது என்ற குற்றஞ்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

தீவிர வலதுசாரி வன்முறைக்கு காரணம் கன்சர்வேட்டிவ்கள் என இங்கிலாந்து பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முன்னாள் ஆலோசகர் டேம் சாரா கான், இவ்வாறு தெரிவித்த கருத்து பலத்த சர்ச்சையை உருவாக்கி உள்ளது.

முன்னைய கன்சர்வேட்டிவ் அரசாங்கம் கலாசார வெறுப்பு நிகழ்ச்சி நிரலுடன் தீயை மூட்டுவதன் மூலமும், நாட்டின் சில பகுதிகளில் வெடித்துள்ள தீவிர வலதுசாரி வன்முறைக்கு இங்கிலாந்தை பரந்த அளவில் திறந்து விட்டதாக, பிரதம மந்திரிகளின் மூத்த ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மே மாதம் வரை ரிஷி சுனக்கின் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் மீள்தன்மைக்கான சுயாதீன ஆலோசகராக இருந்த டேம் சாரா கான், தெரசா மே மற்றும் போரிஸ் ஜோன்சன் இருவரின் கீழும் தீவிரவாத எதிர்ப்பு ஆணையராக செயல்பட்டவர்.

தீவிர வலதுசாரிகள் சமூக ஊடகங்களில் வன்முறையைத் தூண்டுவதற்கு சட்டத்தில் உள்ள இடைவெளிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதே நேரத்தில் பல அரச நிர்வாகங்களின் உயர்மட்ட அரசியல்வாதிகள் கலாசாரப் வெறுப்புகளை உமிழ்வதன் மூலம் ஆதாயத்தைப் பெற முயன்றனர், என கான் கூறியுள்ளார்.

இங்கிலாந்து பிரதமர் கண்டனம்:

இங்கிலாந்தின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ஞாயிற்றுக்கிழமை தீவிர வலதுசாரி வன்முறைகளை கண்டனம் செய்தார், பல நாட்கள் வன்முறையான குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் ஹோட்டல் மீதான தாக்குதலில் உச்சகட்டத்தை அடைந்தன. குற்றவாளிகள் சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்வார்கள் என்று கூறினார். இந்த வார இறுதியில் நாங்கள் கண்ட தீவிர வலதுசாரி வன்முறையை நான் முற்றிலும் கண்டிக்கிறேன் என்று பிரதமர் ஸ்டார்மர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த வன்முறையில் பங்கேற்றவர்கள் சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

**2011 வன்முறையின் பின்னர்:**

அவர்களின் தோல் நிறம் அல்லது மத நம்பிக்கைகள் காரணமாக இந்த கோளாறு மக்களை குறிவைத்ததாக அவர் கூறினார். மேலும் இங்கிலாந்தின் தெருக்களில் ஒழுங்கீனத்தை சட்டபூர்வமாக்க எந்த வழியும் இல்லை என்றார்.

கன்சர்வேட்டிவ் கட்சிக்கு எதிராக தனது தொழிற்கட்சி ஒரு தீர்க்கமான தேர்தல் வெற்றியைப் பெற்ற பின்னர் ஒரு மாதத்திற்கு முன்பு பிரதமராக பதவியேற்றார் ஸ்டார்மர். பிரித்தானியைவைப் பொறுத்தவரைக் கடந்த 2011இல் கடைசியாக மிகப் பெரிய வன்முறை ஏற்பட்டது. அப்போது லண்டனில் கறுப்பினத்தவர் ஒருவரை பொலிஸார் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து பல ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினர். அப்போது சில இடங்களில் வன்முறை வெடித்தது. சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாரிய வன்முறை வெடித்துள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# யாப்பமைதி கொண்ட பாக்களினால் மனங்களை ஈர்க்கும் 'அந்திக்கரை'

*அவுஸ்திரேலிய மெல்போன், வளர்பிறைப் பதிப்பக வெளியீடாக. சிங்கள மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள இலங்கையின் வடமத்திய பகுதியில், அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள நேகம என்ற ஊரில் இருந்து மலர்ந்திருக்கின்றது 'அந்திக் கரை' கவிதை நூல்.*

*84 பக்கங்களில் 60 கவிதைகளை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ள இந்நூலின் ஆசிரியர் ஷிபானியா பௌசுல்.*

*புதுக் கவிதை நூல்களையே பெருமளவில் தந்து கொண்டிருக்கும் நமது புதிய தலைமுறைப் படைப்பாளிகளிடமிருந்து வேறுபட்டவராக, சிங்கள மொழி பேசும் பிரதேசத்தில் இருந்து யாப்பிலக்கணத்தைக் கற்றுக் கொண்டு, மரபுக் கவிதைகளைத் தருபவராக இந்நூலின் மூலம் அடையாளம் பெறுகிறார் இளந் தலைமுறைப் படைப்பாளியான ஷிபானியா பௌசுல்.*

*பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றும் அவர் பத்திரிகை, வானொலியில் அவ்வப்போது எழுதிய கவிதைகளின் தொகுப்பே இந்நூல். பிரான்ஸ் தமிழ்நெஞ்சம் அமினின் வடிவமைப்பிலும் அவுஸ்திரேலியா தமிழ் வானொலியின் 'வளர்பிறை' த் தயாரிப்பாளர் முஹம்மது எஸ். முஹுசீனின்அணிந்துரையோடும் நூல் மலர்ந்திருக்கின்றது.*

*சமூகத்தின் இழிநிலை கண்டு துள்ளுபவராக, சமூக ஒற்றுமை வேண்டுபவராக, அன்பு, நேசம், காதல் என்பவற்றை எடுத்துச் சொல்பவராக கவிதைகளினூடே வெளித் தெரிகிறார் ஷிபானியா. அவருடைய பெரும்பாலான கவிதைகள் அறுசீர், எண்சீர் விருத்தப் பாக்களாக அமைந்து ஓசை நயம் தருகின்றன.*

***"மானிடம் சிறக்க வென்று***
***மதமெலாம் போதித் தாலும்***
***தேனுடன் பாகு போல***
***தெளிவுடன் இருந்தி டாமல்***
***வீணெனப் பிணக்கை யேந்தி***
***வீழ்கிறோ மிந்த மண்ணில்***
***காண்கிற வினைகள் நீக்கி***
***கண்டிடு விடியல் நன்கு!" என்று***

***'நாம் இலங்கையர்'*** *என்ற தலைப்பில் விளம்,மா,மா, என்ற சீரொழுங்கில் கவிதை தந்து சமூக ஒற்றுமையை நாடுகிறார் ஷிபானியா.*

*அவரின்,*

***"புல்லில் உறங்கும் பனியைப் பிடிக்கும்***
***புதிதாய் பூக்கும் பூக்கள் பிடிக்கும்***
***மல்லிப் பூவின் மணமும் பிடிக்கும்***
***மலைமேல் உறங்கும் மேகம் பிடிக்கும்***
***அல்லிப் பூவின் அழகும் பிடிக்கும்***
***அலைகள் உரசும் கரையும் பிடிக்கும்***
***இல்லார் கண்டு ஈதல் பிடிக்கும்***
***நல்லார் நூல்கள் நன்றே பிடிக்கும்! "***

*என்று தொடரும் அனைத்தும் மாச்சீர்களில் அமைந்த 'எனக்குப் பிடிக்கும்' என்ற தலைப்பில் தரப்பட்டுள்ள கவிதை நமக்கும் பிடித்ததாக நவில்தொறும் இன்பம் தருவதாக இனிக்கிறது.*

*புல்லில் உறங்கும் பனி, மலை மேல் உறங்கும் மேகம், அலைகள் உரசும் கரை என்று அவர் சொல்லும் படிமக் காட்சிகள் நம் நெஞ்சத்திரைகளில் ஓவியம் வரைந்து மகிழ்ச்சி தருகின்றன.*

***"அன்னைத் தமிழே அமிழ்தேநீ***
***அழகாய் என்னில் விளையாடி***
***கன்னல் கவிதை நான்பாடக்***
***கலங்கா மல்நீ சதிராடு! "*** *என்று தமிழ்த் தாயை வேண்டி நிற்கும் கவிஞர், நல்ல பல கன்னல் கவிதைகளை யாப்பமைதி குன்றாமல் தந்திருக்கின்றார் என்பதற்குப் பலகவிதைகள் எடுத்துக்காட்டாகின்றன.*




*காற்றில் தேடும் பாடல், மகனின் பாடசாலை முதல் நாள், வாழ நினைத்தால், பிஞ்சு நிலவே, என் தேடல், அன்பு மகள், என்கவிதை, கண்ணீர்ப் பூக்கள், கனி மொழியே என்ற கவிதைகள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை.*

***"பணத்தைக் குவித்துப்***
***பாசம் தந்து***
***பிணத்தைப் போல***
***நடக்கச் சொன்னாய்***
***வனத்தை எரித்து***
***வாய்ப்பைத் தேடி***
***மனதை உடைத்து***
***மையல் கொண்டாய்***
***சினத்தை விதைத்து***
***சிறகை உடைத்து***
***சிறுகச் சிறுகச்***
***சிணுங்கச் செய்தாய்***
***கனத்த நெஞ்சில்***
***காலை வைத்துக்***
***கதறச் செய்தாய்***
***பாழ்ம னத்தில்"*** *(சிறகுடைந்த மனம்)*

*என்று துயரத்தை எண் சீர் விருத்தத்தில் பதிவு செய்திருக்கிறார் பௌசுல். அதே கவிதையை நான்கு வரிக் கவிதைகளாகப் பிரித்தும் 'உடைந்த சிறகுகள் ' என்ற கவிதையில் பதிந்து, தொடர்ந்து*

***"அணையா விளக்காய்***
***அன்பே உன்னை***
***ஆரத் தழுவ***
***நான் துடிப்பேன்***
***துணையா யின்றித்***
***துயரைத் தந்து***
***துகள், துகளாய்***
***சென்றாய் ஏனோ? "***

*என்று முடித்திருக்கின்றார்... நெகிழ்ச்சி தரும் வரிகளைக் கொண்ட ஓசைநயம் மிக்க கவிதையாக இருப்பினும், ஒரு கவிதையை இரண்டு இடங்களில் வைக்க வேண்டிய தேவை யென்ன? என்ற கேள்வி நமக்குள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.*

*"இலக்கணக் கவிதைகள்" என்று நூலின் முகப்பில் குறிப்பிட்டு, கவிதையின் சீரொழுங்கையும் கவிதைகளின் முடிவில் குறிப்பிடுவதில் இருந்து, யாப்பமைதி பிசகாமல் கவிதை தர அவர் முனைந்து செயற்படுகிறார் என்பது தெரிகிறது. அந்த முயற்சியில் அவர் பெருமளவில் வெற்றி பெற்றிருக்கின்றார் என்பதை அவரின் இந்த "அந்திக்கரை" உறுதி செய்கிறது என்று கூறமுடியும்.*

***"சின்ன சின்ன என்தேடல்***
***சிறக்கும் நாளை பொன்னாக:***
***தேடல் என்றும் தீராது"***

*என்று எழுதுபவர் ஷிபானியா. அவர், கலை, இலக்கியத் தேடலினை இன்னும் விரிவாக்கம் செய்து கொண்டு, ஈழத்தில் நமது முன்னோடிக் கவிஞர்கள் வளர்த்துச் சென்ற யாப்பமைதி குன்றாத, பேச்சோசைப் பண்புடைய நவீன கவிதைகளின் தேவைகளையும் வடிவத்தையும் புரிந்து கொண்டு, "யாப்புக்குள் நின்று*

*எழுதுவது மட்டுமே கவிதையைத் தீர்மானிக்காது" என்ற உண்மையை உணர்ந்தவராக, கவித்துவ நுட்பங்களில் தேர்ந்தவராக இன்னும் சிறந்த கவிதைகளைத் தரவேண்டுமென்பதே நமது எதிர்பார்ப்பாகும்.*

*கவிஞருக்கு நமது வாழ்த்துகள்.*

*நூல் :அந்திக் கரை*

*ஆசிரியர்: ஷிபானியா பௌசுல்.*

*வெளியீடு:வளர்பிறை பதிப்பகம்,மெல்போன்&அவுஸ்திரேலியா.*

*விலை:ரூபா 600/(இலங்கையில்)*

பாவேந்தல் பாலமுனை பாறூக்




## சூரியன் அணைந்த போது

சூரியனை வென்ற
உன் விளக்கின்
பேரொளியில் நான்
வெளிச்சம் பெறவில்லை
என்பதற்காகவா
ஒரே நொடியில்
அணைத்து விட்டாய்?

கம்பனை வென்ற
உன் காவியத்தை
நான் படிக்கவில்லை
என்பதற்காகவா
ஒரே நொடியில்
கிழித்து விட்டாய்?

தாஜ்மஹாலை வென்ற
உன்காதல் சின்னத்தை
நான் பார்க்கவில்லை
என்பதற்காகவா
ஒரே நொடியில்
உடைத்து விட்டாய்?

பாற்கடல்களை வென்ற
உன் கோப்பையில்
நான் பருகவில்லை
என்பதற்காகவா
ஒரே நொடியில்
கவிழ்ந்து விட்டாய்?

இமயங்களை வென்ற
எனக்கான உன் காதலை
நான் கவனிக்கவில்லை
என்பதற்காகவா
ஒரே நொடியில்
காணாமல் போனாய்?

**மின்சார்**



## கோட்ட முனி

கேட்ட வரம் கொடுத்த
கோட்ட முனி சாமிக்கு
கோபம் தணியவில்லை
அவர கும்பிட்ட பாதி பேர
தன் எல்லைக்கு அழைச்சிட்டாரு

இன்னைக்கு
ஆகாத ஆளா, வேகாத சோறா
தனிப்பட்டு நிக்கிறாரு

வெள்ளி செவ்வா வந்தா
பொங்க வச்சு பட்டு கட்டி
சனம் பூச போட
அல மோத
பாத்தவரு

ஆடி அமாவாசக்கி
ஆட்டுப் படையல்
அசராம தின்னவரு
கூவாத சேவல
படையலுக்கு கேட்டவரு
இப்ப கருவாட்டு வாட கூட
காட்ட ஆளில்ல....
கல்லா நிக்கிறாரு

ஆடு வெல ஏறிப்போச்சி
நாட்டுக் கோழி கம்மியாச்சுன்னு
வீராப்பா பேசுறாங்க
'பொயிலர்' ஆகாதுன்னு
சாட்டு சொல்லி திங்கிறாங்க

ஆடு கோழி
வேணாமய்யா
பாக்கு பழம் வச்சு
பொங்க நாதியில்ல

சொட்டுத் தண்ணி காட்ட
வக்கில்லா பய புள்ள
அந்தி பட்டா மூக்கு முட்ட
குடிக்கிறாங்க மூணு வேள
திங்கிறாய்ங்க

சாமி இப்ப எறங்காது
மதிப்பும் எடுக்காது
காச்ச கறுப்பு வந்து
காவடிக்கு போனாலும்
காரியம் ஆகாது

காத்து மழ வந்தாலும்
காக்க சாமியில்ல
அது மல ஏறி போயிருச்சி
கடல் தாண்டி
போயிருச்சி

கேகாலை
**எஸ். கிருஷ்ணன்**

## உணர்ந்துகொள்!



நமக்காய் நம்மில்
நம்மை மிஞ்சி
அன்பு செலுத்தும்
உள்ளங்கள் இருப்பது
கற்றும் அறிவிலார்க்கு
மாபெரும் சுமையே

தன் நேரம் அழிந்தாலும்
உன் நேரம் அழகாக்க
அம்மாந்தர் நினைத்தது தவறுதான்
உன் நிஜ எண்ணத்தின் முன்னால்

இன்னாளில் போலிகள்
பல்கிப்பெருகும்
பின்னாளில் அவை
விலகியோடும்
அந்நாளில் உணர்வாய்
எந்நாளும் நிலைப்பது
சுமையெனத் தெரிந்த
நிஜம் என்று

என்றோ ஓர்நாள்
நிஜத்தையும் போலியையும்
பிரித்தறியும் இலக்கணம் கற்பாய்
அந்நாளில் ஏங்கித் தவிப்பாய்
பின் சென்ற நாட்களிற்காய்

காலம் என்றும் உனக்காய்
பின் நிற்கப் போவதுமில்லை
கடந்தவை மீளப் போவதுமில்லை
நகர முன் உணர்ந்து கொள்
நிஜத்தையும் காலம்
காட்டிய போலியையும்!

முஹம்மத்
முகர்ரம் இஜ்லான்
(பேருவளை)

## இதயத்திலிருந்து....

எப்போதும் உங்கள்மீது என் நேசத்தின்
தீச்சுவாலை எரிந்துகொண்டேயிருக்கும்.
அன்றொருநாள் யாரோ இவரென்றுமுகமறியா
நொடிகளில் நீங்களும் நானும்
இதே இடத்தில்தான் சந்தித்துக்கொண்டோம்.

ஒரு புன்னகையை பரிமாறிவிட்டு
உங்கள் பெயர்கேட்கையில்
அப்போது நினைக்கவில்லை
இந்த அன்பே பின்னர் இதயத்தை கிழிக்குமென்று
வருடங்கள் ஒவ்வொன்றும் கடந்துபோகையில்
நினைவுகள் யாவும் இனித்தது உண்மைதான்
ஆனால் நினைவுகள் மட்டுமே எஞ்சும்போது
கனப்பது இதயமென்பதை அறிந்துகொண்டேன்.

உங்கள் கோபங்களுக்குள்ளேயும்
ஏதோவொரு இனம்புரியாத நேசம்
எப்போதும் ஒழிந்திருந்தது
நீங்கள் இதயத்தின் சுவர்களிடையே
அழியாமல் வரையப்பட்ட ஓவியங்கள்
தாயாய், தந்தையாய், தோழனாய்,
தோழியாய், அண்ணனாய் தங்கையாய்
எப்போதும் உடனிருந்தோம்
ஆனால் காலம் கொடிது.

இத்தனை வேகமாகவா அது சுழலவேண்டும்?
எப்போதும் அழுததில்லை
ஆனாலும் இப்போது அழுகிறேன்
நீங்கள் காய்ந்த செடியில்
நேசத்தின் தீயாய் பற்றியெரிந்தீர்கள்
ஏதோ சொல்லமுடியா சோகங்கள்
இப்போது இதயத்தின்மீது
ஈட்டியாய் வீழ்வதேனோ?

நாளை உங்கள் முகங்கள்
கண்ணெதிரே தோன்றாதோ?
மீண்டும் அதே இடங்களில்
கூட்டமாய் இருந்து கதைபேச முடியாதோ?
யாம் ஏனிங்கு வந்தோம்?இப்பிரிவை
கொண்டுபோய் எங்கே தொலைப்போம்?

ஏனிங்கே இதயம் கனக்கிறது? அன்பின்
பாரத்தை எதைக்கொண்டு சுமப்போம்?
எல்லாம் நொடிப்பொழுதில் நடந்தது
இன்று பிரிந்து போகலாம் என்றாலும்
அன்பின் தீமட்டும் எப்போதும்
உங்கள்மேல் எரிந்துகொண்டிருக்கும்.

**கிரிஜா அருள்பிரகாசம்**

## ஆச்சி



ஆக்கம் தரும்
வழிகாட்டல்கள்
ஆச்சியின் முத்திரை

பேரக்குழந்தைகளை
பேணும் பக்குவம்
அவர்கள் வாழ்வில்
மறக்க முடியாத
இனிய நினைவுகள்

பெண்களில்
பெரும்பாலானோருக்கு
கிடைக்கும்
சிறப்பான பெயர்
ஒன்றுதான் ஆச்சி

ஆச்சியின்
அரவணைப்பினை
அனுபவித்தவர்கள்
துவண்டு விடுவர்
ஆச்சியின் மறைவினால்

அனுபவத்தின்
முதிர்ச்சி

**குப்பிளான் குமரன்**

## கேரளத்துக் கோரம்.....!



மன்னிக்க முடியாத தவறுகளை தான்
மனிதன் மண்ணுக்கு செய்கின்றான்
என்பதற்கான மறுமொழியா இது...?

தூரலான மழை கோபம் கொண்டு
கோரமாய் பெய்ததால்
கேரளாவின் வயநாடு
பயநாடாக மாறி மக்கள்
மண்ணுள் புதையுண்டனர்...

விதைக்கப்படாமலே மண்ணில்
புதைக்கப்பட்ட மனித உடல்கள்
வேளாண்மை பொருளாய்
தோண்டி எடுக்கப்படுவது – நாம்
இயற்கையிடம் தோற்றுப்போனதற்கான
தீர்வே... !

இறுதியில் உனக்குத் தான் இந்த
மனித உடல்கள் என்பதறிந்த
உனக்கு இத்தனை அவசரமென்ன...?

புரிகிறது...

நீயும் பொறுமை இழந்து போனது
நாங்கள் இம்சைவாதியாக மாறிய பின்
உன்னை அகிம்சை
வாதியாக எதிர்பார்ப்பதில்
இனி பயனில்லை....

நவீனமென இயற்கை உன்னை மறந்து
ஓடிக்கொண்டே இருக்கும்
மனிதர்கள் திரும்பிப் பார்க்க வேண்டிய
தருணம் இதுவே...

விண்ணையும் மண்ணையும்
நேசித்தலிலேயே இனி இங்கு
நிம்மதியாய் சுவாசிக்க முடியுமென்பதை
நாம் விசுவாசித்தல் அவசியம்...!

**சி. எம் சங்கர்**
பண்டாரவளை

## இதற்கு மொழியில்லை ! இது பேசுவது குறைவ !

அனுமானம் பேசவிளைந்தால்,
அது குறைஞானமாகவும் இருக்கலாம் !

ஆதலால்,
" பெரும்பாலான அனுமானங்கள்
மொழியற்றவை " எனக்
கொள்ளப்படுகின்றன !

காவியக் கவியரசு
**எம்.எம்.அப்துல் ஹை**

## ஆதரவு

அனாதையுமே வாழணுமே
நாமுமே உதவிடணுமே !

பணமே பெரிதென
பெருமையிலே வாழாதே !

வறுமையுமே ஒழியவே
துணிவுடனே போராடுவோமே !

முதுமையை நாமுமே
நலமுடனே காணுவோமே !

ஏரூர் கவிமாமணி
**எம்.ரி.எம்.அன்ஸார்**
ஏறாவூர்

## எந்த அகழியிலும்...

உன் ஜீவிதத்துள் சந்திப்புகள்
பலவாறு இருக்கும்
ஒரு காலம் வரும்
சில மனிதர்கள் வருவார்கள்
உனது இதயத்தினுள் நுழைந்து
உன்னை ஆட்டி வைப்பார்கள்
உனது புத்தி
உனது உள்ளம்
உனது ஆன்மா
எல்லாவற்றிலும் பரபரப்பை
ஏற்படுத்திச் செல்வார்கள்

உனக்குள் ஏதோ ஒரு சுடர்
உனக்குள் ஏதோ மின்னல் கீற்று
உனக்குள் ஒரு சுகந்தக்காற்று
உனக்குள் ஒரு அடைமழை
உனக்குள் ஒரு ஆனந்த தாண்டவம்
உனக்குள் ஏதோ ஒரு மாற்றம்
உனக்குப் பிடித்தமாய் ஏதோ ஒன்று
மாறி மாறி உனக்குள் நிகழும்
மாறி மாறி உனக்குள்ளவை
அதிசயங்கள் நிகழ்த்தும்

இவர்தாம்
இவர்களேதாம்

பின்னொரு பொழுதில்
உன் வாழ்வின்
நிரந்தர நேசத்திற்கோ
அதன் பின்னரான
அதீத எதிர்பார்த்தலில்
உருவான நிரந்தர வடுவிற்கோ
காரணமாக இருக்கக்கூடியவர்கள்.

நேசம் என்ற
ஜென்ம அளவுகோலுடைந்து
விடுகையில்
முற்றும் துறந்த,
எல்லாம் மறந்த
உன் வாழ்வின் சுவடுகளில்
சலித்து வெறிச்சோடிய
இருளின் பாதையில்
எந்தப் புள்ளியிலும்
எந்த அகழியிலும்
உன்னையவர்கள்
ஞாபகப்படுத்திக்கொண்டே
இருப்பர்...

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்

## 'பேனா' வின் போதனை!

எண்ணத்தை
எழுதும் பேனா!
உணர்வுகளை
விழித்துச் சொல்லும்!
உண்மைகளை
உரத்துச் சொல்லும்!
வாழும் வழிகள் பலதை
நாளும்
நல்லுபதேசம் செய்யும்!
ஆளுமைமிக்க
ஆசானிடமிருந்து
அறிவுரைகள்
அனுதினம் எழுதும்!
அறிவு ஆற்றல்களை
அனுபவமாய் வழங்கும்!
புத்தியை

புனருத்தானம் செய்ய
புத்துணர்வை
பேனா வழங்கும்!

சட்டம் படித்திருந்தால்
சட்டத்தை
பேனா எழுதும்!
வாழும்
திட்டத்தையும்
போதனை செய்யும்!
பட்டம் பதவி பெற
பேனா
பரீட்சை பலதை எழுதும்!

நீதிபதியின்
கையிலிருக்கும் பேனா!
அநீதி அநியாயம்
தடுத்து
நீதிப்போதனை செய்யும்!

காதலர்
கரத்திலிருக்கும் பேனா!
இருமன உணர்வுகளை
ஒருமன உணர்வாய்
உணர்த்தி நிற்கும்!
ஈருயிர்களை இங்கு
ஓருயிரென்று

உபதேசம் செய்யும்!
ஞானமகானின்
நயமிக்க பேனா!
ஞானத்தை
நன்றாகத் தரும்!
ஆன்மீகத்தின் பால்
மனிதனை அழைக்கும்!
அறநெறியிலே
அடியானை நுழைக்கும்!

ஒவ்வொருவரிடம்
இருக்கும் பேனா!
ஒவ்வொரு போதனை!

பேனா போதனையால்
வாழ்வு
வளர்ச்சி காணும்!
எழுச்சி காணும்!
வாழ்க்கையில்
சோதனைகள்
வந்தாலும்
பேனாவின்
போதனைகளை
புரிந்து கொண்டால்
வாழ்வில்
சாதனை காணலாம்!
சரித்திரம் படைக்கலாம்!

**கலைமதி றபாய்தீன்**
காத்தான்குடி

## " அவள் "



அவள் என்பவள்
அவள் மட்டுமே தான்

அச்சிறுமிக்கு ஒரு குடை இருந்தது
வெயிலுக்கும் விரிந்தது
மழைக்கும் பூத்தது

அப்போதும் அவளுக்கு
அவள் மட்டுமே தான்

பள்ளிக்குப்போக கைகோர்த்து
அளவளாவ ஒரு கூட்டம் இருந்தது
கூடவே கூட்டாளிகளும் இருந்தது

அப்போதும் அவளுக்கு
அவள் மட்டுமே தான்

கல்லூரி கட்டடங்களில்
கொத்துக் கொத்தாய் கூடவே திரிந்தது
சுற்றியும் சுகந்தம் இருந்தது
ஓரிரண்டு பூக்கும் நட்பும் இருந்தது

அப்போதும் அவளுக்கு
அவள் மட்டுமே தான்

கல்விக்கு முட்டிட்டது
இப்போதைக்கு போதும் என்றது

அந்நேர கட்டாயம் என்று ஒரு
கட்டுக்கோப்பு அமைந்தது

அன்றும் உடன் ஒரு துணை இருந்தது
உடலுக்கு ஓர் இணை இருந்தது

அப்போதும் அவளுக்கு
அவள் மட்டுமே தான்

அந்நாட்களில் அவளுக்கு
ஒரு குரல் இருந்தது
அவளுக்காகவும் ஒரு குரல் இருந்தது

அப்போதும் அவளுக்கு
அவள் மட்டுமே தான்

அவளுக்கு அவள் மட்டுமே என
பல பொழுதுக்கு அவளே அவளுக்கு
பலமாய் இருந்தது

பின்னே அவளுக்கு
அவள் மட்டுமே எனும்
தனிமையாய் ஆனது

அவளுக்கு அது மட்டுமாய்
எஞ்சியதோ வருத்தம் மிக்கது

அவளாய் கொண்டது
அவளோ தேடிக்கொண்டது

இங்கோ வேறேதோ ஆனது

அவளை தனிமையாக்கியது

தனித்து வாழச் செய்தது

இப்போதும் அவளுக்கு
அவள் மட்டுமே தான்

துணிச்சல் வேண்டும்
தன்னம்பிக்கை வேண்டும்
தயங்கக் கூடாது
தடுமாறவும் கூடாது

ஒன்று தெரியுமா?
எல்லாமும் ஒன்று போல இல்லையே

அவள் அச்சம் கொண்டாள்
அதில் மீள வழி தேடினால்

மூழ்கும் வழி காட்டினார்
ஓர் அணைப்பில்

அவளோ
ஒரு வழிக்காட்டுதலில்
ஒரு கட்டுப்பாட்டில் கட்டுண்டு
வாழவே கேட்கிறாள்

ஏனோ ஐயம் உற்றாள்
ஆள் அரவத்தில் மிரண்டு போகிறாள்
யாராயும் வேண்டும் என்கிறாள்
யாதுமாகி இருக்கக் கேட்கிறாள்

அவள் திடம் இல்லை
தனித்து நின்று துணிந்தெழு கூறாதே

துணை வாரேன்
துயில் கொள்வாய் கூறேன்

எல்லாமும் ஒன்று போல இல்லை
அவளுக்கு யாரும் வேண்டும் என்கிறாள்

**இமையி**
(க/கம்பளை)

# SVAT ஒழிப்பை அவசரமாக மறுபரிசீலனை செய்க இலங்கை அரசை வலியுறுத்துகிறது JAAF

எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி (SVAT) முறை ஒழிக்கப்படுவதற்கான காலக்கெடு 1 ஏப்ரல் 2025 அன்று முடிவடையும் நிலையில், இலங்கை ஆடைத் தொழிலின் உச்ச அமைப்பான ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF), தொழில்துறையில் அதிகரித்து வரும் அழுத்தங்களைக் கருத்தில் கொண்டு, இந்த முடிவை அரசு அவசரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

"உலகளாவிய சந்தையில் ஆடைத் துறை தற்போது கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதன் தாக்கம் ஏற்றுமதி அளவு குறைந்து வருவதில் தெளிவாக தெரிகிறது. இத்தகைய சூழலில், சாத்தியமான மற்றும் திறமையான பணத்தைத் திரும்பப் பெறும் வழிமுறையை முதலில் உருவாக்காமல், SVATஐ நீக்குவது, நாட்டின் மொத்த ஏற்றுமதிப் பட்டியலில் சுமார் பாதி பங்களிப்பைக் கொண்டிருக்கும் ஆடைத் தொழில் உட்பட அனைத்து ஏற்றுமதியாளர்களின் பணப்புழக்கத்தையும் பெரிதும் பாதிக்கும். இந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தவறினால், இந்தத் துறையில் நிதி நெருக்கடியை நிச்சயம் அதிகரிக்கும். மேலும், மிகவும் திறமையான அமைப்புகளிலும், பணம் திரும்பப் பெறும் செயல்முறைகளில் தவிர்க்க முடியாமல் சிக்கிக்கொள்ளும் என்பதால், இலங்கையின் ஏற்றுமதிப் போட்டித்தன்மையை மேலும் பாதிக்கும்." என JAAFஇன் SME துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பந்துல பெர்னாண்டோ தெரிவித்தார்.

# நீரிழிவுக்கு எதிரான முக்கிய மைல்கல்



இலங்கையில் நீரிழிவு நிர்வகிப்பு மற்றும் விழிப்புணர்வூட்டல் தொடர்பான முன்னணி அமைப்பாக திகழும் இலங்கை நாளமில்லாச்சுரப்பு மருத்துவ நிறுவகத்துடன் (SLCE), முன்னணி மருந்தாக்கல் நிறுவனமான Morison லிமிடெட் இணைந்து, "நீரிழிவு பராமரிப்பு சான்றிதழ் பயிற்சி கற்கைநெறி" ஐ தொடர்ந்த முதல் தொகுதியின் 65க்கு மேற்பட்ட ஆரம்ப நிலை சுகாதார பராமரிப்பு வைத்தியர்கள் அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றளிப்பு நிகழ்வு அண்மையில், இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில், சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி. பி.ஜி.மஹிபால ஹேரத் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சுகாதார அமைச்சின், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அசேல குணவர்தன சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கையில் ஐந்தில் ஒருவருக்கு நீரிழிவு காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ள, நீரிழிவு நோயாளர்கள் அதிகளவு பதிவாகும் காலப்பகுதியில் முதல் தொகுதியைச் சேர்ந்தவர்கள் நெறியை பூர்த்தி செய்துள்ளமை மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. நீரிழிவு நோயாளர்கள் முதலில் சந்திக்கும் நபர்களாக அடிப்படை சுகாதார பராமரிப்பு நிபுணர்கள் அமைந்துள்ளனர். பராமரிப்பு தொடர்பில் அவர்களிடமிருந்து ஆரம்பத்தில் ஆலோசனைகளைப் பெறுகின்றனர். அவர்களை வலுவூட்டுவதனூடாக, நோயாளர்களுக்கு எதிர்காலத்தில் பாரதூரமான சுகாதார பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கச் செய்யாமல் தவிர்த்துக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும்." என்றார்.

2024 பெப்ரவரி மாதம் இந்த கற்கை நெறி அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கை நாளமில்லாச் சுரப்பு மருத்துவர் நிறுவகத்தினால் இந்த நெறி வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

# மருத்துவக் கல்வியில் புதிய அளவுகோலை வகுத்துள்ள Amrak Institute of Medical Sciences

புகழ்பெற்ற இலங்கை மருத்துவக் கல்லூரி கவுன்சிலின் (CMCC) அங்கீகாரத்தைப் பெற்ற இலங்கையின் முதல் மற்றும் ஒரே தனியார் நிறுவனமாக மாறியதன் மூலம் மருத்துவக் கல்வியில் புதிய அளவுகோலை Amrak Institute of Medical Sciences அமைத்துள்ளது.

ஒப்பற்ற மருத்துவக் கல்வியை வழங்குவதில் அம்ராக்கின் உறுதியான அர்ப்பணிப்பை இந்த மகத்தான சாதனை எடுத்துக்காட்டுகிறது, இது இலங்கையின் தனியார் சுகாதாரக் கல்வித் துறையில் முன்னணியில் உள்ளது.

CMCC அங்கீகாரம் என்பது மிகப் பெரியது; இது ஒரு சிறந்த முத்திரை, அம்ராக்கின் பாடத்திட்டம் மற்றும் வசதிகள் நாட்டின் முன்னணி மருத்துவ ஆணையத்தின் கடுமையான தர நிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது.

இந்த அங்கீகாரம் மாணவர்களுக்கு சுகாதாரத் துறையில் வெற்றி பெறத் தேவையான அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும் தகுதிகளை வழங்குவதில் அம்ராக்கின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

கல்வி அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், புகழ்பெற்ற டேர்டன் மருத்துவமனையுடன் அமராக்கின் மூலோபாய கூட்டாண்மை மாணவர்களுக்கு விலைமதிப்பற்ற நடைமுறை பயிற்சி வாய்ப்புகளை வழங்குகிறது.

இந்த ஒத்துழைப்பின் மூலம் மாணவர்கள் முதன்மையான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைப் பெறுவதற்கு அனுமதிக்கிறது, மேலும் அனுபவமுள்ள மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டுதலின் கீழ் அவர்களின் தத்துவார்த்த அறிவை நடைமுறை அமைப்பில் பயன்படுத்த உதவுகிறது.

# படையை இரட்டிப்பாக்கும் திட்டங்களுடன் சமூகத்தை மேம்படுத்தும் tuktukrental.com

tuktukrental.com இலங்கையின் போக்குவரத்துத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் ஒரு முக்கிய சமூக , 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தனது படையை 1,000 tuks ஆக விரிவுபடுத்தும் திட்டத்தையும் அறிவித்துள்ளது. உள்ளூர் tuktuk ஓட்டுநர்களுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்நிறுவனம், tuktukrental.com அவர்களுக்கான வருடாந்த Tuktuk உரிமையாளர்கள் சங்க கூட்டத்தை நடத்தியமைக்கு பெருமை கொள்கிறது.

இந்த நிகழ்வில் நாடு முழுவதிலும் இருந்து 600 Tuktuk உரிமையாளர்கள், நிறுவன பணிப்பாளர்கள், Vega Innovations நிர்வாகப் பிரதிநிதிகள், Orient ,உள்ளூர் காவல்துறை அதிகாரிகள் மற்றும் உதிரிப்பாக பங்காளர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்கள் கலந்து கொண்டனர். நிறுவன வழங்குனர்களின் கடின உழைப்பு மற்றும் விலைமதிப்பற்ற அர்ப்பணிப்பை அங்கீகரித்த இந்நிகழ்வு நிறுவனத்தின் வெற்றியில் சமூகத்தின் முக்கிய பங்கையும் எடுத்துக் காட்டியது."tuktukrental.com இல், வாழ்க்கையை மாற்றுவதற்கும் தனித்துவமான அனுபவங்களை உருவாக்குவதற்கும் சுற்றுலா துறையின் ஆற்றலை நாங்கள் நம்புகிறோம். நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் அர்த்தமுள்ளதோர் தாக்கத்தை ஏற்படுத்த உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நிறுவனம் 2016 இல் தொடங்கப்பட்டதிலிருந்து நாங்கள் வெற்றிகரமாக பயணித்துள்ளோம்.

இலங்கையில் உள்ள 600 குடும்பங்கள் 1.5 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் வருமானத்தையும் ஈட்டினர் இந்த புதிய அத்தியாயத்தை நாங்கள் ஒன்றாகத் தொடங்கும்போது எங்கள் வழங்குனர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கூட்டாண்மையின் பலமே இவ் வெற்றி" என்று tuktukrental.com இன் இணை நிறுவனர் Tom Cornish தெரிவித்திருந்தார்.



# நாடு முழுவதும் கல்வி நிலையை மாற்றும் LOLC

LOLC திவி சவிய மனிதாபிமான முயற்சியானது 3,500 பாடசாலைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், இலங்கையில் உள்ள மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கையில் 35% ஐத் தாண்டி, ஒரு குறிப்பிடத்தக்க அடையாளத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

2023 பெப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்ட இந்த முயற்சியானது, கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் களை சீராகவும், தொடர்ச்சியாகவும் சென்றடைந்து வளப்படுத்தியது. திட்டத்தின் 03 ஆம் கட்டத்திற்கு முன்னேறும் போது, LOLC திவி சவிய 101150 மாணவர்கள் தங்கும் பாடசாலைகளில் கவனம் செலுத்துகிறது. இந்த மூலோபாய நடவடிக்கையானது மிகவும் பின்தங்கிய பாடசாலைகள் கூட அத்தியாவசிய கல்வி வளங்களை அணுகுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(பாடசாலை அலுவல்கள்) திருமதி. நீலமணி மாளவியாராச்சி, அத்தியாவசிய பாடசாலை உபகரணங்களை வழங்குவதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் சவால்களை எடுத்துரைத்து இந்த முயற்சியை பாராட்டினார்.

"பாடசாலை சீருடைகள், பாடத் திட்டங்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடப்புத்தகங்களை அமைச்சகத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கினாலும், குழந்தைகளுக்குப் பாடசாலை பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் துணைப் பொருட்களை வழங்க பெற்றோரின் ஆதரவை நாங்கள் நாடுகிறோம்.




இருப்பினும், இந்த நாட்டில் சில பெற்றோர்கள் உள்ளனர். இன்றைய பொருளாதாரச் சவால்களின் கீழ், குடும்பத்தில் சில குழந்தைகளைக் கொண்ட நடுத்தர வர்க்கப் பெற்றோர்கள் கூட இந்தச் சூழ்நிலையில், டுழுடுஊ இன் தலையீடு பாராட்டத்தக்கது என தெரிவிக்கிறார்கள்.

# எதிர்காலத்தை மாற்ற இளைஞர்களை அழைக்கிறது Skills Expo 2024

நாட்டின் இளைஞர்கள் தங்கள் திறன்களை வளர்த்து வெற்றிப் பயணத்தை மேற்கொள்வதற்கான ஏராளமான வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், தொழில் துறை திறன்கள் கவுன்சில் (ISSCs) Skills Expo 2024 கண்காட்சியை நடத்துகிறது. கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் இந்த வருடம் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக இக்கண்காட்சி நடைபெறுகிறது.

Skills Expo 2024 இன் செய்தியாளர் மாநாடு நெலும் பொகுண லோட்டஸ் லோஞ்சில். கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையின் கீழ் நடைபெற்றது.

"உலகளாவிய தொழில் சந்தை ஒரு முன்னுதாரணமான மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. அங்கு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் இப்போது தங்களின் புதிய பணியாளர்களிடையே தனித்துவமான திறன்களைத் தேடுகின்றன. மிகவும் பாரம்பரியமான தொழில் தெரிவுகளிலிருந்து புதிய திறன்கள் சார்ந்த பாத்திரங்களுக்கான வழிகளைத் திறப்பதற்கு உலகம் கவனம் செலுத்தி வருகிறது.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 10, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நெலும் பொகுன மற்றும் கிரீன் பாத் ஆகிய இடங்களில் இக்கண்காட்சியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு "உங்கள் எதிர்காலத்தைத் திறக்க" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு Skills Expo 2024 நடைபெறுகிறது.

# AI மென்பொருட்களினூடாக பெறப்படும் உச்ச பயன்



2023 ஆம் ஆண்டில், AI தொழில்நுட்பம் பிரபல்யமடையத் தொடங்கியதுடன், AI தொழில்நுட்ப மென்பொருட்களினூடாக மேற்கொள்ளக்கூடியவிடயங்கள்தொடர்பில் அதிகளவில் பேசப்பட்ட ஆண்டாகவும் அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு என்பது, AI தொழில்நுட்பம் சாதாரணமாக பயன்படுத்தப்படும் நிலைக்கு மாற்றம் பெற்றதுடன், AI இனால் மேற்கொள்ள முடியும் என பேசப்பட்ட விடயங்கள் நிஜத்தில் செயலாக்கமடைவதை காணக்கூடிய ஆண்டாக அமைந்துள்ளது. Microsoft Copilot ஊடாக பயன்படுத்துவோருக்கு கிடைக்கும் ஒப்பற்ற ஆதரவு இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

நாம் அனைவரும் வெவ்வேறு நிலைகளில் அன்றாட செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனான வகையில் மேற்கொள்வதற்கு AI மென்பொருட்களை பயன்படுத்துகின்றோம். AI மென்பொருட்களின் உச்ச பயனை பெற்றுக் கொள்வதற்கு கீழே தரப்பட்டுள்ள புதிய பழக்கங்களுக்கு தம்மை பழக்கப்படுத்திக் கொள்வதனூடாக வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயன்பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

AI மென்பொருள் பயன்படுத்துவதனூடாககாலத்தை சேமித்துக் கொள்ளலாம் – அந்த காலத்தை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தலாம்.

Work Trend Index விசேட அறிக்கையின் பிரகாரம், Copilot பயன்பாட்டினூடாக மிகவும் வேகமாக செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் நபர்களின் அரைப் பங்கிற்கும் அதிகமானோர், அதனூடாக எஞ்சும் காலத்தில் அதிகம் கவனம் செலுத்தி, நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்றனர்.

# சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி 2024

CBL நிறுவனத்தின் உப நிறுவனமான Plenty Foods (Pvt) Limited நிறுவனத்தின் பிரதான தயாரிப்பான இந்நாட்டின் பிரபலமான தானிய உணவான சமபோஷவின் ஊட்டமளிப்பில் '2024 சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி' ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இவ்வருட விளையாட்டுப் போட்டிகள் வடமத்தி, வடமேல், கிழக்கு, ஊவா மற்றும் தெற்கு ஆகிய ஐந்து மாகாணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படவுள்ளன.



சமபோஷவின் அனுசரணையுடன் மாகாணக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விளையாட்டுப் போட்டி 5 மாகாணங்களிலும் தனித்தனியான விளையாட்டுப் போட்டிகளாக ஒகஸ்ட் மாதம் முதல் செப்டெம்பர் 13ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இதில் இடம்பெறவுள்ள 70ற்கும் அதிகமான போட்டிகளில் 2000ற்கும் அதிகமான பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18,000ற்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்கெடுக்கவுள்ளனர். வெற்றிபெறும் பாடசாலைகள் மற்றும் வீர வீராங்கனைகளுக்கு, பதக்கங்கள், கேடயங்கள், சான்றிதழ்களை வழங்க மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டி தொடர்பில் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி மற்றும் விளையாட்டு) அதுல விஜயவர்தன குறிப்பிடுகையில், "பாடசாலை மாணவர்களின் திறமைகளை அதிகரித்து அவர்களின் உடல் மற்றும் உளவலிமையை மேம்படுத்துவதற்கும், அவர்களின் திறமைகளை தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான பலத்தை வழங்குவதற்கு CBL சமபோஷ வழங்கும் உயர்ந்த ஒத்துழைப்பை நாம் மதிக்கின்றோம்" என்றார்.

# கெஸ்பேவ நகரில் புதிய ATM வசதியை நிறுவியுள்ள SOS சிறுவர் கிராமங்கள்



இலங்கையின் SOS சிறுவர் கிராமங்கள், ஹற்றன் நஷனல் வங்கியுடன் (HNB) இணைந்து, பிலியந்தலை SOS சிறுவர் கிராம வளாகத்தினுள் HNB இன் 817 ஆவது ATM ஐ நிறுவியுள்ளது.

இந்த நிகழ்வில், இலங்கையின் SOS சிறுவர் கிராமங்களின் தேசியப் பணிப்பாளர் திவாகர் ரட்னதுரை, பிரதித் தேசிய பணிப்பாளர் கீர்த்தி ஹெட்டியாரச்சி, பிரதித் தேசிய பணிப்பாளர் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பணிப்பாளர் தனஞ்ஜய பெரேரா, பணிப்பாளர், நிதி விருத்தி மற்றும் தொடர்பாடல்கள் தலைமை அதிகாரி கயந்த தல்படாடோ, HNB இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி சஞ்ஜய் விஜேமான்ன, டிஜிட்டல் வியாபாரங்கள் உதவி பொது முகாமையாளர் சம்மிக வீரசிங்க, வைப்புகளுக்கான தலைமை அதிகாரி விரங்க கமகே மற்றும் இரு நிறுவனங்களின் இதர முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வங்கியியல் வசதியை மேம்படுத்துவதிலும், உள்ளூர் சமூகத்தாரின் பணத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வசதியை உறுதி செய்வதிலும் இந்த நடவடிக்கை பங்களிப்பு வழங்கும். உள்ளூர் சமூகங்களை மேம்படுத்துவது மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிப்பது போன்றவற்றில் SOS சிறுவர் கிராமங்கள் மற்றும் HNB காண்பிக்கும் அர்ப்பணிப்பை உறுதி செய்து, பிலியந்தலை, கெஸ்பேவ பகுதியில் அமைந்துள்ள புதிய ATM இனால் தமது தினசரி நிதித் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் பங்களிப்பு வழங்கப்படும். என்றார்.

# றோயல் கல்லூரியின் Capital Market Clubக்கு ஆதரவளிக்கும் அமானா வங்கி

பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிதிசார் அறிவை வழங்கி, தகவலார்ந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவர்களாக கட்டியெழுப்பும் வகையில் றோயல் கல்லூரியின் Capital Market Club உடன் அமானா வங்கி அண்மையில் கைகோர்த்திருந்தது. அதன் பிரகாரம், கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது 'Market Mastery' பயிற்சிப்பட்டறைக்கு அனுசரணை வழங்கியிருந்தது. ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றின் இணைந்த முயற்சியாக Capital Market Club அமைந்திருப்பதுடன், மாணவர்களுக்கு அத்தியாவசியமான நிதிசார் அறிவைப் பெற்றுக் கொடுக்க இவை கைகோர்த்துள்ளன. வினைத்திறனான நிதி முகாமைத்துவம் மற்றும் குறைந்த இடர் கொண்ட நிதிசார் செயன்முறைகள் பற்றிய பரிபூரண புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

Capital Market Club இன் அறிமுக நிகழ்வான Market Mastery அண்மையில் றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மேல் மாகாணத்தின் 18 பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சிப் பட்டறையின் போது முன்னணி மூலதன சந்தையின் நிபுணர்கள் பெறுமதி வாய்ந்த அறிவையும், முக்கியமான தகவல்களையும் பகிர்ந்து கொண்டதுடன், மாணவர்களுக்கு பங்குப் பரிவர்த்தனை, முதலீட்டு மூலோபாயங்கள், நிதிப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு செயன்முறைகள் போன்றன தொடர்பான அறிமுகங்களையும் வழங்கியிருந்தனர்.



# வரம்



'குணவதி' பெயரில் மட்டும் குணவதி அல்ல குணத்திலும்தான். அதனால் குடும்பத்தில் நல்ல பெயர் அவளுக்கு. தன்னிடம் வந்து உதவி கேட்பவர்கள் யாராயினும் மனம் கோணாமல் உதவி செய்வாள்.

'என்ன.. அவளுக்கு ஒரேயொரு குறைதான். திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன.. அவளுக்கு குழந்தைப் பாக்கியம் இதுவரை கிடைக்கவில்லை அதுதான்'.

அவளுக்கு மனதளவில் அந்த பாதிப்பு நீண்ட காலமாக இருக்கத்தான் செய்தது. இருபத்தைஞ்சு வயதில் கல்யாணம் செய்தவள். இப்பதான் குணவதிக்கு முப்பது வயதாகிறது. கோயில் கோயிலாக போய் மனமுருகி வேண்டினாள். அவள் வயதில் கல்யாணம் முடித்தவர்கள் இரண்டு, மூன்று பிள்ளைகளோடு மகிழ்வாக இருக்கின்றனர். அன்பான அவள் கணவன் நல்லதம்பி. வஞ்சகம் சூதுவாது இல்லாதவன். நல்ல விவசாயி. அவனது வயல் அவன் மனம் போல வருடத்தில் இரண்டு போகத்திலும் குறைவின்றி விளைச்சலைக் கொடுக்கும். ஆனாலும் குடும்பத்துக்கு வாரிசு இல்லாதது அவனையும் வருத்தியது.

"நீங்க நினைச்சது போல புதிய உழவு மெசின் வாங்கியது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கு".

புதிதாக வாங்கிய உழவு இயந்திரத்தை பார்த்ததும் குணவதி கணவனிடம் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

"இனி நமது எல்லா வயல் வேலைகளையும் நேர காலத்துக்கு செய்து முடிக்கலாம் குணவதி". நல்லதம்பி சொல்லிப் பெருமிதப்பட்டான்.

"உழுவு மெசினுக்கு 'ட்ரைவர்'.. நம்ம குமரனா". ஆச்சரியப்பட்டுப் போனாள்.

வீட்டு முற்றத்தில் புதிய மெசினை ஓட்டி கொண்டு வந்து அப்போதுதான் நிறுத்தியிருந்தான் குமரன்.

"குமரன்தான் இனி நம்ம மெசின் 'ட்ரைவர்' குணவதி..அவனும் கட்டார் போக இருக்கான்..அவனுக்கு விஸா வரும் மட்டும் நம்மிடம் வேலை பாக்கட்டும். அதுக்குள்ள நானும் மெசின..ஓட்டப் பழகி விட்டால் போதும்".

"நல்லந்தான்.. நம்ம குமரன் நமக்கு 'ட்ரைவர்' ஆக இருப்பது" குணவதி கணவனிடம் சொல்லி மகிழ்ந்தாள்.

நல்லதம்பி உழவு மெசின் புதிதாக வாங்கியே மூணு மாதம் உருண்டோடி விட்டது.

"அண்ண.. பக்கத்து வயல் பரமக்குட்டி தன் வயல உழவு செய்ய கேட்டாரு".

"சரிடா.. அத செய்து கொடுப்பம்.. குமரா..இன்னும் சில வயல் உழவு வேல வந்திருக்கு அதயும் செய்து கொடுக்கணும். உனக்குத்தான் வேல அதிகமாகக் கிடக்கு".

"நான் செய்வன் அண்ண கவலப்பட வேணாம்".

"சரிடா குமரன் எனக்கும் நீ கொஞ்சம் 'ட்ரைவிங்' சொல்லிக் கொடுடா".

"சரி அண்ண.. நீங்க ரெடி என்றா சொல்லுங்க வேல முடியட்டும்".

காலபோக விதைப்பு முடிந்து விட்டது. பெரும் போக வயல் அறுவடைக்கு தயாராக இருந்தது. மெசின் வந்த பின் நல்லதம்பிக்கு ஓய்வே இருக்கவில்லை. அவன் குத்தகைக்கு வயல் வேறு எடுத்திருந்தான். நல்லதம்பி இப்போது நன்றாக 'ட்ரைவிங்' கற்றுக் கொண்டான்.

"அண்ண..இப்ப நீங்க நல்லா மெசின் 'ட்ரைவிங்' செய்யிறீங்க இனி நீங்க 'லைசன்ச' எடுக்கலாம்".

"எல்லாம் உன்னாலதான் குமரா.. நான் இந்த வயல.. உழவடிக்கன் நீ வீட்ட போய் எனக்கும் சாப்பாடு எடுத்துவா நான் பாத்துக்கிறன்".

இப்பெல்லாம் நல்லதம்பி வீட்டில் குமரனும் ஒருவனாகி விட்டான்.

"குமரன்.. எங்கடா அவரு இஞ்ச சாப்பிட வரமாட்டாரா..".

"அங்க உழவு வேல நிறையக் கிடக்கு.. அவருதான் இப்ப உழவடிக்காரு.. நான் போனாத்தான் அவர் வருவாரு".

"ஓ.. நீ..அவருக்கும் நல்லா மெசின் ஓட்ட பழக்கி விட்டா போல".

"அவரு கேட்டாரு நான் சொல்லி கொடுத்தன் கெதியாகவே 'ட்ரைவிங்' பழகிட்டாரு".

"சரி குமரன் நீ வந்து சாப்பிடு.. நான் அவருக்கு கேரியரில் போட்டு வைச்சி இருக்கன்".

"கொஞ்சம் இருங்க கை கால.. கழுவித்து வாறனே..".

"குமரா.. நீ குளிச்சித்து வாவன்".

"அங்க உழவு வேல கிடக்கே குளிச்சி இப்ப நான் என்ன செய்ற".

"வேல முடியப் போகுது என்று இப்பதானே குமரா சொன்னா".

"இனி வேல இருக்காது எண்டுதான் சொன்னன் எதுக்கும்..".

"முதலில நீ குளிச்சித்து வாவன்"

குணவதியின் வயதுதான் குமரனுக்கு. அதனால் குணவதியிடம் சகஜமாக கதைத்துக் கொள்வான் குமரன். மெசின் வேலை அதிகமாக இருந்து விட்டால் குமரன் தன் வீட்டுக்கு போக நேரமாகி விடும்.

"குமரா.. காலையில் விதைப்பு இருக்கு.. நீ இஞ்ச நில்லு.. அந்த றூம் சும்மாதான் கிடக்கு. அதில படுத்துக் கொள்.. நேரத்துக்கு நாம போகணும். உங்க வீட்டுக்கு போனில் சொல்லி விடுடா".

நல்லதம்பி சொன்னால் குமரன் மீற மாட்டான். வேலைப் பளுவான நேரங்களில் அங்கு தங்கி விடுவான்.

"குமரன் உனக்கு நான் தாற சம்பளம் காணாதெண்டா கேள்டா தாறன்".

"இல்லண்ணை.. இப்பவே சம்பளம் கூடத் தான் தாறயள் நீங்க.. சம்பளத்தில் குறை ஏதும் வைக்கல்ல.. நானும் அதில குறை சொல்ல மாட்டன்".

குமரனும் நல்லதம்பியிடம் வேலைக்கு சேர்ந்து ஏழெட்டு மாதம் போயிருந்தது.

"குமரா என்ன.. உங்க வீட்டில் உனக்கு கலியாணம் ஏற்பாடு நடக்காம்". குணவதி அன்று மதியம் சாப்பிடும் போது கேட்டாள். நல்லதம்பியும் கூடவே இருந்தான்.

"மெய்யாடா குமரா குணவதி சொல்லறது..".

"போங்கண்ண.. ஆரோ கேட்டு வந்ததாம் அம்மா சொன்னாவு. நான் வேணாம் எண்டு சொல்லிப் போட்டன். நான் தங்கச்சியிர கலியாணத்த முடிக்கணும்.. நாலு காசி வேணாமா.. உங்களிட்ட வேலைக்கு சேந்த புறகு கட்டார் போற வேலதான் தள்ளிப் போச்சுது. நான் வாற கிழம கொழும்புக்கு ஏஜன்சியிடம் விஸா அலுவலா போய் வரணும் ஏஜன்சியும் போன் பண்ணினான். அவனிட்ட காசும் கொடுத்த படி கிடக்கு".

"சரிடா குமரா நீ உன் அலுவலயும் பாரு.. அதுதான் உனக்கு நல்லது".

"குணவதி.."

அன்றும் குணவதியின் தாய் மகளை அழைத்தவாறு வீட்டுக்கு வந்தாள். மூன்று வீடு தள்ளி இருக்குது தாயின் வீடு.

"அம்மா என்ன என்னகா ..சொல்லன்"

"எத்தன வாட்டிதான் உனக்கு சொல்ற.. வாயில.. வயித்தில.. உனக்கு எதுவும் தங்குதில்லயே எண்ட கவலதான். நீ என்னதான் செய்யப் போறா.. கலியாணம் முடிச்சு நாலு வருசம் முடிஞ்சி போச்சுடி".

"எப்பவும் இதுதானா..கா. விடுங்கம்மா பாக்கலாம்".

"நீ இத்தன வருசமா என்னத்த பாத்துக் கொண்டு இருக்கா.. அக்கம் பக்கம் உன்ன மலடி எண்டு சொல்லிறது உன் காதில விழல்லையா".

"ஊரு வாய மூட முடியுமாம்மா".

"நீ பெரிய மனிசியாட்டம் கதைக்காம போய் எங்காச்சும் மருந்த மாத்திரைய வாங்கி திண்டு பாரன்".

"எனக்கு மட்டும் வருத்தம் இல்லையாம்மா.. நான் ஒண்டும் செய்யாம.. பாக்காம.. இருப்பனா சொல்லு". தாயை மெல்லக் கடிந்தாள் குணவதி.

"சரிடி.. நான் வாறன். உன் அப்பாவும் வயலுக்கு போனவரு வந்திடுவாரு.. உன் தம்பியும் ஸ்கூல் விட்டு வந்துடுவான்". ஊர் ஸ்கூலில் அவள் தம்பி மாஸ்டராக இருக்கிறான்.

"குணவதி.. எப்ப பாத்தாலும் உன் முகத்தில சோகம் அப்பியே கிடக்கு ஏன்..". குமரன் கேட்டான்.

இப்போதெல்லாம் உரிமை எடுத்து குணவதியை பெயர் சொல்லித்தான் அழைப்பான்.

"அதுதான் நான் விரதமிருந்து கோவில் குளமெல்லாம் போய் வாறன் ஒரு பூச்சி புழு வயித்தில தங்குதில்ல குமரா".

"இவளவு வசதி இருந்தும் அது பெரிய குறைதான் குணவதி. என்ட காதில கூட உன்ன 'மலடி' என்டு ஊரவர் சொல்றது விழுந்தது. எனக்கும் அது கவலயாயிருந்திச்சு.. அதாலதான் கேட்டன்.. அண்ணன் என்னதான் சொல்றாரு".

"மெசின் எடுத்த பிறகு அதெல்லாம் அவருக்கு ஞாபகமில்ல.. நானுதான் ஊர்க் கதையெல்லாம் கேக்கவேண்டி இருக்கு". குமரனும் குணவதி சொல்வதைக் கேட்டு வருத்தப்பட்டான்.

"வருதப்படாத குணவதி எல்லாம் சரி வரும்". அனுதாபத்தோடு குணவதியை பார்த்தான்.

"இந்த மலடி பட்டந்தான் குமரா என்னை அணு.. அணுவாகக் கொல்லுது. அவருக்கும் தெரியாம இரவில நான் இத நினைச்சு தான் அழுவுறன்". குமரனை கவலையோடு ஏறிட்டுப் பார்த்தாள். காலமும் போய்க் கொண்டிருந்தது.

பெரும் போக அறுவடை நல்லதம்பி நினைத்ததை விட அவனுக்கு நல்ல விளைச்சலைக் கொடுத்தது. இரவு பகலாக நல்லதம்பி வயலைப் பார்த்துக் கொண்டான். குமரன் கூடமாட துணைக்கு இருந்ததால் நல்லதம்பிக்கு ஆறுதலாக இருந்தது. நெல் விலையும் நன்றாகப் போனதால் அந்த போகத்தில் நல்ல லாபம் கிடைத்தது. நல்லதம்பிக்கு. சொந்த மெசின்.. அக்கம் பக்கத்து வேலைகள் நல்லதம்பியை நாடி வந்தன. கூடவே நல்லதம்பியின் வீட்டில் குதூகலமும் கூடவே வந்து நுழைந்தது.

"புதிதாக நல்லதம்பி 'ரக்டர்'வாங்கிய ராசிதான்.. இதுக்கல்லாம் காரணம்". அயலவர்கள் செய்தியறிந்து பேசிக் கொண்டனர்.

"குணவதி ஐந்து வருசத்துக்குப் பிறகு உண்டாகி இருக்காள்".

குணவதியின் தாய் கற்பகம் அக்கம் பக்கத்தில் கொஞ்சம் உரக்கவே சொன்னாள். குணவதி மனதளவில் காயப் பட்டதை விட குணவதியின் தாய்தான் மகளை விடக் கூடுதலாகக் காயப் பட்டவள்.

"கொடுப்பாருக்கு குறைவில்லை குணவதி நல்லா கொடுத்தவள்". உறவுக்காரர்கள் வாய் விட்டு குணவதியை வாழ்த்தினார்கள்.

"குணவதி உனக்கு உன் மனம் போல ஆண்டவன் வரம் தந்திருக்கான் இனியாவது சந்தோஷமாக இரு" அவளிடம் உதவி பெற்ற நல்ல மனிதர்கள் வந்து சொல்லி மகிழ்ந்தனர். இதுவரை வீட்டில் இல்லாது போன குதூகலம் இப்போது வந்து குடி கொண்டது. குணவதியின் தாய் கற்பகம் மகளை தாங்கு தாங்கென்று தாங்கினாள்.

"குணவதி இனி மூணு மாதத்துக்கு நீ ஒரு வேலையும் செய்ய வேணாம். அத எல்லாத்தையும் நான் பாக்கிறன். தேவை எண்டால் அவள் பொன்னிய.. கூப்பிட்டு எடுப்பம். கூட மாட அவள் ஒத்தாசையாக இருப்பாள்".

"ம்மா.. நீ பொன்னிய கண்டா சொல்லு. நானும் அவளுக்கு சொல்லி அனுப்புறன்"

"இனி குணவதிக்கு என்ன குறைச்சல்".

"இது முதல் மாதம்.. நீ கவனமாக இருக்கோணும்".

கேள்விப் பட்டு வீட்டுக்கு வந்து போனவர்கள் குணவதிக்கு ஆலோசனை சொன்னார்கள். உறவினர்கள் வருவதும் போவதும் நலம் விசாரிப்பதுமாக வீடு களை கட்டியது.

"குணவதி இந்தப் போகம் நல்ல வருமானம் நமக்கு. அத விட மகிழ்ச்சி நீ முழுகாம இருப்பதுதான்". நல்லதம்பி மகிழ்ச்சியில் குதூகலித்தான்.

குணவதியின் பக்கத்து வீட்டுக்காரி பொன்னம்மா யுத்த காலத்தில் கணவனை இழந்தவள். அவள் குமரனை சந்தேகக் கண் கொண்டு பார்த்தாள். குணவதி உண்டாகி இருப்பதில் பொன்னம்மா சந்தேகப்பட்டாள். இவ்வளவு நாளும் இல்லாம இருந்தவள் குணவதி.இப்ப எப்படி அவளுக்கு இது உண்டாகி இருக்கு. குமரன் மேல் இருந்த சந்தேகம் அவளுக்கு போனபாடில்லை.

"குமரன் நீ விஸா அலுவலாகக் கொழும்புக்கு போய் வந்ததைப் பற்றி ஒண்டுமே சொல்லல்ல.. என்னடா நடந்தது".

மூன்று நாட்களுக்கு பிறகு அன்றுதான் குமரன் காலை வேலைக்கு வந்திருந்தான். நல்லதம்பி ஆர்வத்துடன் விசாரித்தான். குணவதிக்கும் அதைப் பற்றி கேட்க வேணும் போல இருந்தது.

"அண்ணை விஸா ஏற்பாடுகள..நான் செய்து போட்டுத்தான் வந்திருக்கன். கட்டார் போறது கொஞ்சம் பிந்தும் போல இருக்கு".

"உனக்கு ஏதும் காசு பிரச்சின.. என்டா நீ தயங்காம கேள் நான் தாறன்".

"சரியண்ணன் கொஞ்சம் காசு தேவைப் படும். அப்ப.. நான் கேக்கன். நான் அங்க போய்.. உங்கட கடன கட்டுவன்".

"அத நீ போன பிறகு பாத்துக் கொள்ளலாம். அத விடு. நீ இல்லாம நானும் மெசின எடுக்கல்ல. நீ வரட்டும் என்று இருந்திட்டன்".

"சரி அண்ணை நான் போய் அந்த குறை வேலய முடிக்கன்".

"இருடா நானும் வாறன் குணவதி நீ குமரனுக்கு தேத்தண்ணியக் கொடு".

குணவதி முகத்தில் அப்பிக் கிடந்த சோகம் போய் இருந்ததைக் கண்டு மகிழ்ந்தான் குமரன்.

"அவளும் எத்தனை கோவில் குளங்கள் ஏறி இறங்கி இருப்பாள்.. பாவம் குணவதி". குணவதியை நிமிர்ந்து பார்த்தான்

"என்ன குமரன் என்னய அப்படி பாக்கிறா".

குணவதி குமரனைப் பார்த்துக் கேட்டாள்".

"வீடே எப்பவும் இல்லாதபடி களை கட்டி இருக்கு..அதுதான் பாத்தன்".

"எனக்கு மகிழ்ச்சி இருக்கக் கூடாதா என்ன குமரன் ".

"இல்ல அதை நான் தெரிஞ்சுக்கக் கூடாதா குணவதி".

"உனக்குத் தெரியாமலா சரி.. போதும் போதும்.. இத்தன வருசம் கழிச்சி எனக்கு வந்து தங்கிருக்கு.. எல்லாம் நீ இஞ்ச வேலைக்கு வந்த பிறகுதான் குமரா".

"இருக்காதா பின்ன".

ஒரு நமட்டுச் சிரிப்புடன் குமரன் மெசினை எடுக்க போனான்.

"நீ கொஞ்சம் இரு குமரன் நான் தேத்தண்ணி எடுத்து வாறன்".

"எனக்கு வேணாம் குணவதி நான் வேலைக்கு போறன்".

குசினுக்குள் நுழைந்தாள் குணவதி.. நல்லதம்பி பின்னால் வந்தான்.

"என்னங்க.. நாம ஒருக்கா ரவுணுக்கு போய் செக்கப் பண்ணணும்".

"ஒரு மாசம்தானே முடிஞ்சிருக்கு குணவதி என்ன அவசரம்".

"அதுக்கில்லங்க நமக்கு வருசக் கணக்கா குழந்த கிடைக்காம இருந்திச்சு.. போய் 'செக்கப்' பண்ணினா நல்லந்தானே".

"சரி குணவதி நீ சொல்றதும் சரிதான் நாளைக்கே போயித்து வருவம்". குணவதிக்கு நல்லதம்பி சொன்ன பிறகுதான் நிம்மதியாக இருந்தது.

"அம்மா நாளைக்கு நாங்க போய் 'செக்கப்' பண்ணித்து வாறம்.. நீ ஒருக்கா வீட்ட வந்து பாத்துக் கொள்ளன்".

வீட்டுக்கு வந்திருந்த தன் தாயிடம் சொன்னாள்.

"அம்மா நீ யோசிக்காத.. நாளைக்கு நாங்க சாயந்தரந்தான் போவம். 'பிறைவேற்றில' நாலு மணிக்கு 'டொக்டர்' வருவாராம்.. அங்தான் போனில சொல்லி 'புக்' பண்ணிருக்கம்".

"சரி.. கவனமாக போய் வரணும்".

"அதுதானம்மா.. மூர்த்தி மாமாட ஆட்டோவச் சொல்லி இருக்கன் அவர் கவனமாக ஆட்டோவில கொண்டு போவாரு ".

"உங்களுக்கு எப்ப நின்று போனது சரியாக சொல்லுங்க".

டொக்டர் விசாரித்தார். கூடவே நல்லதம்பியும் இருந்தான்.

**தொடர் 19 ஆம் பக்கத்தில்...**

*வெல்லாவெளி விவேகானந்தம்*

உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

_ஆர்_

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:133



திரு/திருமதி.செல்வி ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

திகதி .................... கையொப்பம் ....................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 133
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 133

### இடமிருந்துவலம் கீழ்

1. வழக்கத்தை விட அதிக அக்கறையும் வேகமும் உள்ள நிலை
4. ஒருவகைத் தானியம்.
7. தீயவர்களை அழிப்பது அல்லது துன்புறுத்துவது
8. கொடையாளி குழம்பிவிட்டார்.
9. உள்ளம், விருப்பத்தையும் குறிக்கும்(குழம்பியுள்ளது)
10. ஔவையார் தந்த ஒரு நீதி நூல் (குழம்பியுள்ளது)
11. பறவையைக் குறிக்கும் (குழம்பியுள்ளது)
13. இணையானது அல்லது சமநிலையானது (குழம்பியுள்ளது)
14. ஒரு கறிச்சரக்கு (குழம்பியுள்ளது)
16. எப்போதும்
17. வேதனை தரும் உணர்வு
18. கண்ணியம் நிறைந்தவர்
20. உயிர் இழப்பு
22. கட்டடத்தின் இடிந்த நிலை அல்லது சிதைவு (குழம்பியுள்ளது)
23. ஒருவகை மலர் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கால்நடைகளின் உணவை இப்படிச் சொல்வர்
2. வகை
3. விருட்சம் (குழம்பியுள்ளது)
4. ஒருவரைப் பற்றி தவறாக மற்றவரிடம் கூறுதல்
5. ஒருவகைத் தானியம்
6. முன்பு நடைமுறையில் இருந்த தூரத்தை கணக்கிடும் அளவு
8. வீட்டில் வளர்க்கப்படும் மருத்துவ குணமுள்ள செடி (குழம்பியுள்ளது)
11. சூரியன் (குழம்பியுள்ளது)
12. பசுவின் பெண் கன்று
13. பரபரப்போ அவசரமோ இல்லாத நிலை
15. கடல்வழிப் பயணத்துக்குரியது
16. சேறு
19. அதிர்ஷ்டம்
21. ஆண் என்றோ பெண் என்றோ சொல்ல முடியாத நபர் (திரும்பியுள்ளது)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 132

### விடைகள்

| இடமிருந்துவலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. புத்திமதி | 18. புலி | 1. புழுதி | 14. சிகை |
| 5. காது | 19. நதி | 2. தித்திப்பு | 15. மூலிகை |
| 7, வாத்து | 20. பாண் | 3. மது | 17. வாலிபன் |
| 8. வளி | 21. கபடி | 4. வாதி | 19. நண்டு |
| 9. திகதி | 23. விடுதி | 5. காவல் | 20. பாதி |
| 11. பல். | 24. கன்னி | 6. துளி | 21. கடி |
| 12. சப்பாத்தி | | 10. கசப்பு | 22. கனி |
| 15. மூப்பு | | 11. பதில் | |
| 16. மல்லிகை | | 13. மந்தி | |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :132

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ஜானகி பெருமாள்,** இல 36/20 சீ. கொன்வன்ட் வீதி, நாயகாகந்த வத்தளை | **எம்.எம்.எம். மாஹி** இல 366, நங்கல்ல, துல்ஹிரிய | **எஸ். கனகரட்டினம்,** 975, அன்புவழிபுரம், திருகோணமலை |

### பாராட்டு பெறுவோர்

1. **ஏ.கே.எப். ஹூஸ்னியா,** காலி
2. **எம்.சீ.எம். முஸம்மில்,** தங்காலை
3. **கே. துரைரட்ணம்** கரடியனாறு
4. **எம்.ஏ. சித்தீக்** அக்கரைப்பற்று
5. **எஸ் நல்லம்மா,** வந்தாறுமூலை
6. **எஸ். செல்வராஜா** பதுளை
7. **சாஹிராபானு லியாவுத்தீன்** புத்தளம்
8. **எஸ் ஞானராஸா** திருகோணமலை
9. **ஆர். எம். அஸ்லிம்** கிண்ணியா
10. **எஸ். சந்திரிகா** களுவாஞ்சிக்குடி

# வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம் (ஆனந்த சங்கம்)

47வது வருடாந்த பொதுக் கூட்டம் 2024 ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் மகிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் கௌரவ தலைவர் வாசனா லியனகே அவர்களின் தலைமையில் இடம்பெறும்.

அங்கத்தவர்கள் அனைவரினதும் வருகை கௌரவமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறாகும்.

2024/08/24ஆம் திகதிய வருடாந்த பொதுக் கூட்ட நிகழ்ச்சிநிரல்

1. விளக்கேற்றுதல்
2. மத அனுஷ்டானம்
3. கூட்டுறவு கீதம் இசைத்தல்
4. சங்கத்தின் மரணித்த ஸ்தாபகர்கள் மற்றும் அங்கத்தவர்களை நினைவு கூர்தல்
5. வரவேற்புரை
6. கடந்த பொதுச் சபைக் கூட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
7. கடந்த வருடங்களினுள் ஆட்சேர்க்கப்பட்டுள்ள அங்கத்தவர்களை சங்கத்தில் சேர்த்துக் கொள்வதற்கான முன்மொழிவை வழிமொழிதல்
8. பணிப்பாளர் சபையின் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அவற்றை அங்கீகரித்தல்
9. 2021/2022 கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்தல்
10. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் அபிவிருத்தித் திட்டங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகரித்தல்
11. நிர்வாக சபை கட்டளைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகரித்தல்
12. வெளி கடன் எல்லைகளை அங்கீகரித்தல்
13. அங்கத்தவர்களின் கருத்துக்களைச் சமர்ப்பித்தல்
14. எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான உத்தியோகத்தர் குழுவை அறிவித்தல்
15. தலைவரின் உரை
16. அதிதிகளின் உரை
17. வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அங்கத்தவர்களுக்கிடையில் சீட்டிழுப்பின் மூலம் பத்து வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல்
18. செயலாளரின் நன்றியுரை
19. முடிவு - தேசிய கீதம் இசைத்தல்
20. மதிய உணவு உபசரிப்பு.

**கவனிக்கவும்:**

01. கூட்ட மண்டபத்திற்குள் நுழைவதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது திணைக்கள அடையாள அட்டையைக் கட்டாயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மு.ப. 9.00 முதல் பி.ப. 12.30 வரையான காலத்தினுள் இந்த பொதுக் கூட்டம் இடம்பெறும்.

**இப்படிக்கு,**
**பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்,**
**பொது முகாமையாளர் / செயலாளர்,**
**டபிள்யூ.ஐ.எல். வீரசிங்க**

**தொ.பே. 011-2687476**
**011-2699295**

**தொ.நகல்: 011-2687477**

**2024-08-11.**

## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம் இல. 912/1, மருதானை வீதி, கொழும்பு 08.

மேற்கூறிய கூட்டுறவுச் சங்கத்தின் 2021-04-01ஆம் திகதி முதல் 2022-03-31ஆம் திகதி வரையான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, 2022-03-31ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2022-03-31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான விபரமான வருமானக் கூற்று என்பன இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**டபிள்யூ.கே.எல்.கே. லியனகே,**
**தலைவர்.**

**டபிள்யூ.ஐ.எல். வீரசிங்க**
**பொது முகாமையாளர்/செயலாளர்**

## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம்

## நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. **சமர்ப்பிப்பு**
வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு,

2. **அதிகாரம்**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பீ.எம்.எம். பந்துல அவர்களால் அவரின் கூ.அ.தி/வி/01/71 மற்றும் 2023-11-10ஆம் திகதி கடிதத்தில் கூட்டுறவுச் சட்டத்தின் 44(1) அத்தியாயத்தின் கீழ் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் விதிமுறைகளின் பிரகாரம் எம்மால் அறிக்கையின் 08ஆம் பக்கம் முதல் 14ஆம் பக்கம் வரையில் வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கத்தின் 2022-03-31ஆம் திகதிய நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான அதனோடு தொடர்புடைய விபரமான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, நிறை மாற்றங்களின் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு செய்யப்பட்ட குறிப்புகள் மற்றும் கணக்கியல் கொள்கைகள் சகிதம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

3. **நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**
நிதிக் கூற்றானது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளில் இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு அமைவாக மற்றும் கூட்டுறவுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளைக் கடைபிடித்து உண்மையாக மற்றும் நியாயமாக தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதன் பிரகாரம்,
   - பொருத்தமான மற்றும் போதுமான கணக்கியல் அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல்.
   - மோசடி மற்றும் தவறான காரணங்களினால் ஏற்படக்கூடிய போதுமானளவில் போலியான வெளிப்பாடுகள் இன்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்
   - உண்மையான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்துதல்
   - பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை தெரிவு செய்தல் மற்றும் பயன்படுத்துதல்
   - அவ்வப்போது நியாயமான கணக்கியல் மதிப்பீடுகளைத் தயாரித்தல்
   - கூட்டுறவுச் சங்கத்தை தொடர்ச்சியாக பராமரித்துக்கொண்டு செல்லல்.
   - நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சகல ஆதனங்களும் சங்கத்தின் வசம் இருக்க வேண்டும் என்பதுடன் அவற்றைப் பயன்படுத்தும் விதம் மற்றும் அறவிடக்கூடிய தரநிலைத் தன்மையில் இருத்தல் வேண்டும்.

   போன்ற மொத்தச் செயற்பாடுகளுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

4. **கணக்காய்வாளரின் பொறுப்பு**
கணக்காய்வாளர்களாகிய எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பானது நிதிநிலை அறிக்கைகள் இலங்கைக் கணக்கியல் தரநிலைகளுக்கு அமைவாகவும், கூட்டுறவுச் சட்ட விதிகளுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிக்கையிடுவதும், சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம் ஆகியவை கூட்டுறவு சட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிக்கையிடுதல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தியுள்ளனவா என்பது பற்றி கூறுவதாகும்.

5. **நோக்கம்**
இந்த கணக்காய்வு இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது மற்றும் கூட்டுறவுச் சட்ட கணக்காய்வு விதிகளின்படி பின்பற்றப்படும் நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான ஆதாரங்களை ஆராய்வது எங்கள் நோக்கத்தில் அடங்கும். இந்த அறிக்கையில் உள்ள கணக்காய்வு கருத்து, கருத்துகள் மற்றும் கண்டுபிடிப்புகள் தணிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் பகுப்பாய்வு அடிப்படையில் (மாதிரி சரிபார்ப்பின் அடிப்படையில்) நியாயமான முறையில் நடத்தப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் தவறான கூற்றிலிருந்து விடுபடுகின்றனவா என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதற்காக இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு நடத்தப்பட்டது. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் நிர்வாகத்தால் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளை மதிப்பீடு செய்தல், ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கைகளை வழங்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை கணக்காய்வில் உள்ளடங்கும். எங்கள் அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கத்திற்குத் தேவையான போதுமான தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற்றுள்ளோம்.

6. **கணக்காய்வு கருத்து**
வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கு புத்தகங்களை பராமரிப்பதில், பக்க இல. 08 (தொடரிலக்கம் முதல். ........... தொடரிலக்கம் வரை) முதல் 14ஆம் இலக்கம் வரையான விடயங்களின் கீழ் உண்மைகளுக்கு உட்பட்டு எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, நிதி கூற்றுக்கள் மற்றும் கணக்கு புத்தகங்களுக்கு இடையே உடன்பாடு உள்ளது மற்றும் 1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் பிரகாரம் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2022-03-31ஆம் திகதியில் இருந்து சங்கத்தின் நிலை மற்றும் அந்த திகதியில் முடிவடைந்த செயற்பாட்டு வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், செயற்பாடுகள் மற்றும் பணப்புழக்கங்கள் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை பிரதிபலிக்கின்றன மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எமது கருத்தாகும்.

**கணக்காய்வாளர்,**
**எச்.கே.டி. சூரியதிலக்க**
**பீ.எச்.ஏ. விஜேசிங்க**
**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.**
**2024-02-01.**

## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம்

### 2022-03-31ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைக் கூற்று

| சொத்துக்கள் | குறிப்பு | 2022-03-31 ரூபா | 2021-03-31 ரூபா |
|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 01 | 1,533,870.57 | 60,882,783.31 |
| நிதி முதலீடுகள் | 02 | 622,042,036.23 | 738,360,964.66 |
| அங்கத்தவர் கடன் மற்றும் முற்பணங்கள் | 03 | 1,393,548,013.44 | 1,014,800,045.49 |
| ஏனைய சொத்துகள் | 04 | 32,369,841.42 | 47,595,114.03 |
| நிறுவனத்தின் பங்கு | 05 | 10,000,000.00 | 10,000,000.00 |
| ஆதனம் மற்றும் உபகரணங்கள் | 06 | 151,717,104.66 | 120,223,191.09 |
| மொத்தச் சொத்து | | 2,211,210,866.32 | 1,991,862,098.58 |
| | | | |
| வைப்புகள் | 07 | 980,032,919.76 | 855,764,909.38 |
| கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள நிதியம் | 08 | 17,056,086.16 | 23,780,917.95 |
| ஏனைய செலுத்தவேண்டியவைகள் | 09 | 97,439,464.95 | 43,856,143.46 |
| ஏனைய பொறுப்புகள் | 10 | 36,406,307.21 | 25,111,820.48 |
| மொத்தப் பொறுப்பு | | 1,130,934,778.08 | 948,513,791.27 |
| | | | |
| பங்கு மூலதனம் | 11 | 352,671,867.61 | 315,539,192.61 |
| நியதிச்சட்ட இருப்பு | 12 | 137,084,302.56 | 132,798,423.34 |
| ஏனைய இருப்பு மற்றும் நிதியம் | 13 | 460,785,717.00 | 452,825,326.24 |
| மிகுதி இலாபம் | 14 | 129,734,201.08 | 142,185,365.12 |
| **மொத்த உரிமை** | | **1,080,276,088.24** | **1,043,348,307.31** |
| **மொத்த பொறுப்பு மற்றும் உரிமை** | | **2,211,210,866.32** | **1,991,862,098.58** |

கணக்கியல் குறிப்பின் 01ஆம் இலக்கம் முதல் 14ஆம் இலக்கம் வரையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள் இந்த நிதி நிலைமை கூற்றுக்களின் பகுதியாகும் என்பதால் மேற்கூறிய தகவல்கள் சங்கத்தின் புத்தகங்களின் பிரகாரம் சரியானவை என சான்றுபடுத்துகிறோம்.

**ஏ.யூ. எதிரிசிங்க,**
**பொருளாளர்**

**டபிள்யூ.ஏ.ஐ.எல். வீரசிங்க**
**செயலாளர்**

**டபிள்யூ.கே.எல்.கே. லியனகே**
**தலைவர்**

வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளை நாங்கள் ஆய்வு செய்து (இந்த அறிக்கையின் பக்கங்கள் தவிர) நிதி நிலை குறித்த நகலெடுக்கப்பட்ட மேற்கூறிய அறிக்கையில் உள்ள புள்ளிவிவரங்களை சரிபார்த்துள்ளோம். எமக்குத் தேவைப்படும் சகல விபரங்கள் மற்றும் தகவல்களை சங்கத்தின் அதிகாரிகளிடமிருந்து பெற்றுள்ளோம். அனைத்து சொத்துக்கள் மற்றும் கடன்கள் நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் மதிப்பு மிகைப்படுத்தப்படவில்லை என்றும் நாங்கள் கருதுகிறோம். சங்கத்தின் உண்மை நிலையை பிரதிபலிக்கும் வகையில் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எமது கருத்தாகும்.

கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது.

**கணக்காய்வாளர் - எச்.கே.டி. சூரியதிலக.**
**கணக்காய்வாளர் - ஜீ.எச்.ஏ. விஜேசிங்க.**

## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம்

### 2022-03-31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான விபரமான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2022-03-31 ரூபா | 2021-03-31 ரூபா |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 15 | 185,297,273.63 | 176,224,335.00 |
| வட்டிச் செலவுகள் | 16 | 66,585,943.00 | 58,093,028.00 |
| நிகர வட்டி வருமானம் | | 118,711,330.63 | 118,131,307.00 |
| செயற்பாட்டு வருமானம் | 17 | 1,048,350.00 | 4,272,185.68 |
| மொத்த வருமானம் | | 119,759,680.63 | 122,403,492.68 |
| **செயற்பாட்டு செலவினம்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 18 | 29,257,864.10 | 26,979,585.69 |
| வளாக உபகரணங்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் | 19 | 9,739,003.55 | 5,493,330.75 |
| பணிப்பாளர் சபை செலவுகள் | 20 | 4,201,279.75 | 5,767,817.29 |
| தேய்மானம் | 21 | 5,578,842.82 | 3,559,336.02 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | 22 | 53,839,173.55 | 31,463,401.90 |
| மொத்தச் செலவு | | 102,616,163.77 | 73,263,471.65 |
| நிகர இலாபம் | | 17,143,516.86 | 49,140,021.03 |

கணக்கியல் குறிப்பின் 15ஆம் இலக்கம் முதல் 22ஆம் இலக்கம் வரையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள் இந்த நிதி நிலைமை கூற்றுக்களின் பகுதியாகும் என்பதால் மேற்கூறிய வருமானம் செலவுகள் சங்கத்தின் புத்தகங்களின் பிரகாரம் சரியானவை என சான்றுபடுத்துகிறோம்.

**ஏ.யூ. எதிரிசிங்க,**
**பொருளாளர்**

**டபிள்யூ.ஏ.ஐ.எல். வீரசிங்க**
**செயலாளர்**

**டபிள்யூ.கே.எல்.கே. லியனகே**
**தலைவர்**

**கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது.**

**கணக்காய்வாளர் - எச்.கே.டி. சூரியதிலக.**
**கணக்காய்வாளர் - ஜீ.எச்.ஏ. விஜேசிங்க.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ராகம, வெலிசர வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கான சிவப்பு பொஸ்பரசின் (Red Phospurus) பெறுகை

1. பின்வருவற்றுக்காக வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் (CEFAP Unit) சார்பாக இலங்கை கடற்படையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| File No. | Description | QTY |
| --- | --- | --- |
| CFE AP/PRT/05/2022 | Red Phospurus | 6,000 Kg's |

இதில் ஆர்வம் காட்டும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் தேவையான மேலதிகத் தகவல்களை வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2ஆம் பந்தியில் காட்டப்பட்டள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2. மேற்கூறிய முகவரியானது:

**கவனத்திற்கு** : பணிப்பாளர், வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு,
**முகவரி** : வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகம.
**தொலைபேசி இல.** : 0112958227/0112955514
**மின்னஞ்சல்** : director.cefap@gmail.com

3. ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து மீளளிக்கப்படாத 12,500.00 ரூபா (பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா) கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது இலங்கை வங்கியில் 7041344 எனும் கணக்கிலக்கத்திற்கு கடற்படை தளபதியின் பெயரில் வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டாகும்.

5. 2024 செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்படைத் தலைமையகம்.**

---

### தொல்லியல் திணைக்களம்

## சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திக்கொண்டு செல்வதற்காக விலைமனுக்கள் கோரல் – 2024 – 2025

தொல்லியல் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்காக இந்த வேலைக்காக பதிவு செய்யப்பட்ட அனுபவம் வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து ஒரு வருட காலத்திற்காக தொல்லியல் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-08-13ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-09-04ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. த.பெ. இல. 532, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07 பிரதான அலுவலகத்தின் சிற்றுண்டிச்சாலையினால் ஒரு நாளைக்கு சுமார் இருநூற்று இருபத்தைந்து (225) பணியாளர்களுக்கு உணவு வழங்குதல் வேண்டும்.
02. சிற்றுண்டிச்சாலைக்காக வாடகை அறவிடப்படமாட்டாது. சிற்றுண்டிச்சாலைக் கட்டிடம் இந்தத் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படும் என்பதுடன் மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களுக்கான கட்டணப் பற்றுச்சீட்டின் 50% தொகை மட்டும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளரிடமிருந்து அறவிடப்படும். இந்த வசதிகளைக் கவனத்திற் கொண்டு நிவாரண விலையில் உணவு பானங்களை வழங்குதல் வேண்டும்.
03. 2024-08-13ஆம் திகதி முதல் 2024-09-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் கொழும்பு, த.பெ. இல. 532, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, தொல்லியல் திணைக்களத்தின் 01ஆம் மாடியிலுள்ள கணக்கிடல் பிரிவில் இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. விலைமனுதாரரின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் 2024-08-13ஆம் திகதி முதல் 2024-09-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து விலைக்கோரல் மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. விலைக்கோரல் மாதிரிப் படிவங்கள் உட்பட விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா விலைமனுக் கட்டணத்தை தொல்லியல் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவு காசாளருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டை கணக்கிடல் பிரிவிற்கு சமர்ப்பித்ததன் பின் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள இரு பிரதிகளினால் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-09-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் கணக்காளர் (பெறுகை), தொல்லியல் திணைக்களம், த.பெ. இல. 532, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விலைமனுதாரரினால் அல்லது அவரது பிரதிநிதியொருவரினால் நேரில் கொண்டுவந்து தொல்லியல் திணைக்களத்தின் 01ஆம் மாடியிலுள்ள கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொல்லியல் திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலை சேவை பெறுகைக்கான விலைமனு'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
07. விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். தொல்லியல் திணைக்களத்தின் 01ஆம் மாடியில் உள்ள கணக்கிடல் பிரிவில் 2024-09-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
08. தேவையான மேலதிக விபரங்களை இந்த திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து 011 2665881 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**தொல்லியல் திணைக்களம்,**
**கொழும்பு 07.**

---

## பொது மக்களுக்கான அறிவித்தல்



எட்வேட்ஸ் கெலக்ஷென் நிறுவனத்துடன் இதற்கு முன்னர் தொடர்புகளை பேணி வந்துள்ள **வர்ணகுலசூரிய ஜுட் டிலன்ஜித் ரந்திம பெர்னாண்டோ கடந்த 31.03.2024 தொடக்கம்** எமது நிறுவனத்தில் பணிக்கமர்த்தப்படவில்லையென்பதனை எமது பெறுமதிமிக்க அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

எட்வேட் கெலக்ஷன் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் அவருடனான மற்றும் அவரது பயண முகவரமைப்புகளுடனான அனைத்து தொழில்சார் உறவுகளையும் நிறுத்திக் கொண்டுவிட்டன.

**வர்ணகுலசூரிய ஜுட் டிலன்ஜித் ரந்திம பெர்னாண்டோவினால்** எவரேனும் தனிநபர்களுக்கென அல்லது வியாபார நடவடிக்கைகளுக்கென நடாத்தப்படும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் நாம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பாளிகளல்லர் என்பதை இத்தால் தயவுடன் அறியத்தருகின்றோம்.

**எட்வேட்ஸ் கெலக்ஷன் முகாமைத்துவம்**
**47/1, அலெக்ஸாந்திரா பிளேஸ், கொழும்பு-07**
**0770745249**
**groupadministrationmanager@edwardscollection.com**




---

## நீராவி படகு ''S/Y NOSTROMO'' ஐ பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்தல்

கொழும்பில் நடைபெறும் அதன் நியாயாதிக்கத்தை நிர்வகிக்கும் செயற்பாட்டில் இலங்கை குடியரசின் மேல் நீதிமன்ற கட்டளையின் விளைவாகவும் S/Y NOSTROMO காலி துறைமுகத்தில் இருக்கும் (1951 ஆம் ஆண்டு கட்டப்பட்டதும் 2013 ஆம் ஆண்டின் மீள்கட்டப்பட்டதும் LOA/Extrement Breadth – 29m/6.3m, Hull-Steel, GT-100, NT-80) ஆனது 2024.09.05 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு இலங்கை, கொழும்பு-12, ஹல்ஸ்ப்டோர்ப் வீதி 03 இலக்கத்தில் அமைந்துள்ள கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்ற இடப்பரப்பின் 03 ஆம் இலக்க அறையில் கொழும்பு மேல் நீதிமன்ற மார்ஷலினால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(தற்போது கிடைக்கக்கூடிய விபரக்குறிப்புக்கள் மற்றும் தகவல் ஆகியன துல்லியமானவையென உத்தரவாதம் வழங்க இயலாது).

இந்த ஏலத்தில் பங்குபற்ற ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து தேவையான விபரங்களை இணையதளத்திலும் கீழேயுள்ள முகவரியிலுள்ள மார்ஷலின் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். படகை பரீட்சிப்பதற்கு மார்ஷலின் முன் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர். இந்த விற்பனையின் இறுதி தீர்மானமானது மேல் நீதிமன்றத்தின் கட்டளைக்கு உட்பட்டுள்ளது.

**மேல் நீதிமன்ற மார்ஷல்,**
**வணிகக் கப்பற்துறை செயலகம்,**
**இல. 79, தொழில்நுட்ப சந்தி, மருதானை வீதி, கொழும்பு-10.**
**இலங்கை.**

**தொலைபேசி:** +94 112105700/+9411 2435127
**தொலைநகல்:** +9411 2430277
**இணையதளம்:** www.dgshipping.gov.lk
**மின்னஞ்சல்:** dmsmos@sltnet.lk

---

## பயன்படுத்தக் கூடிய மின்தூக்கி மற்றும் பொறியியல் உபகரணங்கள் விற்பனை

மீயுயர் நீதிமன்ற கட்டடத்தொகுதி முகாமை சபைக்கு சொந்தமான பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ள மின்தூக்க மற்றும் பொறியியல் உபகரணங்களை விற்பனை செய்வற்காக கொள்வனவாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

2024.08.12 ஆம் திகதி முதல் 2024.09.04ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை மின்தூக்கி மற்றும் பொறியியல் உபகரணங்கள் என்பவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பார்வையிடலாம். பொறியியல் முகாமையளருடன் 011-2437502 என்ற இலக்கத்திற்கும் கையகப்படுத்தல் அலுவலருடன் 011-2437518 என்ற இலக்கத்திற்கும் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்ட காலப்பகுதியில் நிதி முகாமையாளருக்கு திருப்பிச் செலுத்தப்பட முடியாத ரூபா 2,000 தொகையைச் செலுத்துவதன் மூலம் விபரமான விலைமனு பத்திரத்தை பெற்றுக்ககொள்ள முடியும் என்பதோடு திருப்பிச் செலுத்தப்படக் கூடிய வைப்புத் தொகையாக ரூபாய் 5,000 தொகையை நிதி முகாமையாளருக்கு செலுத்தப்பட வேண்டும். விலைமனு உள்ளடக்கிய கடித உறையின் இடது மேல் மூலையில் "மின்தூக்கி மற்றும் பொறியியல் உபகரணங்களுக்கான விலைமனு" என அடையாளமிட்டு முத்திரையிட்டு கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள விலைமனுப் பெட்டியில் வைப்புச் செய்யப்பட வேண்டும் அல்லது 2024.09.04 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் கீழ்க் குறிப்பிட முகவரிக்கு அனுப்பப்பட்ட வேண்டும் என்பதோடு விலை மனுக்கள் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும்.

**மின்தூக்கி மற்றும் பொறியியல் உபகரணங்களின் பட்டியல்**

01)02 Nos. 1000khg Lift
02)02 Nos. 800KVA Transformer
03) 22 KW Condenser pumps with Panel
04)22 KW Chilled Water Pumps with Panel

**மார்ஷல்**
**மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி முகாமை சபை**
**தபால் பெட்டி 223, புதுக்கடை வீதி, கொழும்பு - 12**

---

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## விலை மனுக்கோரல்

## இலங்கை திறந்த பல்கலைக்கழக மத்திய வளாகத்திற்கான தனியார் சுத்திகரிப்பு சேவைகள் (2024/2025)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழக மத்திய வளாகத்திற்கான தனியார் சுத்திகரிப்பு சேவை வழங்கலுக்காக (2024/2025) புகழ்பூத்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தற்போது வரவேற்கிறார்.

ஆர்வமுள்ள **மனுதாரர்கள் மீளச்செலுத்தமுடியாத கேள்வித் தொகையான ரூ10,000.00** இனை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பதன் 12 ஒகஸ்ட் 2024 முதல் 02 செப்ரம்பர் 2024 வரையிலான வேலைநாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப 03.00 மணிவரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அனைத்து விலைமனுப் பத்திரங்களுடனும், முடிவுத் திகதியில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியான (30 டிசம்பர் 2024 வரை), **ரூ.300,000.00 பெறுமதியான விலை மனுப் பிணையொன்று** இணைக்கப்படல் வேண்டும். விலை மனுப் பிணையானது "துணைவேந்தர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்" எனும் பெயரில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் வணிக வங்கியிடமிருந்து அல்லது பல்கலைக்கழக காசாளருக்கு காசாக செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

ஆங்கில மொழில் தயாரிக்கப்பட்டிருக்கும் விலை மனுப் பத்திரங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி தனித்தனி முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் **(கடித உறை 1- தகைமை மற்றும் அனுபவத் தகவல்கள் மற்றும் கடித உறை 2 – நிதிசார் விலை மனு. இரண்டு விலை மனுக்களும், கடித உறை 1 மற்றும் கடித உறை 2 என சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். அவற்றினை முத்திரையிடப்பட்ட ஒரு கடித உறையினுள் இட்டு இடதுபக்க மேல் மூலையில்** திறந்த பல்கலைக்கழக மத்திய வளாகத்திற்கான தனியார் சுத்திகரிப்பு சேவை (2024/2025)" எனக் குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு **03 செப்ரம்பர் 2024 அன்று** மு.ப. **10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது பொது நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திர பெட்டியில் இடப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மாநாட்டு மண்டபத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் **03 செப்ரம்பர் 2024 அன்று மு.ப. 10.00 மணிக்கு மணிக்கு** விலைமனுக்கள் திறக்கப்படும்.

**முன்-விலை மனுக்கோரல் கூட்டம் 21 ஒகஸ்ட் 2024 அன்று மு.ப. 10.00 மணிக்கு பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெறும்.**

மேலதிக தெளிவூட்டல்களை, உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகப் பிரிவு (தொலைபேசி இல.011-2881209) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**தலைவர், திணைக்கள பெறுகை குழு**
**பொது நிர்வாகம்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**நாவல, நுகேகொட.**
**11 ஒகஸ்ட் 2024**



## "திரைக்கு வராத சங்கதி" வெளியீட்டு விழா




எழுத்தாளரும், ஊடகவியலாளருமான சூரன்.ஏ.ரவிவர்மாவின் "திரைக்கு வராத சங்கதி" எனும் நூல் வெளியீட்டுவிழா இன்று 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30க்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் சிரேஷ்ட ஊடகவியலாளர். இ. பாரதியின் தலைமையில் நடைபெற உள்ளது. ரவிச்சந்திரன் ரவிசக்தி [ஆசிரியை, மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை] வரவேற்புரை நிகழ்த்துவார். "ஒருவன்" செய்தித்தள முகாமையாளர் அ.நிக்ஸன் அறிமுகவுரையையும், ஜீவநதி, கடல் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் க.பரணீதரன் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் கருத்துரையையும் வழங்குவார்கள்.

## இரும்புக் கழிவுகள் விற்பனைக்கு

எமது நாராஹேன்பிட்டி தொழிற்சாலையில் காணப்படும் இரும்புக் கழிவுகளின் விற்பனைக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பார்வையிடுவதற்கு வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையிலும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையிலும் எமது நாராஹேன்பிட்டி தொழிற்சாலைக்கு வருகை தரவும்.

மேற்படி முகவரியிலிருந்து விலைமனுக்களுக்கான படிவங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாத 150 ரூபாயை வைப்புச் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

கடித உறையின் இடது மேற்பகுதியில் "இரும்புக் கழிவுகள் விற்பனைக்கு" எனக்குறிப்பிடப்பட்டு அதில் விலைமனுக்கள், 2024 ஆகஸ்ட் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் தகவல்களுக்கு 011-2586622 - Ext 108 இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்

ஏற்றுமதி மற்றும் நிர்வாக முகாமையாளர்
லங்கா கனரீஸ் (பிரைவட்) லிமிடெட்
45/75, நாராஹேன்பிட்டி வீதி, கொழும்பு 05.
தொ.பே: 0112-586622, பக்ஸ்: 0112-368480.

Repeat
Your ad
For
Better
Offers

**உடனடி வேலை வாய்ப்பு**

அனுபவமுடைய அல்லது அனுபவமற்ற தொழில்வல்லுனர்கள் தேவை.
மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இல.
**076 3097597**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## ஊழியர்கள் தேவை

குருநாகலில் அமைந்துள்ள தென்னங்காணிக்கு தங்கி வேலை செய்யக் கூடிய ஊழியர்கள் தேவை. உணவு, பானங்கள் மற்றும் தங்குமிட வசதிகள் கிடைக்கும். தங்கி வேலை செய்யக் கூடியவர்கள் மட்டும் அழையுங்கள்.

071-1961738

## வரம் 

16ஆம் பக்க தொடர்...

"இந்த மாதம் வருவது வரல்ல.. ஒருமாசம் முடிஞ்சு போச்சு. நாங்க கல்யாணமாகி ஐஞ்சு வருசம் சேர்".

"ஓ அப்படியா வாங்க ஒருக்கா செக் பண்ணுவம்.. நர்ஸ்.. ".

நர்ஸை பார்த்தார். "ஓகே சேர்.. ".

"அம்மா நீங்க கொஞ்சம் வாங்க".

நர்ஸ் குணவதியை பரிசோதனை அறைக்கு அழைத்து செல்ல.. டொக்டரும் போனார். நாடி பிடித்து பார்த்தார்.. இமை நீக்கி கண்களை பார்த்தார். 'பிரஷர்' செக் பண்ணினார். விபரங்களை கேட்டு அறிந்தார். அடுத்த 'செக்கப்'புக்கான நாள் குறித்தும் சொன்னார்.

"மூனு மாசம் முடியட்டும் 'ஸ்கேன்' பண்ணிப் பார்ப்பம்".

"சேர்.. இப்ப எப்படி இருக்கு".

நல்லதம்பி அவரை பார்த்து விளித்தான்.

"உங்கள் ஆதங்கம் புரியுது.. நீண்ட காலத்துக்கு பிறகும் இது சாத்தியந்தான். நீங்க ஐந்து வருடத்தில் அக்கறை எடுக்கவில்லை என்பது தெரியுது ஆரம்பத்தில் இருவரும் இங்கு வந்து செக்கப் பண்ணியிருக்கலாம்..".

"நாங்களும் சரி வந்திடும் என யோசிக்காம இருந்திட்டம் சேர்".

"ஓகே.. அத விடுங்க.. இனி இதை பார்த்துக் கொள்ளலாம்". அவர்கள் அங்கிருந்து எழுந்து விட்டனர்.

"டகுத்தர் என்ன பிள்ளை சொன்னார் ". தாய் கனகம் விசாரிக்க தொடங்கி விட்டாள்.

"கொஞ்சம் பொறும்மா நான் எல்லாத்தையும் சொல்றன்". நடந்தவற்றை ஒன்றும் விடாமல் குணவதி சொல்லி முடித்தாள்.

மூன்று மாதம் முடிந்த பின் டொக்டர் சொன்னபடி அன்றும் குணவதி செக்கப் போய் இருந்தாள்.

"உங்களுக்கு உடல் நிலையில் மாற்றங்கள் ஏதாவது தெரிந்தால் சொல்லுங்க" குணவதியை டொக்டர் வினவினார்.

"அசைவுகள் எதுவும் எனக்கு தெரியல்லை சேர்.. வாந்தி, குமட்டல் கூட இருக்கல்ல".

"ஓகே எல்லோருக்கும் அப்படி இருக்கும் என்று சொல்லமுடியாது". நர்ஸை அழைத்தார்.

"சேர்..".

நர்ஸ் புரிந்து கொண்டாள். குணவதிக்கு செக்கப்புக்கான ஏற்பாடுகளை நர்ஸ் செய்தாள்.

"கரு வளர்ச்சிக்கான அறிகுறிகள் புலப்படவில்லையே".

ஆரம்பத்தில் குணவதியை செக்கப் பண்ணிய அவருக்கு சில சந்தேகங்கள் இருந்தன.. இன்று அது அவருக்கு உறுதியாகியது. அவர் அதுபற்றி அன்று அவர்களிடம் எதுவும் சொல்லவில்லை. 'ஸ்கேன்' செய்து பார்த்த பின்னர் உறுதியாக சொல்ல நினைத்தார்.

"உங்களுக்கு 'ஸ்கேன்' எடுத்து பார்க்க வேணும். அதன் பின் உறுதியாக சொல்ல முடியும். எனது அவதானிப்பில் சில சந்தேகங்கள் இருக்கு".

டொக்டர் சொல்லி முடித்தார்.

"ஸ்கேன் எடுத்தால் குழந்தை ஆணா பெண்ணா.. என தெரிந்தும் கொள்ளலாம் சேர்". நல்லதம்பிக்கு அறிந்து கொள்ளும் ஆசை உந்தியது.

"உங்க ஆதங்கம் புரியுது.. ஆனா அதுக்கு முன்.. ஸ்கேன் எடுக்கணும்".

"சொல்லுங்க.. சேர்".

"நீங்க சில மணி நேரம் தங்கி இருக்க வேணும்".

அது நகரின் பிரபலமான மருத்துவமனை. டாக்டரும் பிரபலமான மகப்பேற்று மருத்துவ நிபுணர். அவர் நோயாளிகளுடன் உரையாடும் போதே பாதி வருத்தம் போய் விடும்.

"சரிங்க சேர் இருந்து பாத்திட்டே போறம் சேர்".

"குணவதி.. நர்ஸ் சொல்ற படி..கேள். 'ஸ்கேன்' எடுத்த பின் போகலாம் நானும் இருப்பன்".

குணவதியின் ஸ்கேன் ரிப்போட் வந்திருந்தது. "நீங்க மனதை முதலில் தேற்றிக் கொள்ள வேணும்.. நான் சொல்வதை கவனமாக கேளுங்க". டொக்டர் தொடர்ந்தார்.

"உங்களுக்கு 'கன்சீவ்' ஆகவில்லை என்பதுதான் உண்மை".

"சேர்.. நீங்க சொல்வது.. அப்போ குழந்தை உண்டாக இல்லையா சேர்".

"ஸ்கேன் ரிப்போர்ட் படி அது தெளிவாகத் தெரியுது". அதிர்ச்சியில் இருவரும் உறைந்து போயினர்.

"உங்க கருப்பையில் 'கட்டி' உண்டாகி இருக்கு..".

அவர்கள் தலையில் இடி விழுந்தது போல் உணர்ந்தனர்.

"பயப்பட வேணாம். இது சின்ன ஆபரேஷன்தான். ஆனால் உடனே செய்ய வேணும்.. இன்னும் தாமதம் செய்தால் உயிராபத்தும் நடக்க வாய்ப்புண்டு".

“உடனேயே செய்திடலாம் சேர்.. எனக்கும் குணவதிதான் சேர் முக்கியம் அதற்கான ஏற்பாடுகளை செய்ங்க சேர்".

"ஓகே.. நான் ஆபரேஷனுக்கு ஏற்பாடுகளை செய்கிறன். நீங்க மற்ற ஏற்பாடுகளை செய்யுங்கள்".

"சரிங்க சேர்.. ஆனால் எங்களுக்கு இனி குழந்தை பாக்கியம் இல்லையா சேர் ".

ஏக்கத்துடன் நல்லதம்பி டொக்டரை ஏறிட்டு பார்த்தான்.

"கருப்பையில் பற்றிப் பிடித்துள்ள கட்டியை அகற்றுவதால் கருப்பை வலு இழக்க வாய்ப்புண்டு. கருவை தாங்கும் சக்தி குறையலாம் . அதுமட்டுமல்ல நான் உங்கள் இருவரையும் செக்கப் செய்ததில் கருத்தரிக்கும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவு தான் ".

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அவர்களுக்கு தொடர்ந்தது.

"பிள்ளையில்லா வரம் அல்லவா நமக்கு கிடைச்சிருக்கு குணவதி".

டொக்டர் அறையில் இருந்து வெளியில் வந்த குணவதி கண்களில் கண்ணீர் முட்டியது.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

### SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக அடைவுக்காக முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சந்தைப்படுத்தல் நிர்வாகி**

**முக்கிய பொறுப்புகள்**

- வணிகக்குறியின் வெளிப்பாட்டை அதிகரிப்பதற்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பரப்புரைகளை மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்துவதோடு பல்வேறுபட்ட டிஜிட்டல் தளங்களில் வாடிக்கையாளர் ஈடுபாட்டை செயற்படுத்தல்.
- ATL மற்றும் BTL விளம்பர முன்முயற்சிகளை மேம்படுத்தல் நிறைவேற்றல்/ இலக்கு வைக்கப்படும் வாடிக்கையாளர்களை அடையும் பயனுள்ள செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைதல்.
- வணிகக்குறியை முன்வைத்தல் மற்றும் முன்னெடுத்தலை மேம்படுத்துவதற்கு உற்பத்தியை ஆரம்பித்தல், ஊக்குவிப்பு செயற்பாடுகள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை திட்டமிடல் ஒருங்கிணைத்தல் மற்றும் நிறைவேற்றல்.
- ஒட்டுமொத்த வர்த்தக நோக்கங்களுடன் சந்தைப்படுத்தல் மூலோபாயங்களின் சீரமைப்பை உறுதி செய்வதற்கு செயற்பாட்டுக் குழுக்களுடன் கூட்டிணைவு.
- உற்பத்தி வணிகக்குறி மற்றும் ஊக்குவிப்பு முன்முயற்சிகளுக்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காக நுகர்வாளர்களின் போக்குகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- வாடிக்கையாளர்களை ஈடுபடுத்துவது மற்றும் பிரபலப்படுத்துவதற்கு இணையதளம், சமூக ஊடகம், மின்னஞ்சல் பிரசாரங்கள் உட்பட டிஜிட்டல் அலைவரிசைகளில் கவர்ச்சிகரமாக உள்ளடக்கங்களை உருவாக்குதல்.
- உச்ச தாக்கத்தை பெறுவதற்காக சந்தைப்படுத்தல் பரப்புரைகள் மற்றும் உத்திகளை மேம்படுத்துவதன் பயனுள்ள மதிப்பீட்டுக்கு முக்கிய செயல்திறன் அளவீடுகளை கண்காணித்தல் ஆய்வு செய்தல்.
- புத்தாக்கம் மற்றும் போட்டிரீதியான அனுகூலங்களை பேணுவதற்கு தொழில்துறை போக்கு, வளரும் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் சிறந்த நடைமுறைகள், விளம்பரம் மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவத்தின் பகுப்பாய்வு.
- சந்தைப்படுத்தல் செலவை மேம்படுத்துவதற்கு வரவு செலவு திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு உதவியை பெறுதல்.

**தகைமைகள்:**

சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் பெற்றதொரு இளமாணிப்பட்டம்.

அல்லது

புகழ்வாய்ந்ததொரு நிறுவனத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பகுதி/முழு தகைமையுடனானதொரு இளமாணிப்பட்டம். (சந்தைப்படுத்தலில் டிப்ளோமா/ உயர் டிப்ளோமா/ பட்டப்பின் பட்டம்) (CIM/ SLIM விருப்பத்திற்குரியது)

அல்லது

புகழ்வாய்ந்ததொரு நிறுவனத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பெற்றதொரு தொழில்சார் தகைமை (சந்தைப்படுத்தலில் டிப்ளோமா/ உயர் டிப்ளோமா/ பட்டப்பின் பட்டம்) (CIM/SLIM விருப்பத்திற்குரியது)

**அனுபவம்:**

சந்தைப்படுத்தல் அல்லது வணிகக்குறியின் வகிபங்கில் ஆகக்குறைந்தது 2 வருட அனுபவம். நிதிசார் நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தல் அனுபவமானது தனித்துவமான நன்மையாகும்.

**ஊதியம்:**

சம்பள அளவு – வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதாந்தம் ரூபா 90,645 - 1,220 x 20 – 115,045 (10% கொடுப்பனவு வாழ்க்கைச் செலவு, மற்றும் வாடகைக் கொடுப்பனவு)

**வயது:** 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் ஏற்கனவே அரச துறை அமைப்பு ஒன்றில் பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**அவசர அழைப்பு நிலைய உதவியாளர் - ஒப்பந்த அடிப்படையில்.**

**முக்கிய பொறுப்புக்கள்:**

- உடன் தொடர்பு, மின்னஞ்சல், குறுஞ்செய்தி, வட்ஸ்அப் மற்றும் ஏனைய வழிகள் மூலம் வாடிக்கையாளர் விசாரணைகளை கையாளுதல்.
- வாடிக்கையாளர்களுக்கு துல்லியமாக மற்றும் அப்போதைக்கு தேவையான விபரங்களை வழங்குதல்.
- வாடிக்கையாளர் பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் தொழில்முறை மற்றும் செயற்றிறன் கொண்ட வகையில் அக்கறை செலுத்துதல்.
- ஆவண வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் பரிமாற்றங்கள்.
- வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்வதற்கு தொடர்புடைய குழுக்களுடன் நெருங்கி பணியாற்றல்.

**தகைமைகள்:**

மூன்று (3) சித்திகளுடனான கபொத உ/த
சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் மிகச்சிறந்த தொடர்பாடல் திறன்கள் தனித்துவமான நன்மையாகும்.

**அனுபவம்**:

இயைபுள்ள பதவி நிலையில் ஆகக்குறைந்தது ஒரு (1) வருட அனுபவம்.

**ஊதியம்**:

மாதாந்த கொடுப்பனவு: 50,000 ரூபா.

**வயது:** 25 வயதிற்கு மேற்படாமலிருத்தல்.

**பொதுவான நிபந்தனைகள்**

தேர்வு முறை – வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின்படி நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு இடம்பெறும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி :** 2024.08.25

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும்.

விண்ணப்பங்கள் careers@smib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.

## மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PGIM)

**கொழும்பு பல்கலைக்கழகம்**

### பிரதிப் பணிப்பாளர் பதவி

குழு சான்றிதழ் அல்லது மருத்துவ சிறப்புகளில் முனைவர் பட்டம் பெற்றவர்களிடமிருந்து மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கான பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. கல்விசார் மற்றும் நிருவாக துறைகளின் முன்னைய அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாகும். பிரதி பணிப்பாளரானவர் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முழுநேர அலுவலராவர். இப்பணிக்கான காலமானது மூன்று வருடங்களாகும். 2024.08.31 ஆம் திகதியன்று விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்க வகையில் 62 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும் ஆனால் 65 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**நியமனத்திற்கான சம்பளம் மற்றும் ஏனைய நிபந்தனைகள்:**

[U-AC 3 (II)] – மாதாந்தம் 79360 – 11x1630-97290 ரூபா

- சம்பளத்திற்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கல்விசார் படியொன்றும் வாழ்க்கைச்செலவு படியொன்றும் வழங்கப்படும்.

உங்களின் தொழில்சார், கல்விசார் மற்றும் ஏனைய தகைமைகளை சான்றுபகருவதற்காக சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகளை விண்ணப்பத்துடன் தயவுசெய்து இணைக்கவும்.

உயர் கல்விசார் நிறுவனங்கள் அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அவ்வாறான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும். இந்த தேவைப்பாட்டிற்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலராகவிருப்பின், பொது நிருவாக சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், அவர் (ஆண்/ பெண்) அவரது பதவிக் காலத்தில் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட வேதனத்திற்கு மேலதிகமாக அவரது ஓய்வூதியத்தை பெறுவதற்கான உரித்தாளராகமாட்டார்.

வேலைவிளக்கம் மற்றும் விண்ணப்பம் ஆகியன அடங்கலான மேலதிக விபரங்களை பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் pgim.cmb.ac.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024.08.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரித்தான சான்றிதழ்களுடன் saradmin@pgim.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது சிரேஷ்ட பிரதி பதிவாளர், தாபனம்,மற்றும் பொது நிருவாக கிளை (மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர், நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது மின்னஞ்சலின் தலைப்பாகவிருத்தல் வேண்டும் அல்லது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

மூடும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**பணிப்பாளர்,**
**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்,**
**இல. 160,பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**

## துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

### கேள்வி கோரல் - IFB-SP/2024-06

### சிவில் விமான சேவைகள் அதிகார சபை – பீடை கட்டுப்பாட்டுச் சேவைகள்

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் வீரவில, மட்டக்களப்பு மற்றும் மத்தள அலுவலகத்திலுள்ள விடுமுறை பங்களாவிற்கான பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2024-08-12ஆம் திகதி முதல் 2024-09-03ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
3. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறிய முகவரியில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்குக் குறையாமல் கேள்விப் பிணைமுறி செல்லுபடியாதல் வேண்டும்.
5. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை, ராடர் மேட்டிற்கு முன்னால், தலைமை அலுவலகக் கட்டிடத்தில் இடம்பெறும்.
6. 2024 செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு பீடைக் கட்டுப்பாட்டுச் சேவையை வழங்குதல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. கேள்வியைக் கையளிப்பதற்கு தகைமை பெறும் நிறுவனத்தினால் வருடாந்த முழு ஒப்பந்தப் பெறுமதியின் 05% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகளற்ற செயற்றிறன் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயற்றிறன் மட்டத்திலான சேவை கிடைக்காவிட்டால் அதை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
8. 2024 செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

## விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளை நீடித்தல்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### தலைமன்னார் புதிய இறங்குதுறையின் நிர்மாணம் - 1 ஆம் கட்டம்

**(ஒப்பந்த இல.: SLPA/PD/TAL/PIER/01)**

2024-06-30ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இந்த விளம்பரத்தின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் விலைமனுக்களைத் திறக்கும் நாள் என்பவை பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றன.

| விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் முன்னைய இறுதி நாள் | விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதல் மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் புதிய இறுதி நாள் |
|---|---|
| 2024 ஆகஸ்ட் 08ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2024 ஆகஸ்ட் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

1. தலைமன்னார் புதிய இறங்குதுறை - 1ஆம் கட்டம் (ஒப்பந்த இல.: SLPA/PD/TAL/PIER/01) நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் சார்பில் துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழான பிரதான வேலையானது Construction of a Concrete Deck Pier (Ocean beach pier) at Talaimannar having approximate length of 310m and width of 7m on precast concrete piles at water depth of 3m – ஆகியவற்றை அடக்குகின்றது.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கானவை:

   கேள்விதாரர் **CIDA** நிறுவனத்தின் (முன்னர் **ICTAD** என்று அறியப்பட்டது) C1 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைப் பெற்ற ஒப்பந்தக்காரராக இருத்தல் வேண்டும்.

   eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து கேள்விதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

   கேள்விதாரர் பின்வரும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   கடந்த 10 வருடங்களில் 600 மில்லியன் ரூபாவிற்கு குறையாத தொகையில் ஆகக் குறைந்தது ஒரு சிவில் நிர்மாண செயற்றிட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. 2024.06.27ஆம் திகதியிலிருந்து 2024.08.16ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் உட்பட) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்குமிடையில் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 100,000.00 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்விக் கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். கேள்விக் கோரல் ஆவணங்கள் அதே அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விக்கோரல் ஆவணங்கள் கேள்விகள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 175 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

6. கேள்வி ஆவணங்கள் பாதுகாப்பாக முத்திரைக்குறியிடப்பட்ட தபாலுறையொன்றில் உள்ளிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ''தலைமன்னார் புதிய இறங்குதுறையின் நிர்மாணம் - கட்டம் 1 (ஒப்பந்த இலக்கம்: **SLPA/PD/TAL/PIER/01)"** எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விக் கோரல் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. சகல கேள்வி ஆவணங்களுடனும் 15,000,000.00 ரூபா பெறுமதியான கேள்விப்பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது 2025.02.27ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. கேள்விக்கோரல்கள் 2024.08.20ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விக் கோரல்கள் 2024.08.20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படுவதுடன் அதன் பின் அவைகள் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
9. ஏதேனும் மேலதிக விபரங்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2325575).

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

## களனிப் பல்கலைக்கழகம்
### மருத்துவ பீடம்

## கேள்விகளுக்கான அழைப்பு

### களனி பல்கலைக்கழகம், மருத்துவ பீடத்தில் முன்மொழியப்பட்ட அஸ்போல்ட் மற்றும் இன்டர்லொக் வீதியை புதுப்பித்தல்

**கேள்வி இல. UOK/FM/DO/FM06/02/WORKS/24/1**

1. ராகம, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடத்தில் முன்மொழியப்பட்ட அஸ்போல்ட் மற்றும் இன்டர்லொக் வீதியின் புதுப்பித்தல்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து ராகம, களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு தலைவரால் முத்திரைக்குறி பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
3. கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான சகல தகவல்களையும் கேள்விதாரர்கள் வழங்குதல் வேண்டும்.
4. கேள்விகளைப் பெற்றுக்கொள்ள தகுதி பெற்ற கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றவராக இருத்தலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ICTAD பதிவு - C7 அல்லது அதற்கு மேல்
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை வேலை பொறியியலாளர் அலுவலகம், வேலை பகுதி, களனிப் பல்கலைக்கழகம், தலுகம, களனியில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112903164, 0760962340) மற்றும் 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 02ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.00 மணி வரை மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை ராகம - 11010, தலகொல்ல வீதி, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா கட்டணத்தை மருத்துவ பீடத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 02ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.00 மணி வரை மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை ராகம - 11010, தலகொல்ல வீதி, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், பெறுகைக் குழு, மே/பா சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவ பீடம், களனிப் பல்கலைக்கழகம், ராகம என முகவரியிட்டு 2024 செப்டெம்பர் 03ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ராகம, தலகொல்ல வீதி, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்த உடனடுத்து சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஆவணங்களில் (BDS) குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சகல கேள்விப் படிவங்களுடனும் கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. சகல கேள்விகளுடனும் கேள்விப் பிணையின் நிலையான படிவத்தைப் பயன்படுத்தி இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் (இலங்கை மத்திய வங்கியில் பதிவைப் பெற்றுள்ள வர்த்தக வங்கி) வழங்கப்பட்ட 2025 ஜனவரி 03ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் ஒரு இலட்சத்து ஐந்நூறு (ரூபா 100,500.00) ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ராகம, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், காசாளருக்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியின் பயனாளி இலங்கை, களனிப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
2024-08-11.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM)

## கொழும்பு பல்கலைக்கழகம்

## ஆயுர்வேத மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ் (MD) தெரிவு செய்யும் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரல் – 2024

1) விண்ணப்ப முடிவு திகதி : 2024.08.30
2) பரீட்சைத் திகதி : 2024.09.14
3) அ) விண்ணப்பக் கட்டணம் : 2,000.00 ரூபா
   ஆ) பரீட்சைக் கட்டணம் : 10,000 ரூபா
4) 2024.08.13 ஆம் திகதியிலிருந்து 2024.08.30 ஆம் திகதியன்று வரையும் விண்ணப்பக் கட்டணத்தை பொறளை இலங்கை வங்கியின் சுப்பர் கிரேட் கிளையின் PGIIM இன் 0092027342 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பின்னர், பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம், வேலை நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பொறளை, தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் 5 ஆம் தளம், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து விண்ணப்பப் படிவம் மற்றும் ஏனைய இயைபுள்ள விபரங்களை கையேற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**சுதேச மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவனம்.**

### தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதலுக்கான பெறுகை அறிவித்தல்

**(ஒப்பந்த இல. NDL/MA/Eq – B/2024)**

01. தேசிய மருந்துகள் தரநிலை உறுதி ஆய்வுகூடத்தின் (NMQAL) ஒரு பிரிவிற்கு பின்வரும் ஆய்வு உபகரணங்களின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (NMRA) சார்பாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் கோருகின்றார்.

| தொடர் இல. | உபகரணம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | High performance liquid chromatography - auto sampler | 01 |
| 02 | Fourier Transform Infrared Spectrophotometer | 01 |
| 03 | Water Distillation Plant | 01 |
| 04 | Bench mounted Laboratory Chamber/Muffle Furnace | 01 |

02. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் (GOSL) பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையைப் பயன்படுத்தி விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ள தகுதி வாயந்த சகல விலைமனுதாரர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, இல. 130, W.A.D. ராமநாயக்க வீதி, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேற்கூறிய முகவரியிலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்கிடல் பிரிவில் (2ஆம் தளம்) 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் வேலை நாட்களில் வேலை நேரங்களில் (0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம்) விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி: 011-2698896/7,011-2303157 தொலைநகல்: 2689704)

    ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் பின்வரும் (4) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா செலுத்தியதற்கான பண வைப்புச் சீட்டு மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 05ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கடமை நேரங்களில் கொழும்பு-02, இல. 130, W.A.D. ராமநாயக்க வீதி, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்காளரிடமிருந்து. விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம். (தொலைபேசி: 011-2303157) இலங்கை வங்கியில் பேணப்படும் **78088835** எனும் கணக்கிலக்கத்திற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பெயரில் கொடுப்பனவுகள் செலுத்தப்படல் வேண்டும்.
05. தயவு செய்து உங்கள் விலைக்கோரல்களை கொழும்பு-02, இல. 130, W.A.D. ராமநாயக்க வீதி, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவருக்கு முகவரியிட்டு 2024 செப்டெம்பர் 05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கவும் அல்லது இதே முகவரியில் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.
06. சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணங்களில் உள்ள விலைக்கோரல் தரவுத் தாளில் (BDS) விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை ரூபாய் தொகையில் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி வங்கி உத்தரவாத படிவத்திலான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
07. விலைமனுவின் செல்லுபடிக் காலத்தின் பின் 28 நாட்களுக்கு விலைமனுப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
08. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் முதல் 91 நாட்கள் வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
09. மேற்கூறிய (04) பந்தியில் தரப்பட்ட முகவரியில் உள்ள NMRA அலுவலகத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் தொடர்பில் ஏதேனும் செலவுகள் மற்றும் கிரயங்களுக்கு NMRA பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை,**
**02ஆம் தளம், அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம்,**
**W.A.D. ராமநாயக்க வீதி,**
**கொழும்பு -02.**

# மஹிந்தவின் வாகனத்தில் வஜிர எங்கே சென்றார்?

**(04 ஆம் பக்கத் தொடர்...)**

என்று பாராளுமன்ற உறுப்பினர் மஹன் பிரதீப் நெற்றியை சுருக்கியபடி கூறினார். பங்களாதேசத்தில் உள்ள எதிர்க்கட்சிகளும் ஆட்சி பொறுப்பை ஏற்கவில்லை. இலங்கையில் அனுர சஜித் ஒடியது போன்று அவர்களும் ஒளிந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். என பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா கூறினார். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் திருத்தப்படும் என ஹர்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்த விடயமும் இங்கு உரையாடப்பட்டது."இந்த அறிக்கையால் தூதரகங்கள் கலக்கமடைந்துள்ளன.

IMF அத்தகைய ஒப்பந்தங்களைத் திருத்தவில்லை என்று அவர்கள் எங்களிடம் தெரிவித்தனர். ஒரு ஒப்பந்தத்தில் ஒருதலைப்பட்சமான திருத்தம் என்றால் அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படுகிறது. சர்வதேச நாணய நிதியம் ஒப்பந்தத்தில் இருந்து விலகினால், பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். ஏனெனில் நாடு இன்னும் நல்ல நிலைமைக்கு வரவில்லை என்று பேராசிரியர் ஆஷு கூறினார். "ஜப்பானிய திட்டங்கள் சர்வதேச நாணய நிதியத்தால் வருகின்றன. இப்படி பல திட்டங்கள் வந்துள்ளன என ஆஷு மேலும் கூறினார். "சஜித்திடம் சென்றவர்கள் நிபந்தனைகளுடனேயே சென்றுள்ளார்கள். ஜனாதிபதி உறுதியாக இல்லை என்றால், இந்த தேர்தல் ஒருபோதும் நடத்தப்படாது. ஜனாதிபதி இந்த மக்களை சரியாக வழிநடத்துவார் என பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசினர். அமைச்சர் றிஷாத்தும் உடனிருந்தார். ஜனாதிபதி மௌனமாக இருந்து விளையாடுவதாக எமது மக்கள் பேசுகின்றனர் என அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். இந்தக் கதைகளைக் கேட்ட ஜனாதிபதி ரணில் சிரித்துக் கொண்டார். எதையும் கூற அவசரப்படவில்லை. இதற்கிடையில், ஜனாதிபதி தேர்தலுக்கான ஊடக விதிகள் மற்றும் ஊடகங்கள் சுயாதீனமாக நடந்து கொள்கின்றனவா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கையிடும் பொறுப்பை தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்னவிடம் ஒப்படைத்திருந்தார்.

ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருக்கு அவர் இதனை அறிவித்துள்ளார். கடமையை சரியாக செய்யுமாறு கூறிய ஜனாதிபதி ரணில், எமக்கும் முறைப்பாடுகள் வரும் என நகைச்சுவையாக தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட அனுமதி பெறுவதற்காக வியாழன் மாலை ஜனாதிபதி சிறிகொத்த கட்சி தலைமையகத்திற்கு வந்தார்.

சுயேச்சை வேட்பாளராக போட்டியிடவும், அந்த சுயேச்சை வேட்பாளரை ஆதரிப்பதற்கும் செயற்குழு ஏகமனதாக ஒப்புதல் அளித்தது. ஜனாதிபதி திட்டமிட்டிருந்த சில வேலைகளுக்காக வார இறுதியில் கண்டி மற்றும் நுவரெலியாவுக்குச் சென்றார்.

**வஜிரவுக்கு மஹிந்தவிடமிருந்து அழைப்பு**

அண்மையில் கங்காராமவில் இடம்பெற்ற பொடி ஹாமதுருவின் தகனக் கிரியைகள் முடிவடைந்து அங்கிருந்து வெளியேறிச் செல்ல ஆயத்தமான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அருகில் இருந்த மற்றுமொரு அரசியல் தலைவருக்கு அழைப்பு விடுத்தார்.

அது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவுக்காகும்.

"வஜிர எனது வாகனத்தில் வந்து ஏறுங்கள். எனது வீட்டுக்குச் சென்று கொஞ்சம் பேசுவோம்" என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வஜிரவை நோக்கிக் கூறினார்.

அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட வஜிர அபேவர்தன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது காரில் ஏறிக் கொண்டார். காரின் பின்புறம் ஏறி அமர்ந்து கொண்ட இருவரும் தீவிர அரசியல் உரையாடல்களில் ஈடுபட்டனர். விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்ற இருவரும் பேசிய அரசியல் பேச்சுக்கள் அவர்கள் இருவருக்கும் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்திருந்தது.

# பங்களாதேஷ் அரசியல் நெருக்கடி பிராந்திய உறவை சீர்குலைக்கிறதா?

**(12 ஆம் பக்கத் தொடர்...)**

மேலும், ஹஸீனாவின் வெளியேற்றத்தின் பின்னர், கட்சிப் பாகுபடற்று இந்திய அரசியல் தலைவர்களின் ஹஸீனா மீதான கரிசனையும் அதனையே உறுதி செய்கின்றது. குறிப்பாக ஹஸீனாவின் பாதுகாப்பு சார்ந்து இந்திய காங்கிரஸும் கூடிய கவனத்தை செலுத்தியுள்ளது. காங்கிரஸின் பாராளுமன்ற குழுத் தலைவர் ராகுல் காந்தி பங்களாதேஷ் நிலவரம் தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் உரையாடியிருந்தார்.

ஹஸீனாவின் அவாமி லீக் கட்சி மற்றும் அதன் தலைமையுடன் இந்தியா நல்ல உறவை அனுபவித்தாலும், பி.என்.பி மற்றும் அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்இஇஸ்லாமி போன்ற பிற அரசியல் கட்சிகளுடன் அது போன்ற உறவைக் கொண்டிருக்கவில்லை. வாஷிங்டனை தளமாகக் கொண்ட வில்சன் மையத்தில் உள்ள தெற்காசிய கல்வி நிறுவனத்தின் இயக்குனர் மைக்கேல் குகல்மேன் கூறுகையில், "ஹஸீனா மற்றும் அவாமி லீக்கிற்கு மாற்றாக ஏதேனும் இருந்தால் அது இந்திய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று இந்தியா கவலை கொண்டுள்ளது. புது டில்லியின் பார்வையில், பி.என்.பி மற்றும் அதன் கூட்டாளிகள் இந்திய நலன்களை கெடுக்கக்கூடிய ஆபத்தான இஸ்லாமிய சக்திகள்" என தெரிவித்திருந்தார். ஹஸீனாவுக்கான இந்தியாவின் அடைக்கலத்திற்கு பி.என்.பி தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. 1991இல் பி.என்.பி தலைமையிலான அரசாங்கத்தில் மூத்த உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கயேஷ்வர் ராய், "பங்காளதேசமும் இந்தியாவும் பரஸ்பர ஒத்துழைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று பி.என்.பி நம்புகிறது. அந்த உணர்வைப் பின்பற்றும் விதத்தில் இந்திய அரசு புரிந்துகொண்டு நடந்துகொள்ள வேண்டும். ஆனால் நீங்கள் எங்கள் எதிரிக்கு உதவி செய்தால் அந்த பரஸ்பர ஒத்துழைப்பிற்கு கடினமாகிவிடும்." எனத்தெரிவித்துள்ளார்.

எனவே, பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, பிராந்திய ரீதியில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் நெருக்குவாரத்தை உருவாக்கியுள்ளது. ஹஸீனாவுக்கான இந்திய ஆதரவு, பங்களாதேஷில் புதிகாக உருவாகும் அரசாங்கத்தை, இந்தியாவிலிருந்து விலக்கும் ஆபத்தை உருவாக்கியுள்ளது. பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் யூனுஸ், "இந்தியா போன்ற சில நாடுகள் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமரை ஆதரித்தாலும், பங்களாதேஷ் மக்களின் பகையை சம்பாதித்தாலும், இந்த வகையான பிளவுகளை குணப்படுத்த பல வாய்ப்புகள் இருக்கும்" என பங்களாதேஷுக்குத் திரும்புவதற்கு முன்பு தி எகனாமிஸ்டில் தெரிவித்துள்ளார். இது இந்தியாவை அணைத்துக்கொள்ளும் கருத்தாகவே அவதானிக்கப்படுகிறது. மேலும், நெருக்கடி குழுவைச் சேர்ந்த கீன், நடைமுறை உறவுகளுக்காக நாடுகள், கடந்த காலத்தை ஒதுக்கி வைக்கும் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியா பங்களாதேஷ் உறவு பிராந்திய பங்காளிகளாக இரு தேசத்துக்கும் முக்கியத்துவமானதாக அமைவதனால், விரைவான வெளியுறவு சீர்திருத்தம் இருதரப்பிலும் எதிர்பார்க்கப்படுகிறது.



# வாரபலன்

11.08.2024 - 17.08.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எடுத்த காரியங்களில் நல்ல பலன்கள் கிடைக்கும். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலைகள் குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். ஆனாலும் நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பெண்கள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் இருக்கும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

பொருளாதார நிலையில் சாதகமான பலன்கள் ஏற்படும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துகள் சம்பந்தமான பிரச்சினைகள் அனைத்தும் அகலும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருட்களை கவனமாக, பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினர் தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. மாணவர்களுக்கு திடீர் டென்ஷன் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக் கூடும். நன்கு படிப்பது நல்லது. பெற்றோர் ஆதரவு பெருகும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

வழக்கு சம்பந்தமான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். புத்திசாதூரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். பாராட்டுகள் கிடைக்கும். உடல்சோர்வு உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் மனதிருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவார்கள். குடும்பத்தினரின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவார்கள்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

வழக்கு சம்பந்தமான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். புத்திசாதூரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக் கூடும். பாராட்டுகள் கிடைக்கும். உடல்சோர்வு உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் மனத் திருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவார்கள்.

குடும்பத்தினரின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவார்கள்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எல்லாவகையிலும் நன்மைகள் உண்டாகும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பண வரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்கள் தங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வார்கள்.நட்புகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். கலைத்துறையினரின் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் சக மாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். இராசிநாதனின் சார பலத்தின் மூலம் முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும் போது கோபத்தை குறைத்துப் பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். பெண்கள் நிதானமாக பேசுவது நன்மை தரும். தேவையற்ற பிரச்சினையிலிருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் ஆதாயமடைவர். மாணவர்கள் சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். விரய ஸ்தானத்தில் இருக்கும் கேதுவால் பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். நண்பர்கள் மத்தியில் மதிப்புக் கூடும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

அனுகூலமான பலன்கள் ஏற்படும். வீடு – மனை – வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். காரியத் தடை, தாமதம் விலகும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். உங்களுக்கு நற்பெயர் கிடைப்பதில் எந்த இடையூறும் இருக்காது. குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும் படியான சூழ்நிலைகள் மாறும். ஆனாலும் அனைத்து விடயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். கலைத்துறையினர் சில போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

பேச்சின் இனிமையால் காரியங்கள் கைகூடும். பஞ்சம விரயாதிபதி செவ்வாயின் சஞ்சாரம் சுப பலன்களை தரும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். எதிர்ப்புகள் நீங்கும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் வாய்ப்பளிக்கும். மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கல்வியில் திருப்தி உண்டாகும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். சுக்கிரன் சஞ்சாரம் அனுகூலமான பலன் தரும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். உறவினர்கள் – நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்த படி இருக்கும். எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். உற்சாகமாக காணப்படுவர்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் காரிய தடங்கல்கள் வரலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள்.

பயணங்களின் போது உடமைகளை கவனமாக, பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். புதிதாக வீடு – மனை வாங்குவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். பெண்கள் புதிய பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. நண்பர்களால் ஆதாயம் ஏற்படும். கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடுவார்கள்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

எல்லாவற்றிலும் இருந்து வந்த மனக் கவலைகள் நீங்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே எந்தவொரு வேலையை செய்வதாக இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்க செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாக கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பெண்களுக்கு திடீர் செலவுகள் உண்டாகலாம். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.



# படித்ததும் பகர்வதும் 203





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### தேர்தல் ஒன்று வருகிறது!




இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2024 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்போது எல்லோரது நாவிலும் ஜனாதிபதி தேர்தல் பற்றிய விடயங்களே நடனமாடுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

தேர்தல்கள் வரும்போது அவை தொடர்பான பல விடயங்களைப் பற்றி சிந்திக்க, கதைக்க, கலந்தாலோசிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அவற்றை ஒவ்வொரு விடயமாக கவனிப்பதும், அவசியமான விடயங்களை முறையாக கலந்துரையாடுவதும் முக்கியமானதாகக் கொள்ளப்பட வேண்டும்.

தேர்தல்கள், குடும்ப உறவை, நட்பை, சீரிய தொடர்புகளை சீர்குலைப்பதற்கு காரணமாக அமைந்திட இடமளிக்கக் கூடாது. தேர்தல்களின் போது குடும்ப உறவினர்களிடையே, ஒரு சாரார் தாம் ஆதரிக்கும் ஒரு தரப்பினருக்காகவே முற்று முழுதான ஆதரவு தெரிவிப்பதும், அதற்காகவே என மற்ற தரப்பினர்களுக்கு எதிராக செயற்படுவதும் இத்தகைய பிரச்சினைகள், பிரிவினைகள் தோன்றுவதற்கு காரணிகளாக உள்ளன.

ஜனநாயக நாடுகளில் ஒவ்வொரு பிரஜையும் தேர்தல்களின் போது தாம் விரும்பியவரை தெரிவு செய்யவும், அவருக்காக ஆதரவு திரட்டவும், அவருக்கே வாக்களிக்கவும் சுதந்திரம் இருக்கிறது. இத்தகைய சுதந்திரத்தை நடைமுறையில் அனுபவிக்கும் போது அது மற்றவர்களது இத்தகைய சுதந்திரத்தை பாதிக்கும் விதத்தில் நடத்து கொள்ள கூடாது. இதன் மூலமே தேவையற்ற பிரச்சினைகள் உருவாகுவதை தவிர்க்க முடியும்.

ஒரு வீட்டில் தந்தை ஒரு தரப்பினருக்கும், தாய் இன்னொரு சாராருக்கும், பிள்ளை மற்றொரு பிரிவினருக்கும் என வேறுபட்ட விதத்தில், வேறுபட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும், அதற்காக செயற்படுவதும், அவர்களுக்காக ஆதரவு திரட்டுவதும் தேர்தல் காலங்களில் சகஜமானவைதாம். ஆயினும் ஒவ்வொருவரும் மற்றவரது சுதந்திரத்திற்கும், கருத்துக்கும், அபிலாசைக்கும் இடமளித்து செயற்படுவதன் மூலம் ஒருவருக்கொருவர் சுமூக உறவைப் பேண முடியும். மாறாக ஒருவர் மற்றவரை தமது எதிரியாகக் கருதி செயற்படுவதன் மூலம் பிரிவினைகளும், மனக்கிலேசங்களும், விரும்பத்தகாத விடயங்களும், விரோதங்களும் ஏற்படுகின்ற நிலைமையே உருவாகும். இதனால் எல்லா வகையிலும் நல்லுறவுகளுக்கு பாதிப்பே ஏற்படும்.

தேர்தல் காலங்களில் ஒவ்வொருவரும் தாம் விரும்பியவருக்கு வாக்களிக்கும் சுதந்திரம் இருப்பது போலவே மற்றோருக்கும் அதே அளவு சுதந்திரம் அவரது தெரிவுக்கும் இருக்கின்றது என்பதை உணர்ந்து, அதற்காக விட்டுக் கொடுத்து செயற்படும் போதுதான் தேவையற்ற பிரச்சினைகளும், குடும்ப உறவில் விரிசல்களும், இணக்கப்பாடுகளின் பிளவுகளும் தோன்றுவதை தவிர்க்க முடியும். இத்தகைய விடயங்களை தேர்தல்களின் ஆரம்ப காலத்திலேயே சரியாக புரிந்து செயற்படுவதன் மூலம் வீண் பிரச்சினைகள், பிளவுகள், குழப்பங்கள், வேற்றுமைகள் போன்றவற்றை தவிர்த்து, ஒற்றுமையாக, நல்லுறவோடு இணைந்து வாழும் நல்ல சூழல் ஏற்படும்.

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### சோற்றில் மறைத்த முழுப் பூசணிக்காய்



ஒரு பணக்காரனும் அவன் மனைவியும் ஒரு பூசணித் தோட்டம் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அந்த அம்மாவுக்கு பூசணிக்காய் மேல் ஆசை வந்தது. “எனக்கு இப்பவே பூசணிக்காய் வேனும்” என்று அடம் பிடித்தாள்.

மனைவியின் தொல்லை தாளாமல், சுற்றும் முற்றும் பார்த்த பணக்காரன், ஒரு பூசணிக்காயை பறித்துக் கொண்டான். அதனை வீட்டுக்கு கொண்டு போய் குழம்பு வைத்து சாப்பிட்டார்கள். இதனை எப்படியோ மோப்பம் பிடித்த சிலர் அரசல் புரசலாக ‘பணக்காரர் பூசணிக்காயைத் திருடி விட்டார்’ என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இதை மறைக்க ஒரு உபாயம் கண்டுபிடித்த பணக்காரர், ஊரில் உள்ள எல்லோரையும் தம் இல்லத்துக்கு அழைத்து சோறு, வடை, பாயசத்துடன், ஆடம்பரமான, சுவையான, தடல்புடலான விருந்து ஒன்றை வைத்தார்.

இந்த விருந்தில் பெரும்பாலான ஊர் மக்கள் கலந்து கொண்டனர். பின்னர் ஊர் மக்கள் “இவ்வளவு பணம் செலவு செய்து, தடல் புடலாக எல்லோருக்கும் விருந்து வைக்கும் இவரா கேவலம் ஒரு பூசணிக்காயைப் போய்த் திருடியிருப்பார். இருக்கவே இருக்காது” என்று பரவலாகப் பேசிக் கொண்டார்கள்.

இதனால் அந்த பணக்காரர் மீது எந்த தவறான எண்ணமும் உருவாகவில்லை.

இது தான் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதையோ!

## சிந்தனை செய் மனமே

### காரும் தெரு நாயும்



ஒரு செல்வந்தர் தனது விலை உயர்ந்த ஒரு காரை தனது வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்தார். அந்த வழியாக சென்ற தெரு நாய் ஒன்று அதன் மீது சிறுநீர் கழித்தது. இதைப் பார்த்த அவர் சிரித்தார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த அவரின் உதவியாளர் "ஐயா நீங்கள் ஏன் நாயைப் பார்த்து விரட்டி விடவில்லை. வெறுமனே சிரித்துக் கொண்டிருக்கின்றீர்கள்" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

அதற்கு அவர் மிகவும் சாந்தமாக, "அந்த நாய் அதன் அறிவிற்கு எட்டியதைச் செய்கின்றது. அதன் அறிவு அவ்வளவுதான். அதற்கு இந்த காரின் மதிப்போ, பெறுமதியோ, விலையோ எதுவுமே தெரியாது. அதைப்பற்றி சொன்னாலும் அதற்குப் புரியப் போவதில்லை." என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

கேள்வி கேட்ட உதவியாளர் இப்படி ஒரு பதிலை அவரிடமிருந்து சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இது எத்தகைய அறிவுபூர்வமான விடயம் என தனக்குள் நினைத்துக் கொண்டார்.

இது போலத்தான் உங்கள் வாழ்விலும் உங்கள் மதிப்பை அறியாதவர்கள் உங்களை அவமானப்படுத்தும் போதும், கேலி செய்யும் போதும், தவறாக நடந்துகொள்ளும்போதும் அவர்களைப் புன்னகையுடன் கடந்து செல்லுங்கள். ஏனென்றால் "அந்த நாய்களுக்கு எதை சொன்னாலும் புரியாது. என்ன அறிவுரை சொன்னாலும் திரும்ப திரும்ப அவை சொன்னதையே செய்யும்”. என்று எண்ணிக் கொண்டே சிரித்துக் கொண்டே அதை கடந்து போய் விடுங்கள். உங்கள் கடமை எதுவோ அதை மட்டும் சரியாகச் செய்யுங்கள்..

## வாசித்ததில் வசீகரித்தது

### டீக்கடையில் இப்படியா?

ஒரு டீக்கடை வாசலில் நின்னுட்ருந்தேன். ரொம்ப அரிதா டீ சாப்பிடும் பழக்கம் தான் எனக்கு! டீ சொல்லிட்டு காத்திருந்தேன்.



“'சார் கொஞ்சம் சீனி கொடுங்கன்னு', என் பின்னாடி இருந்து ஒருத்தர் கை நீட்டினார்...

டீ மாஸ்டர் கொடுக்கிறதுக்கு யோசிச்ச ஒரு வினாடியில் அவருக்கு பின்னாடி நின்னுட்டிருந்த ஒரு சீனியர் மாஸ்டர் படக்குன்னு டப்பாவுக்குள் கையை விட்டு சீனியை அள்ளி எடுத்து அவரிடம் கொடுத்தார். வாங்கினவர் அதனை வாயில் போட்டுட்டு போய் விட்டார்.

எனக்கு இந்த செயல் பார்க்க வித்தியாசமா இருந்தது. தண்ணி கேப்பாங்க, பீடி பத்த வைக்க நெருப்பு கேப்பாங்க. இதென்னடா சீனி கேக்குறாங்கன்னு யோசிச்சிட்டே சீனியர் மாஸ்டர் என்ன பேசுறார்ன்னு கவனிச்சேன்.

“அடேய், யாராவது சீனி கேட்டா உடனே கொடுக்கணும்டா. அது ரொம்ப முக்கியம்.” என்றார்.

“இல்லண்ணே. திடீர்ன்னு வந்து சீனி கொடுன்னு கேட்டாரு. அதான் எதுக்குன்னு யோசிச்சேன்”. என்றான் அவன்.

“டேய், அவங்க கேக்க கூட தேவையில்ல, கையை நீட்டினாலே நாம கொடுத்துறணும். அவங்க சுகர் பேஷண்ட்டா இருக்கலாம்டா. மாத்திரை போட்டு சுகர் குறைந்திருக்கலாம். அவசர அவசரமா வந்து கேப்பாங்க. அவங்களால பேச முடியாது. நாம ஒரு நிமிஷம் தாமதிச்சாலும் மயக்கம் போட்டுருவாங்கடா. அந்த பாவம் நமக்கு வேணாம். சட்டுன்னு குடுத்துறணும்டா. என்னா. நா சொல்றது விளங்குதா?”. என்றார் சீனியர் மாஸ்டர்.

“சரினே, எனக்கு இது பத்தி தெரியாதுணே. இனிமே கட்டாயம் கொடுத்திடறேன்ணே.!” என்று பணிவாகப் பதிலளித்தான் அவன்!

இந்த உரையாடலை கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

டீக்கடையில இப்படி ஒரு தயவா?. மனிதர்களுக்கு ‘தேவை’ என்பது எப்படியெல்லாம் ஏற்படுகிறது. அதனை வெவ்வேறு பட்டவர்கள், தமது அனுபவத்தைக் கொண்டு எப்படியெல்லாம் கையாளுகிறார்கள். மனிதாபிமானம் எத்தனை வடிவங்களில் எவ்வாறெல்லாம் வாழ்கிறது.

நினைத்துப் பார்த்த எனக்கு இது ஒரு புதுப் படிப்பினையாக அமைந்தது.

## அந்த நாள் ஞாபகம்



இலங்கை பல்கலைக்கழகத்தில் முதலாவது முஸ்லிம் மஜ்லிஸ் 1944ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது. முதலாவது முஸ்லிம் மஜ்லிஸ் நிர்வாகிகளை இப்படத்தில் காணலாம். கொழும்பு சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் காலஞ்சென்ற சாபி மரிக்கார் இம்மஜ்லிஸ் உருவாக்கத்தில் முன்னோடியாக இருந்துள்ளார். இன்று சகல பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் முஸ்லிம் மஜ்லிஸ்கள் இயங்கி வருகின்றன. உப வேந்தர் பேராசிரியர் ஐவர் ஜெனிங்ஸ், பேராசிரியர் எஸ்.ஏ இமாம், எஸ். எம் கமால்தீன் உட்பட பல மூத்த ஆளுமைகள் இப்படத்தில் காணப்படுகின்றனர்.

## நொறுக்குத் தீனி

### ஆங்கிலம் அறிவோம்




காலைப் பொழுதை AM என்கின்றோம் இது Ante meridiem என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது.

மாலைப் பொழுதை PM என்கின்றோம் இது Post meridiem என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது.

வீடுகளை தேடும்போது பயன்படுத்தப்படும் BHKயின் அர்த்தம் BBed Room ஐயும் HHall (living room)ஐயும் KKitchenஐயும் குறிக்கிறது.

ஆங்கிலத்தில் ‘dous’ என முடியும் நான்கு வார்த்தைகள் மட்டும் தான் இருக்கிறதாம். அவை tremendous, horrendous, stupendous, மற்றும் hazardous.

"The quick brown fox jumps over the lazy dog." என்ற இந்த வாக்கியத்தில் ஆங்கில எழுத்துக்கள் அனைத்தும் உள்ளடங்கியுள்ளன.

abcdef என்ற ஆறு எழுத்துக்களும் கொண்ட ஒரு குறுகிய வார்த்தை Feedback.

ஆங்கிலத் தட்டச்சுப் பலகையின் ஒரே ஒரு வரிசையை மட்டும் பயன்படுத்தி நம்மால் தட்டமுடியும் மிக நீளமான வார்த்தை Typewriter.

a,b,c,d என்ற எழுத்துக்கள் ஜீரோ (Zero), ஒன்று (One) முதல் தொண்ணூற்று ஒன்பது (Ninety Nine) வரையுள்ள ஆங்கில வார்த்தைகளில் இடம்பெறவில்லை.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207




# வெளிவருகின்றன பாருங்கள் மர்மங்கள்! இதனால் நிகழ்கின்றனவே அதிசயங்கள்!

காரில் இருந்து இறங்கிய ஒருவர்,
சிரஞ்சீவி,
மற்றது
சிந்துஜன்,
அவர்கள் இருவரையும் பார்த்ததும்,
துர்காவிற்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வர்ணிப்பதற்கு வார்த்தைகளே இல்லை!
விரைந்து ஓடிவந்து,
சிரஞ்சீவியின் கைகள் இரண்டையும் கட்டிப்பிடித்துக் கொண்டு,
விக்கி விக்கி அழுதாள்!
சிறிது நேரம் வரையில்,
எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்தார் சிரஞ்சீவி
மனதை ஒருவாறு தேற்றிக் கொண்ட துர்கா,
இதுவரையில் நடந்த எல்லா விஷயங்களையும்,
ஒன்றுவிடாமல் சிரஞ்சீவியிடம் எடுத்துச் சொன்னாள்.
அதில்,
சப்இன்ஸ்பெக்டர் இறந்து விட்டார் என்ற செய்தியை அவரால் நம்பமுடியாமலே இருந்தது!
"அப்படியானால் சொலமன் இன்ஸ்பெக்டரை உண்மையிலேயே சுட்டு விட்டார் என்றா நீங்க சொல்லுறீங்க?"
"ஆமாம்" என்பதைப் போல் தலையை ஆட்டினாள் துர்கா.
"இன்ஸ்பெக்டர் செத்து விட்டார் என்றா நீங்க நினைக்கிறீங்க?"
"ம்.. அப்படித்தான் நான் நினைக்கிறேன். சொலமன் இன்ஸ்பெக்டரை சுட்டதை நான் நேரடியாகவே பார்த்தேன்!" சொல்லிவிட்டு,
அச்சமிகுதியினால்,
தலையை அப்படியும் இப்படியும் ஆட்டினாள் துர்கா!
"ஐயோ சிரஞ்சீவி சேர் இப்படி ஒரு பயங்கரமான இடத்தை நான் நாவல்களிலோ திரைப்படங்களிலோ பார்த்ததில்லை!" சொல்லிவிட்டு,
மீண்டும் அழத்துவங்கி விட்டாள்.
இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சிந்துஜன்,
விரைந்து முன்னால் வந்து
அவளை,
தன்னருகில் இழுத்துக் கொண்டு,
"பயப்படவேண்டாம் துர்கா... நாங்கள் இப்போது உங்களை அழைத்துச் செல்லப் போகிறோம்!" என்றான்.
அவர்கள் முன்னால் நடந்துவரும் போது,
கைவிளக்கை ஏந்தியபடியே முன்னால் வந்தாள் பேபிநோனா!
விரைந்து முன்னால் சென்று,
அவளை ஒரு பக்கமாக விசாரித்த போதும்,
தன்னைக் கைது செய்யத்தான் அவர் வந்திருக்கிறார் என்று நினைத்துக் கொண்ட பேபிநோனா,
பைத்தியம் பிடித்தவளைப் போல்,
உளறத் தொடங்கிவிட்டார்.
இதைப்புரிந்து கொண்ட சிரஞ்சீவி,
"ஏய்...பேபி நோனா இதோபார்... உன்னைப்பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். இந்த பொய்யான நடிப்பெல்லாம் என்னிடம் வேண்டாம். நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லு... சொலமன் ஐயா இன்ஸ்பெக்டரின் பிணத்தைத் தூக்கிக் கொண்டு போகும் போது திரும்பவும் வருவேன் என்று சொல்லிவிட்டுப் போனாரா?"
"இல்லை... அவர் மீண்டும் வருவார் என்று நான் நினைக்கவில்லை சேர்!"
"உனது நினைப்பெல்லாம் எனக்குத் தேவையில்லை. இந்த நாடகத்தில் உனது கதாபாத்திரத்தைப் பற்றி பொறுப்புக் கூறவேண்டும்!"
"ஐயோ... தெய்வமே இதில் எனது தவறு எதுவும் இல்லை. நான் ஓர் அப்பாவி. துர்கா அம்மாவுக்கு பைத்தியம். அதற்கு வைத்தியம் பார்க்க வேண்டும் என்று சொல்லத் தான் சொலமன் ஐயா என்னை இங்கே அழைத்து வந்தார். இதில் எனது தவறு என்ன இருக்கிறது?" என்று கேட்டுவிட்டு,
தலையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள் பேபிநோனா!
அதைப்பார்த்து,
கேலியாகச் சிரித்தார் சிரஞ்சீவி,
"இந்த அம்மாவுக்கு பைத்தியம் இல்லை என்பதை இப்போதாவது நீ புரிந்து கொள்!"
சிரஞ்சீவி இப்படிச் சொன்னதும்,
படாரென்று அவர் காலில் விழுந்து,
கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்!
"நீ என்னதான் என் காலில் விழுந்தாலும் இந்தக் கேஸில் இருந்து நீ தப்பவே முடியாது பேபி நோனா... நீதிமன்றத்தில் இருக்கும் எல்லா நீதிபதிகளுக்கும் உன்னைப்பற்றி நன்றாகவே தெரியும்!" என்றார்.
அப்போதும் அழுகையை நிறுத்தாமல் தொடர்ந்து பேசினார் பேபி நோனா,
"உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் சேர்... தயவு செய்து என்னை போக விடுங்கள்! அந்த எலும்புக் கூட்டைக் கூட துர்கா அம்மா தான் கண்டு பிடித்தார்கள்!"
"எலும்புக்கூடா! என்ன எலும்புக்கூடு!" வியப்புடன் கேட்டபடியே,



துர்காவின் பக்கம் திரும்பினார் சிரஞ்சீவி!
அந்த மண்டை ஓட்டைப் பற்றி அவருக்குத் தெரிந்த விபரங்களை,
சிரஞ்சீவியிடம் சொன்னாள் துர்கா!
இதைக் கேட்டுவிட்டு,
சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கியிருந்த சிரஞ்சீவி,
"ஓ... அப்படியானால் அதையும் இங்குதான் மறைத்து வைத்திருக்கிறார்கள்!" என்று,
தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்!
தனக்குத் தெரியாமல் இருந்த சில மர்மங்கள்,
இப்போது தெரிய வருவதைப் போல் அவருக்குத் தோன்றியது!
"சரி அதைப்பற்றி நாம் பிறகு தேடிப்பார்ப்போம்.இன்னும் சிறிது நேரத்தில் பொழுது விடிந்துவிடும். இப்போது தேநீர் கொஞ்சம் ஊற்று!" என்று,
பேபி நோனாவைப் பார்த்து சொல்லியபடியே,
காதலர்களைப் பார்த்தபடியே,
வெளியே இறங்கினார் சிரஞ்சீவி,
அங்கே,
சொலமனின் கார் போன டயர் அடையாளம் தெரிந்ததால்,
அதைத் தொடர்ந்து கொஞ்ச தூரம் நடந்தார்.
ஆனாலும்,
அதுபோய் ஒரு புல்தரையில் முடிந்தது!
அதன்பிறகு,
பனி பெய்திருந்த புல்தரையை நசுக்கிக் கொண்டு சென்றிருந்தது.
அதனையும் பின் தொடர்ந்து சென்றார்.
செடிகள் நிறைந்த ஒரு பகுதி வந்தது.
அதற்குள்,
சொலமனின் கார் மறைத்து வைக்கப்பட்டிருந்தது!
இன்னும் கொஞ்சம் அருகில் சென்று பார்த்தார்!
காருக்குள்,
எவரும் இல்லை!
பின்பக்க ஆசனத்தில் இரத்தக்கறை படிந்திருந்தது!
காரை இங்கே மறைத்து வைத்துவிட்டு,
இன்ஸ்பெக்டரின் பிணத்தை மறைத்து வைப்பதற்காக எங்கோ எடுத்துச் சென்றிருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட சிரஞ்சீவி,
டோர்ச் லைட்டை எடுத்து,
அதன் உதவியுடன்,
சுற்றுப் புறத்தைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தார்.
சந்தேகப்படக் கூடிய விதத்தில் எதுவும் கிடைக்கவில்லை என்பதனால்,
திடீரென்று தோன்றிய ஒரு யோசனையினால்,
மீண்டும் காரின் அருகில் வந்து,
பின்பக்க டயரின் காற்றைத் திறந்து விட்டார்!
"ம்... சொலமன் திரும்பி வந்தாலும் இனி இங்கிருந்து அவ்வளவு எளிதில் தப்பிச் செல்ல முடியாது" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு,
இன்ஸ்பெக்டரின் பிணத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்.
சற்றுத் தொலைவில்,
பாறைகளுக்கு நடுவால் செல்லும் நீரோடை ஒன்றின் சத்தம் கேட்டதால்,
விரைந்து அந்தப் பகுதிக்குச் சென்றார்.
அங்கே,
ஒரு பாறையின் மீது,
ஓர் உருவம் அமர்ந்திருப்பது போல் தெரியவே,
டோர்ச் லைட்டை அணைத்துவிட்டு,
பாறையை நோக்கி விரைந்து நடந்தார்!
அந்த பாறையின் மீது,
அமர்ந்திருந்த உருவத்தைப் பார்த்ததும்,
அவர் வியப்பினுள் விழுந்தார்!
கைக்குட்டை ஒன்றினால் தோற்பட்டையில் கட்டுப் போட்ட படியே, மிகுந்த சிரமத்துடன் அங்கே அமர்ந்திருந்தவர்,
சப்இன்ஸ்பெக்டர்!
"இன்ஸ்பெக்டர்!" என்று அழைத்தபடியே அவர் அருகில் போய் அமர்ந்து கொண்டார் சிரஞ்சீவி!
"ஓ... சிரஞ்சீவியா... நீங்கள் அவனைக் கைது செய்து விட்டீர்களா?" தோற் பட்டையைப் பிடித்தபடியே கேட்டார் சப் இன்ஸ்பெக்டர்.
"இல்லை... அவருடைய கார் இங்கே தான் இருக்கிறது.ஆனால் ஆளைக் காணவில்லை! சரி... உங்களுக்கு என்ன நடந்ததென்று சொல்லுங்களேன்!"
இதுவரை நடந்தவற்றையெல்லாம் சிரஞ்சீவியிடம் விபரமாகச் சொன்னார் இன்ஸ்பெக்டர்.
"எனது துப்பாக்கியைப் பயன்படுத்துவதற்கு முன்பே நான் கீழே விழுந்து விட்டதால், நான் செத்து விட்டதைப் போல் நடிப்பது தான் நல்லதென்று எனக்குத் தோன்றியது. அதனால்... அவன் துப்பாக்கி சூடுபட்டு நான் செத்து விட்டதைப் போல் நடித்தேன். அவனும் அதை நம்பி நான் இறந்துவிட்டதாக நினைத்து என்னைத் தூக்கிக் கொண்டு வந்து, அதோ அந்த ஓடையில் வீசிவிட்டான்! எனது அதிர்ஷ்டமோ என்னமோ இங்கே இருந்த பாறைகள் எதிலும் எனது தலைமோதிக் கொள்ளாததனால் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்...!"
"சரி... இப்போது எங்கே இந்த சொலமன்... எங்கே பாய்ந்து விட்டார்?"
"அவர் வேறு கார் ஒன்றை எங்காவது மறைத்து வைத்திருந்தாரோ தெரியாது...!"
அவர் இப்படிச் சொன்னதும்,
சிரஞ்சீவியும் அதை ஆமோதிப்பதைப் போல் தலையை ஆட்டினார்!
சிரஞ்சீவியின் துணையுடன் இன்ஸ்பெக்டரும் அவரும் துப்பாக்கிமுனைக்கு வந்து சேர்ந்தபோது,
தேநீர் மேசையில் தயாராகியிருந்தது!
சிரஞ்சீவியுடன் வந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும்,
துப்பாக்கிமுனையில் இருந்த எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள்!
"நீங்கள் என்னைப் பயங்காட்டி இரண்டு முறை எனக்கு நினைவில்லாமல் போகும் படி செய்தீர்கள் இல்லையா இன்ஸ்பெக்டர்?" முன்தினம் நடந்த சில சம்பவங்களை ஞாபகப்படுத்தி,
இன்ஸ்பெக்டரைப் பார்த்து,
அப்பாவியாகச் சிரித்தாள் துர்கா!
"இல்லை இல்லை... நான் பயங்காட்டவில்லை.நீங்கள் தான் பயந்து போனீர்கள். இங்கிருந்து பாய்ந்து போகும் எதிர்பார்ப்பில் சுவற்றை உடைக்கப் போய் எலும்புக் கூட்டைக் கண்டு பயந்த போது நீங்கள் மயங்கி விழுந்து விடுவீர்கள் என்பது எதிர்பார்த்ததுதான்.
ஆனாலும் நீங்கள் எலும்புக் கூட்டைக் கண்டு பயந்ததைவிட எனது நிழலைக் கண்டு தான் பயந்து போனீர்கள்! அப்போது நான் உங்களை தூக்கிக் கொண்டு போய் கட்டிலில் போட்டு விட்டு பேபி நோனாவின் சாரியில் ஒரு துண்டைக் கிழித்து தண்ணீரில் முக்கி உங்கள் நெற்றியில் போட்டேன். அவருடைய சாரியை நீங்கள் கிழித்து விட்டதாக நினைத்துத்தான் அவள் உங்களுடன் சண்டை போட்டாள்!
இன்ஸ்பெக்டர் இப்படி சொன்னதும்,
அவரை வியப்புடன் பார்த்தாள் துர்கா!

(தொடரும்...)

# நிரப்பப்படாத வெற்றிடம் நோக்கி நகரும் ஜீவனுள்ள காற்று; மு.நி.காரியப்பர் கவிதைகள்



'அந்த கல்முனைக்குடி நாட்கள்' எனும் தலைப்பில் தன் பால்யகால நினைவுகளையும், அனுபவங்களையும் வேட்டையாடி, நம் கைகளில் விருந்தளித்திருக்கும் கவிஞர் மு.நி.காரியப்பருக்கு என் இதயபூர்வ வாழ்த்துக்கள். அந்த கல்முனைக் குடிநாட்கள்' அவருக்கு முதல் தொகுப்பாகும். இது, ஒருபுதுக் கவிஞனுக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளுக்கும், விடுபாட்டுக்கும், தவிர்ப்புக்களுக்கும் உட்பட்டதொகுப்பாகும். தனது எண்ண அலைகளை, தனது பார்வையை, தனது தனித்துவத்தை, வித்துவத்தை மொழி வடிவில் கொண்டு வருவதற்கான பிரயத்தனங்களின் தொகுப்பாகும் என்று இதனைப் புரிந்துகொள்ளலாம். தனக்கான தனித்துவக் கவிதைகளைத் தனது கல்விமொழியல்லாத தமிழ் மொழியில் தீவிரமாகக் கண்டடையத் தொடங்கியமை கவிஞரின் ஆளுமைக்குக் கிடைத்த பெரும் வெற்றியே. இக்கவிதைகள் கவிஞனின் அனுபவங்களாகவும், அகப்பொருளாகவும், செறிவான எழுத்தாகவும் விஷேடமாக வாழ்வியல் தத்துவத்தை நோக்கியும் நகரத் தொடங்கியுள்ளது. கவிஞரின் பின்வரும் கவிதையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். '

இல்லை என்பதே எல்லாம்' இல்லை என்பது இல்லாமை அல்ல அதுவே எல்லாம்.
உன்னிடம் இருப்பதோ கையளவு கொடுத்துவிடு.
அப்போதுஉலகே உன்னுடையது உணர்ந்துவிடு. (ப:60)

சொற்ப வரிகளில் மிகப்பெரிய வாழ்வியல் தத்துவங்களைக் கட்டியெழுப்பும் சூட்சுமம் இக்கவிஞனுக்கு வாய்த்துள்ளது. கவிஞர் தனது நூலின் முன்னுரைக் குறிப்பில், 'கதை எழுதவரவில்லை. கவிதை சுத்த சூனியம்' என்று பதிவுசெய்துள்ளார். ஆனால், நான் இல்லாத என்னை...! எனும் கவிதையில் இல்லாத சிறையில் என்னை நான் சிறையடைத்துவிட்டேன்.

வராத வெள்ளத்தில் நான் மூழ்கிவிட்டேன்.
புரியாத யுத்தத்தில் நான் மாண்டுவிட்டேன்.
என்னை நானே தொலைத்து விட்டேன்.
இங்கே நீ காண்பது நான் இல்லாத என்னை... (ப:51)

'நான் ஒரு முடக்கவிஞன்' என்ற பிரகடனத்துடன் எழுத ஆரம்பித்த உங்களால் எப்படி இந்தக் கவிதை சாத்தியமானது? நிச்சயமாக, கவிதைத் தொழில்நுட்பங்களையெல்லாம் உதறிவிட்டு, உயிர் நுட்பத்தை மட்டும் நம்பித் துணிச்சலோடு எழுதப்பட்டதால்தான் இக்கவிதை அருமையாக வாய்த்துள்ளது. இது நிரப்பப்படாத வெற்றிடங்கள் நோக்கி நகரும் ஜீவனுள்ள காற்றாக அமைந்திருக்கின்றது.

இலைகள், மலர்களைக் கண்டு மயங்கிய கவிஞன் ஏன் இலைகள் கண்டு வியக்கவில்லை...! (ப:19)

இக்கவிதை மூலம் தங்களது எழுத்துகள், இலகுவாக, துலக்கமாக, செறிவானதாக உள்ளன. யதார்த்தமான, நுட்பமான கவிதைகளை, கட்டடக் காடுகளுக்குள் வாழ்ந்து, நவீனத்துவத்தைப் புசித்து, சட்ட ஓட்டைகளை சல்லடைபோடும் மிகவும் 'பிசியான' ஒரு சட்டத்தரணியால் இது எவ்வாறு சாத்தியமானது? அதுவேறொன்றும் இல்லை. வாழ்வியலின் படிமங்களை, அவற்றில் மென்மையாய் இழையோடும் மானுட உணர்வுகளை, இக்கவிஞன் ஆழமாக நேசித்தமையினாலேயே அது சாத்தியமானது. எது கவிதையாகும் கணம் என்று யோசிப்பதற்குள், இக்கவிஞனின் மென்மையான இதயத்திலிருந்து ஒரு வானம்பாடி எழுந்து பறக்கத் தொடங்குகிறது. இது விடுதலைபாடும் வானம்பாடி மாத்திரமல்ல, ஞானம்பாடும் வானம்பாடியுமாகும். இன்று போதுமானது, பொய்யான நாளை பறிபோன நேற்று போதுமான இன்று

இதுவே உண்மை புரிந்தோர் அமைதி, புரியாதோர் அவதி..! (ப:56)

இக்கவிஞன் தனது அழகியல் சித்திரத் தெறிப்பிற்கு வெளியே, கூடுதலாய் ஏதோவொன்றைக் கண்டடைய விரும்பும் ஆத்ம தவிப்பு எங்கும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றது. இந்தத் தவிப்பே அவரது கவிதைப் பயணத்தில் ஒருசிறு திசைமாற்றத்தை அவருக்கு வழங்கியிருக்கக் கூடும். கவிதை வரிகளானவை,' எதிலும் மூழ்கிவிடாதே. மிதக்கக் கற்றுக் கொள்' என்ற வாழ்வியல் தத்துவத்தை மிகவும் சுலபமாகச் சொல்லிவிட்டுச் செல்கின்றது. எதிலும் திருப்தி காணாமல் அலைந்து திரியும் எமது வாழ்வுக்கும், மனதுக்கும் இடும் கடிவாளமே இக்கவிதையாகும். ஒரு பறவைபோல் பறந்து விரியும் இக்கவிதை, உதிர்ந்த சிறகாக அவதிப்படும் எமது திருப்தியுறாத வாழ்விற்கு ஒத்தடமாகவும், உண்மையாகவும் ஒரு பொறியாகவும் இயங்குகிறது. எமது ஆன்மிகத்தை, வாழ்வின் தீராத பக்கங்களுக்குள் போதுமானதாக அழைத்துச் செல்கிறது. மு.நி.காரியப்பரின் படைப்புலகம் தாளமுடியாத அளவிற்கு மென்மையானதாக, அதில் அன்பு எங்கும் விரவிக் கிடக்கின்றது. இவரின் கவிதைகள் போன்று உண்மையில் இவரின் நடைமுறை யதார்த்த உலகமும் அப்படியானதுதானா என்ற கேள்வி என்னிடம் உண்டு. எனினும் நிச்சயமாகச் சொல்லமுடியும், மு.நி.காரியப்பரின் பலமும் பலவீனமும் இந்தமென்மை தான். மென்மையானவர்கள் தோற்கமாட்டார்கள். அவர்களிடம் நன்றியும், அன்பும், கருணையும், இறைவிசுவாசமும் உண்டு. அவர்களிடம் நயவஞ்சகம் இருக்காது. அவர்கள் வெள்ளந்திக் காரர்கள். கவிஞரின் கவிதைகள் அனைத்தும் இலகுவானதாகவும், அனுபவிக்கக் கூடியதாகவும், வாழ்வியல் தத்துவங்களாகவும் உள்ளன. மு.நி.காரியப்பரின் கவிதைகள் போன்று கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரை புகைப்படங்களிலும் காணொளிகளிலுமே நான் பார்த்துள்ளேன். நான் பார்த்த எந்தப் புகைப்படத்தையும், காணொளியை விடவும் அவர் குழந்தைபோல், மென்மையும், கருணையும் மிக்க இதயமுடையவராக இருந்தார். குறிப்பாக இந்நூலை வேதாந்தி சேகு இஸ்ஸதீனுக்கு சமர்ப்பணம் செய்திருந்தமை நிசாம் காரியப்பரின் நன்றியுணர்வைக் காட்டுகின்றது. கவிதை வெளியீட்டுவிழாவின் மரபார்ந்த சம்பிரதாயங்களுக்கு அப்பால் தனது நூலின் முதற்பிரதியை தனது அன்புத் தாய்க்கு வழங்கி வைத்தமை மகிழ்ச்சியான தருணமே. நூலாசிரியர், ஏற்புரை வழங்கும்போது கவிதைகள் எழுதுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட சிரத்தைகளை ஒளிவுமறைவின்றிச் சொன்னபோது மேலும் எனக்கு அவரின் மேல் மதிப்புக் கூடியது. இக் கவிதை நூலின் வெற்றிக்குப் பின்னால் உந்துகோலாக தங்களது அன்பு மனைவி மிஸ்ரி காரியப்பர் இருந்துள்ளமை மிகப் பெரும் சிறப்பே. இந்த அன்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இந்நிகழ்வுக்கு வருகைதந்த பெண்களையெல்லாம் வரவேற்று, உற்சாகத்துடன் உபசரித்த பாங்கு, கவிஞர் தனது கவிதையில் குறிப்பிடுவதுபோல், அவர் ஓர் 'அதிசயப் பெண்' தான் (ப:34).மேலும் குறிப்பாகத் தங்கள் அன்புப் புதல்வன் சகோதரர் இல்ஹாம் காரியப்பர், மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். ஒரு தந்தையின் வெற்றிக்காக தனது அத்தனை உழைப்பையும் வெளிப்படுத்தியதுடன் அயராது பாடுபட்டிருந்தமை தெரிந்தது. அவர் மிகவும் திறமையானவராக இருக்கக் கூடும். கவிஞர் தனது கவிதையில் சுட்டிக் காட்டியதுபோல், அவர், 'இதயத்தில் துடிக்கும் தொப்பிள் கொடி'உறவல்லவா..! (ப:54). மேலும் வரவேற்புரை நிகழ்த்திய பாராஹ், மிகவும் சிறப்பாகப் பேசினார். அவருக்கு மொழி வாய்த்துள்ளது. குறிப்பாகத் தமிழ் உச்சரிப்புக்களும் பேச்சு ஆளுமையும் ஒருசேரக் கொண்டுள்ளார்.





அவர் பெண் அரசியல் ஆளுமையாக வரக் கூடும். மேலும் இந்நிகழ்வின் தொகுப்பாளினியின் தெரிவும் சிறப்பானதாக அமைந்தது. விசேடமாக, நான் நேசிக்கும் எச்.ஏ. அஸீஸ் சேர் பற்றிக் குறிப்பிடவேண்டும். அவர் மு.நி. காரியப்பர் எனும் கவிஞரை இச் சமூகத்திற்கு அடையாளம் காட்டியுள்ளார். அவரின் உரையை நான் ரசித்திருந்தேன்.

சாதி, மத, இன அடையாளங்கள் கடந்து மனிதகுலத்தை நேசிக்கும் ஒருவர். 'முடியும் எழுது' என்று நூலாசிரியரை ஊக்குவித்த அவர் என்றும் போற்றப்படவேண்டியவர். இறுதியாக, இந்த நூல் வெளியீடானது மன நிறைவான விடயமாகும். உண்மையைச் சொன்னால், மனம் மட்டும் அல்ல, வயிறும் நிறைந்தது. உங்கள் அருகே தயக்கத்துடன் வந்த வாசகர் ஒவ்வொருவரையும் தோளோடு தோள் நிறுத்தி ஒரு தோழனைப் போல பரவசப்படுத்தினீர்கள்.

அன்போடு அனைவரிடமும் பேசி வழி அனுப்பினீர்கள். இவையெல்லாம் பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் பண்புகள். நான் நம்புவதுபோல் சட்டத்துறையில் சாதித்த நீங்கள், அஷ்ரப் போன்று அரசியலிலும் சாதிப்பீர்கள் (இன்ஷா அல்லாஹ்). அரசியல் எனும் காட்டில், மனித முகமூடிகளில் கொடிய மிருகங்கள் வாழ்கின்றன. அவசரப்படாமல் சூதானமாக நடந்துகொள்ளுங்கள்.

பாராளுமன்றம் செல்ல அனைத்துத் தகுதிகளையும் நீங்கள் கொண்டுள்ளீர்கள். நிச்சயம் ஒருநாள் பாராளுமன்றம் செல்லவேண்டும். உங்களை நேசிக்கும் முஸ்லிம்களின் இதயங்களைத் தலைமை தாங்கி வழிநடத்தக் கூடும். இவற்றுக்கு அடிநாதமாக இருப்பது சகமனிதர்களின் மீதான அன்பும்,கரிசனமும்தான் அவருக்கு எனது இதயபூர்வமான அன்பும் பிரார்த்தனைகளும்

சர்ஜூன் ஜமால்தீன்
அக்கரைப்பற்று

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 126

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | 08 | |
| 09 | 10 | 11 | 12 | | 13 |
| 14 | 15 | 16 | | 17 | 18 |
| | 19 | | 20 | 21 | |
| 22 | 23 | 24 | 25 | | |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நதி, குளம் போன்ற நீர்நிலைகளில் பயணம் செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற சிறிய நீர்ப்போக்குவரத்துச் சாதனம்.
(4) இலங்கையில் அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்ற பிரதான தானியம் இது. இலங்கை மக்களின் பிரதான உணவுக்கான தானியம்.
(9) வீடு உட்பட அனைத்துக் கட்டடங்களிலும் இதனைக் காணலாம். கட்டடங்களின் உள்ளே வெளிச்சமும், காற்றோட்டமும் அவசியம் என்பதற்காக வைத்துக் கட்டப்படுவது.
(14) உள்ளம், அகம் என்றெல்லாம் கூறக்கூடிய மற்றொரு ஒத்தபொருள் சொல். (தலைகீழான சொல்)
(17) தாவரங்களில் ஒளித்தொகுப்பு, சுவாசம் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான உறுப்பு.
(20) தவளை, மரத்தவளை, சலமந்தரா போன்று இதுவும் ஒரு ஈரூடகவாழி.
(22) கல்வியறிவற்ற ஒருவனைக் குறிக்கின்ற சொல்.

**மேலிருந்து கீழ்**

(1) கண்களால் பார்த்து ரசிக்கக் கூடிய கலைப்படைப்பு.
(3) கல்வி கற்பதில் மாணவர்களின் முக்கிய செயற்பாடு இது. பாடத்திலுள்ள சில விடயங்களை மனதில் இருத்திக் கொள்வதற்காக, மீண்டும் மீண்டும் வாயால் சொல்லி நினைவில் வைத்துக் கொள்வார்கள். அதற்கான சொல் இது. (தலைகீழான சொல்)
(4) பசுப்பால் அல்லது எருமைப்பாலை முதலில் தயிராக்கி, அதன் பின்னர் அதனைக் கடைந்து அடுப்பில் வைத்துச் சூடாக்கி பெறப்படும் திரவம் இது. கெட்டியான திரவத்தன்மையுள்ள இப்பதார்த்தம் சமையலில் பயன்படுத்தப்படுகின்றது.
(10) உலக நாடுகளில் ஜனநாயக ஆட்சி மலர்வதற்கு முன்னர், நாட்டை ஆட்சி செய்யும் தலைவனாக இவனே இருந்தான். (தலைகீழான சொல்)
(13) அந்திப்பொழுதை மட்டுமன்றி, கழுத்தில் சூடிக்கொள்வதையும் குறிக்கின்ற சொல்.
(17) பிராணிகளின் உணவைக் குறிக்கும் சொல்.
(20) மலர்களில் இருந்து தேனீக்களால் சேகரிக்கப்படுகின்ற இனிமையான பதார்த்தம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 125

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கடிகாரம் 09. மத்தளம் 16. கடை
21. நரி 23. அழகு

**மேலிருந்து கீழ்**

01. கரும்பு 03. காந்தம் 05. கமலம்
17. அட்டை 18. நதி 19. குடை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 124

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.என். அப்லல் அஹ்மத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. எம்.ஜே.எம். ஜிப்ரான்**
தரம் 04, தி/ கிண்ணியா தேசிய பாடசாலை,
இல. மகாத் நகர், குறிஞ்சாக் கேணி, கிண்ணியா.

**3. எம்.எம். ஹப்ஸா**
தரம் 07, அஸ்ஸம்ஸ் வித்தியாலயம்,
இல. 179, நிவ்எல்பிட்டிய, கெலிஓயா.

**4. எம்.பி. மனுல்மி சகசமி**
தரம் 05, மினு/ நாலந்தா மத்திய பாலிகா வித்தியாலயம்,
மினுவாங்கொட.

**5. எம்.ஆர். சுமையா ஸெய்னப்**
தரம் 05, ஹ/ தங்காலை மு.வித்தியாலயம்,
இல. 21, முஸ்லிம் வீதி, தங்காலை.

**6. தன்யஸ்ரீ திருஷ்தனா**
தரம் 09E, ஹைலன்ஸ் கல்லூரி,
இல. 29/11, நர்சிங் ஹோம் வீதி, ஹற்றன்.

**7. இப்திகார் ஸைத்**
தரம் 07, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாவனல்லை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 126
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புகழ்: வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசை யென்னும் எச்சம் பெறாஅ விடின்**

***தெளிவுரை :***
*தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகியப் புகழைப் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்லுவர்.*

# உலகின் மர்மமான புத்தகம்?

"மார்க்கன் ரொபர்ட் சன்" என்ற எழுத்தாளர், கி.பி 1898ஆம் ஆண்டு "futility" or "The wreak of the Titan" என்கின்ற ஒரு கற்பனை நாவலை எழுதினார். அதில் ஹீரோ "ஜான் ரோலண்ட்" அவர் ஒரு கடற்படை அதிகாரி. பின்னர் கப்பலின் கெப்டனாக பணியாற்றினார். கப்பல் விபத்துக்குள்ளானது. கடைசியில் ஒரு இளம் பெண்ணை, காப்பாற்றும் பொருட்டு, கடலில் குதிக்கிறான் என்று நாவல் தொடர்கிறது.

அந்த நாவலில் எழுதப்பட்டிருந்தது போல் 14 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு கப்பல் விபத்து நடைபெறுகிறது. அது எவ்வாறு சாத்தியமானது என்பதே மர்மமானதாக இருக்கிறது. அதனாலேயே உலகின் மிகவும் மர்மமான புத்தகம் "futility" or "The wreak of the Titan" என சொல்லப்படுகிறதோ தெரியவில்லை.




இச் சம்பவம் நடைபெறும் என்று தெரிந்து தான், நாவல் எழுதப்பட்டதா? அல்லது தற்செயலாக எழுதப்பட்டதா? ஒரு கப்பலின் எல்லா அம்சங்களும், நாவலுக்கும், உண்மை நிகழ்வுக்கும், சராசரியாக பொருந்துவது எப்படி? என்பன போன்ற பிற கேள்விகள், அதிகம் உள்ளன. ஆனால் விடை காண முடியவில்லை. அதுவே மர்மம். எனவே இந்த புத்தகமே மர்மம் நிறைந்தது தான்.

**உண்மை சம்பவத்தையும் நாவலை தொடர்புபடுத்தும் சில தகவல்கள்:**

| நாவல் | உண்மை |
|---|---|
| ★ கப்பலின் நீளம் 800 அடி. | ★ கப்பலின் நீளம் 882 அடி. |
| ★ கப்பலின் எடை 45 ஆயிரம் டன். | ★ கப்பலின் எடை 46 ஆயிரத்து 328 டன். |
| ★ கப்பலை, மூழ்கடிக்க முடியாது என்று எழுதியிருப்பார். | ★ கப்பலும், மூழ்கடிக்க முடியாதது என்று சொல்லப்பட்டது. |
| ★ கப்பலின் துணை படகுகள் 24 | ★ கப்பலின் துணைப் படகுகள் 16 |
| ★ கப்பல் ஒரு மணிக்கு 25 நாட்டிகல் மைல் வேகம் செல்லும். | ★ கப்பல் ஒரு மணிக்கு 22 நாட்டிக்கல் மைல் வேகம் செல்லும். |
| ★ கப்பலில் பயணித்தோர் 2500 | ★ கப்பலில் பயணிகள் 2224 |
| ★ கப்பலின் நாயகன் ஜான் ரோலண்ட். | ★ கப்பலின் கேப்டன் ஸ்மித். |
| ★ கப்பல் விபத்தில் மூழ்கியது. | ★ கப்பல் பனிப்பாறை தாக்கியதில் மூழ்கியது. |
| ★ எழுதப்பட்ட காலம் 1898 | ★ டைட்டானிக் மூழ்கியது 1912 |

# இவ்வார மழலை



ஈவன்
கென்னடி – உஷா






சத்யஜோதி
தரம் 12, ஸாஹிரா கல்லூரி, கிந்தோட்டை, காலி.

# பனிக்கட்டிகள் நீரில் மிதப்பதேன்?



திடப்பொருட்கள் திரவங்களில் மூழ்கும் என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்த விதிக்கு மாறாக, பனிக்கட்டி மிதப்பதைக் கவனித்து ஆச்சரியப்பட்டிருப்போம். அதற்கான காரணம்?

திரவ வடிவில் உள்ள நீர் ஒரு தளர்வான hydrogen oxygen மூலக்கூறு அமைப்பைக் கொண்டுள்ளது.

எனவே ஹைட்ரஜன் பிணைப்பு அதன் விருப்பத்திற்கு ஏற்ப சீரற்றதாக இருக்கும். ஆதலால் திரவ நிலையில் நீர் மூலக்கூறுகளுக்கு இடையே குறைவான வெற்றிடத்தை கொண்டுள்ளது. நீர் ஒரு திடப்பொருளாக மாறுவதற்கு, அது ஒரு வலுவான அமைப்பாக, அறுங்கோண வடிவமாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

எனவே நீர் மூலக்கூறுகளுக்கு இடையே உள்ள வெற்றிடம் அதிகரிக்கிறது. அதனால் பனியின் அடர்த்தி குறைந்து பனிக்கட்டி தண்ணீரில் மிதக்கிறது.



# மண்பானை நீரின் மகத்துவம்

மண்பானையில் வைத்த நீரானது குளிர்ச்சி பெறுவதற்கான காரணம், ஆவியாதல் என்னும் அறிவியல் நிகழ்வே ஆகும்.

மண்பானையில் மிக அதிக அளவில் உள்ள நுண்துளைகள் மூலம், அதில் சேமிக்கப்பட்டுள்ள நீரானது, தொடர்ந்து ஆவியாகிறது.

இந்த ஆவியாதல் காரணமாக, பானையின் வெப்பமும், பானையில் உள்ள நீரின் வெப்பமும் குறைந்து நீர் குளிர்ச்சி அடைகிறது.

ஆவியாதலானது வெப்பநிலையுடன் நேர் விகிதப் பொருத்தத்தில் இருக்கும். அதாவது, வெப்பநிலை அதிகமானால், ஆவியாதல் அதிகரிக்கும். வெப்பநிலை குறைந்தால், ஆவியாதல் குறையும்.

இந்த குளிர்ச்சி அடைதல் கோடை காலங்களில் மிக அதிக அளவில் இருக்கும். இதற்குக் காரணம் வெளியில் உள்ள வெப்பத்தின் அளவு அதிகமாக இருப்பதே ஆகும்.

குளிர்சாதனப்பெட்டியின் மூலம் குளிர்விக்கப்படும் நீரானது, உடலுக்கு தீங்கை விளைவிக்கும். மாறாக, பானையின் மூலம் குளிர்விக்கப்படும் நீரானது உடலுக்கு எந்த தீங்கையும் விளைவிக்காது.

# நகரும் மரம்



மரம் என்றாலே ஒரு இடத்தில் தான் இருக்கும் என்பதே நியதி. ஆனால், இவ்வுலகில் நகரும் மரம் இருக்கிறது.

தென்னாபிரிக்காவில் உள்ள மழைக்காடுகளுக்கு சொந்தமான பனை மரம், நகரும் தன்மை கொண்டது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இந்த மரம் நிழலில் இருந்து சூரிய ஒளி இருக்கும் இடத்திற்கு தன் வேர்களை வளர்த்து கொண்டு செல்லுமாம். அப்போது அதன் பழைய வேர்கள் இறந்து விடுகிறது.

இவ்வாறு, இந்த மரம் சூரிய ஒளி படும் இடத்திற்கு வேர்களை வளர்த்து செல்வதால் நகரும் பனை மரம் என அழைக்கப்படுகிறது. இந்த நகரும் மரம் பனை மரம் வகையை சார்ந்தது. இம் மரத்தின் அறிவியல் பெயர் Socratea Exorrhizza என்பதாகும்.

இம்மரத்திற்கு போதிய அளவில் சூரிய ஒளி கிடைக்காத போது, இதன் வேர்கள் சூரிய ஒளி இருக்கும் இடத்தினை நோக்கி வளர்ந்து செல்லும். புதிய வேர்கள் உருவானதும் அதில் உள்ள பழைய வேர்கள் அழிய தொடங்கிவிடும். இதனால், மரமும் சற்று நகர்ந்து இருக்கும். இம்மரத்தை பற்றி ஆராய்ச்சியாளர்கள் இன்னும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

இந்த நகரும் பனை மரமானது, ஒரு நாளைக்கு 2 செ.மீ முதல் 3 செ.மீ வரை நகர்கிறதாம். அந்த கணிப்பின் படி பார்த்தால், ஒரு வருடத்திற்கு சுமார் 20 மீற்றர் வரை நகர்ந்து இருக்குமாம்.

# கழுதை!



*கழுதை என்றால் ஏளனம்*
*காணும் மனிதர் சொல்லுவர்*
*கழுதை காட்டும் பொறுமையை*
*கற்ற சிலரும் கொண்டிலர்!*

*பிள்ளை செய்யும் குறும்பினை*
*பார்த்து நெஞ்சு குமுறியே*
*தொல்லை ஏதும் செய்திடா*
*வெள்ளை மூக்குக் கழுதைகள்!*

*அழுக்கு நிறக் கழுதைகள்*
*வெளுக்கத் துணியைச் சுமந்திடும்*
*பழுப்புச் செய்தித் தாள்களை*
*சுவைத்துப் பசியை ஆற்றிடும்!*

*விதியை நொந்து மனிதர்கள்*
*சதிகள் சுமந்து வாழ்தல் போல்*
*பொதியைச் சுமந்து சென்றிடும்*
*பொறுமை மிக்க கழுதைகள்!*

**கல்லொளுவை பாரிஸ்**
மள்வானை

# நீண்ட நேர குத்துச் சண்டை

*1904 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில், குத்துச் சண்டை வீரர்கள் 12 மணி நேரம் தற்காப்பு முறைமையைப் பின்பற்றி போட்டியிட்டுள்ளனர்.*

இது ஒலிம்பிக் வரலாற்றின் மிக நீண்ட நேரம் குத்துச்சண்டை போட்டியாக கருதப்படுகிறது.



# உலக ஆதிவாசிகள் தினம்

## (ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி)

ஐக்கிய நாடுகள் சபை 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதியை உலக ஆதிவாசிகள் தினமாக பிரகடனப்படுத்தியது.

இதேவேளை, நேற்று முன்தினம் (09) உலக ஆதிவாசி தினத்தை முன்னிட்டு இலங்கையின் தேசிய ஆதிவாசிகள் நிகழ்வு மஹியங்கனை தம்பனா பழங்குடியின கிராமத்தில் நடைபெற்றது.

"ஆதிவாசிகளின் கலாசாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் தீர்மானிக்கும் பிரதிநிதிகளாக அவர்களின் இளைஞர் யுவதிகளை கண்டறிதல்" என்தே இவ்வாண்டுக்கான தொனிப்பொருளாகும்.

2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கமைய 70 நாடுகளில் சுமார் 30 கோடிக்கும் அதிகமான ஆதிவாசிகள் வசித்து வருகிறார்கள் என தெரியவந்துள்ளது. உலக சனத்தொகையில் ஆதிவாசிகளின் எண்ணிக்கை 5 சதவீத மாகும். அமெரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மத்திய ஆபிரிக்கா, போன்ற பிரதேசங்களில் ஆதிவாசிகள் வசித்து வருகிறார்கள்.

உலகில் ஆதிவாசிகள் சுமார் 4000 மொழிகளை உபயோகிக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

வறுமை, இடப்பிரச்சினை மற்றும் போசனை குறைப்பாடு என்பன ஆதிவாசிகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் எனவும் அந்த நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வேடுவர்களாக வாழும் ஆதிவாசிகள் உலக ஆதிவாசிகளுக்கு மத்தியில் மிக முக்கிய இடம் வகிக்கின்றமை ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில் இலங்கையின் வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்தில் சில காடுகளுக்குள்ளும் ஆதிவாசிகள் வசித்து வருகின்றனர்.



இலங்கையில், வேடுவர் இனம் அல்லது ஆதிவாசிகள் மிக மோசமாக அழிவடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை காடுகளில் வசிக்கும் இவர்கள் சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்கு பண்படாதவர்களாக, காடுகளில் வேட்டையாடி வாழப் பழக்கப்பட்டவர்கள் என்பதால் வேடுவர் என அழைக்கப்பட்டாலும், அண்மைக் காலங்களாக சாதாரண மனித வாழ்க்கை முறைக்கு தம்மை மாற்றிக்கொண்டு இலங்கையில் வாழும் ஏனைய சமுதாயத்தினரைப் போன்று வாழும் நிலைக்கு மாறி வருகின்றனர்.

இருப்பினும் தற்போதும் காட்டு வாழ்க்கைக்கே பழக்கப்பட்டவர்களாக வேடுவராக வாழ்வோரும் உள்ளனர்.

# மஞ்சரி விளையாட்டு

# தீராத பாலின சர்ச்சை



இமானே கலிப்பிடம் இருந்து வந்த முதல் குத்தில் எஞ்சலா கரினி கதிகலங்கிப் போனார். அவரது தலைக்கவசமும் சற்று விலக பயிற்சியாளரிடம் போய் சரி செய்து கொண்டார். பின்னர் போட்டிக்கு வந்தாலும் முடிவை மாற்றிக் கொண்டு போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

வெறுமனே 46 விநாடிகளில் பெண்களுக்கான 66 கிலோ எடைப் பிரிவு ஒலிம்பிக் போட்டி ஆரம்ப சுற்றில் கலிப் வெற்றி பெற்றார்.

'அத்தனை வலுவான குத்தை எனது வாழ்நாளில் நான் சந்தித்ததில்லை' என்று கரினி கண்ணீர் மல்கக் கூறினார்.

இந்த சம்பவம் தான் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் மிகப் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்றிருக்கும் அல்ஜீரியாவைச் சேர்ந்த 25 வயது கலிபுடன் தாய்வானின் 28 வயது லின் யு டிங் இருவரினதும் பாலினம் தொடர்பில் பெரும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

உக்ரைன் - ரஷ்ய போர் வரை அரசியல் பேச வேண்டி இருக்கும்.

சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவராக இருப்பவர் ரஷ்யாவைச் சேர்ந்த உமர் கிரம்லேவ். அவர் ரஷ்ய அரசுடன் நெருக்கமானவர் என்பது உலகுக்கே தெரிந்தது. 2022 ஆம் ஆண்டு சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவராக அவர் போட்டியின்றி மீண்டும் தெரிவானார். ஆனால் அந்தத் தேர்தலில் போட்டியிட்ட நெதர்லாந்து குத்துச்சண்டை சம்மேளன தலைவர் பொரிஸ் வன்டர்வெஸ்ட் தகுதி இழப்புச் செய்யப்பட்டார்.

விளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றம் இதற்கு எதிராக தீர்ப்பு வழங்கி மறு தேர்தலை நடத்த உத்தரவிட்டபோதும் சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் அதனை நிராகரித்தது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு இந்தியா மற்றும் உஸ்பகிஸ்தானில் நடந்த உலக சம்பியன்சிப் குத்துச்சண்டை போட்டிகளில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டுக்கு அனுமதி அளித்ததால் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட 19 நாடுகள் அந்தப் போட்டிகளை புறக்கணித்தன.



கடந்த ஆண்டு நடந்த உலக சம்பியன்சிப் குத்துச்சண்டை போட்டியில் இந்த இருவரும் தகுதி இழப்புச் செய்யப்பட்ட நிலையில் ஒலிம்பிக்கில் அனுமதி அளிக்கப்பட்டது பல குழப்பங்களையும் கேள்விகளையும் எழுப்பி இருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் காரணம் டெஸ்டொஸ்டிரோன் தான். ஆண்மையுடன் தொடர்புடைய பாலியல் ஹோர்மோன் இது. இயற்கையாகவே இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படுகின்றபோதும் வயது வந்த ஆண்களிடம் அதிகமாகவே இருக்கும். இது உடல் வலிமை, வேகம் எல்லாவற்றுக்கும் காரணமாகிறது.

எனவே, பெண்கள் விளையாட்டில் இந்த டெஸ்டொஸ்டிரோன் அளவு முக்கியம். அதிகமாக இருந்தால் பெண்களால் சரிசமமாக போட்டியிட முடியாது. இந்த குத்துச்சண்டை வீராங்கனைகள் இருவருக்கும் டெஸ்டொஸ்டிரோன் அதிகமாக இருக்கிறது என்று கூறப்படுவதே பிரச்சினைக்கு அடிப்படை.

ஆனால், தற்போது எழுந்திருக்கும் பிரச்சினையில் டெஸ்டொஸ்டிரோன் மாத்திரமல்ல, அதிலே அரசியலும் சற்று இழையோடி இருக்கிறது. அதிலே

இதன் பின்னணியில் சர்வதேச ஒலிம்பிக் குழு, சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்துடனான உறவைத் துண்டித்ததோடு ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டிகளை தானே முன்னின்று நிர்வகிக்க முன்வந்தது. இந்தப் சூழலிலேயே கலிப் மற்றும் லின் யு டிங் பிரச்சினையும் எழுந்தது.

கலிப் கடந்த ஆண்டு உலக சம்பியன்சிப் போட்டியில் சீனாவின் யங் லியுவுடனான தங்கப் பதக்கத்திற்கான போட்டியை எதிர்கொள்ள சில மணி நேரம் இருக்கும்போதே பாலின சோதனையில் தோல்வி கண்டு தகுதி இழப்புச் செய்யப்பட்டார். மறுபுறம் லின் யு டிங்கின் வெள்ளிப்பதக்கமும் பறிக்கப்பட்டது.

ஆனால் சர்வதேச ஒலிம்பிக் குழுவோ, சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தின் சோதனையில் தவறு இருப்பதாகக் கூறியே இந்த இரு வீராங்கனைகளுக்கும் ஒலிம்பிக்கில் ஆட அனுமதி அளித்தது.

உண்மையில் இந்தக் குழப்பங்கள் இடையே அடிவாங்கியது அந்த இரு வீராங்கனைகளும் தான். இந்த இருவரிடமும் ஆண்களுடைய உடலமைப்பு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டபோதும் இருவருமே பெண்ணாக பிறந்து வளர்ந்தவர்கள்.



இந்த இருவரும் தமது குத்துச்சண்டை வாழ்வில் மகளிர் பிரிவில் பல போட்டிகளில் பங்கேற்று வெற்றி தோல்விகளை கண்டிருக்கிறார்கள். ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வரை கலிப் ஆடிய 46 போட்டிகளில் 37 இல் வென்று 9 இல் தோற்றிருக்கிறார். 2020 ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்ற அவர் காலிறுதியுடன் தோற்கடிக்கப்பட்டார். 2022 உலக சம்பியன்சிப் போட்டியில் அயர்லாந்தின் ஆமி பிரதர்ஸ்ட் இடம் வீழ்த்தப்பட்டு வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

'அவர் எந்த மோசடியிலும் ஈடுபட்டதாக தனிப்பட்ட முறையில் நான் நம்பவில்லை' என்று இந்த சர்ச்சை கிளம்பியபோது பிரதர்ஸ்ட், எக்ஸ் சமூகதளத்தில் கலிப் பற்றி குறிப்பிட்டிருந்தார். 'அவர் அப்படித் தான் பிறந்திருக்கிறார். அது அவரின் கட்டுப்பாட்டில் இல்லை. உண்மையில் இதற்கு முன்னர் அவர் 9 பெண்களினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்' என்றும் பிரதர்ஸ்ட் குறிப்பிட்டிருந்தார்.

மறுபுறம் லின் யு டிங் தனது குத்துச்சண்டை வாழ்வில் 41 வெற்றிகள் 14 தோல்விகளை சந்தித்தவர். உலக சம்பியன்சிப் போட்டியில் இரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றவர். 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் அவர் முதல் முறை பங்கேற்றபோது 16 வீராங்கனைகள் சுற்றைக் கூட தாண்டவில்லை.

உண்மையில் பெண்களுக்கான விளையாட்டு என்பது வித்தியாசப்பட்டது. 1896 இல் நவீன ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கப்பட்டபோது பெண்களுக்கு அனுமதியே இருக்கவில்லை. 1900இல் பாரிஸ் ஒலிம்பிக்கில் பெண்கள் பங்கேற்றார்கள். அது தொடக்கம் பெண்கள் விளையாட்டு என்பது தனியே வளர்ந்தது. அதில் பாலின விவகாரம் முக்கியமானதாக இருந்தது.

பெண்கள் விளையாட்டில் ஆண்கள் புகுவது என்பது விளையாட்டின் சமநிலை போக்கை குலைப்பது. உதாரணத்திற்கு 100 மீற்றர் ஓட்டப் போட்டியை எடுத்துக் கொண்டால் பெண்கள் பிரிவில் உலக சாதனை படைத்தவர் அமெரிக்காவின் புளோரன்ஸ் கிரிப்பித் ஜொய்னர். அவர் 1988 ஆம் ஆண்டு 10.49 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்தது இன்று வரை சாதனையாக உள்ளது. ஆனால் 2023 ஒகஸ்ட் வரை எடுக்கப்பட்ட தரவுகளின் படி இதனை விடவும் தற்போதுள்ள 2,167 ஆண்கள் வேகமாக ஓடி இருக்கிறார்கள்.

இத்தனைக்கும் ஜொய்னரின் சாதனையில் இன்றுவரை சர்ச்சை நீடிப்பதோடு அந்த சாதனையை கடந்த 36 ஆண்டுகளில் எந்தப் பெண்ணாலும் முறியடிக்க முடியாமல் உள்ளது.

கடந்த காலங்களில் பெண்கள் விளையாட்டில் ஆட்கள் பெண் வேடமிட்டு ஆடிய வரலாறுகளும் உண்டு. என்றாலும் ஒருபாலினம், திருநங்கை, திருநம்பி விவகாரங்களில் உரிமைக் குரல்கள் அதிகரித்திருக்கும் நவீன காலத்தில் அது மறைமுகமாக விளையாட்டிலும் பாதிப்பு செலுத்தி வருகிறது. திருநங்கைகள் பெண்கள் விளையாட்டுக்குள் புகும் விவகாரம் இன்று தீர்க்கப்படாத பிரச்சினையாக மாறி வருகிறது.

இதற்கு முன்னர் 2009 பெர்லினில் நடந்த உலக சம்பியன்சிப் தடகளப் போட்டியில் தென்னாபிரிக்காவின் கஸ்டர் செமென்யா முதலிடத்தை பிடித்தபோது அவரது பாலினம் குறித்து பெரிதாக சர்ச்சை எழுந்தது. இதற்காக அவர் நீண்ட போராட்டத்தை சந்திக் வேண்டி இருந்தது. டெஸ்டொஸ்டிரோன்அளவை குறைக்க மருத்துவ சிகிச்சை பெற்றதால் உடல் பாதிப்புக்கும் உள்ளானார்.

இந்திய குறுந்தூர ஓட்ட வீராங்கனை டுடீ சான்ட், புருண்டியின் மத்திய தூர ஓட்ட வீராங்கனை பிரான்சின் நியோன்சபா என்று இந்த பாலின சர்ச்சையில் சிக்கியவர்கள் மேலும் பலர் உண்டு. என்றாலும் இதனை சரியாக பிரிக்கும் தெளிவான கோடு ஒன்று வரையப்படவில்லை.

எஸ்.பிர்தௌஸ்...

# குறிப்புகள்

## இலங்கை சுழலின் சாகசம்

**இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி 2–0 என வெற்றியீட்டியது உண்மையிலேயே அதிர்ச்சி தரக்கூடியது. இலங்கையின் சுழற்பந்துக்கு இந்தியாவின் பலம்மிக்க துடுப்பாட்ட வரிசை ஆட்டம் கண்டது என்பது இந்தியாவால் கூட நம்ப முடியவில்லை. இந்தத் தொடரின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை பார்ப்போம்:**



- இந்தத் தொடர் வெற்றிக்கு முன்னர் இலங்கை ஒருநாள் அணி இந்தியாவுக்கு எதிராக 13 தொடர்களில் ஆடியபோதும் ஒன்றில் கூட வெற்றி பெற முடிவில்லை. இதற்கு முன்னர் இலங்கை அணி இந்தியாவுக்கு எதிரான தொடர் ஒன்றை வென்றது 1997 ஆம் ஆண்டிலாகும். அப்பாது அர்ஜுன ரணதுங்க சொந்த மண்ணில் இந்தியாவை 3–0 என தோற்கடித்தார்.
- இந்தியா இந்தத் தோல்விகளுக்கு முன் இலங்கைக்கு எதிராக தொடர்ந்து 13 ஒருநாள் போட்டிகளில் தோல்வியுறாமல் இருந்து எதிரணி ஒன்றுக்கு எதிராக அதிக போட்டிகளில் தொடர்ந்து தோல்வியுறாத அணிகள் வரிசையில் இரண்டாவது இடத்தில் இணைந்து கொண்டது. பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயுக்கு எதிராக 14 போட்டிகளில் தொடர்ந்து தோல்யுறாது இருந்தது இதன் முதலிடத்தில் காணப்படுகிறது. இந்தியா, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராகவும் கடைசியாக ஆடிய 13 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது.
- இந்தத் தொடரில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர்கள் இந்தியாவின் 27 விக்கெட்டுகளை வீழ்த்தினர். அதாவது நான்கு அல்லது அதற்கு குறைவான போட்டிகளைக் கொண்ட இரு தரப்பு ஒருநாள் தொடர் ஒன்றில் ஓர் அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் பெற்ற அதிக விக்கெட்டுகள் இதுதான். முன்னர் நியூசிலாந்து மற்றும் சிம்பாப்வேயுக்கு எதிரான தொடர்களில் பங்களாதேஷ் சுழற்பந்து வீச்சாளர்கள் தலா 26 விக்கட்டுகளை வீழ்த்தியது அதிகமாக இருந்தது. எனினும் அந்த இரு தொடர்களும் நான்கு போட்டிகளைக் கொண்டவையாகும்.
- ஆடவர் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இந்தியாவுக்கு எதிராக பல முறை ஐந்து விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய முதல் சுழற்பந்து வீச்சாளராக துனித் வெள்ளாலகே சாதனை படைத்திருக்கிறார். அவர் இரு முறை இந்தியாவுக்கு எதிராக இதனை செய்திருக்கிறார். மற்றபடி பிரட் லீ (4), ஆகிப் ஜாவிட் (3), முஸ்தபிசுர் ரஹ்மான் (3), மர்வ் டிலோன் (2) மற்றும் மிச்சல் ஸ்டார்க் (2) ஆகிய வேகப் பந்து வீச்சாளர்கள் இந்த சாதனையை படைத்துள்ளனர்.
- இலங்கைக்கு எதிரான 2–0 என்ற தொடர் தோல்வி உட்பட இந்திய அணி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர்களில் இதுவரை 10 சந்தர்ப்பங்களில் ஒரு போட்டியில் கூட வெல்லாமல் இருந்திருக்கிறது. கடைசியாக தொடரின் ஒரு போட்டியில் கூட வெல்லாமல் இருந்தது 2022 இல் தென்னாபிரிக்கா 3–0 என தொடரை முழுமையாக வென்றபோதாகும்.
- இந்தத் தொடரில் மொத்தமாக சுழற்பந்து வீச்சாளர்கள் 43 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தனர். இதன்போது இலங்கை சுழற்பந்து வீச்சாளர்கள் 27 விக்கெட்டுகளை வீழ்த்திய அதேநேரம் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் 16 விக்கெட்டுகளை பதம் பார்த்தனர். அதாவது நான்கு அல்லது அதற்கு குறைவான போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் ஒன்றில் சுழற்பந்து வீச்சாளர்களால் வீழ்த்தப்பட்ட அதிக விக்கெட்டுகளாக இவை உள்ளன. இதற்கு முன்னர் 2010 இல் பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் சுழற்பந்து வீச்சாளர்கள் மொத்தமாக 40 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது.
- மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் அந்த மூன்று போட்டிகளிலும் இந்திய அணி அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்த முதல் சந்தர்ப்பமாக இது உள்ளது. அதேபோன்று 2015 இல் இந்திய அணி மூன்று ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்த பின்னர் அவ்வாறு நிகழ்வது இது முதல் முறையாகும்.
- 2021இல் இந்தியாவுக்கு எதிராக 1–2 என தோற்ற பின்னர் சொந்த மண்ணில் இலங்கை அணி தொடர்ச்சியாக 8 ஒருநாள் தொடர்களில் தோல்வியுறாமல் உள்ளது. அதாவது சொந்த மண்ணில் இலங்கை தொடர்ச்சியாக ஒருநாள் தொடர்களில் தோல்வியுறாத சாதனையாக இது உள்ளது. 2024 இல் இலங்கை அணி சொந்த மண்ணில் ஆடிய ஒன்பது ஒருநாள் போட்டிகளில் எதிலும் தோற்றதில்லை.
- இரு தரப்பு ஒருநாள் தொடர் ஒன்றில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ஒருவர் இருமுறை ஐம்பதுக்கு மேல் ஓட்டங்களை பெற்ற நிலையில் வேறு எந்த வீரரும் அவ்வாறு ஒன்றைக் கூட பெறாத இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். ரோஹித் ஷர்மா முதல் இரு போட்டிகளிலும் அரைச்சதம் பெற்றதோடு இதற்கு அடுத்து அதிகபட்ச ஓட்டங்கள் அக்ஸார் படேல் பெற்ற 44 ஓட்டங்களுமாகும். 2012–13 இல் பாகிஸ்தானுக்கு எதிராக சொந்த மண்ணில் நடந்த 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் எம்.எஸ். தோனி சதம் மற்றும் அரைச்சதத்தை பெற்றபோதும் இதற்கு அடுத்த அதிகபட்ச ஓட்டங்கள் 43 ஆக இருந்தது.



# கொழும்பில் பிரமாண்ட விளையாட்டு திருவிழா







இலங்கையில் முதல் முறையாக ஏழு வகை குழு நிலை விளையாட்டுகளை உள்ளடக்கிய பிரமாண்ட விளையாட்டு திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 16 தொடக்கம் 18 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத் துறை, இளைஞர்கள் விவகார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு ஏற்பாடு செய்திருக்கும் இந்த பிரமாண்ட விளையாட்டு நிகழ்ச்சியில் கிரிக்கெட், கால்பந்து, ரக்பி. கரப்பந்து, வலைப்பந்து, ஹொக்கி மற்றும் கூடைப்பந்து அமைப்புகளும் இணைந்துள்ளன. இதற்கு டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. அனுசரணை வழங்குகிறது. மேற்படி ஏழு விளையாட்டுகளிலும் கழக, மாகாண மற்றும் பாடசாலை மட்டங்களில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் டி10 போட்டிகளாக நடைபெறும் கிரிக்கெட் ஆட்டங்கள் புளும்பீல்ட் மற்றும் தர்ஸ்டன் மைதானங்களிலும் அணிக்கு ஐவர் கொண்டதாக நடைபெறும் கால்பந்து போட்டிகள் கொழும்பு குதிரைப்பந்தய திடல் மைதானத்திலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram

# செந்தூரம்

2024 ஓகஸ்ட் 11 ஞாயிற்றுக்கிழமை





## வைரமுத்து நூலில் அஸ்மினின் கவிதை

பக்கம் : 04



## வடக்கின் செல்லக் குரலுக்கான தேடல்

பக்கம் : 05



## பேசப்படாத பக்கங்களை எனது கதைகள் பேசும்!

பக்கம் : 11



## ஆணழகன் போட்டியில் தங்கம் வென்ற ஷங்கர் கணேஷ்

பக்கம் : 16

# பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## நான்சிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்



அமெரிக்காவின் மர்ஷல் சேவை 2015 ஆம் ஆண்டு ஏலம் ஒன்றை விட்டது. அதிலே விண்வெளியில் பயன்படுத்தப்பட்ட பை ஒன்றும் இருந்து. விண்வெளி தொடர்பான விவகாரங்களில் ஆர்வம் காட்டும் நான்சி கார்ல்டன் அந்தப் பையை 995 டொலர்கள் கொடுத்து வங்கினார்.

என்றாலும் இது உண்மையிலேயே விண்வெளியில் பயன்படுத்தப்பட்ட பைதான என்று உறுதி செய்து கொள்வதற்கு அதனை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவுக்கு அனுப்பி வைத்தார் நான்சி. அதாவது நாசா இதனை உறுதி செய்து சான்றிதழ் ஒன்றை வழங்கினால் அதன் பெறுதி அதிகரிக்கும்.




நாசாவும் பையை ஆய்வு செய்தது. அது அவர்களுக்கு பெரும் அதிர்ச்சியை தந்தது. 1969 ஆம் ஆண்டு நிலவில் முதல் முறை தரையிறங்கியபோது நீல் ஆம்ஸ்ட்ரோங் மற்றும் பஸ் ஒல்ட்ரின் பயன்படுத்திய பை தான் அது. பைக்குள் இன்னும் நிலவின் தூசி இருந்தது.

இது ஒரு சாதாரண விண்வெளிப் பை என்று அதனை தவறுதலாக அடையாளம் காணப்பட்டிருப்பது நாசாவுக்கு அப்போது தான் புரிந்தது.

இந்தப் பை அமெரிக்க மக்களுக்கு சொந்தமானது என்று நான்சியிடம் குறிப்பிட்ட நாசா, எனவே இது பறிமுதல் செய்யப்படுகிறது என்று கூறியது.

அடிப்படையில் நான்சி ஒரு வழக்கறிஞர், நாசாவின் விளக்கம் ஏற்க முடியாதது என்று கூறி அவர் நீதி மன்றம் சென்றார். ஓர் ஆண்டு நீடித்த வழக்கு விசாரணைக்குப் பின்னர், அந்தப் பையை நான்சியிடமே கொடுக்க நீதிபதி உத்தரவிட்டார்.

அந்தப் பையின் பெறுமதி இப்போது நினைக்க முடியாத அளவுக்கு அதிகரித்திருந்தது. அதனை ஏலத்தில் விட்டபோது, 1.8 மில்லியன் டொலர்களுக்கு விலைபோனது.

## பல் வலிக்கு தற்கொலையா!

1964 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள கோல்டன் கேட் பாலத்தில் இருந்து 49 வயதான ஜோன் தோமல் டொய்லி பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். அவர் பாலத்தில் இருந்து குதிப்பதை அங்கிருப்பவர்கள் பார்த்தார்கள். ஆனால் அவர் தற்கொலை செய்வதற்கான காரணத்தையும் எழுதி விட்டுச் சென்றிருந்தார். அந்தக் காரணத்தைப் பார்த்தால் சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை.





'எனக்கு பல்வலி இருப்பதைத் தவிர (தற்கொலை செய்வதற்கு) எந்தக் காரணமும் இல்லை' என்றே அதில் எழுத்தி இருந்தது. போயும்போயும் பல்வலிக்கு தற்கொலை செய்வானா என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அவரது தாடையின் பின்புறத்தில் ஒழுங்கற்ற வகையில் கடைவாய்ப் பல் ஒன்று அமைந்திருப்பது கண்டறியப்பட்டது.

அதற்கு லேசான வலிதான் வரும். மிஞ்சி மிஞ்சிப் போனால் அந்தப் பல்லை பிடுங்கிவிட்டால் போதும். அதற்கு அப்பால் தற்கொலை செய்தது மர்மமாகத் தான் இருந்தது.

## நீச்சல் தெரியாத நீச்சல் வீரர்

மத்திய ஆபிரிக்காவில் இருக்கும் குட்டி நாடான எக்குவட்டோரியல் கினியாவின் நீச்சல் வீரர் எரிக் முசம்பானி என்பவர் உலகப் புகழ்பெற்ற நீச்சல் வீரர். ஆனால் பாருங்கள் அவருக்கு சரியாக நீச்சல் தெரியாது. ஆனால் ஒலிம்பிக் போட்டியில் பற்கேற்று முதலாம் இடத்தை பெற்றது பெரும் சாகசம்.

2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் அவர் ஆடவருக்கான 100 மீற்றர் பிரீ ஸ்டைல் போட்டியில் பங்கேற்றார். தகுதி அடிப்படையில் அல்ல, எக்குவட்டோரியல் கினியா நாட்டை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 'வைல்ட் கார்ட்' அனுமதி, அதாவது சிறப்பு அனுமதியின் பேரிலேயே அவர் ஒலிம்பிக் சென்றார்.

ஆனால் எட்டு மாதங்களுக்கு முன்னர் தான் நீச்சல் பழக ஆரம்பித்திருந்தார். பயிற்சி பெறுவதற்குப் போதுமான வசதிகளும் அங்கே இல்லை. முசம்பானி ஒலிம்பிக்கில் பயனபடுத்தப்படும் பிரமாண்ட நீச்சல் தடாகத்தில் நீந்திய அனுபவமும் இல்லை. 12 மீற்றர் அளவான ஹோட்டல் தடாகத்திலேயே நீச்சல் பழகினார். அதுவும் காலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையே நீச்சல் பழக அனுமதி இருந்தது.

ஒலிம்பிக் போன முசம்பானி தனது ஆரம்ப சுற்றில் மேலும் இரு வீரர்களுடனேயே போட்டியிட வேண்டி இருந்தது. ஆனால் தனது போட்டியாளர்களான நைஜீரியாவின் கரின் பாரே மற்றும் தஜிகிஸ்தானின் பார்கோட் ஒரிபோல் ஆகியோர் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னரே தவறான ஆரம்பத்தைப் பெற்று வெளியேற்றப்பட்டார்கள்,

எனவே அந்தப் போட்டியில் முசம்பானி மாத்திரம் தான் பங்கேற்றார். 17,000க்கும் அதிகமானோர் போட்டியை பார்க்க வந்திருந்தார்கள். போட்டி ஆரம்பிக்கப்பட்டது; முசம்பானியும் தடாகத்தில் குதித்தார். தன்னால் இயன்றவரை நீந்தினார். முதல் 50 மீற்றரை தாண்டுவதுக்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது. கடைசி 50 மீற்றர்களையும் தட்டுத் தடுமாறி நீந்திக் கடந்தார். கடைசியில் அவர் 1:52.72 நிமிடத்தில் போட்டியை நிறைவு செய்தார்.



சராசரியாக ஆடவருக்கான 100 மீற்றர் நீச்சல் போட்டி ஒன்றை ஓரளவு பயிற்சி பெற்ற வீரர் ஒருவர் நீந்திக் கடப்பதற்கு 50 தொடக்கம் 60 விநாடிகளில் மோதுமானது. ஆனால் முசம்பானியோ அதனை விடவும் ஒரு நிமிடம் மேலதிகமாக எடுத்துக் கொண்டார்.

இதன்மூலம் ஒலிம்பிக் நீச்சல் வரலாற்றில் மந்தமான நேரத்தை பதிவு செய்த நீச்சல் வீரராக முசம்பானி சாதனை படைத்தார். ஆனால் அவர் நீந்திய வேகம் அவரது தனிப்பட்ட சாதனை என்பதோடு தேசிய சாதனையாகவும் பதிவானது.

சிட்னி ஒலிம்பிக்கில் அவர் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற தவறியபோதும் சர்வதேச அளவில் புகழ் பெற்றார். முதலாம் இடம் வந்தவர்களை விடவும் ஊடகங்களில் அவரது பெயர் அதிகம் இடம்பெற்றது.

பின்னர் 2004 ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கும் அவர் தகுதி பெற்றபோதும் கடவுச்சீட்டு பிரச்சினையால் அந்த வாய்ப்பு பறிபோனது. பின்னர் உண்மையான நீச்சல் வீரராக மாறிய முசம்பானி 100 மீற்றர் பிரீ ஸ்டைல் போட்டியில் தனது சிறந்த காலத்தை 52.18 விநாடிகள் வரை மேம்படுத்துக் கொண்டார்.

முசம்பானி இப்போது எக்குவட்டோரியல் கினியாவின் தேசிய நீச்சல் வீரர்களுக்கு பயிற்சியாளராக செயற்பட்டு வருகிறார்.



கஸ்டமர்: என்னப்பா தம்பி பாதி வடைய காணல்ல
சர்வர் : இது அரைக்கீரை வட சார்





ஜோன்ஸ் : பெண் பார்த்து வந்த பின் அவன் ஏன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.
பீன்ஸ் : துன்பம் வரும் வேளையில் சிரிங்க என்று யாரோ சொன்னாங்கலாம்.



காதலன் : உன் அப்பனுக்கு கடன் தர்றதும் உனக்கு முத்தம் தர்றதும் ஒண்ணுதான்..
காதலி : ஏன் டார்லிங்..?
காதலன் : திருப்பிக் கொடுக்கறதே இல்லியே

'ஒரு டாக்டர் கதை எழுதினா எப்படி அத்தியாயம் பிரிப்பார்?'
'சாப்பாட்டுக்கு முன் சாப்பாட்டுக்குப் பின்புனு!'





கனவன் பூண்டு 1 கிலோ 500 ரூபா விற்குற நேரத்துல இப்ப இந்த பூண்டு தேவையா?
மனைவி கவலைப்படாதீங்க... இது 1கிலோ 100 ரூபாக்கு விக்கிறப்போ வாங்குன பூண்டு... அப்பவே ரசத்த செச்சி பிரிச்சில போட்டுட்டேங்க

'அந்த டைரவிங் ஸ்கூல்ல மட்டும் ஏன் இவ்வளவு கூட்டம்'
'40 கிலோமீற்றர் வேகத்தை தாண்டாம எப்டி வாகனத்த ஒட்டுறதுனு சொல்லிதாராங்களாம்'






யூடியூபரை பிரசாரத்திற்குக் கூப்பிட்டது தப்பாப்போச்சா.. ஏன்?
பிரசாரம் செய்து முடித்ததும் லைக் பண்ணுங்க, பெல் பட்டனை அழுத்துங்கன்னு பெல் சின்னத்திற்கு மறைமுகமாக வாக்கு கேட்டுட்டார்.



நான்கே நான்கு வருமான வரித் துறை சோதனைகளைப் பார்த்த நீ ஆறு அமுலாக்கத் துறை சோதனைகளைச் சந்தித்த எனக்கு சவால் விடுகிறாயா?



நீதிபதி : பத்தாயிரம், ஒரு மாத ஜெயில் தண்டனை இதுல எது வேனும் உனக்கு.
குற்றவாளி : ஹி.ஹி...பத்தாயிரமே போதும் சாமி எப்டியாச்சும் பொட்டிக்கடை வச்சாச்சியும் பொழச்சிக்குவேன்.

நிருபர் : உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க?
நடிகை : நிகழ்காலக் கணவரை விட நல்லவரா இருக்கணும்னு தான்.

காதலன்: எப்பவுமே உன்னோட நினைப்பாவே இருக்கு டார்லிங்.
காதலி : இப்போதானே நாம பேசி முடிச்சோம்?
காதலன் : அச்சச்சோ! மறுபடியும் உனக்கே போன் செய்துட்டேனா?





கஸ்டமர் பக்கத்து மேசையில ஒருத்தர் சாப்புடுறாரே.. அதே சாப்பாட எனக்கும் கொண்டு வாப்பா!
சர்வர் அவர் ஹோட்டல் முதலாளி சேர்... அத அவரு வீட்டுல இருந்து கொண்டு வந்து சாப்படுறார்...



# கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த கவிதை நூலில் இடம்பிடித்த கவிஞர் பொத்துவில் அஸ்மின் கவிதை





கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தொகுத்த "கலைஞர் 100 கவிதைகள் 100" கவிதை நூலின் அறிமுகவிழா அண்மையில் சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவை முன்னிட்டு தொகுக்கப்பட்டுள்ள இத்தொகுப்பில் தமிழின் மிகச்சிறந்த 100 கவிஞர்களது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தமிழ் கவிஞர்கள் எனப்போற்றப்படும்

புரட்சி கவிஞர் பாரதிதாசன்,

கவியரசர் கண்ணதாசன், அ.மருதகாசி, கவியோகி சுத்தானந்த பாரதி, கவிஞர் சுரதா, கவிக்கோ அப்துல் ரஹ்மான், வாலிபக் கவிஞர் வாலி, ஈரோடு தமிழன்பன், கவிஞர் அ.முத்துலிங்கம், மு.மேத்தா, உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன், பிறைசூடன், பழனிபாரதி, நா.முத்துக்குமார், வித்தகக் கவிஞர் பா.விஜய், கபிலன், விவேகா, மனுஷ்ய புத்திரன், சல்மா, இயக்குனர் சீனுராமசாமி, இயக்குனர் லிங்குசாமி என நீளும் இப்பட்டியலில் பிரபல இலங்கை கவிஞர், தமிழ் திரைப்பட பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் எழுதிய "திருக்குவளை சூரியன்" என்ற கவிதையும் இடம்பெற்றுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டு விழா கலைஞர் நினைவு நாளான 07/8/2024 புதன்கிழமை காலை முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட திராவிட கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பெற்றுக்கொண்டார். இத்தொகுதியின் அறிமுக விழா கலைஞர் அரங்கில் அதே தினம் மாலை 6.00மணிக்கு கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு கவிஞராக அழைக்கப்பட்ட கவிஞர் பொத்துவில் அஸ்மினுக்கு தமிழ் நாடு நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு பிரதி வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இது பற்றி நாம் அவரிடம் கேட்ட போது..

இலங்கையில் அதிகமான தமிழ் கவிஞர்கள் வாழும் மாகாணம் கிழக்கு மாகாணம். நாட்டார் பாடலை நயம்பட பாடக் கூடியவர்கள் எம்பிராந்திய மக்கள்.

இங்கு மீனே பாடும். நான் பாடுவதில் ஆச்சரியம் இல்லை.

என் முற்றத்திலும் என் ரத்தத்திலும் கவிதை ஊறிக்கிடந்ததால்தான் நானும் கவிஞனானேன்.

என் மானசீக குரு கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைகளால் ஆகர்சிக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டு கவிதை உலகுக்குள் நுழைந்தேன்.

என் கவிக்குழந்தை பருவத்தில் கவிப்பேரரசின் கவிதைகளை நடைவண்டியாய் எண்ணி நடைபழகியவன் நான் என்பதை என்றுமே மறவேன்.

2012 இல் "நான்" திரைப்படத்தில் நான் பாடலாசிரியராய் அறிமுகமானேன்.

என்னுள் நம்பிக்கை விதையை விதைத்து, நான் அழும்போதெல்லாம் என்னைத்தேற்றி, எனக்குள் இருக்கும் என்னை கண்டுபிடித்து வெளியே கொண்டு வந்தது கவிப்பேரரசு எழுதிய "இதுவரை நான்" என்றால் மிகையில்லை.

2013 இல் வெளிவந்த எனது "பாம்புகள் குளிக்கும் நதி" கவிதை நூலுக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருந்தார்.

2024 இல் இன்று அவர் தொகுத்திருக்கும் கலைஞர் அவர்களது வரலாற்று கவிதை நூலில் எனது கவிதையும் இடம்பெற்றுள்ளது.

இது சிலரை பொருத்த வரை இது சாதாரணமாகக் கூட தெரியலாம். ஆனால் என்னைப்பொருத்தவரை வாழ்நாள் சாதனையாக கருதுகின்றேன்.

இலட்சத்துக்கு அதிகமான கவிஞர்கள் இருக்கும் தமிழ் இலக்கிய சூழலில் 100 கவிஞர்களுக்குள் நானும் உள்வாங்கப்பட்டிப்பது எனது 27 ஆண்டுகால அயராத உழைப்புக்கு கிடைத்த பெரும் பரிசாகவே நான் பார்க்கின்றேன்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு பிராந்தியத்தில், அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள பொத்துவில் எனும் ஒரு சாதாரண கிராமத்தில் பிறந்த ஒரு சாமன்ய மனிதனுக்கு இது சாதனை அல்லாமல் வேறென்ன..? என்று அஸ்மின் குறிப்பிட்டார்.





# வடக்கின் செல்லக் குரலுக்கான தேடலின் குரல் தேர்வு






C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் வடமாகாணத்தில் நடத்தி வரும் ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டியின் கடந்த வார வடக்கின் செல்லக்குரலுக்கான தேடலின் குரல் தேர்வு கிளிநொச்சி பரந்தன் ஆர். ஜே. மஹாலில் நடைபெற்றது. அதில் அதிதியாக கலந்து கொண்டவர்கள் மங்கள விளக்கை ஏற்றி விழாவை மங்களகரமாக ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து போட்டியாளர்கள் மிகவும் உற்சாகமாக கலந்து கொண்டார்கள். இன்று 11 ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெறவிருந்த வடக்கின் செல்லக்குரலுக்கான தேடல் பாடசாலைகளில் பரீட்சைகள் நடைபெறுவதால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. முல்லைத் தீவுக்கான போட்டி வவுனியா போட்டிகளுடன் நடாத்தப்படவுள்ளது.

அந்தப் போட்டியின் தொடர் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமையும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கடந்த 2024.07.06ஆம் திகதி யாழ்ப்பாண திருமறைக்கலா மன்றத்தில் ஆரம்பமான குரல் தேர்வானது வடமாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களில் குறிக்கப்பட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட இடங்களில் குறிக்கப்பட்ட திகதிகளில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதன் இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ்






இலங்கையை சுற்றி நடைபவனியில் ஈடுபட்டுள்ள பேருவளை சஹ்மியை பேருவளை சமூகசேவையாளர் பாஸி சுபைர் முல்லைத்தீவில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தபோது...

# அருணாவின் அடுத்த பாடல் வெளியீடு




தனியொரு பெண்ணாக நின்று பாடல்கள் இயற்றுவதிலும் அவற்றை ஒலி, ஒளிப்பதிவு செய்து வெளியிடுவதிலும் வல்லமைப் படைத்தவராக திகழ்கிறார் கவிதாயினியும் பாடகியுமான அருணா. இவர் அண்மையில் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீபொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தைப் பற்றி பாடல் எழுதி ஒளி, ஒலிப்பதிவு செய்து வெளியிட்டிருந்தார். இந்த முறை அவர் கிராமத்து மண் வாசனையுடன் காதல் ரசம் கமழும் பாடலொன்று எழுதி வெளியிடப் போகிறார். இந்த முறை இவர், இவருடன் இன்னுமொரு பாடகரையும் இணைத்துக் கொண்டுள்ளார். இவருடன் இந்தப் பாடலை பாடியிருக்கிறார் மலையகத்தைச் சேர்ந்த இளம் பாடகர் ஸ்ரீதரன். இப்பாடலுக்கு இசை மழை பொலிந்திருக்கிறார் இளம் இசையமைப்பாளரான S அன்ரன். இவரும் இந்தத்துறைக்குள் முதன் முறையாக கால் பதித்திருக்கிறார். தான் மட்டும் தனியாக நின்று வெற்றி பெறக் கூடிய வாய்ப்புகளும் தகுதிகளும் இருந்தும் மற்றையவர்களையும் இத்துறைக்குள் பிரகாசிக்க வைக்க இவர் கைக் கொள்ளும் நடவடிக்கைகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இவரது இசை அல்பம் விரைவில் வெளிவர இருக்கிறது. கலைஞர்களுக்கு கை கொடுத்து உதவி வரும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி இதற்கு முழுமையான ஊடக அனுசரணையை வழங்கியிருக்கிறது.

# கவிஞர் உரும்பையூர் து. திலக்கின் (கிரி) உன்னதமான இலக்கிய பயணம்!



**உங்களைப் பற்றிய அறிமுகத்தை சுருக்கமாகக் கூறுங்கள்?**

யாழ்ப்பாண மாவட்டத்தின் உரும்பிராயை சொந்த ஊராகக் கொண்ட திரு. திருமதி துரைராசா குணேஸ்வரி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தேன். எனது இயற் பெயர் துரைராசா கிரிகேஸ்வரன் என்பதாகும். நான் ஆரம்பக் கல்வியை யாழ். உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலைவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், உயர் தரத்தை கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயத்திலும் பயின்றுள்ளேன்.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் வன்னி பெருநிலப் பரப்பில் எனது கல்வியைத் தொடர்ந்து வந்துள்ளேன். அக்காலப் பகுதியில் கிளி/ அக்கராயன் தமிழொளி கலா மன்றத்தினூடாக அரங்க நாடகங்கள், தெருவழிக் கலையாற்றுகைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பான போட்டி நாடகங்களிலும் நான் பங்குபற்றி வந்துள்ளேன். அக்காலங்களில் நாடக ஆசிரியர்களாக ச.சக்திவேலும் பாலாவும் இருந்தனர். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து நடாத்திய நாடகத்தில் பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் இடம்பெற்ற 'சூரியனைச் சுட்டெரிப்போம்' என்ற எமது நாடகம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஆசிரியர் சக்திவேலின் தயாரிப்பில் இடம்பெற்ற 'மீண்டும் வருவோம்' எனும் எமது சமூக விழிப்புணர்வு நாடகம் பல இடங்களில் அரங்கேற்றம் கண்டு வந்தது.

1999 ஆம் ஆண்டு மூத்த கவிஞர் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் ஐயாவின் தலைமையிலான கவியரங்கில் நான் கலந்துகொண்டு வரவேற்பையும் பலரது பாராட்டுக்களையும் பெற்றமை பசுமையான நினைவுகளாக இன்றும் என் மனதில் பதிந்துள்ளது. தொடர்ந்து கிராமங்கள் தோறுமான மக்கள் பணிகள், சமூக சேவைகள் என்பவற்றை வழங்கி வந்துள்ளேன். பின்னாட்களில் போர்க்காலப் பகுதியிலான இடர்காலப் பணிகள், மக்கள் சேவை என்பவற்றில் பணியாற்றி 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தடுப்பு முகாம் சென்று வவுனியா, பொலனறுவை, காலி, அனுராதபுரம், கொழும்பு போன்ற மாவட்டங்களில் நான்கு வருடங்களும் ஏழு மாதங்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். அக்காலப் பகுதியில் பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளேன்.

'உயிர் வலித்த கணங்கள்' பகுதியில் எனது 'வலி சுமந்த உணர்வின் வரிகள்' என்ற தலைப்பில் அமைந்த தொடர் கட்டுரைகளும், உணர்வின் வலிகளும் எழுதப்பட்டதோடு கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், குறுங்கதைகள் என்பனவற்றையும் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளேன். பின்னர் 2015 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டிற்கு புலம்பெயர்ந்து வந்தடைந்தேன்.

2023 ஆம் ஆண்டு 'சிதறல்கள் 100' எனும் எனது முதற் கவிதை நூலை 'ஜீவநதி' வெளியீட்டகமும், யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் இணைந்து யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வெளியீடு செய்தது. இதுவே எனது இலக்கியத் துறை சார்ந்த அறிமுகமாகும்.

**உங்கள் பாடசாலை வாழ்க்கை, இலக்கிய ஈடுபாடு பற்றிக் குறிப்பிடுங்கள்?**

இடைநிலைக் கல்வியைக் கற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இணை பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுத் துறைகளில் எனக்கு அதிக ஈடுபாடு இருந்தது. அந்தவகையில் உடற்கல்வி அணியின் தலைமையாளனாகவும், பாடசாலை உதைப்பந்தாட்ட அணியின் கோல் காப்பாளனாகவும் இருந்து வந்துள்ளேன். அத்துடன் சமய நிகழ்வுகள், பேச்சு, நகைச்சுவை செய்தி வாசித்தல் போன்றவற்றோடு 'காத்தவராயன்' கூத்தில் பாலகாத்தானாகவும் நடித்தது இன்னும் நினைவில் இருக்கிறது. ஒருதடவை நகைச்சுவை செய்தி வாசித்து அதே நாளில் அதனைச் சுட்டிக்காட்டி கணித பாட ஆசிரியரிடம் அடிவாங்கிய நினைவும் இருக்கிறது.

**முதன் முதலாக எழுத்துத் துறைக்குள் வந்த அனுபவம் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

நான் தொடர்ந்து பத்திரிகைகளை அதிகம் வாசிப்பதுண்டு. அதிலும் குறிப்பாக ஆசிரியர் தலையங்கத்தை முதன்மை அடிப்படையில் வாசித்துக்கொள்வேன். அத்தோடு மக்கள் மன்றம், குறைகேள் மன்றம், கட்டுரைகள் என்பனவற்றையும் அதிகமாக வாசிப்பேன். இதனூடாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்கள், பொது இடங்களில் சீர்செய்யப்பட வேண்டிய



விடயங்கள் என்வற்றை எழுத வேண்டுமென்று என்னை அதிகமாகத் தூண்டியது என்னுடைய வாசிப்புப் பழக்கமே. இப்பொழுதும் மின்னிதழ்ப் பத்திரிகைகளில் முதலில் நான் வாசிக்க முனைப்புக் காட்டும் பகுதி அன்றைய நாளுக்கான ஆசிரியர் தலையங்கமே. நாட்டின் அரச, அரசியல், சமகால நிலைப்பாட்டை அன்றைய நாளுக்கான முதன்மைப் படுத்தலாக இருப்பது ஆசிரியர் தலையங்கம் ஆகும்.

**முதன் முதலாக கவிதை எழுதிய தருணம் எப்படிப்பட்டது?**

வலி நிறைந்த வாழ்வு, போர் நிறைந்த சூழல், பொருளாதார நெருக்கடி, மரண ஓலங்கள், தொற்று நோய்களின் தாக்கங்கள், பிறர் வாழ தம்முயிர் ஈய்தல், அளப்பரிய தியாகங்கள், பாரிய அர்ப்பணிப்புகள் இவ்வாறான நாளாந்த வாழ்வியல் பயணத்தில் காலக் கடிகாரம் ஓய்வின்றிச் சுழன்ற அந்த நெஞ்சை நெருடிய தருணங்கள், கண் கண்ட காட்சிகள், உள்ளெழுந்த உணர்வுகளை எழுத்துகளாக வடிக்கத் தூண்டியது. இவ் உணர்வுப் பிரவாகத்தின் கிறுக்கல்களே கவிதைகளாக, கட்டுரைகளாக, தொடர் கலை ஆற்றுகைகளாக என்னுள் வெளிப்படத் தோன்றியது.

**உங்களது முதலாவது ஆக்கம் எப்போது எந்த ஊடகத்தில் வெளிவந்தது?**

1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வன்னியில் அக்கராயனில் வாழ்ந்த காலத்தில் ஈழநாதம் பத்திரிகையின் வார இதழான வெள்ளிநாதத்தில் 'படத்திற்கு மெருகூட்டுங்கள்' பகுதியில் ஒரு கல்லறையின் அருகே தாய் இருந்த அழுவதான காட்சி இருந்தது. அதனைப் பார்த்துவிட்டு,

கருவறையில் சுமந்தவள்
கல்லறை அருகிலிருந்து கதறுகிறாள்
அவன(ள)து நினைவுகள்
இன்னமும் நெஞ்சறையில்
பசுமையாய் இருப்பதனால்!

இதுவே எனது முதல் கவிதை வரியாக்கமாகும். இது பரிசுக்கான கவிதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 'அர்ச்சனா புகைப்படக் கலையகம்' இதற்கான நினைவுப் பரிசினை வழங்கியது.

**வாசகர்கள் மத்தியில் உங்கள் கவிதைகளுக்கான வரவேற்பு எந்தளவில் உள்ளது?**

என் ஆரம்ப கால எழுத்துக்களை அங்கீகரித்து ஆதரவு தந்து இற்றை வரை உந்து சக்தியாக முன்னகர்த்திச் செல்வது வாசகர்களே என்று பேரன்போடு சொல்வேன். நெருக்கடி மிகுந்த சூழலில் ஒவ்வொரு இடமாக மாற்றப்படுகின்ற போதும் என் உணர்வுகளுக்கும், ஏட்டுக்கும், எழுத்தாணிக்கும் நான் கடிவாளமிட்டதேயில்லை. எனது, என் சார்ந்தவர்களின் வலிகளை, தாங்கொணா உணர்வுகளை வரிகளாக்கிய போது இதைப் பெருமனதுடன் ஏற்று எம் வலிக்கு ஒத்தடம் கொடுத்த அச்சு, இலத்திரனியல் ஊடகங்களின் ஆசிரியர் குழுமங்களையும் இந்த நேரத்தில் நன்றியுணர்வுடன் நினைத்துப் பார்ப்பதோடு என் உணர்வுகளுக்கு அயராது களம் தந்த பத்திரிகைகளும் என் வலிகளுக்கு ஒத்தடம் போட்டதை இலக்கிய வாழ்வில் என்றும் மறந்திடலாகாது. பத்திரிகையில் ஒவ்வொரு வாரமும் என் ஆக்கங்கள் பற்றிய கருத்தாடல்கள் வந்துகொண்டே இருக்கும்.

**உங்களுடைய முதல் பிரசவமான 'சிதறல்கள் 100' என்ற கவிதைத் தொகுதியின் தலைப்புப் பற்றிக் கூறுங்கள்?**

'சிதறல்கள் 100' என்பது ஒரு நூலுக்கான தலையங்கம் அல்ல. என் வாழ்நாளில் நான் எதிர்கொண்ட பல்வேறுபட்ட நெருக்கடியான சூழல்களின் எண்ணச் சிதறல்களை வரிகளாக்கி நின்றது. அந்த வரிகளினூடாக பல்வேறுபட்ட தலைப்புக்களில் அமைந்த என் வலிகளுக்கு நானே ஒத்தடம் கொடுத்து நின்றேன். அந்த வேளைகளில் எண்ணக் குவியல்களாகச் சிந்தப்பட்ட சிதறல்களுள் 100 ஆக்கங்களை தேர்ந்தெடுத்து 'சிதறல்கள் 100' என்ற எனது முதலாவது காகிதப் பிரசவத்திற்கு பெயர் சூட்டி அகமகிழ்ந்தேன்.

**உங்களது கவிதை நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள கருப்பொருட்கள் குறித்துக் கூறுங்கள்? இவற்றினூடாக நீங்கள் சொல்ல முனையும் விடயங்கள் என்ன?**

எனது படைப்புக்கள் ஊடாக பெற்றோர்களை மதித்தல், மொழிச்சிதைவு,

(07 ஆம் பக்கம் பார்க்க)







*வெலிகம ரிம்ஸா முஹம்மத்*

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பாராட்டும் கௌரவிப்பும்










**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு (21) சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி யு.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ. பீர்முகமது, சட்டமுதுமாணி, சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ரீ. எம். ரின்சான், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம். என்.எம். ரம்ஸான், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எச். சபீகா, ஏ.எம். தௌபீக், அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஐ.எல். ரிஸ்வான், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சீ. முஹம்மத், பிரதேச செயலக நிதி உதவியாளர் ஏ.சீ.றியாஸ் கலாசார மத்திய நிலைய நிறைவேற்றுக்குழு குழு உறுப்பினர்களான ஓய்வு பெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப், ஆசிரியர் எம்.ஐ. எம். அமீர், மூத்த கலைஞர் எம். ஐ. அலாவுதீன் மற்றும் மத்திய நிலையத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளர் ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர், மத்திய நிலைய அபிவிருத்தி சங்க செயலாளர் அஸ்வான் மௌலானா, பொருளாளரும் இறக்காமம் மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யுவான் ஏ.பி. நௌசாத் உட்பட கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மத்திய நிலைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஹஸீதா, சிறுமிகளின் பரத நாட்டியம் உட்பட பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளும் மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, கடந்த வருடம் கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, பாராட்டு கௌரவம், நினைவுச் சின்னம் வழங்கும் வைபவங்களும் இடம்பெற்றன. இதன் போது சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில், முக்கிய அம்சமாக சாய்ந்தமருதில் பிரதேச செயலாளராக இருந்து ஊரின் நலன் கருதி, தன்னலம் பாராது சேவையாற்றி அரும்பணியாற்றிவரும் சேவை செம்மல் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸானினால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் இறக்காமம் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென்ற ஏ.பி. நௌசாத் மற்றும் மத்திய நிலையத்தின் செயலாளராக இருதடவைகள் கடமையாற்றிய கலைஞர் அஸ்வான் மௌலானா ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

மிகக் குறுகிய காலத்தில் சாய்ந்தமருதில் கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும் அதில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் சித்திரம், நடனம் போன்ற பாரம்பரிய கலாசார பாடநெறிகளும் ஆரம்பிக்கப்பட்டு, அதில் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் நன்மையடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் உரும்பையூர் து. திலக் (கிரி)

**(06 பக்கத் தொடர்)**

பண்பாட்டுப் பிறழ்வு, போதைப் பொருட்களுக்குள் அடிமையாதல், சமகாலத்தில் போலிகளின் தாக்கம், இன அழிப்பின் வலிகள், நிழ்கால ஏமாற்று அரசியல், வாழ வலுவற்று நிர்க்கதியான மனிதர்கள், வாழ்வாதாரத்திற்கான உதவி தேடல், தனவந்தர்கள், பரோபகாரிகள் ஆற்றவேண்டிய தார்மீகப் பொறுப்புக்கள் என்பவற்றைத் தலைப்புக்களாக்கி என்னால் இயன்றவரை சிதறவிட்டிருக்கிறேன்.

கால ஓட்டத்திற்குள் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை தொலைத்து அல்லது மறந்து பயணிக்கும் எதிர்காலச் சமூகம் அல்லது இளைய தலைமுறையினர் பண்டைய எமது வாழ்வியல் முறைகளை, பண்பாட்டு விழுமியங்களை வாசித்தறியும் வகையில் படைக்க வேண்டுமென்கின்ற எழுத்தாளர்களின் பெரு விருப்பத்தில் நானும் ஒருவனாக பங்காற்றுவதனூடாக இந்த சமூகத்திற்கு என்னாலான செய்திகளைச் சொல்லியிருக்கிறேன்.

**உங்கள் கவிதைகள் மூலம் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று நம்புகின்றீர்களா?**

ஆம், நிச்சயமாக. நாம் அனுபவித்தவற்றை, எமது வாழ்வியல் முறைமைகளை, எமது மூதாதைகள் கட்டுக் கோப்புடன் பாதுகாத்து வந்த பண்பாட்டு விழுமியங்களை இளைய தலைமுறைக்கு தொட்டு நிற்பதன் ஊடாக அல்லது கலை வடிவங்களாக வெளிப்படுத்துவதன் பிரதிபலிப்பாக கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறை சமூகத்தின் மத்தியில் வெறுப்புக்குரிய தன்மையை ஏற்படுத்தும். அவ்வாறன நிலை தோற்றுவிக்கப்படின் ஒரு கட்டுக் கோப்பான சமூகம் நிலை தடுமாறாது நின்று நிலைத்து வாழும் என்ற நம்பிக்கையோடே கலை வடிவங்கள் சமூகப் பொதுவெளியில் படைக்கப்படுகின்றது. அதில் எனக்கும் அசையாத நம்பிக்கை உண்டு.

**இதுவரை சுமார் எத்தனை கவிதைகளை எழுதியுள்ளீர்கள்?**

1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 நடப்பாண்டு வரை எனது எழுத்துப் பணியை தொடர்ந்த வண்ணமே வருகிறேன். சமூக வலைத்தளங்கள், அச்ச இலத்திரனியல் ஊடகங்கள் என அவ்வப்போது எண்ணக் கருவில் தோன்றுபவற்றை வெளிப்படுத்தி வருகிறேன். அதற்குள் 100 ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்தே கவிதை நூலாகத் தொகுத்துள்ளேன். இன்னும் பலநூறு படைப்புகள்; என் கைவசம் சேமிப்பில் உள்ளது. அவற்றைக் காலம் வருகின்ற போது நூலாக்கம் செய்வேன். ஆனால் அவற்றின் எண்ணிக்கையினை என்னால்; குறிப்பிட்டுச் சொல்ல முடியாதுள்ளது.

**நீங்கள் அதிகமாக கவிதைகளையே எழுதியுள்ளீர்கள். இலக்கியத்தின் ஏனைய துறைகளில் ஈடுபாடு காட்டும் அக்கறையில்லையா?**

இது ஒரு நல்ல கேள்வி. இலக்கியப் பரப்பில் பத்திரிகைகளுக்கு கட்டுரையாக, குறுங்கதையாக, 'வலி சுமந்த உணர்வின் வரிகள்' என்ற தலைப்பில் வாரத் தொடராக, சிறுகதை, பத்திரிகை வாயிலான விவாத மேடைகள் போன்றவற்றை தொடர்ந்து எழுதியதுடன் இலைமறை காயாக இருக்கின்ற கலை இலக்கியவாதிகள், தென்னிந்தியத் திரைப்பட இயக்குனர், அரசியல்வாதிகளை வாரப் பத்திரிகைகளுக்கு நேர்காணலும் செய்திருக்கிறேன். அவற்றைக் காணலை (வீடியோ) வடிவமாக சமூக வலைத்தளங்களில் பகிர்ந்திருக்கிறேன். அத்துடன் விழிப்புணர்வு சார்ந்த எனது கவிதை வரிகளை ஒலி வடிவமாக சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளேன்;. பத்திரிகைகளுக்கு செய்திகள் சேகரிக்கும் பணிகளிலிலும் ஈடுபட்டுள்ளேன். இதுவரை மூன்று பாடல்கள் எழுதியுள்ளேன். இன்னும் இலக்கியப் பரப்பில் இரண்டறக் கலந்து பயணிக்கும் ஆவலில் உள்ளேன்.

**இதுவரை நீங்கள் எழுதிய உங்களது சிறுகதைப் படைப்புகள் பற்றிக் கூற விளைவது?**

நான் எழுதிய சிறுகதைகளுள் 'நடமாடும் தெய்வங்கள்' இது வைத்தியர்கள், தாதியர்களின் சேவை குறித்ததான சிறுகதையாக அமைந்துள்ளது. 'பொய்க் கால்' போரினால் காலை இழந்த ஒருவர் பேருந்தில் பயணிக்கின்ற பொழுது ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறித்ததான ஒரு சிறுகதையாக இருக்கிறது. 'பட்டாசு வேண்டாம்' இது யுத்தத்தில் தந்தையை இழந்த சிறுவர்கள் பண்டிகை நாளில் கொழுத்தப்படுகின்ற பட்டாசின் சத்தத்தைக் கேட்டு அச்சப்படுவதான சிறுகதையாகும். 'ஓட்டக் குடை' இது ஒரு குறுங்கதையாகும். எழுதிய பல சிறுகதைகளுக்குள் இந்த மேலே சொல்லப்பட்ட தலைப்பிலமைந்த சிறுகதைகள் என் நேரடி அனுபவத்தில் சாதக பாதகங்களை ஏற்படுத்தியமையால் இந்தக் கதைகளின் தலைப்புகள் இன்றும் என் நினைவில் உள்ளது.

**உங்களுக்குள் சிறுகதைகள் எவ்வாறு உருவாகின்றது? சிறுகதைகளுக்கான உங்களது பாத்திரப்படைப்பு எப்படிப்பட்டது?**

என்னைப் பொறுத்தவரையில் எனது படைப்புகள் கற்பனைக்கு அப்பால் அனுபவ ரீதியான அல்லது கண்டுணர்ந்த பட்டறிவுகளையே படைத்து வருகிறேன். அதற்கான கதாபாத்திரங்களை புனைப் பெயரில் சித்தரித்து வருகிறேன். அத்தனை கருக்களும் சமூகத்திற்கு அல்லது எனது கடந்து வந்த வாழ்வியல் பயணத்தில் பட்டுத்தெறித்த விம்பங்களேயாகும். ஆதங்கப் படைப்பாக மட்டுமன்றி ஒரு விழிப்புணர்வுப் படைப்பாகவே இதனை நான் படைத்து வருகிறேன் என்பது குறிப்பிடத்தக்கது.

செந்தூரம்



## வித்யூராமன்



தமிழ் சினிமாவில் நிறைய பிரபலங்களின் வாரிசுகள் களமிறங்கியுள்ளார்கள், அதில் ஒருவர் தான் நடிகை வித்யூலேகா ராமன். நடிகர் மோகன் ராமனின் மகளான இவர் இயக்குனர் கௌதம் மேனன் இயக்கத்தில் 2012ம் ஆண்டு வெளியான நீதானே என் பொன்வசந்தம் படத்தில் சமந்தா தோழியாக நடித்து சினிமாவில் அறிமுகமானார்.

பின் தீயா வேலை செய்யணும் குமாரு, ஜில்லா, வீரம், காக்கிச் சட்டை, மாஸ், பஞ்சு மிட்டாய் என தொடர்ந்து நடித்து வந்தார். தமிழை போல தெலுங்கிலும் அறிமுகமாகி தொடர்ந்து படங்கள் நடித்த வண்ணம் இருந்தார்.

பிஸியாக நடித்துக்கொண்டு வந்தவர் 2020ம் ஆண்டு உறவினர்கள் சூழ சஞ்சய் என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

திருமணத்திற்கு பின் வித்யூலேகா ராமனை அவ்வளவாக படங்களில் காணவில்லை, ஆனால் இவர் விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்துகொண்டிருந்தார்.

இந்த நிலையில் நடிகை வித்யூராமன் புதிய கார் ஒன்றை வாங்கியுள்ளார்.

தனது கணவர் மற்றும் அப்பா, அம்மாவுடன் அனைவருடனும் புதிய காருடன் எடுத்த போட்டோவை வெளியிட்டுள்ளார்.

# BP யை எகிற வைக்கும் லொஸ்லியா



இலங்கையைச் சேர்ந்த லொஸ்லியா மரியநேசன் தனியார் ஊடகம் ஒன்றில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றி வந்தார். பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கவே அந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டார்.

பிக் பாஸ் சீசன் 3 நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்து கொண்ட லொஸ்லியா, தனது இலங்கை தமிழ் பேச்சாள் பலரையும் ஈசியாக கவர்ந்து கொண்டார்.

இதை தொடர்ந்து பிக் பாஸ் வீட்டில் சக போட்டியாளராக காணப்பட்ட கவின் உடன் காதல் வயப்பட்டார். இவர்களுடைய காதலுக்கு பிக் பாஸ் வீட்டிற்கு சென்ற லொஸ்லியாவின் தந்தை எதிர்ப்பு தெரிவிக்கவே சில நாட்கள் அவருடன் பேசாமல் இருந்தார்.

பிக் பாஸ் நிகழ்ச்சிகளின் பின்னர் இருவரும் திருமணம் செய்து கொள்வார்கள் என எதிர் பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றம் தான் கிடைத்தது. தற்போது கவின் வேறொரு பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் ஆக்டிவாக இருக்கும் லொஸ்லியா அடிக்கடி போட்டோ ஷூட் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார். ஒரு சில படங்களில் இவர் நடித்த போதும் பெரிதாக இவருக்கு வெற்றி கிடைக்கவில்லை.இந்த நிலையில், தற்போது லொஸ்லியா தனது இன்ஸ்டா பக்கத்தில் பின்னழகை காட்டி புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

இதைப் பார்த்த ரசிகர்கள் சிலர் ரசிக்கவும் சிலர் லொஸ்லியா மீது வெறுப்பையும் அள்ளிக் கொட்டி வருகின்றார்கள்.



## கீர்த்தி சுரேஷின் 'ரகு தாத்தா'

ரகு தாத்தா' படம் ஒரு முழுமையான நகைச்சுவை கலந்த பொழுதுபோக்கு படமாக உருவாகி உள்ளதால், படம் பார்க்கத் திரையரங்கிற்கு வருபவர்கள் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு ஜாலியாகச் செல்லலாம் என நடிகை கீர்த்தி சுரேஷ் கூறியுள்ளார்.

"அரசியல் தாக்கம், எதிர்மறையான கருத்துகள், முன்னுக்குப் பின் முரண் என படத்தில் எந்த ஒரு இடத்திலும் நெருடல்கள் இருக்காது," என்றும் அவர் கூறினார்.

ஹோம்பாலே பிலிம்ஸ் தயாரிப்பில், நடிகை கீர்த்தி சுரேஷ் கதையின் நாயகியாக முக்கிய பாத்திரத்தில் நடித்திருக்கும் 'ரகு தாத்தா' படம் ஆகஸ்ட் 15ல் வெளியாகிறது.

சென்னையில் நடைபெற்ற படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய கீர்த்தி சுரேஷ், "இயக்குநர் சுமனிடம் கதையைக் கேட்டதும், இதற்கு முன்னால் இதுபோன்ற ஒரு கதையைக் கேட்டதில்லையே. இந்தப் பாத்திரம் நமக்கு ஒத்து வருமா என்று யோசித்தேன். இந்தக் கதைக்களத்தால் ரசிகர்களைத் திரையரங்கத்திற்குள் இழுத்துவர முடியுமா? என்ற தயக்கமும் இருந்தது. அதனை இயக்குநர் சுமனும் தயாரிப்பாளர் விஜய்யும் உடைத்தெறிந்தனர்.

"ரகு தாத்தா' படத்தில் இந்தி திணிப்பு பற்றி பேசப்படவில்லை. கதையைத் தொடர்புபடுத்தும் வகையில் இந்தி திணிப்பு ஒரு உதாரணமாகக் கையாளப்பட்டுள்ளது. பெண்கள் மீதான திணிப்பு பற்றித்தான் பேசப்பட்டுள்ளது.

அது எந்தமாதிரியான திணிப்பு என்பதை இப்போதே கூறிவிட்டால் படத்தைக் காணும்போது அதிலுள்ள சுவாரசியம் குன்றிவிடும். அதனால், நேரில் படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். படத்தில் சிறிதளவு கருத்து சொல்ல முயற்சி செய்துள்ளோம்.. ஆனால், அது அறிவுரையாக இருக்காது. இது படத்தைப் பார்க்கும்போது ரசிகர்களுக்குப் புரியும். கண்டிப்பாக இந்த படம் அனைவருக்கும் பிடிக்கும்," என்று கூறியுள்ளார் கீர்த்தி சுரேஷ்.

'ரகு தாத்தா' படத்தில் எம்எஸ் பாஸ்கர், தேவதர்ஷினி, ரவீந்திர விஜய், உள்பட பலர் நடித்துள்ளனர். சுமன் குமார் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்திற்கு சீன் ரோல்டான் இசையமைத்துள்ளார்.

## சமீரா ரெட்டிக்கு மசாஜா?

நடிகை சமீரா ரெட்டியை அவரது இரண்டு குழந்தைகள் அடித்து மசாஜ் செய்யும் வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வரும் நிலையில் இதுதான் பெஸ்ட் மசாஜ் என கமெண்ட்கள் பதிவாகி வருகின்றன.

இந்தி மற்றும் தெலுங்கு படங்களில் நடித்துக் கொண்டிருந்த நடிகை சமீரா ரெட்டி, சூர்யா நடிப்பில் கௌதம் மேனன் இயக்கத்தில் உருவான 'வாரணம் ஆயிரம்' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். அதன் பிறகு அஜித் நடித்த 'அசல்' கௌதம் மேனன் இயக்கிய 'நடுநிசி நாய்கள்' லிங்குசாமி இயக்கிய 'வேட்டை' விஷால் நடித்த 'வெடி' உள்பட சில தமிழ் படங்களில் நடித்தார்.

இந்த நிலையில் நடிகை சமீரா ரெட்டி கடந்த 2014 ஆம் ஆண்டு தொழிலதிபர் அக்சய் என்பவரை திருமணம் செய்து கொண்ட நிலையில் இந்த தம்பதிக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

இந்த நிலையில் நடிகை சமீரா ரெட்டி இன்ஸ்டாகிராமில் பிரபலம் என்பதும் அவருக்கு சுமார் இரண்டு மில்லியன் ஃபாலோயர்கள் உள்ள நிலையில் அவ்வப்போது தனது குடும்ப புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவு செய்து வருவார்.

இந்த நிலையில் சமீரா ரெட்டி சமீபத்தில் தனது இரண்டு குழந்தைகளும் அவரது முதுகில் அடித்து மசாஜ் செய்யும் வீடியோவை வெளியிட்டுள்ளார். ஒரு தாய்க்கு இதைவிட பெஸ்ட் மசாஜ் எதுவும் இல்லை என்று இந்த வீடியோவுக்கு கமெண்ட்கள் பதிவாகி வருகிறது.



# ரம்பா CANADA மருமகள் ஆனது எப்படி?

சினிமாவில் காமெடி கேரக்டர்களில் நடித்து புகழ்பெற்றவர் பயில்வான் ரங்கநாதன். இவர் தற்போது யூடியூப் பிரபலமாக வலம் வருகிறார். இந்த நிலையில், ரம்பா கவர்ச்சி நடிகை ஆனது எப்படி? அவர் கனடா மருமகள் ஆனது எப்படி என்று கூறியுள்ளார் பயில்வான் ரங்கநாதன். அதன்படி அவர் கூறுகையில்,

தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் மேடைகளில் இருந்து நடித்து வந்தவர்கள், டான்ஸ் குரூப்ல நடனமாடும் பெண்கள் நடிகைகளானதும், அதற்கு பிறகு டூப் போட வந்த நடிகைகளும் கதாநாயகிகளாக மாறினார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் ரம்பா என்கிற விஜயலட்சுமி என்கிற அமிர்தா. அவர் கனவில் கூட நினைத்து பார்த்திருக்க மாட்டார். சினிமாவில் இப்படி நடிப்போம் என்று.

ஆரம்பத்தில் சத்யா மூவிஸ் படத்தின் நிறுவுனர், தயாரிப்பாளர் ஆர். எம் வீரப்பனுடைய மகன் தமிழழகன் முதன் முதலாக ஒரு சொந்த படத்தை இயக்கினார்.

அந்த படத்தின் பெயர் 'நிலா பெண்ணே' தன்னுடைய கனவுகளை எல்லாம் அந்த படத்தில் காட்சிகளாக மாற்றினார். அந்த படம் 80 சதவீதம் முடிந்த நிலையிலே, அந்த படத்தில் கதாநாயகியாக நடித்த திவ்யபாரதி மரணம் அடைந்தார்.

இதையடுத்து அவரைப் போலவே, ஒரு பெண்ணைத் தேடினார். அதற்கு விஜயவாடாவை சேர்ந்த ரம்பா எனும் அமிர்தா ஓரளவுக்கு செட் ஆனார். இவ்வாறு திவ்யபாரதிக்கு பதிலாக தான் நடிக்க வந்தார் ரம்பா. அதற்கு பிறகு தெலுங்கு, மலையாளம் என்று நடிச்சார்.முதல் முதலில் தமிழில் அவர் கதாநாயகியாக நடித்த படம் தான் உழவன் மகன்.

அதை தொடர்ந்து, சுந்தர் சி எழுதி இயக்கிய 'உள்ளத்தை அள்ளித்தா' என்ற படத்தில் ரம்பா கதாநாயகியாக நடித்தார். அவரின் தொடை அழகை மிகவும் கவர்ச்சியாக காட்டினார் சுந்தர். சுந்தர் சியை வெற்றி படமாக்கிய படமும் உள்ளத்தை அளித்ததா தான்.



இதை அடுத்து நிறைய படங்களில் நடித்த ரம்பா, தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி என்று சக்கை போடு போட்டார்.

அவருடைய சிரிப்பும் தொடையழகும் பின்புற அழகும் மிக அழகாக இருந்ததால் ரசிகர்கள் அவரை கனவுக்கு கன்னியாக ஏற்றுக் கொண்டார்கள்.எப்போதுமே ஒரு நடிகனுக்கு, நடிகைக்கு ஏழரை சனி எப்ப வரும்னா, நிறைய பணம் சேர்ந்து .. நம்மை வைத்து பிறர் நிறைய சம்பாதிக்கிறார்களே நாம ஏன் அந்த படத்தை தயாரிக்க கூடாது என்ற எண்ணத்தில் தான். இவ்வாறு தான் அவருக்கும் ஏழரை சனி பிடித்தது.

அதுபோல் அவர் சொந்த செலவில் தயாரித்த படத்தின் பெயர் 'த்ரீ ரோசஸ்' இந்த படத்துல ரம்பா, ஜோதிகா, லைலா மூவரும் கதாநாயகிகள். கவர்ச்சியும் காட்டி நடித்தார்கள். ஆனால் எடுபடவில்லை.

அதன் பிறகு அந்த சோகத்தில் இருந்து மீள 'குயிக் கன் முருகன்' என்ற படத்தில் நடித்தார். அது சூப்பர் ஹிட்டானது.

தமிழில் மட்டுமின்றி தெலுங்கு, மலையாளம், ஹிந்தி என்று அத்தனை மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட படம். ரம்பா நடித்த படங்களிலேயே அவருடைய நடிப்பு திறமைக்கு கிடைத்த படம் தான் குயிக் கன் முருகன். அத்துடன் சினிமாவில் இருந்து விலகினார்.

இதை அடுத்து, கனடா நாட்டைச் சேர்ந்த இந்திரகுமார் பரதன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

அவர் இலங்கை போரின் போது அங்கிருந்து தப்பி கனடாவுக்கு போய் கடினமாக உழைத்து கோடீஷ்வரர் ஆனார். அப்பத்தான் ரம்பாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். ஆனால் திருமணம் ஆன சில மாதங்களிலேயே ரம்பாவுக்கும் இந்திரகுமாருக்கும் விரிசல் ஏற்பட்டது.ரம்பா மீண்டும் இந்தியா வர, அவரை சமாதானம் செய்ய நடிகைகள், தயாரிப்பாளர் எல்லாரும் அட்வைஸ் பண்ணினார்கள்.அதாவது, அவர் ஒரு கோடீஸ்வரர், உன்ன நல்லா வச்சு காப்பாத்துவார், என்று.. இந்திரகுமார் பரதனும் ரம்பாவை சமாதானம் செய்து அவரை மூன்று குழந்தைகளுக்கு தாயாக்கினார். ஆனாலும், முக்கியமான விஷயம் எப்போதுமே தமிழ் ரசிகர்கள் ரம்பாவை கவர்ச்சி நடிகையாக தான் பார்ப்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐஸ்வர்யா ராஜேஷுக்கு வந்த ஆசை



தமிழ் சினிமாவில் அட்டகத்தி படத்தின் மூலம் அறிமுகமானவர் தான் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ். இதைத்தொடர்ந்து ஏராளமான படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்திருந்தார். இவர் தேர்ந்தெடுக்கும் திரைக்கதைகள் அழுத்தமாக காணப்பட்டதால் தொடர்ந்து முன்னணி நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பையும் பெற்றார்.

தற்போது தமிழில் மட்டும் இல்லாமல் தெலுங்கு சினிமாவிலும் நடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார். தமிழில் விஜய் சேதுபதியுடன் நடித்த படங்கள் இவருக்கு விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றுக் கொடுத்தன.

தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்ட ஐஸ்வர்யா ராஜேஷ் அடுத்தடுத்த படங்களிலும் சிறப்பான நடிப்பை கொடுத்திருந்தார்.

ஆரம்பத்தில் மிகவும் ஹோம்லியாக நடித்து வந்த ஐஸ்வர்யா தற்போது தன்னுடைய ரூட்டை கவர்ச்சிக்கு மாற்றிக் கொண்டுள்ளார். இது ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் ஆக்டிவாக இருக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ் அடிக்கடி புகைப்படங்கள் பகிர்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். சமீபத்தில் ஜுவல்லரி ஷாப் ஒன்றின் திறப்பு விழாவில் பங்கேற்ற ஐஸ்வர்யா ராஜேஷ் கலக்கலான உடையில் பங்கேற்று அனைவரையும் கவர்ந்திருந்தார்.

இந்த நிலையில் அவரிடம் உங்களுக்கு ஒரு பெரிய பாலிவுட் நட்சத்திரம் அல்லது தென்னிந்திய நடிகருடன் சாப்பிட ஆசை என்றால் அது யாருடன் என கேள்வி எழுப்பப்பட்டு இருந்தது.

அதற்கு ஐஸ்வர்யா ராஜேஷ் இளைய தளபதி விஜய் உடன் டின்னர் சாப்பிட ஆசை என குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஆசை நிறைவேறுமா என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# பெண்ணின் பெருமையே மண்ணின் மகிமை

பெண்ணின் பெருமையை உயர்த்தும் நாடே இந்த மண்ணுலகில் உயர்ந்துள்ளது. தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆணுக்கு சமமாகவும், ஆண்களை விட அதிகமாகவும் முன்னேறி வருகின்றனர்.

பெண்களின் பெருமையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம். புராண காலத்துக் காரைக்காலம்மையார் போன்றவர்களையும் நளாயினி, சாவித்திரி, சந்திரமதி, தாரா, மண்டோதரி, சீதா போன்ற பெண்ணரசிகளை இன்றும் கற்றோரும் மற்றோரும் போற்றுகின்றனர்.

சங்க காலம் தழுவிய காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டல கேசி, வளையாபதி ஆகியவற்றில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணியத்திற்கு பெருமைத் தேடி தந்துள்ளன.

சிலம்பில் கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், தேவந்தி, போன்றவர்களின் வரலாறுகள் பல பண்புகளை உயர்த்தி நிற்கின்றன. கண்ணகி தெய்வமாகியது பெண்மைக்கே உய்வு தருவது மாதவி, மணிமேகலையின் துறவு மேன்மை போன்றவற்றை மறக்க முடியாது. சங்க காலத்திலேயே பெண்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர்.

தலைமைப் பண்பு மிக்கவர்களாக சரித்திர சாதனை புரிந்துள்ளனர். ஔவையார், காவற்பெண்டு, பாரிமகளிர், குறமகள் இளவெயினி, வெண்ணிக்குயத்தியார், நன்முல்லையார், வெண்பூதியார், காக்கைபாடினியார், நச்செள்ளையார் போன்றவர்களும் இன்னும் பலரும் காட்டப்படுகிறார்கள். மன்னர்களுடன் இப்புலவர்களின் தொடர்பு, அதியமான் ஔவைக்கு நெல்லிக் கனி கொடுத்தது, தூது போன காட்சிகளும் உண்டு. ஆதி சங்கரருடன் வாதம் செய்த பெண் பற்றியும் வரலாறு உண்டு.



பக்தியை பேசும் இலக்கியத்தில் பெரிய புராணம் முதன்மையானது. 28 பெண்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. இருபத்தியொருவர் நாயன்மாரது மனைவியர், தாயார் நால்வர், மகள்மார் இருவர், உடன் பிறப்பு ஒருவர், காரைக்காலம்மை, இசைஞானியார், மங்கயர்க்கரசியார் ஆகிய மூவரும் நாயன்மார்களுக்கு இணையான பேறு பெற்றனர். சிவனுக்காக பிள்ளைக் கறி சமைத்த, சிறுத் தொண்டர் மனைவியை "மனையறத்தின் வேராகி'' என்று சேக்கிழார் புகழ்ந்துள்ளார்.. புராணக் கதைகள் கற்பனை என்று சாதித்து வாதிப்பவரும் உண்டு.

# பால் போல முகம் பெற உதவும் பால்



பால் நமது உடலுக்கு மட்டுமல்ல சருமத்திற்கும் அதிக நன்மையை தரும். பல பேர் பாலாடையை முகத்தில் தடவி சில நிமிடங்களுக்கு பின்னர் முகத்தை கழுவினால், அவ்வளவு பொலிவு கிடைக்கும். அந்தவகையில் காய்ச்சாத பாலை முகச்சருமத்தில் எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று பார்ப்போம்.

2 டீஸ்பூன் பாலுடன் 1 ஸ்பூன் கடலைமாவு சேர்த்து நன்றாக கலந்து ஒரு பேக்கை தயார் செய்துக்கொள்ளுங்கள். இந்த பேக்கை முகத்தில் போட்டு சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவி, மாய்ஸ்சரைஸர் தடவுங்கள். இதனை வாரம் ஒருமுறை பயன்படுத்தி வந்தால், முகத்தில் இருக்கும் எண்ணெய்ப் பசை மற்றும் அழுக்குகள் நீங்கி, முகம் பிரகாசமளிக்கும்.

கற்றாழையுடன்:

2 டீஸ்பூன் பாலுடன் ஒரு ஸ்பூன் கற்றாழை ஜெல் சேர்த்து முகத்தில் பயன்படுத்துங்கள். 20 நிமிடங்கள் ஊறவைத்து கழுவினால், முகத்தின் நிறம் கூடும். அதேபோல் எரிச்சல் போன்ற பிரச்சனைகள் குறையும்.

பப்பாளியுடன்:

2 டீஸ்பூன் பாலுடன் 2 டீஸ்பூன் பப்பாளி விழுது சேர்த்து முகத்தில் தடவிக் கொள்ளுங்கள். பின்னர் 20 நிமிடங்கள் ஊற வைத்து நன்றாக கழுவுங்கள். வாரம் இரண்டு முறை இவ்வாறு செய்தால், நல்ல ரிசல்ட் கிடைக்கும். பப்பாளியில் பப்பைன் என்ற என்சைம் இருக்கிறது, இது சருமத்தை மென்மையாகவும் நிறத்தைக் கூட்டியும் தரும்.

மஞ்சளுடன்:

2 ஸ்பூன் பாலுடன் 1 ஸ்பூன் மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக கலந்து முகத்தில் தடவவும். இந்த ஃபேஸ் பேக் சருமத்தில் இருக்கும் கறைகள் மற்றும் கரும் புள்ளிகளைக் குறைப்பதற்கான சிறந்த தீர்வாகும். வாரத்திற்கு இரண்டு முறை இதைப் பயன்படுத்துவது நல்ல பலனை தரும்.

தேனுடன்:

2 ஸ்பூன் பாலுடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவலாம். இந்த பேக் வறண்ட சருமம் உள்ளவர்களுக்கு மிகவும் நல்ல பலன்களை கொடுக்க கூடியது. இது சருமத்தின் ஈரப்பதத்தை தக்க வைத்து, வெப்பத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்து, பளபளப்பான சரும பொலிவை தருகிறது. வாரம் ஒரு முறை இதனை முகத்தில் தடவி 15 20 நிமிடங்கள் விட்டு, பின் குளிர்ந்த நீரால் கழுவவும். நீங்கள் பயன்படுத்தும் தேன் சுத்தமானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

# ஊதியம் கொடுப்பனவில் பாலின வேறுபாடு ஏனோ?



குறள் 1035:

இரவார் இரப்பார்க்கொன்றீவர் கரவாது கைசெய்தூண் மாலை யவர்

விளக்க உரை: கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார், தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

பண்டைய காலத்தில் ஆணுக்கு இணையாக பெண்களும் கல்வியறிவு கொண்டிருந்தனர் என்றே கருதலாம். ஆம்! ஔவையார், வெண்ணிக் குயத்தியர், காக்கைப் பாடினியார் நச்செள்ளயார், ஒக்கூர் மாசாத்தியார், நக்கண்ணையார். ஆண்டாள் என தமிழ் வளர்த்த மகளிர் அதிகம். தங்களது கல்வித்திறமையால் மன்னர்களிடத்தே நன்மதிப்பை பெற்றிருந்தனர். ஆனால் ஊதியப் பாகுபாடு இருந்ததா என்பது பற்றி தகவல்கள் தெரியவில்லை. ஆனால் இன்று ஆண் பெண் பாலினம் சார்ந்த பாகுபாடுகளில் ஊதியப் பாகுபாடும் ஒன்றாகவே இருக்கிறது. அரச துறைகளில் இந்தப் பாகுபாடு இல்லையென்றாலும் தனியார் நிறுவனங்களில் ஓரளவும் அமைப்புசாரா தொழில்களில் பெருமளவும் இந்த வேறுபாட்டைக் காண முடிகிறது. ஆண் பெண் பாகுபாடு என்பது கூடாது என்று கொள்கை அளவில் பேசிக் கொள்கிறார்கள்.

பேசினால் மட்டும் போதுமோ! நடைமுறையில் எப்போது வரும், எந்த அமைப்பு இதைப்பற்றிய சட்டத்தைக் கொண்டுவரும்??? ஆரம்பக் காலங்களில் பொருளாதார பலன் கொடுக்கும் உழைப்பு மட்டுமே உழைப்பாக அங்கீகரிக்கப்பட்டதால், ஆண்களே உழைக்கும் வர்க்கம் என்று சொல்லப் பட்டது. அடுப்படியிலும், வீட்டிலும் ஓய்வின்றி குடும்பத்திற்காய் உழைக்கும் பெண்களின் உழைப்பானது , 'வீட்ல சும்மாதானே இருக்க?' என்று முத்திரை குத்தப்பட்டு புறந்தள்ளப் பட்டது.

'இதுவும் உழைப்பே' என்று எதிர்க்குரல் கொடுக்க நூற்றாண்டுகள் தேவைப் பட்டன. மேலும், வீட்டைத் தாண்டி பெண்கள் உழைக்க வெளியில் கிளம்பியக் காலமும் கைகூடியது. இன்று உலகெங்கும் பெண்களின் ஆரோக்கியம், கல்வி, பொருளாதாரப் பங்களிப்பு, அரசியல் தலைமை போன்றவைகளில் குறிப்பிடும் வகையில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், சம உரிமை பெறுவதில் ஆண் பெண் வித்தியாசம் இன்னமும் இருக்கிறது.

2017 ஆம் ஆண்டில் உலக அளவில் பெண்களின் சராசரி ஆண்டு வருமானம் அமெரிக்க டாலர் 12 ஆயிரம்.

அதே நேரத்தில் ஆண்களின் ஆண்டு வருமானம் அமெரிக்க டாலர் 21 ஆயிரம். ஆண்கள் செய்யும் அதே நேரம், வேலை, இலக்கு அனைத்தும் பெண்களுக்கு இருந்தாலும் ஊதியம் குறைவு ஊதியப் பாகுபாடா என்கிற சிந்தனையை தோற்றுவிக்கிறது.

(தகவல் Google ) கல் பிளந்து, மலை பிளந்து, கருவியெல்லாம் செய்தவை ஆணின் கரங்கள் மட்டும் தானா? இப்படியொரு சிறு கேள்விக்கே மனதில் தோன்றி நேரடியாக கேட்டுவிட்டால் எதற்கெடுத்தாலும் பெண்கள் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுவதாக நினைத்துப் புறந்தள்ளுகிறவர்களை நாம் என்ன சொல்ல!கேள்வி கேட்கும் சிலரைக் கேலியாகப் பார்த்து சிரிப்பவர்களும் உண்டு. ஆனால், ஆண்டாண்டு காலமாக ஆண்களின் மனதில் மட்டுமல்ல, பெண்களின் மனதிலும் ஆழமாக உழப்பட்டுவிட்ட பெண்ணடிமைச் சிந்தனை நம்மை வேறெப்படியும் சிந்திக்கத் தூண்டாது. ஆசிரியர் பணி, செவிலியர் பணி நீங்கலாக வேறெந்தப் பணியைச் சொன்னாலும் நம் மனங்களில் விரிவது உண்மையில் ஓர் ஆணின் பிம்பம்தானே! பிறகெப்படி உழைப்பாளர் என்றால் மட்டும் பெண்ணின் சித்திரம் நினைவுக்கு வரும்? சூரியன் கிழக்கில் உதிப்பது எத்தனை இயல்போ அத்தகைய இயல்போடுதான் பெண்களின் உழைப்பு காலங்காலமாகச் சுரண்டப்படுகிறது. வீட்டில் தொடங்கி சமூகம்வரை அவர்களது பங்களிப்பு கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக எழும் குரல்கள்கூட, 'இதெல்லாம் பெண்ணின் அடிப்படைக் கடமையல்லவோ?' என்ற கேள்வியில் நசுக்கப்படுகின்றன. குடும்பக் கடமை என்பது பெண்ணுக்கு மட்டுமே எழுதப்பட்ட சாசனமா! எப்போது ஆணுக்கும் குடும்ப. குடும்ப. கடமைகள் இருக்கிறது என்று சொல்லப் போகிறோம்.இப்போதுள்ள ஆண்கள் குடும்ப பொறுப்புகளில் அக்கறை செலுத்துகிறார்கள்.

கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...



## சமூகங்களின்

# பேசப்படாத பக்கங்களை எனது கதைகள் பேசும்!!



**சுமதி சிவமோகன்; பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர், தனது தொழிலுக்கு அப்பால் திரைப்பட இயக்குனராக, திரைக்கதையாசிரியராக, வசனகர்த்தாவாக, நாடக நெறியாளராக, திரைப்பட மற்றும் நாடக நடிகையாக, கவிஞராக, எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராக பன்முக ஆளுமை கொண்டவர். தான் ஈடுபாடுகொண்ட துறைகளில் எல்லாம் இலங்கையில் தனக்கென தனித்துவமான அடையாளத்தினை நிலைநிறுத்திக் கொண்டவர். இவரது இயக்கத்தில் உருவாக்கப்பட்டு, உலகளாவிய ரீதியில் பல்வேறு திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு, 2019ஆம் ஆண்டு "ஜெய்ப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில்" சிறந்த இசைக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட முழுநீளத் திரைப்படமான "தனையரும் தந்தையரும் – 'Sons And Fathers' எனும் முழு நீளத் திரைப்படம் முதன் முறையாக இம் மாதம் 16ஆம் திகதி, கொழும்பு One Galle Face PVR திரையரங்கில் திரையிடப்படவுள்ளது. மலையக மக்களின் வாழ்வியலை கதைக்கருவாகக் கொண்ட 'இங்கிருந்து' மூலம் இலங்கை திரைத்துறையில் தனது முத்திரையை ஆழமாகப் பதித்த சுமதி, விரைவில் திரையிடப்படவுள்ள 'Sons And Fathers' பற்றி செந்தூரம் வாசகர்களுடன் மனம் திறந்து பேசுகின்றார்.**

**கே: தங்களது இயக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள "தனையரும் தந்தையரும் 'Sons And Fathers' எனும் முழு நீளத் திரைப்படம் இதற்கு முன்னர் எங்கெல்லாம் திரையிடப்பட்டுள்ளது?**

இலங்கை ரசிகர்களுக்காக அது 16ஆம் திகதிதான் திரையிடப்படுகின்றது. ஆனால் இதற்கு முன்னதாக சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளிலும், இலங்கையில் கொழும்பு தெரண திரைப்பட விழா, கொழும்பு சர்வதேச பெண்கள் திரைப்பட விழா, யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா போன்றவற்றிலும் திரையிடப்பட்டு மிகுந்த வரவேற்பையும், விருதுகளையும் பெற்றுக் கொண்டது.

**கே: இலங்கையில் உத்தியோகபூர்வமாக இத் திரைப்படத்தினை திரையிடுவதற்கு மிக நீண்ட இடைவெளியை எடுத்துக்கொண்டமைக்கான காரணங்கள் எவை?**

திரைப்படத்தின் பணிகள் அனைத்தும் 5 வருடங்களிற்கு முன்பே முடிவுற்றிருந்த போதிலும், இதனை வெளியிடுவதற்கான தகுந்த காலம் வரும்வரை நீண்ட நாட்கள் காத்திருந்தேன். திரையரங்குகளில் திரையிடப்படுவதற்கு தகுந்த முதலீடு தேவைப்பட்டது, அத்துடன் திரைப்படத்தினை பதிவு செய்தல், தணிக்கை சார்ந்த சரிபார்ப்புகள், திரைப்படத்தைப் பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்துதல் போன்றவற்றிற்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கான உழைப்பும், பணமும் சரிவர அமையும் காலத்திற்காக காத்திருந்தமையே திரையிடலை தாமதமாக்கியது.

> **எனது கதைக்கருவே மொழிகளின் தேவைகளைத் தீர்மானிக்கிறது.**



> **திரைப்படத்திற்கு ஏற்படும் செலவும், திரைப்படத்திற்கான உழைப்பும் இரசிகர்களின் கைதட்டலினாலும், பாராட்டினாலுமே முழுமையடைகிறது.**

**கே: 'தனையரும் தந்தையரும்' 'Sons And Fathers' திரைப்படத்தின் கரு எதனை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது?**

இது ஈழத்தின் பழமையான சினிமாவினைப் பற்றிப் பேசுவதாக அமைகிறது. குறிப்பாக 1970, 1980 காலப்பகுதிகளில் இலங்கை சினிமாவில் பங்காற்றிய இசையமைப்பாளர்கள், இசைசார் கலைஞர்களது சினிமா வகிபங்கு, அவர்களது பயணத்தின் வரலாற்றுக் கதைகள் போன்றவற்றினை வெளிக்கொணரும் வகையில், இரு தலைமுறை இசைக் கலைஞர்களைச் சுற்றி கதை பின்னப்பட்டிருக்கிறது.

**கே: இலங்கை சினிமாவில் இசைக் கலைஞர்களின் வகிபங்கினை எடுத்துக்காட்ட வேண்டும் எனும் புதுமையான எண்ணம் தங்களுக்கு எவ்வாறு உருவாகியது?**

நான் சினிமாத்துறை மாத்திரமல்லாது நாடகம், ஆய்வுகள் மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு துறைகளில் அதிக ஆர்வமுடையவள். எனது ஆய்வுகளின் விளைவாகவே என்னுள் இந்த எண்ணம் தோன்றியது.

இலங்கை சினிமாவில் சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் இசையமைப்பாளர்களாகவும், பாடலாசிரியர்களாகவும், இசைவாத்தியக் கலைஞர்களாகவும் ஆரம்ப காலங்களில் பல்வேறு பாத்திரங்களை வகித்துள்ளனர். இவ் வகிபங்குகள் வெறுமனே அவர்களது இனத்துவம் சார்ந்தவை மாத்திரமன்றி சிங்கள மக்களது வாழ்வியலோடும் பின்னிப்பிணைந்திருந்தது. இலங்கையின் ஆரம்ப கால சினிமா வரலாற்றில் பல்வேறுபட்ட அடக்குமுறைகள் காணப்பட்டன. அவற்றிற்கு மத்தியில் சிறுபான்மை இசைக் கலைஞர்கள் எப்படி வாழ்ந்தார்கள், எப்படி தப்பிப்பிழைத்தார்கள், அவற்றிற்கும் அப்பால் சிங்கள, தமிழ் கலைஞர்கள் மத்தியில் எவ்வாறான ஊடாட்டம் காணப்பட்டது? போன்றவற்றை எனது ஆய்வுகள் மூலமாகக் கண்டறிந்தேன். அந்த வரலாற்றினை ஒரு கதை மூலமாக கடத்த வேண்டுமென என்னக்கெழுந்த உத்வேகமே இன்று படைப்பாக உருப்பெற்றுள்ளது. அதுவொரு அரிய படைப்பாக பாராட்டுப் பெற்றுமுள்ளது.



> **இது கிடைக்காத பட்சத்தில் கலைஞன் ஒருவன் துறைசார்ந்து முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவடைய நேரிடுகிறது.**

**கே: இலங்கை சினிமாவில் அங்கம் வகித்திருந்த இசைக் கலைஞர்களின் வாழ்வியலைப் பேசுவதாக அமையும் தங்களது திரைப்படம், எந் த மொழியிலானது?**

இந்தத் திரைப்படத்தின் கதைக்கருவானது, சிங்கள மற்றும் தமிழ் பேசும் கலைஞர்களது வரலாற்றினையும், வகிபங்கினையும் பேசுவதாக அமைவதனால் சிங்களம் மற்றும் தமிழ் போன்ற இரு மொழிகளும் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சிங்கள சினிமாத்துறை பற்றிய காட்சிகள் சிங்கள மொழியிலும், தமிழ் கலைஞர்கள் மற்றும் அவர்களது வாழ்வியல் சார்ந்த காட்சிகளில் தமிழ்மொழிப் பயன்பாடும் காணப்படுகிறது. தமிழ் பாடல்கள், உரையாடல்கள் திரைப்படத்தில் அடிக்கடி வருகின்றன.

இசையினை மையப்படுத்திய திரைப்படமென்பதால் மொழிகளைக் கடந்தும் இசை பொருளுணர்த்தும் என நான் நம்புவதால், இத் திரைப்பட புரிதலுக்கு மொழி ஓர் தடையாகாது என்பது மறுக்க முடியாதது.

**கே: இசை வரலாற்றினை மீள்பார்வை செய்வதாக அமையும் இந்த திரைப்படத்தில் பணியாற்றியுள்ள கலைஞர்களது வகிபங்கு திரைப்படத்தினை முழுமையடையச் செய்வதற்கு எவ்வகையில் பங்காற்றியுள்ளது?**

இந்தத் திரைப்படத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள் திரைக்கு முன்னும் பின்னுமாக பல்வேறு பாத்திரங்களில் திரைப்படத்திற்காக உழைத்துள்ளனர்.



(12 ஆம் பக்கம் பார்க்க)

நேர்கண்டவர்
கிரிஜா அருள்பிரகாசம்



# அபாபீல் உதவும் கரங்கள் அமைப்பின் கல்விப்பணி







கடந்த 04.08.2024 ஞாயிறு அன்று (Ababeell Helping Hands) அபாபீல் உதவும் கரங்கள் அமைப்பின் க.பொ.த (உயர்தரம்) கலைப் பிரிவு வகுப்பு மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், அம் மாணவர்களுக்கான மேலதிக பாடநெறி வகுப்புக்கள் ஆரம்ப நிகழ்வும் ஒஸ்மானியா கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

யாழ் ஒஸ்மானியா கல்லூரி அதிபர் N.M.ஷாபியின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக கவிஞர் கலாபூஷணம் யாழ் அஸீமும், கௌரவ அதிதியாக பொறியியலாளர் F.M. பாஸிலும் B.Sc(Hons) விஷேட அதிதிகளாக யாழ் கதீஜா மகளிர் கல்லூரிஅதிபர் A.C .ஜான்ஸியும் சட்டத்தரணியும் பொறியியலாளருமான M.J.M.ஜிபீன், சமூக சேவையாளர் I.S.M.றொக்கீஸ் ஸும் கலந்து சிறப்பித்தனர்.

ஒஸ்மானியா கல்லூரி அதிபர் N.M.ஷாபியின் தலைமையுரையைத் தொடர்ந்து அமைப்பின் தலைவர் A.C.அமீன் தனது உரையில், அமைப்பின் நோக்கம், வரலாறு, எதிர்காலத் திட்டங்கள் என்பவற்றை விளக்கியதுடன், அதிதிகள் பற்றிய அறிமுகத்தையும் எடுத்துரைத்தார்.

செயலாளர் அமீர் அலி சிறப்பான முறையில் நிகழ்வுகளை தொய்வில்லாமல் தொகுத்து வழங்கியதுடன், அதிதிகள் மற்றும் பிரமுகர்கள் பற்றிய விளக்கத்தையும் சிறப்பாக எடுத்துரைத்தார். கவிஞர் கலாபூஷணம் யாழ் அஸீம் சாதனை படைத்த யாழ் முஸ்லிம்கள் பற்றி எடுத்துரைத்து, தற்போதைய மாணவர்களும் அவர்களைப் பின் பற்றி சரித்திரம் படைக்க வேண்டுமென உரையாற்றினார். பொறியியலாளர் F.M பாஸில். B.Sc(Hons) கற்றலின் முக்கியத்துவத்தைப் பற்றி பெற்றோர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். ஒரு உளவளத் துணையாளர் போல் உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் எமது அமைப்பினூடாக மாணவர்களுக்கான உதவித்திட்டத்துக்கு உதவுவதாக வாக்களித்தார்.

**யாழ் அஸீம்**

## சமூகங்களின் பேசப்படாத பக்கங்களை... (11 ஆம் பக்க தொடர்)

குறிப்பாக திரைப்படத்தின் ஒளிப்பதிவாளரான சுனில் பெரேரா, இசையமைப்பாளரான அந்தோனி சுரேந்திரன், திரைப்பட தொகுப்பாளரான எல்மோ கல்லிடி, கலை இயக்குனராக லால் ஹரிந்ரநாத் போன்றோர் திரைப்படத்திற்காக சிறப்பாக பணியாற்றியுள்ளனர்.

அத்துடன் முக்கிய கதாபாத்திரமான வினோஜ், முக்கிய பெண் கதாபாத்திரமாக பிம்பிசார பிரேமரத்ன, மகன் கதாபாத்திரத்தில் ரணில் ஜித்தேந்ரா போன்றோரும் தோன்றியுள்ளனர்.

70, 80 காலப்பகுதியில் இலங்கை சினிமாவில் கலைஞர்களாகப் பணியாற்றிய பாலன், அலிமான் போன்ற கலைஞர்கள் இப்போது உயிரோடு இல்லாவிட்டாலும், இத் திரைப்படத்தில் அவர்கள் சிறிய பாத்திரமேற்று நடித்திருந்தமை என்னை பெருமையடையச் செய்கிறது.

அத்துடன் இத் திரைப்படத்தில் பணியாற்றிய அத்தனை கலைஞர்களது ஈடுபாடும் வகிபங்குமே இத்திரைப்படம் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டமைக்கும் முக்கிய காரணமென நான் நம்புகின்றேன்.

**கே கதைக்கான கருவை எவ்வாறு தெரிவுசெய்கிறீர்கள்?**

என்னுடைய முதல் நீளத்திரைப்படமான 'இங்கிருந்து' மலையக மக்களது வாழ்வியல் போராட்டங்கள், அவர்களது வாழ்க்கை முறைகளைப் பேசும் படமாக அமைந்திருந்தது. இத் திரைப்படம் சிறுபான்மைக் கலைஞர்களைப் பற்றி பேசுவதாக அமைகிறது. என்னுடைய அனைத்து கதைகளும் பெண்கள், தேசியம், தேசியவாதம், ஒடுக்குமுறை, வகுப்புவாதம் போன்ற கருக்களை மையப்படுத்தியது.

இலங்கையிலுள்ள சமூகங்களின் பேசப்படாத பக்கங்களை என்னுடைய கதைகள் பேசவேண்டும். அதன் மூலமாகவே நுணுக்கமான சமூக உறவுகளைப் பற்றி பேச முடியும், இக் கதைகளால் மாத்திரமே சமூகத்திற்குப் பல செய்திகளைச் சொல்ல முடியுமென நான் உறுதியாக நம்புவதால் இவ்வாறான கதைகளை மாத்திரம் தெரிவு செய்கிறேன்.

**கே தங்களுடைய படைப்புக்கள் தனியே தமிழ் மொழிக்கு மாத்திரமன்றி சிங்கள மொழிக்கும் முக்கியத்துவம் வழங்குவதற்கு காரணங்கள் உள்ளனவா?**

சிங்கள மொழி சார்ந்தும் எனது படைப்புக்கள் நகர்வதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவதாக திரைப்படமொன்றின் வெற்றியானது மொழிகளுக்கு அப்பால் கூறவந்த விடயம் ரசிகர்/வாசகர்களை சரிவர சென்றடைகிறதா என்பதிலேயே தங்கியுள்ளது.

அதனடிப்படையில் எனது கதைக் கருவே மொழிகளின் தேவைகளைத் தீர்மானிக்கிறது.

இரண்டாவதாக இலங்கையில் சிங்கள சினிமாவிற்கு கிடைக்கும் வரவேற்பு, தமிழ் சினிமாவிற்குக் கிடைப்பதில்லை. எனது 10 வருட உழைப்பின் பயனாக வெளியிடப்



பட்ட 'இங்கிருந்து' திரைப்படம் திரையிடப்பட்டபோது மலையகத்தினைச் சேர்ந்த சிலர் மத்தியில் மாத்திரமே வரவேற்புக் கிடைத்தது.

ஏனைய தமிழ் பேசும் மக்கள் அத் திரைப்படத்தினை பார்வையிட ஆர்வம் காட்டவில்லை.

திரைப்படத்திற்கு ஏற்படும் செலவும், திரைப்படத்திற்கான உழைப்பும் இரசிகர்களின் கைதட்டலினாலும், பாரட்டினாலுமே முழுமையடைகிறது. இது கிடைக்காத பட்சத்தில் கலைஞன் ஒருவன் துறைசார்ந்து முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவடைய நேரிடுகிறது.

எனது திரைப்படங்கள் மாத்திரமல்ல இலங்கையில் வெளிவருகின்ற பல தமிழ்த் திரைப்படங்கள் மற்றும் படைப்புக்கள் பிரபலமாகாமைக்கான காரணம் பார்வையாளர்களது நாட்டமின்மையே. இதனாலேயே இலங்கையின் தமிழ் சினிமாதுறையும் பின்னடைவைச் சந்தித்தது.

**கே தங்களுடைய திரைப்படங்கள் மற்றும் குறும்படங்கள் எதுவானாலும் நீங்களே திரைக்கதை எழுதுவதோடு வசனகர்த்தாவாகவும் இருக்கின்றீர்களே?**

படைப்புக்கள் உயிரோட்டம் பெறுவது அவற்றின் உயிரோட்டமான வசனங்களால்தான் என நான் மிகவும் உறுதியாக நம்புகின்றேன். என்னால் நீண்ட ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அவற்றின் விளைவாக உருவாக்கப்படும் கதைகளின் பின்னணியை நானே துல்லியமாக அறிந்திருக்கின்றேன். அதனால் அந்தக் கதைகள், மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மை, கலாசாரக் கோணங்கள் மாறுதல்களுக்கு உட்படாமல் அவற்றை வசனங்கள் மூலம் காக்க வேண்டிய முழுப் பொறுப்பும் என்னுடையதாகும். அதனாலேயே என்னுடைய படைப்புகளுக்கான திரைச்சுவடிகளை (Script) நானே தயாரித்துக் கொள்கிறேன்.

இதுவரையில் எனது படைப்புக்களிற்கு வேறு எவரும் வசனம் எழுத நான் அனுமதித்ததில்லை. அவற்றிற்கு அப்பால் எதிர்காலத்தில் இன்னொருவரைக்கொண்டு வசனம் எழுதப்பட்டாலும் அது எனக்கு முற்றுமுழுதாக திருப்தியளிக்குமா என்பதும் ஐயமானதே..

**கே ஒரு விரிவுரையாளராக, ஒரு நெறியாளராக, ஒரு எழுத்தாளராக, ஒரு இயக்குனராக, மற்றும் ஒரு பொறுப்பு வாய்ந்த குடும்பப் பெண்ணாக பல்வேறு வகிபங்கினை வகிக்கின்றீர்களே. அது எவ்வாறு சாத்தியமாகின்றது?**

எனக்கு ஒவ்வொரு துறைமீதுமுள்ள நாட்டம் அனைத்துப் பொறுப்புக்களையும் திறம்பட கையாளுவதற்கு எனக்கு துணைபுரிகிறது. அத்துடன் நேர முகாமைத்துவம் மற்றும் எனது குடும்பத்தினர் எனக்கு வழங்கும் ஆதரவு காரணமாகவும் எனது பொறுப்புக்களைக் கையாள்வதில் அதிக சிக்கல்கள் எனக்கு ஏற்படுவதில்லை.

**கே இலங்கைத் தமிழ் சினிமாவில் எதிர்கால இயக்குனர்களாக உருவாகும் ஆர்வத்துடன் முயற்சிகளை ஆரம்பித்துள்ள இளம் சந்ததியினருக்கு இத் துறையில் சாதிப்பதற்கு தாங்கள் எவ்வாறான பரிந்துரைகளை வழங்குவீர்கள்?**

இலங்கை தமிழ் சினிமாவினை முன்னேற்றுவதற்கு முதற்படியாக சினிமாத்துறையில் ஆர்வம் கொண்டுள்ள இளைய இயக்குனர்கள் அனைவரும் அதிக திரைப்படங்களையும், குறும்படங்களையும் பார்வையிடுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

திரைப்படங்களிலிருந்தே தயாரிப்பு நுட்பங்கள், கதை சொல்லல் நுட்பங்கள், நிறைகள் மற்றும் குறைகளை கற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு கற்றுக்கொள்ளும் அறிவே திறன் மிக்க நாளைய இயக்குனர்களாக ஒவ்வொருவரையும் உருவாக்கும். அத்துடன் வெளிநாடுகளைப் போன்று, நமது நாட்டின் மண்வாசனைமிக்க கதைகளை சிறுவயது முதலே வாசித்து, அவற்றின் புரிதலோடு சமூகம் வளர்ச்சியடையக்கூடிய நிலைமையினை உருவாக்க வேண்டும். அப்போதே இலங்கை தமிழ் சினிமா வளர்ச்சியடையும்.

# கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட எம்.ஐ. அதாஹுர் ரஹ்மானுக்கு கௌரவம்



கௌரவ அதாஹுர் ரஹ்மான் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனால் கல்வித் துறைக்கும் தமிழ் சமூகத்திற்கும் அவர் ஆற்றிய முக்கிய பங்களிப்பை மதிக்கும் வகையில் மினுவாங்கொடை வலய கல்வி திணைக்களம் அவரை கௌரவிக்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தது. அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2003 முதல் 2014 வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த அதாஹுர் ரஹ்மான் கல்விச் சமூகத்திற்கு பெரும் பங்களிப்பை செய்துள்ளார்.

மினுவாங்கொடை வலய கல்வி திணைக்களத்தின் தமிழ் மொழி பிரிவுக்கான பணிப்பாளர் எம்.ஏ. எம் ரிஸ்வி, மினுவாங்கொடை வலய கல்வி திணைக்களத்தின் முன்னாள் கல்வி பணிப்பாளர் எம். அஷ்ரப், எம்.ஐ. அதாஹுர் ரஹ்மான் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஹெம்மாதகம ஸஹ்ரிய்யா அரபுக் கல்லூரி கண்ட ஆளுமை அஷ்ஷேக் எம். எல் அதாஉர்ரஹ்மான் "ஸஹ்ரி" இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS) உதவிக் கல்விப் பணிப்பாளராக அண்மையில் நியமனம் பெற்றார். முஹம்மது லெப்பை மற்றும் சித்தி சுறையா ஆகியோரின் மூத்த புதல்வரான அதாஉர்ரஹ்மான் அவர்கள் 1967 ஆம் ஆண்டு மடுள்போவ (ஓலான) யில் பிறந்து தனது ஆரம்பக் கல்வியை தும்புளுவாவ முஸ்லிம் பாடசாலை மற்றும் மடுள்போவ முஸ்லிம் மஹா வித்தியாலயத்திலும் தொடர்ந்தார்.

பின்பு கொழும்பு பெரிய பள்ளிவாயல் மதீனதுல் இல்ம் அரபுக் கலாசாலையில் குர்ஆன் மனனப் பிரிவில் இணைந்த இவர் இரு வருடங்களுக்குப் பின் ஹெம்மாதகம ஸஹ்ரிய்யா அரபுக்கல்லூரியில் ஷரீஆத் துறையில் ஏழு வருட கற்கையை 1988 ஆம் ஆண்டு நிறைவு செய்தார். அக்காலப் பகுதியிலே க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் க.பொ.த உயர் தர பரீட்சைகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

பின்பு அஷ்ஷேக் அதாஉர்ரஹ்மான் "ஸஹ்ரி" நிகவெரடிய பள்ளிவாயலில் இமாமத் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் சமயம் 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று கல்பான முஸ்லிம் மஹா வித்தியாலத்தில் தனது முதல் அரச பணியை ஆரம்பித்தார். அத்துடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி கலைமானி (BA) பட்டப்படிப்பினை நிறைவு செய்து 1993 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். 1994 ஆம் ஆண்டு கொழும்பு அந்நாஸர் முஸ்லிம் மஹா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று 1998 ஆம் ஆண்டு வரை அங்கு பணியாற்றினார். இக்காலப்பகுதியிலே பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி (PGDE) உள்வாரி பட்டதாரியாகத் தெரிவுசெய்யப்பட்டு அதனையும் வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

1999 ஆம் ஆண்டு வேவல்தெனிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று பணிபுரிந்துகொண்டிருக்கும் வேளையில் 2000 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை (SLPSII) பரீட்சையில் தேறி அதே பாடசாலையில் அதிபராகக் கடமையேற்று 2003 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று மினுவாங்கொடை அல் அமான் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் 2014 ஆம் ஆண்டு வரை அதிபராக கடமையைத் தொடர்ந்தார். இந்தக் காலப்பகுதியில் (2008) இலங்கை அதிபர் சேவை (SLPSI)க்கு தரமுயர்தப் பட்டதோடு 2011 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகம் முன்னெடுத்த பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறியினையும் (PGDEM) முழுநேர பாடநெறியாக நிறைவு செய்தார்.





ஊடகவியலாளர் ஏ.சி பௌசுல் அலிம்

# மருதமுனையில் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்ற கோல்ட் மைண்ட் விளையாட்டு கழகத்தின் ஒன்றுகூடல்

மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகத்தின் AGM 2024 ஒன்றுகூடல் நிகழ்வு மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கழகத்தின் இடைக்கால நிர்வாக சபை தலைவர் எம்.எஸ்.பைலுர் ரஹ்மான் தலைமையில் மிக பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு மருதமுனை பறக்கத் டெக்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ஐ.ஏ.பரீட் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

1975ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகம் எதிர்வரும் ஆண்டு 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. கழகத்தின் பழைய நிர்வாக சபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன் போது, கழகத்தின் புதிய தலைவராக தொழிலதிபர் எம்.எம். கலீல் முஸ்தபா தெரிவு செய்யப்பட்டார். தவிசாளராக கணக்காளர் வை. ஹபீபுல்லா தெரிவானார். மீயுயர் பீட தலைவராக எம்.எஸ் பைலுர் ரஹ்மான் இங்கு தெரிவு செய்யப்பட்டார்.



கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகம் மீயுயர் பீடம், செயலாற்று சபை, விளையாட்டுச் சபை என மூன்று பெரும் பிரிவுகளும் நிர்வாக மற்றும் நிதி பிரிவு, வெளிவிவகார நலன்புரி, விளையாட்டு மற்றும் அபிவிருத்தி, என்று மூன்று வளையங்களையும் கொண்டதாக அதன் நிர்வாக கட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது.

கழகத்தின் புதிய பொருளாளராக ஏ.எம்.றியாஸ் (ஆசிரியர்) தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக எம்.சி.நஸார் (அதிபர்) தெரிவாகினர். கழகத்தின் ஊடகப் பணிப்பாளராக எம்.ஐ.எம்.வலீத் தெரிவு செய்யப்பட்டதுடன் 30 பேர் கொண்ட கழகத்தின் நிர்வாக சபை இங்கு தெரிவு செய்யப்பட்டன. கோல்ட் மைன்ட் கழகத்தில் போசகர்களாக ஏழு பேர் செயற்பட்டு வருகின்றனர். இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், ஊர் தனவந்தர்கள், கழகத்தின் அபிமானிகள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மேடை நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளர் ஏ.எல். நயீம் தொகுத்து வழங்கினார்.





ஏ. எல். எம். ஷினாஸ்
பெரியநீலாவணை விசேட நிருபர்



Whatsap: 0714901181

# ஒரு துளிக் கடலும் கடலுதைக்கும் கவிதைகளும்

நிஹ்ரியின் கவிதைப்பொருள் அர்த்தமும் ஆழமும் கொண்டது. கவிதைக்கான உணர்வின் கூறுகளை அவர் கவிதையிடம் சொரிந்தபடி நகர்கிறார்.

'வார்த்தை கூர்மையானது
வார்த்தை கனமானது
வார்த்தை சுவையானது
பயன்படுத்தும் விதத்திலே
அதன் பயன்களுமுள்ளது
'என்பார் நிஹ்ரி ஒரு கவிதையில்.

அத்தகைய வார்த்தைக்கையாட்சி அவருக்குள் நகர்கிறது.

'பற்றியெரிந்த இரவுகளை விட
பயந்தெரிந்த இரவுகள் தான் அதிகம்' என ஏழை வீட்டில் எரியும் விளக்கில் எழுதுவார்.

'இருளைக்கடப்பதற்கு இதயத்திற்கு நடிக்கத் தெரியவில்லை
இரவில் மட்டும்
தன் சொந்த முகத்தைக் காட்டி விடுகிறது
அதனால் தோற்று விடுகிறது' இருளைக் தொலைத்த இரவுகளில் இப்படி அலைகிறார்.



நிஹ்ரி கண்டெடுக்கும் கவிதைப் பொருள் பல்வேறு தளங்களின் பெறுமானம் எனலாம். 'காற்றுப் பைகள் சிறு கடைகளில் கூட விற்பனைக்கு வரும்'என்றொரு கவிதையில் மாசடைந்த காற்றின் காரணங்கள் குறித்து கவலை கொள்வார். அக்கவலைக்குள் கவிதை உயிர்ப்புறும்.

'கல்யாண வேளையில்
மணமகன் மகருக்குப் பதிலாக காற்றெனக் கையொப்பமிடுவான்'என்பார் வாழ்தலின் தூய காற்றவசியத்தை அவர் கூறும் பாங்கு அலாதி.

பாண்காரன் கவிதையும் அலாதியான அனுபவம்தான்.

'இருள் கிழித்துத்திறக்காத
வீட்டுக்குள் இவன்
குரல் கிழித்துத் திறக்கின்றன'
இவன் யார்?
பாண்காரன்
'வரைபடத்தில் இல்லாத ஊரின்
தெருக்களை யும்
வடிவாகத்தெரிந்திருக்கிறான்'
யாரிவன்
பாண்காரன்.

நொடிபோலத் தொடங்கும் இந்தக் கவிதை பாண்காரனை வாங்க மனசில் நிறுத்துகிறது.

மழை குறித்த கவிதையொன்றில் 'ஒரு ஹோல் பண்ணி விட்டு வந்தால் கொடியில் கிடந்த உடுப்பை எடுத்திருக்கலாமெனக்
கோபிப்பதெப்படி' என்பார். கோபம் என்ற சொல்லுக்குள் தான் கவிதையின் முடிச்சிருக்கிறது. நிஹ்ரியின் கவிதைகளில் ஒரு தனிமை எரிகிறது; ஒரு ஏக்கம் அலைகிறது; ஒரு துயரம் படர்ந்தடர்கிறது. வாழ்வின் மீதான அனுபவமும் கவிஞனுக்கான கூர்ந்த பார்வையும் தரும் பக்குவங்கள் இவை.

நிஹ்ரிக்கும் வாய்க்கின்றன.

நி ஹ் ரி யின் 'இடைவெளி 'கவிதை மிகுந்த அவதானிப்பைக் கோரி நிற்கிறது.

'தொன்று தொட்டு நாம்
எதனையோ
தொ லை த் து க் கொண்டே வருகிறோம்
உயிர்களை, உறவுகளை, உரிமைகளை
இந்த இடைவெளியினை
இன்னுமொன்று நிரப்புமா
என்பது தெரியாது
நிரப்பப்படுமோ என்றும் தெரியாது'

என்று நிஹ்ரியின் கவிதை மனம் நிரம்பலற்றுத்துடிக்கிறது.

அவரது சந்தேகம்,மனத்துடிப்பு,எழும்பும் எழுவினா எதுவாக இருக்கும்.

'இடைவெளி' எது வாசகரையும்' சிந்திக்கத் தூண்டும் வார்த்தைகளின் சேர்மானம் இந்த இடைவெளி.

'வலிக்கு வலியே மருந்தாகிறது
வேறு வழியில்லாமல்'
என்ற வரியின் வலி அல்லது வலிமை எல்லோருக்குமானது.

'மனதால் நிரப்பிக்கொண்டு
மனித உயிர்கள் வாழ்கின்றன'என்று ஆறுதல் கொள்வார் கவிஞர். இழந்த மண்ணின் துயர் கவிதையில் கவிகிறது. நிரப்பப்படாமலே போன இடைவெளியை எந்த நம்பிக்கை நிரப்பும்.எந்த அரசியல்,பொருளாதாரம்,பண்பாடு காக்கும்.கேள்வியாகவே நீள்கிறது.

நிஹ்ரி இப்படி முடிக்கிறார்.

'இந்த இடைவெளிகளுக்கு
இழப்பீடு கிடையாது
தாங்களாகவே நிரம்பிக் கொள்ள வேண்டும்
மனதை நிரப்பிக் கொள்ள வேண்டும்'

வடக்கு முஸ்லிம் வாழ்வும் இதுவாகவே போய்விட்டது இல்லையா எனக்குள்ளும் ஆதங்கம் அலைகிறது.

கவிதை உணர்வில் கலந்த எழும் பேரலை.

ஒரு துளிக் கடலும் கடலுதைக்கும் கவிதைகளுமாக மேலெழும் நிஹ்ரியின்

'கவனிக்கப்படாத
மழையின்
கடைசித் துளிகளில்
கடந்து செல்கிறது
வார்த்தைகள்'

நினைவுந்தியெழும் மண் நிறக் கவிதைகளுக்காக நிஹ்ரியை வாழ்த்துவோம்.

கவிதைக்கென்ற மொழியை நிஹ்ரி மேலும் செழுமை பூக்கச் செய்ய வேண்டும்.கவிதைக்கென்ற சொல் முறையை நிஹ்ரி மென்மேலும் வாஞ்சை பூக்கள் செய்ய வேண்டும்.

அத்தகைய கவனிக்கப்படும் வார்த்தைகளோடு இவரது எதிர்காலப் பனுவல்களும் வாசல் திறக்கட்டும்.




# மௌனம் ஒரு கடல்



ஓரிரு நாட்களுக்காகச்
செய்யப்பட்ட கூண்டு
என் உடல்
காதல் என்னிடம்
சொன்னது
என்னையன்றி
எதுவுமில்லை
மௌனமாய் இரு
அரிதாகவே
கேட்கிறோம்
அகத்தின் இசையை
எனினும்
ஆடிக்
கொண்டுள்ளோம்
ஒவ்வொரு கணமும்
அதற்கான நடனம்
கடினப் பாறையில்
எதுதான்
வளரும்?
நெகிழ்ந்த
நிலமாய்
இரு
உன்னில்
காட்டுப் பூக்கள்
விளையட்டும்
உன்
முடிச்சை அவிழ்க்கும்
ஞானத்தைத் தேடு
உன் முழுமையைக்
கோரும்
பாதையைத் தேடு
ஏய் நீ?
உன்னுள்ளான
அந்த நீண்ட
பயணத்தை
எப்போது தொடங்கப்
போகிறாய்?
கடலில் ஒரு துளி
அல்ல நீ
முழுக்கடல் நீ
ஒரு துளியில்!
ஆன்மாவில்இருந்து
இயங்கும் போது
நதியொன்று நகர்வதை
உன்னுள் உணர்
வாய்
ஆனந்தம்!
மௌனம்
ஒரு கடல்
பேச்சு என்பது
நதி
கடல் உன்னைத்
தேடும் போது
மொழியின்
நதிக்குள்
நுழையாதே!
கடலின்
பேச்சுக்குக்
காது கொடு

(வைரங்கள் சுடரும்)

# எனக்கு வீடு நண்பர்களுக்கு அறை

என் வசிப்பிடம்
வீடாக இருந்த போதிலும்
அறை என்றே அழைக்கிறார்கள்
நண்பர்கள்
அவ்வப்போது நான்
திருத்தினாலும்
அப்போதைக்கு வருத்தம்
தெரிவித்து
அதன் பிறகும் அவ்வாறே
அழைக்கிறார்கள்
சுபாவமான பேச்சில்
அறை என்றே சொல்கிறேன்
நானும்
தனித்து வசிக்கும் ஆணின்
இடம்
அறைதான் போலும்
கண்காணிப்புகளாலும்
கட்டுப்பாடுகளாலும்
கட்டமைக்கப்பட்டது
வீடெனில்
சேட்டைகளும் சோப்பும்
சொகுசாய் குடியிருக்குமிடம்
அறை
கொஞ்சம் அலங்கோலமானது
அறையெனில்
சற்றே துலக்கமானது வீடு
ஓர் அறையில்



சுகந்தத்தை
சுவாசித்தபடியே
என்
வசிப்பிடத்தை
வீடாக
பாவித்து
நேசத்
தோடு
குடியிருக்கிறேன்
நான்
வீடுகளுக்குள்
கட்டுண்டு
கிடக்கும்
தங்கள் போக்கிரி ஆசைகளுக்கு வசதியாக
என் வசிப்பிடத்தை
அறை என்றே அழைக்கிறார்கள்
நண்பர்கள்

– சி.மோகன்

# பிறைவெளி; சமூக கலை இலக்கியக் கதையாடல் களம்

கதையாடல், துறைசார் அனுபவங்களின் பரிமாறல்தான். ஆளுமை மிக்க துறையாளர்களோடு சமூகம், கல்வி, கலாசாரம், வரலாறு, கலை, இலக்கியம், பாரம்பரியம், வாழ்வியல் சார்ந்து கதையாடுவதென்பது சுவாரஸ்யமானது மட்டுமன்றி கருத்துச்செறிவு மிக்க சிந்தனை முகத்தைச் சிந்தை கொள்ளவும் செய்யும்.

புதிய சந்ததிக்கு தொடரறாத புதிய கருத்துருவாக்கங்களையும், அதன் போக்குகளையும், புதிய சிலிர்ப்பையும் கண்டடையவும் செய்யும்.

அத்தகைய எண்ணப்பாட்டுடன் இன்று (11.08.2024)முதல் பிறை ரீவியில் பிரதி ஞாயிறுகளில் மாலை ஐந்து மணிக்கு 'பிறைவெளி: பிரகாசத்தில் பேசுவோம்'

நீங்களும் பேச விரும்பினால் பிறை ரீவியின் பொறுப்பாளர் என்.என்.றிஸ்வானுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பிறைவெளியில் 'நூலின்றியமையாதுலகு' பகுதியூடாக உங்களது நூல் வெளியீடு மற்றும் கலை, இலக்கிய நிகழ்வுகள் தொடர்பான காணொளிகளை ஒளிபரப்புச் செய்யும் வாய்ப்புமுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் இணையுங்கள் பிறைவெளியின் பிரகாசத்தில் பேசுவோம்.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

மண்டேலாவுக்கு பி.ஏ. பட்டம் கிடைத்த பிறகும் கூட நிர்வாகம் அவனுக்கு பதவியுயர்வு அளிக்காததால் அவன் பல மனக் கஷ்டங்களுக்கு உள்ளானான். இதை சிசுலு வாயிலாக அறிந்த கோர் மண்டேலாவை அழைத்து “நெல்சன் நீ பி.ஏ. பட்டம் பெற்ற பிறகும் கூட நம் நிர்வாகம் உன் பதவியை உயர்த்தாது கவலைக்குரிய விடயம்தான். நானும் நிர்வாகத்துடன் எவ்வளவோ கதைத்துப் பார்த்தேன். பலன் பூஜ்ஜியம்தான். நியாயப்படி நீ இப்போது சட்ட உதவியாளராக மாறியிருக்க வேண்டும்.

ஆனால் அது நடக்கவில்லை. அதற்கு ஒருவகையில் நானும் காரணம் என்று நினைக்கின்றேன். அதாவது நான் இந்த அலுவலகத்தில் இருக்கும்வரை உனக்கு அந்தப் பதவி கிடைக்கப் போவதில்லை. என்னைத் தனிப்பட்ட வகையில் நிர்வாகம் விரும்பாவிட்டாலும் என்னை தேடி ஆபிரிக்கர்கள் பலர் வருவது அவர்களுக்கு இலாபகரமானது. அதனால் என்னிடத்திற்கு உன்னை கொண்டுவர நிர்வாகம் விரும்பாது. ஆகவே நான் வேலையை விட்டுவிடலாம் என்று முடிவு செய்துவிட்டேன்.” என்றதும் அதுவரை அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருந்த மண்டேலா “கோர் அவசரப்படாதே நீ எனக்காக உன் பதவியை விடுவது எந்த வகையில் நியாயமாகும்? நான் இதற்கு ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை.”



என்று ஆவேசம் பொங்கக் கூற “நெல்சன், அவசரப்படாமல் நான் சொல்வதை முழுமையாக கேள். நான் இந்த நிர்வாகத்தை விட்டு வேறொரு நிர்வாகத்திடம் சென்று பணியாற்றப் போகிறேன். அதனால் எனக்கு எந்தவொரு பாதிப்புமில்லை. நீ முன்னேறு. நீ சட்ட உதவியாளராக மாறி ஒரு தரமான வழக்கறிஞராக மாறவேண்டும்.

வழக்கறிஞராகி நீ செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. நான் அதுவரைக்கும் காத்திருக்கின்றேன். நீ வா” என்று ஆணித்தரமாக கோர் தன் முடிவை வெளியிட்டதும் மண்டேலா முதலில் மறுத்தான். ஆனால் கோர், சிசுலு ஆகியோரின் விடாமுயற்சியால் கோரின் முடிவுக்கு இறுதியில் மண்டேலா சம்மதித்தான். நண்பனின் தாராள மனப்பான்மையையும் தயாள குணத்தையும் எண்ணி அகம் மிக மகிழ்ந்தான். கோர் சொன்னபடி தன் வேலையை துறந்ததும் மண்டேலாவுக்கு பதவியுயர்வு கிடைத்தது. அங்கீகரிக்கப்பட்ட சட்ட உதவியாளராக சட்ட நியமனம் கிடைத்த மண்டேலா அடுத்து பி.எல். பட்டப் படிப்பை படித்து முடிக்க வேண்டுமென உறுதிகொண்டான். பி.எல். பட்டப் படிப்பை படித்து முடித்துவிட்டால் முழுமையான வழக்கறிஞராக மாறி தனியாக வழக்கறிஞர் தொழில் செய்துகொள்ளலாம் என்பதால் கோர், சிசுலு, சிடெல்ஸ்கி ஆகியோர் மண்டேலாவை பி.எல். படிப்பை தொடருமாறு வலியுறுத்தினார்கள். நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க மண்டேலா விட்வாட்டர்ஸ்ட்ராண்ட் பல்கலைக்கழகத்தில் பகுதிநேர பி.எல். பட்டப்படிப்பில் சேர்ந்துகொண்டான்.

விட்வாட்டர்ஸ்ட்ராண்ட் பல்கலைக்கழகத்தில் பெரும்பான்மை மாணவர்கள் வெள்ளையின மாணவர்களாகவே இருந்தனர். சட்டப்பிரிவில் மண்டேலா மட்டும்தான் கறுப்பனாக இருந்தான்.

அதனால் வகுப்பு மாணவர்களால் புறக்கணிப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளானான். வெள்ளையின மாணவர்கள் பலர் மண்டேலாவை கண்டுகொள்வதே இல்லை. அவனுடன் நட்பு வைத்துக்கொள்ளக் கூடத் தயங்கினார்கள். இதனால் மனம் சோர்ந்து போன மண்டேலாவுக்கு சிசுலுதான் ஆறுதல் அளித்தான். “நெல்சன், நீ ஒன்றுக்கும் கலங்காதே.

உன் சட்டப்படிப்பிலேயே முழுமூச்சாக கவனத்தை செலுத்து. நீ சட்டப்படிப்பை பூர்த்தி செய்துவிட்டால் நாம் யார் என்று அவர்களுக்கு காட்டலாம். நீ ஏன் அந்த தேசத் துரோகிகளோடு பழக வேண்டுமென நினைக்கிறாய்? அவர்கள் கல்நெஞ்சம் கொண்ட கயவர்கள். நாட்டை துண்டாடும் துரோகிகள். வேரோடு பிய்த்தெறியப்பட வேண்டிய களைகள். நுனி நாக்கில் அமிர்தமும் உள்மனதில் விஷமும் கொண்ட விஷமிகள்.” என்று தன் உள்ளக் கிடக்கைகளை வெளிக்காட்டினான். மண்டேலாவோ அதற்கு ஆமோதித்தவாறு “நீ சொல்வது முற்றிலும் உண்மைதான். எம் இன மக்களுக்கு விடுதலை பெற்று கொடுக்கும் ஒரே நோக்குடன் நான் முழுமூச்சாக சட்டப்படிப்பில் கவனத்தை செலுத்துகிறேன். வெள்ளையின மாணவர்களின் புறக்கணிப்பு என்னை ஒன்றும் செய்துவிடப் போவதில்லை.

புண்பட்ட உள்ளம்தான் பண்பட்டுப் போகும் என்பது போல என் மனம் எதையும் தாங்குவதற்கு பக்குவமடைந்தே இருக்கிறது. இனியும் சில்லறை விடயங்களுக்காக என் மனம் சிதறாமல் பார்த்துக்கொள்வேன்.

**(தொடரும்)**



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...✍**
யாழ்ப்பாணம்

# தமிழ் சினிமாவை வலம் வந்த ஜனரஞ்சக நடிகை மஞ்சுளா

சிவாஜி, எம்ஜியாரின் ஜோடியாக தமிழ் சினிமாவை வலம் வந்த ஜனரஞ்சக நடிகை மஞ்சுளா விஜயகுமாரின் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி தினம் 23.07.2024 அன்று! மஞ்சுளா விஜயகுமார் 9 செப்டம்பர் 1953 இல் பிறந்தார். 23 ஜூலை 2013 இல் தன் 60ஆம் அகவையில் காலமானார். இவர் தென்னிந்தியத் திரைப்பட நடிகையாவார். தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இவர் நடிகர் விஜயகுமாரை



திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு வனிதா, பிரீத்தா, ஸ்ரீதேவி என மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர்.

மஞ்சுளா முதன் முதலில் 1969 ஆம் ஆண்டில் சாந்தி நிலையம் திரைப்படத்தில் ஒரு துணை நடிகையாக நடித்தார். 1971 ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர் உடன் இணைந்து ரிக்சாக்காரன் திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்தார். 1970களில் பல படங்களில் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், என். டி. ராமராவ், கமல்ஹாசன், விஸ்ணுவர்தன், ரஜனிகாந்த் எனப் பல நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார்.

1980களின் இறுதியில் இருந்து துணை நடிகையாகப் பல படங்களில் நடித்தார். 2013 ஜூலை 23 இல் இவர் தனது வீட்டில் கட்டிலில் இருந்து கீழே வீழ்ந்ததை அடுத்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார்.

இவர் எம்.ஜி.ஆர் உடன் ரிக்சாக்காரன் (1971), இதய வீணை (1972), உலகம் சுற்றும் வாலிபன் (1973), நேற்று இன்று நாளை (1974), நினைத்ததை முடிப்பவன் (1975) போன்ற



படங்களில் இணைந்து நடித்துள்ளார். சிவாஜி கணேசன் உடன் எங்கள் தங்க ராஜா (1973), என் மகன் (1974), அவன்தான்மனிதன் (1975), மன்னவன் வந்தானடி (1975), அன்பே ஆருயிரே(1975), டாக்டர் சிவா (1975), சத்யம் (1976), உத்தமன் (1976), அவன் ஒரு சரித்திரம் (1977), நெஞ்சங்கள் (1982) பல படங்களில் இணைந்து நடித்துள்ளார். 1990களில் நடிகர் விஜயகுமாருடன் இலங்கை கொழும்பில் சுகததாச உள்ளக மண்டபத்தில் நடைபெற்ற ஓர் கலைவிழாவில் மஞ்சுளா கலந்து கொண்டார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...✍
கம்பளை

# "மரணம் எனும் தூது வந்தது"

கவிஞர் கண்ணதாசனின் வீடு தி.நகரில் இருந்தது. அங்கு பல தயாரிப்பு நிறுவனங்களின் கார்கள் வெளியே வரிசையாக நிற்கும். எந்த தயாரிப்பு நிறுவனத்திற்கு பாடல் எழுத வேண்டும் என கண்ணதாசன் நினைக்கிறாரோ அந்த காரில் ஏறி அவர் செல்வாராம்.

மற்றவர்கள் எல்லாம் அங்கிருந்து சென்றுவிட்டு அடுத்த நாள் மீண்டும் அதே போல் காருடன் காத்திருப்பார்களாம்.

கண்ணதாசன் அரசியல், தத்துவம், வாழ்க்கை முறை உள்ளிட்டவைகளில் மாறி மாறி பயணித்தவர். ஆண்டாள், கண்ணன் மீது பற்றுக் கொண்டிருந்தாலும் கண்ணதாசன் திராவிடக் கொள்கைகளில் அதிக பற்றுக் கொண்டிருந்தாராம். இதனால் இவரை நாத்திகர் என்றே பலரும் விவரித்தனராம்.

இந்த நிலையில் அவர் ஆத்திகராகவும் மாறினாராம். அது எப்படி என்பது குறித்து ரஜினிகாந்த் ஒரு மேடையில் கூறியிருந்தார்.

அதாவது ஒரு முறை கம்பராமாயணத்தை எரிக்கும் போராட்டத்தை நாத்திகர்கள் எல்லாம் சேர்ந்து நடத்தினராம். அப்போது கண்ணதாசனிடம் எரிப்பதற்காக அந்த புத்தகம் கொடுக்கப்பட்டது.

புலவரான கண்ணதாசன், புத்தகத்தை எரிப்பது என முடிவாகிவிட்டது, அதை படித்துவிட்டுதான் எரித்தால் என்ன என நினைத்தாராம் கவிஞர்.

உடனே அந்த புத்தகத்தை படிக்கத் தொடங்கியவர். கீழே வைக்காமல் படித்துக் கொண்டே இருந்தாராம்.

அவர் போதும் என நினைத்தாலும் அந்த புத்தகம் அவரை படிக்கத் தூண்டிக் கொண்டே இருந்ததாம்.

இதையடுத்து படித்து முடித்ததும் இத்தனை அருமையான இதிகாசமா என அந்த புத்தகத்தை வைத்து சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினாராம்.

இவ்வாறு ரஜினிகாந்த் கூறியிருந்தார். பொதுவாக ரஜினிகாந்த் யார் காலிலும் அவ்வளவு எளிதில் விழுந்துவிட மாட்டார்.

ஆனால் கண்ணதாசன் காலில் விழுந்து வணங்கியதிலிருந்து அவர் மீது ரஜினிக்கு எத்தனை பாசம், மரியாதை இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

40 ஆண்டுகளாக தமிழ் சினிமாவை தனது எழுத்துகளால் வசீகரம் செய்திருந்தார் கவிஞர்.

பின்னர் 1981 ஆம் ஆண்டு அமெரிக்காவில் "மரணம் எனும் தூது வந்தது"! அவர் மறைந்தாலும் அவருடைய பாடல்கள் என்றும் அழியாமல் இருக்கும்.

# மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டியில் தங்கம் வென்றார் ஷங்கர் கணேஷ்

மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தின், நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த (31) வயதுடைய உதயகுமார் ஷங்கர் கணேஷ் சமீபத்தில் கொழும்பு தெஹிவளையில் நடந்த 2024 ஆம் ஆண்டிற்கான மிஸ்டர் ஸ்ரீ லங்கா போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். அவர் முழு நேரத்தையும் உடற்கட்டை செம்மையாக்குவதற்கு செலவழிப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



மிஸ்டர் ஸ்ரீலங்கா போட்டியானது கடந்த 28.07.2024 திகதி நடைபெற்றது.

குறித்த போட்டியில் இலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் அறுபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். அனைவரும் தங்களது உடல் கட்டமைப்புகளை முன்னிலை படுத்தினர். இதில் *MEN PHYSIQUE* மற்றும் *80 kg* எடைப் பிரிவிற்கான "பாடி பில்டிங்" ஆகிய பிரிவுகளில் உதயகுமார் சங்கர் கணேஷ் சாதனை படைத்து முறையே தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளார்.





தற்போது இவர் நுவரெலியா பிரதான நகரத்தில் *THE IRON KINGDOM* உடற்பயிற்சி கூடத்தில் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி வருகிறார். சிறுவயது முதலே உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டு 2017 ஆம் ஆண்டு ஆரம்பித்த உடற்கட்டமைப்பு பயிற்சிகள் மூலம் இன்றுவரை பல போட்டிகளில் பங்கேற்று ஏராளமான சாதனைகளை படைத்திருக்கிறார்.

ஆணழகன் போட்டியில் இவர் வாங்கிக் குவித்திருக்கும் பரிசுகளும், பதக்கங்களும் எண்ணற்றவை. இவர் உடற்பயிற்சி மூலம் கட்டுடலுடன் காணப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



(செ.திவாகரன் நானுஓயா நிருபர்)

# ஷார்ஜா ஓட்டப்போட்டியில் 4 கிலோ மீட்டர் பிரிவில் முதலிடம் பிடித்த தமிழக வீரர் ஷார்ஜா



ஷார்ஜாவில் நடந்த ஓட்டப்போட்டியில் நான்கு கிலோ மீட்டர் பிரிவில் முதலிடம் பிடித்த தமிழக வீரர் ஷார்ஜா : ஷார்ஜாவில் நடந்த ஓட்டப்போட்டியில் நான்கு கிலோ மீட்டர் பிரிவில் முதலிடம் பிடித்தார்.

தமிழக வீரர் நாகர் கோவில் செய்யது அலி. ஷார்ஜாவில் உள்ள மிகப் பெரிய வணிக வளாகம் சஹாரா செண்டர் ஆகும். இந்த வணிக வளாகத்தில் கோடைக் காலத்தையொட்டி ஷார்ஜா விளையாட்டு கவுன்சிலின் சார்பில் உள்ளரங்கு ஓட்டப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த போட்டியானது 1 கிலோ மீட்டர் 8 கிலோ மீட்டர் வரை பல்வேறு பிரிவுகளில் போட்டி நடந்தது.

இதில் 400 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதில் நான்கு கிலோ மீட்டர் பிரிவில் தமிழகத்தின் நாகர் கோவிலைச் சேர்ந்த செய்யது அலி முதல் இடம் பெற்று தமிழகத்துக்கு பெருமை சேர்த்தார்.

அவருக்கு ஷார்ஜா விளையாட்டு கவுன்சில் அதிகாரிகள் பதக்கம் வழங்கி கௌரவித்தனர்.

பதக்கம் பெற்ற தமிழக வீரர் செய்யது அலிக்கு பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர். 50 வயதை கடந்தாலும் தொடர்ந்து ஓட்டப்போட்டிகளில் சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் சர்வதேச அளவிலான மாரத்தான் போட்டிகளிலும் பங்கேற்று சிறப்பிடம் பெற்றுள்ளது சிறப்பானது.

# "இனி ஒரு விதி செய்வோம்"

இலங்கை தமிழ்த் திரைப்படத்துறைக்கு புத்துயிர் அளிக்கும் வண்ணம் பல புதிய தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. சிங்களத்தில் தயாரித்து திரையிடப்பட்ட சிங்களத் திரையிடப்படங்கள் மொழி மாற்றம் செய்யப்பட்டு திரையிடப்படுகின்றன.

இவ்வாறு செய்வதை வெகுவாக பாராட்டலாம். ஆனால் இதில் இலங்கையிலுள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள், திரைப்படத்துறையினரின் பங்களிப்பை பெற்றுக் கொண்டால் இலங்கையில் உள்ளவர்களும் நன்மையடைவார்கள் அல்லவா? இலங்கையில் உள்ள தமிழ் கலைஞர்களிடையே அத்தகைய பரந்த மனப்பான்மை அரிதாகவே காணப்படுகிறது. அதற்கும் காரணம் உண்டு.




வாய்ப்புகள் குறைவாக இருப்பதே ஆகும். இவ்வாறு மொழி மாற்றம் செய்யப்பட்ட திரைப்படமொன்று திரையிடப்பட்டுள்ளது. அந்தத் திரைப்படம், "இனி ஒரு விதி செய்வோம்" என்ற தலைப்புடன் திரையிடப்பட்டுள்ளது. பாரதியின் கோபம் வெளிப்படும் இடங்களில் ஒன்று 'இனி ஒரு விதி செய்வோம்' என்று துவங்குகிறது. எனவே அந்த கோபதாபத்தை உணர்த்தும் விதத்தில் தமிழ் மொழிப் பற்றுடன் இத் திரைப்படத்தின் தலைப்புக்கு பூச்சூடி பொட்டிட்டது போல் பெயர் சூட்டி இருப்பது மகிழ்ச்சியே.

பாரிய செலவில் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிப்பது, திரையிடுவது என்பது எல்லாம் கடினமாகி விட்ட காலம் இது. அதுவும் இந்திய திரைப்படங்களுக்கு நிகராக....... நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் உள்ளோம். எனவே இந்தத் திரைப்படத்தை பார்த்து, இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்கப்படுத்த வேண்டியது ரசிகர்களாகிய நம் கடமையல்லவா?

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.